# இலக்கியக் கோவை



TB
031(91)
N65
8-9.64

# இலக்கியக் கோவை

ஒன்பதாம் வகுப்பிற்குரியது


வித்துவான் த. கி. குப்புசாமி ஆழ்வார்
தமிழாசிரியர்
புனித சூசையப்பர் கல்லூரி உயர்நிலைப்பள்ளி
திருச்சிராப்பள்ளி



பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 5 :: திருச்சி - 2


[விலை ரூ 2-25

பதிப்புரிமை]

பதிப்பு: அக்டோபர்,

இப்புத்தகம் 57 × 89 செ. மீ. 14·5 கி. கி.
வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டுள்ளது

87994

**நன்றியுரை**

எமது வேண்டுகோட்கிணங்கி இந் நூலில் தம் கவிதைகளையும் கட்டுரைகளையும் வெளியிட இசைவளித்த அறிஞர்களுக்கும், பதிப்பகத்தார்க்கும் எம் உளமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.

பதிப்பகத்தார்.

TB
031 (9)
N65

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை-5.

## தேசீய கீதம்

ஜனகணமன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்த்ய ஹிமாசல யமுனை கங்கா
உத்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவஜய காதா

ஜனகண மங்கள தாயக ஜயஹே!
பாரத பாக்ய விதாதா

ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

## நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லோருடைய மனத்திலும் ஆட்சி செலுத்து கிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும், சிந்துவையும், குஜராத்தையும், மஹாராஷ்டிரத்தையும், திராவிடத்தையும், ஒரிஸாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக் கிறது; இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படு கிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

# முகவுரை

இந்நூல், அரசினர் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டப்படி ஒன்பதாம் வகுப்பிற்காகத் தொகுக்கப்பெற்றுள்ளது.

செய்யுட் பகுதியில் பாடத்திட்டத்தைத் தழுவி வாழ்த்து, அறவுரை, தொடர்நிலைச் செய்யுள்கள், பல்சுவைப் பாக்கள் ஆகியவை மாணவர் தகுதிக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளன. ஆங்காங்கு ஆசிரியர் வரலாறும், அருஞ்சொற் பொருளும், வினாக்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

உரைநடைப் பகுதியில் இலக்கியத் தொடர்புடைய தமிழ்ப் புலவர், புரவலர், கலைஞர் ஆகியோரின் வரலாறுகள், இலக்கியங்கள் எழுந்த வரலாறு, பெருமக்களின் வாழ்க்கைக் குறிப்புகள், செய்யுள் பகுதிகளைச் சுவைபட அமைத்த உரையாக்கம், நாடகப் பகுதிகள், உரையாடல்கள், சொற்போர் மன்ற நிகழ்ச்சிகள், கற்பனைக் கட்டுரைகள், கடித நுண்கலைக் கட்டுரைகள், நாட்டு நலத் திட்டங்கள், பன்னாட்டுச் செய்திகள் ஆகியன அமைந்த பாடங்கள், அவ்வத் துறையில் வல்ல நல்லறிஞர்களால் எழுதப் பெற்றவைகளாகவே தொகுக்கப் பெற்றுள்ளன. ஆங்காங்கு அருஞ்சொற் பொருளும் வினாக்களும் சேர்க்கப் பெற்றுள்ளன.

இதனை நன்முறையில் வெளியிட்ட உரிமையாளர்கட்கு எனது நன்றி உரியதாகும்.

ஆக்கியோன்

# உள்ளுறை

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | வாழ்த்து | | |
| அ. | கடவுள் வாழ்த்து | .... | 1 |
| ஆ. | மொழி வாழ்த்து | .... | 1 |
| இ. | நாட்டு வாழ்த்து | ... | 2 |
| II. | அறவுரை | | |
| அ. | திருக்குறள் | ... | 3 |
| ஆ. | ஏலாதி | ... | 12 |
| இ. | சிறுபஞ்சமூலம் | .... | 14 |
| ஈ. | திரிகடுகம் | ... | 16 |
| III. | தொடர்நிலைச் செய்யுள் | | |
| அ. | மணிமேகலை | ... | 17 |
| ஆ. | பெருங்கதை | .... | 22 |
| இ. | வில்லி பாரதம் | ... | 30 |
| ஈ. | பெரிய புராணம் | ... | 36 |
| உ. | பாஞ்சாலி சபதம் | .... | 42 |
| ஊ. | இரட்சணிய யாத்திரிகம் | .... | 47 |
| IV. | பல்சுவை | | |
| அ. | வருணனை | ... | 51 |
| ஆ. | சீட்டுக் கவி | ... | 53 |
| இ. | இரட்டுற மொழிதல் | ... | 54 |
| ஈ. | சிற்றிலக்கியம் | ... | 55 |
| உ. | வழிபாட்டுப் பாடல்கள் | ... | 59 |

## உரைநடைப் பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்விக்க வந்த காந்தி<br>அனைத்திந்திய காங்கிரஸ் தலைவர் மேதகு திரு. கு. காமராசர் | 62 |
| 2. | வாழ்க்கையின் நோக்கம்<br>மகா வித்துவான் திரு. ரா. இராகவையங்கார் | 67 |
| 3. | கலை மகள் வழிபாடு<br>டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல். | 71 |
| 4. | மானங்காத்த மைந்தன்<br>மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் | 75 |
| 5. | சிக்காகோச் சொற்பொழிவு<br>சுவாமி விவேகானந்தர் | 81 |
| 6. | போரும் நீரும்<br>வித்துவான் திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ. | 84 |
| 7. | சிறுபாணாற்றுப்படை<br>திரு. பெ. தூரன் அவர்கள் | 91 |
| 8. | வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகள்<br>திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | 97 |
| 9. | மகனுக்குக் கடிதம்<br>காந்தி அடிகள் | 102 |
| 10. | ' யாதுமூரே; யாவருங்கேளிர் '<br>திருமதி மேரி மாசில்லாமணியம்மையார், எம்.ஏ. | 108 |
| 11. | உலகம் ஏன் அழியவில்லை ?<br>டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்டி. | 112 |
| 12. | அறம் உரைத்த உழவர்<br>வித்துவான் திரு. அன்பு கணபதி | 116 |
| 13. | சமுதாய வளர்ச்சியும் கிராம இயக்கமும்<br>திரு. கோ. வேங்கடாசலபதி | 121 |
| 14. | மனோன்மணீயம்<br>வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனார் | 128 |
| 15. | தமிழகத்து ஓவியங்கள்<br>திருமதி ஈ. த. பதுமாவதி அம்மையார், எம்.ஏ., எல்.டி. | 133 |
| 16. | மூவருட் சிறந்தோர் யாவர் ?<br>வித்துவான் த. கி. குப்புசாமி ஆழ்வார் | 139 |
| 17. | மனையியல்<br>டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ், எம்.எஸ்ஸி., எம்.ஏ., பி.எச்டி. | 149 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 18. | எளிமையும் வலிமையும்<br>பண்டித வித்துவான் திரு. நா. பார்த்தசாரதி | 155 |
| 19. | தமிழிசை<br>பல்லிசை வல்லுநர் சங். மி. மிக்கேல் சுவாமிகள், சே. ச. | 159 |
| 20. | அறிஞர் பெர்னுட்ஷாவின் வியத்தகு வாழ்வு<br>டாக்டர் மு. வரதராசனுர், எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்டி., | 165 |
| 21. | தென்னுப்பிரிக்கத் தமிழரின் சமய வாழ்வு<br>திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், எம்.ஏ., பி.எல். | 173 |
| 22. | மாஸ்கோப் பொருட்காட்சி<br>பாரத நாட்டு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல். | 179 |
| 23. | சிறு சேமிப்புத் திட்டம்<br>திரு. மெ. செல்லப்பன், எம். ஏ. | 185 |

ஒன்பதாம் வகுப்பு

# செய்யுட்பகுதி

## I. வாழ்த்து

### அ. கடவுள் வாழ்த்து

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணுங்களே.

— கம்பர்

### ஆ. மொழி வாழ்த்து

தமிழ் மொழி

காதொளிருங் குண்டலமுங் கைக்குவளை
யாபதியுங் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும் மெல்லிடையில்
மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிருந் திருவடியும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
தாங்குதமிழ் நீடு வாழ்க!

— யோகி சுத்தானந்த பாரதியார்

## இ. நாட்டு வாழ்த்து

### தமிழ் நாடு வாழ்க !

படையாம லுண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரு மெண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்க ளவைவந்த போதும்
அநியாய மெண்ணாத தமிழ்நாடு வாழ்க!
கொல்லாமை யுயர்வென்னுந் தமிழ்நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை யறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை யறமென்னுந் தமிழ்நாடு வாழ்க!

—நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை

### குறிப்புரை

**அ. கடவுள் வாழ்த்து:** இது கம்பராமாயணத்திலுள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுள். இதனை இயற்றியவர் கம்பர். இவர் காலம், பன்னிரண்டாம் நூற்றாண்டு என்பர்.

உள ஆக்கலும் - படைத்தலும். நிலைபெறுத்தலும் - காத்தலும். நீக்கலும் - அழித்தலும். அலகு இலா - அளவில்லாத. சரண் - அடைக்கலம். சரண்+நாங்கள்.

**ஆ. மொழி வாழ்த்து:** இதனை இயற்றியவர், யோகி சுத்தானந்த பாரதியார். இவர் ஒரு துறவி; பன்மொழிப் புலவர். தமிழ் மொழியில் இவர் இயற்றியுள்ள நூல்கள் பல. இவர் இப்பொழுது சென்னையில் வாழ்ந்து வருகின்றார். இவர் பிறப்பு நாள்: 17-4-1891.

குண்டலம் - குண்டலகேசி என்னும் நூல். மேகலையும் - மணிமேகலை என்னும் நூலும்.

**இ. நாட்டு வாழ்த்து:** இதனை இயற்றியவர், நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை; நாட்டிற்கும் மொழிக்கும் நல்ல பல தொண்டுகளைச் செய்து வருகின்றவர். இவர் பிறப்பு நாள்: 19-10-1888.

படையாமல் - விருந்தினருக்கு உணவு அளிக்காமல், இரவாமை - யாசிக்காதிருத்தல்.

### வினாக்கள்

1. கம்பர் இறைவனது விளையாட்டுகளெனக் கூறுவன யாவை?

2. சுத்தானந்த பாரதியார் தமிழ்த் தாயை எவ்வாறு வாழ்த்துகின்றார்? அவ்வாழ்த்தில் அமைந்துள்ள நூல்களின் பெயர்களைக் கூறுக,

3. நாமக்கல் கவிஞர் தமிழரின் தலை சிறந்த கொள்கைகளாகக் கூறுவனவற்றை விளக்கி வரைக.

# II. அறவுரை

## அ. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. 1

### வான் சிறப்பு

விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. 2

### அறன் வலியுறுத்தல்

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு. 3

ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். 4

### வாழ்க்கைத்துணை நலம்

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 5

சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 6

### புதல்வரைப் பெறுதல்

தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. 7

### இனியவை கூறல்

இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 8

அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். 9

அடக்கமுடைமை

காக்க பொருளா வடக்கத்தை யாக்கம்
அதனினூஉங் கில்லை யுயிர்க்கு. 10

எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 11

ஈகை

வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 12

அற்று ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றுன் பொருள்வைப் புழி. 13

புகழ்

ஒன்று வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்பதொன் றில். 14

வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெருஅ விடின். 15

வாய்மை

வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். 16

வெகுளாமை

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க; காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். 17

நிலையாமை

நெருந லுளனெருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. 18

ஊழ்

நன்றுங்கா னல்லவாக் காண்பவ ரன்றுங்கால்
அல்லற் படுவ தெவன். 19

கல்வி

எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு. 20

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 21

### கல்லாமை

கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 22

விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றுரோ டேனை யவர். 23

### கேள்வி

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. 24

### அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 25

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு. 26

### பெரியாரைத் துணைக்கோடல்

தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 27

இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். 28

### தெரிந்து செயல் வகை

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார். 29

நன்ருற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்ருக் கடை. 30

### வலியறிதல்

நுனிக்கொம்ப ரேறிஞ ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 31

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை. 32

### காலமறிதல்

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். 33

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. 34

### செங்கோன்மை

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 35

### ஊக்கமுடைமை

உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. 36

### ஆள்வினையுடைமை

தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 37

தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 38

### குறிப்பறிதல்

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 39

### படைச்செருக்கு

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து. 40

### நட்பு

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 41

### நட்பாராய்தல்

ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல். 42

### மானம்

புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை. 43

### சான்றாண்மை

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 44

இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 45

### குடி செயல் வகை

குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. 46

### உழவு

இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னு நல்லாள் நகும். 47

### நல்குரவு

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 48

### கயமை

தேவ ரனையர் கயவ ரவருந்தாம்
மேவன செய்தொழுக லான். 49

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். 50

### குறிப்புரை

திருக்குறள்: அழகிய குறள் வெண்பாக்களினால் ஆகிய நூல். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், 133 அதிகாரங்களையும், ஓர் அதிகாரத்துக்குப் பத்துப் பாடல்கள் வீதம் 1330 பாடல்களையும் கொண்டது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இதுவும் ஒன்றாகும்.

இந் நூலை இயற்றிய ஆசிரியர், திருவள்ளுவராவர். இவர் காலம், கடைச்சங்க காலம் என்பர்.

1. அடி சேர்தல் - இடைவிடாது நினைத்தல்; யாண்டும் - எப்பொழுதும்; இடும்பை - துன்பம் (பிறவித் துன்பம்).

2. விசும்பு - ஆகாயம்; காண்பு - காணுதல்; அரிது - அருமையாகும் (இல்லை).

3. சிறப்பு - சிறப்பான; பேறு; வீடு; ஊங்கு - சிறந்த.

4. ஒல்லும் வகை - இயலும் வழி; ஓவாது - இடைவிடாது; செயல் - செய்க.

5. பெருந்தக்க - மேம்பட்ட பொருள்கள்; திண்மை - எதற்கும் கலங்காத மனவுறுதி.

6. சிறை காக்கும் காப்பு - சிறையால் காக்கும் காவல்; நிறை - கற்பொழுக்கம்; தலை-சிறந்ததாகும்.

7. தம்மின் - தம்மைக்காட்டிலும்; மாநிலம் - பரந்த நிலம்; உரிச்சொல் தொடர்.

8. ஈரம் அளைஇ - அன்பொடு கலந்து; படிறு - குற்றம் (வஞ்சனை); செம்பொருள் கண்டார் - உண்மைப் பொருளின் இயல்புகளைக் கண்டறிந்த சான்றோர்கள்.

9. அல்லவை - அறம் அல்லாத பாவங்கள்; தேய - அழிய; இனிய சொலின் - இனியனவாகச் சொன்னால்.

10. காக்க - காத்து வாழ்க; (வியங்கோள் வினைமுற்று) ஆக்கம் - செல்வம்; உயிர்க்கு - உயிர்கட்கு (மக்களுக்கு).

11. செல்வம் தகைத்து - செல்வம் போன்ற தகுதியை(சிறப்பினை) உடையதாகும்.

12. வறியார் - ஒரு பொருளும் இல்லாதவர்; ஒன்று - ஏதேனும் ஒரு பொருள் (ஆகுபெயர்); குறி எதிர்ப்பு - ஒருபயனை எதிர் பார்த்தல்; நீரது - தன்மையது.

13. அற்றார் - ஒரு பொருளும் அற்ற வறிஞர்; அழிபசி-மிக்க பசி; தீர்த்தல் - தீர்க்கக்கடவன்; வைப்பு உழி - பொருளைச் சேமித்து வைக்கும் இடம்,

14. ஒன்றா - இணை கூற முடியாத; பொன்றாது - அழியாமல்; 'உலகத்து ஒன்றா உயர்ந்த புகழ்' என மாற்றுக.

15. இசை - புகழ். எச்சம் - தமக்குப்பின்னர் அழியாமல் நிலைத்து நிற்பது; வசை - இழிவு (குற்றம்).

16. தீமை இலாத - பிற உயிர்கட்குத் தீமை பயவாத சொற்கள்; வாய்மை - வாயினது தன்மை; உண்மை மொழி.

17. சினம் காக்க - (தம் மனத்தில்) கோபம் வாராமல் பாதுகாத்தல் வேண்டும்; காவாக்கால் - பாதுகாவாத இடத்து.

18. நெருநல் - நேற்று.

19. நன்று ஆம் கால் - நல்வினை விளையும் காலம்; நல்லவாக் காண்பவர் - நல்லனவாக எண்ணி அதனை அனுபவிப்பவர்; அல்லல்-துன்பம்.

20. எண் என்ப - எண் என்று சொல்லுவன; கண் என்ப - கண்கள் என்று கூறுவர்; "எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்."

21. உவப்ப - பிறர் மனம் மகிழுமாறு; தலைக்கூடி – நட்புச் செய்து; உள்ள - (அவர்கள் தம்மைப்பற்றி எப்பொழுதும்) மனத்தில் நினைக்கும்படி.

22. தகைமை - (தன்னைத்தானே நன்கு மதிக்கும்) மதிப்பு; தலைப்பெய்து - (கற்றவரோடு)கூடி; சொல்லாட - உரையாடிய அளவில்; சோர்வுபடும் - அழிந்துவிடும்.

23. இலங்குநூல் - பல வகைப் பெருமைகளும் நிறைந்து விளங்கும் நூல்; ஏனையவர் - கல்லாதவர்; விலங்கொடு மக்கள் அனையர் - விலங்கொடு ஒப்புமை நோக்க மக்கள் எவ்வளவு சிறந்தவரோ, அவ்வளவு இழிந்தவராவர்.

24. நுணங்கிய கேள்வி - நுட்பமான கேள்வியறிவு; வணங்கிய வாயினர் - பணிந்த மொழியினர் (வாய் - ஆகுபெயர்); அரிது - அருமையானது (கூடாத ஒன்றாகும்).

25. யார் யார் வாய்க் கேட்பினும் - எவர் எவர் வாயிலாகக் கேட்டாலும்.

26. எவ்வது - எவ்வழி; உறைவது - ஒழுகுவது.

27. தம்மின் - தம்மைவிட; பெரியார் - கல்வி அறிவு ஒழுக்கங்களால் சிறந்தவர்; தமர் - தமக்குச் சிறந்தவர்; ஒழுகுதல் - அவர் வழியில் நடத்தல்; வன்மை - ஆற்றல்.

28. இடிப்பார் - (தீய வழியிற் செல்கையில் நல்வழியிற் செலுத்தும்பொருட்டு) இடித்துக் கூறும் பெரியோர்; ஏமரா - (ஏமம்+மருவா) பாதுகாவல் இல்லாத.

29. முதல்- கைப்பொருள்; ஊக்கார் - மேற்கொள்ள மாட்டார்.

30. பண்பு - குணங்கள்; ஆற்றுக்கடை - செய்யாது போனல்; நன்று ஆற்றல் - நல்ல காரியங்களைச் செய்தல்.

31. நுனிக்கொம்பர் (கொம்பர் நுனி) - ஒரு மரக்கிளையினது நுனி; கொம்பர் - கொம்பு என்பது 'அர்' போலி பெற்றது; இக்குறள், பிறிது மொழிதல் அணியாகும்.

32. ஆகாறு - (ஆகு+ஆறு) பொருள் வந்து சேர்கின்ற வழி; இட்டிது - மிகச் சுருங்கின அளவினது; அகலாக்கடை - மிக அகன்ற நிலையில் இல்லாதிருப்பின்; கேடு - அழிவு.

33. அருவினை - செய்தற்கு இயலாத அருமையான செயல்கள்; உளவோ - உள்ளனவோ? (இல்லை என்றபடி). ஓகாரம் எதிர்மறை. கருவியான் - ஏற்ற கருவிகளுடன்; ஆன் உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்துள்ளது.

34. கூம்பும் பருவம் - ஒடுங்கியிருக்கும் காலம் ; சீர்த்த இடம் - தக்க காலம்; வாய்த்த சமயம்.

35. வேந்து - மன்னன்;'கொடியாரைக் கொலையின் ஒறுத்தல்' என மாற்றுக; பைங்கூழ் - (பசுமை+கூழ்) பசுமையான பயிர்; பண்புத்தொகை; களை - பயிர்கள் தழைத்து வளராதபடி தடுக்கும் பூண்டு முதலியன.

36. உரம் - திட்பமான அறிவு; உள்ளவெறுக்கை - ஊக்க மிகுதி.

37. தாளாண்மை - முயற்சி; வாளாண்மை - வாளை ஆளும் தன்மை.

38. கூலி - ஊதியம் (பயன்).

39. அடுத்தது - தன்னை அடுத்த பொருள்; நெஞ்சம் கடுத்தது - மனத்தில் தோன்றிய கருத்து. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்," என்னும் பழமொழியை நோக்குக.

40. விழுப்புண் - போரில் பகைவர்களை எதிர்த்து நின்று மார்பில் பட்ட புண்; வழுக்கினுள் - பயன்படாது வீணே கழிந்த வாழ் நாள்களுள்.

41. நவில்தொறும் - கற்குந்தோறும்; பயில்தொறும் - பழகுந்தோறும்; பண்புடையாளர் - நற்பண்புடைய பெருமக்கள்;

42. ஊதியம் - இலாபம்; பேதையார் - அறிவில்லாத கீழ் மக்கள்; கேண்மை - நட்பு; ஒருவுதல் - நீங்குதல்.

43. புத்தேள் நாடு - தேவருலகம்; உய்த்தல் - செலுத்துதல்;

44. நோன்மை - தவம்; கொல்லா நலம்- கொல்லாமையாகிய அறம்; கொல்லா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

45. சால்பு - நிறைந்த தன்மை; உயர்ந்த பண்பு.

46. குடி செய்து - தான் பிறந்த குடியினை உயரச் செய்து.

47. இலம் என்று - இல்லாதேமாக உள்ளோம் என்று; அசைஇ - சோம்பி; உயிரளபெடை. நல்லாள் - பெண்.

48. நல்கூர்ந்தார் - வறுமை மிகுந்தவர்; பொருள் சோர்வு படும் - பொருள் இல்லாது போகும்.

49. மேவன - விரும்புகின்ற செயல்கள்.

50. அறை பறை - அடிக்கப்படும் பறை; மறை - இரகசியமான செய்திகள்; உய்த்து - தாமாகவே கொண்டு சென்று.

### வினாக்கள்

1. யாருக்கு யாண்டும் இடும்பை இல?
2. மழையின் சிறப்பை வள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார்?

3. அறன் வலியுறுத்தல் பற்றி வள்ளுவர் கூறுவது என்ன?
4. 'பெண்டிர்க்குக் கற்பே இன்றியமையாதது,' என்பது திருக்குறளில் எவ்வாறு வற்புறுத்தப்பட்டுள்ளது?
5. மன்னுயிர்க்கெல்லாம் இனிது—எது?
6. இன்சொல்லின் இலக்கணம் யாது?
7. அடக்கத்தின் உயர்வை வள்ளுவர் எங்ஙனம் கூறுகின்றார்?
8. ஈகையின் இலக்கணத்தைத் தெரிவிக்க.
9. பொன்றாது நிற்பது, வையத்தார்க்கு வசை - எவையென வள்ளுவர் கூறுகின்றார்?
10. வாய்மையின் இலக்கணம் யாது?
11. உலகு பெற்றுள்ள பெருமையாக வள்ளுவர் எதனைக் கூறியுள்ளார்?
12. கல்லாதவரை எங்ஙனம் வள்ளுவர் இகழ்ந்துள்ளார்?
13. உயிர்க்குக் கண்கள் போன்றவை எவை?
14. புலவர் தொழில் யாது?
15. கற்றார் கல்லாரது உயர்வு தாழ்வுகள் எங்ஙனம் கூறப்பட்டுள்ளன?
16. அறிவின் இலக்கணம் யாது?
17. 'வன்மையுள் எல்லாம் தலை'—எது? எங்ஙனம்?
18. 'கெடுப்பார் இலானும் கெடும்'—யார்? எங்ஙனம்?
19. 'தவறுண்டு'—எதில்? எப்பொழுது?
20. 'நுனிக்கொம்பர்........விடும்'—இக்குறளால் உணர்த்தப்படும் கருத்து யாது?
21. கொடியவர்களை அரசன் ஒறுத்தல் எதைப் போன்றது?
22. ஊக்கம் இல்லாதாரை மரம் என்றும், மக்களாதலே வேறு என்றும் கூறக் காரணம் என்ன?
23. ஆள்வினையுடைமையைப் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
24. பெரியோர் நட்பு எதனைப்போன்றது?
25. ஒருவனுக்கு ஊதியம் என வள்ளுவர் எதனைக் குறிக்கின்றார்?
26. நோன்மை, சால்பு—இவற்றை விளக்கி வரைக.
27. உலகோர் யாரைச் சுற்றத்தினராகக் கொள்வர்?
28. யாரைக் கண்டு நிலமகள் நகுவாள்?
29. நல்குரவின் கொடுமை எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?
30. கயவர்களை வள்ளுவர் எவ்வெவர்க்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார்? அதன் பொருத்தத்தை விளக்குக.

## ஆ. ஏலாதி

### தாய் போன்றவன்

நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண்—மறையுடைமை
வேயன்ன தோளாய்! இவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்ன னென்னத் தகும். 1

### விண்ணோர்க்கு வேந்தன்

பொய்யுரையான் வையான் புறங்கூருன் யாவரையும்
மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையா—னெய் யுரையான்
கூந்தன்மயில் அன்னுய்! குழீஇயவான் விண்ணோர்க்கு
வேந்தனு மிவ்வுலகம் விட்டு. 2

### மண்மேல் மகிழ்ந்து வாழ்வார்

கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தங்கால்
முடம்பட்டார் மூத்தார்மூப் பில்லார்க்—குடம்பட்
டுடையரா யில்லூணீ த்துண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று. 3

### உயர்கதியின் மாண்பு

பொய்தீர் புலவர் பொருள்புரிந் தாராய்ந்த
மைதீ ருயர்கதியின் மாண்புரைப்பின்—மைதீர்
சுடரின்று சொல்லின்று மாறின்று சோர்வின்
றிடரின் றினிதுயிலு மின்று. 4

### அன்புடையார்க்குள்ள குணம்

ஈதல் பொருள்கொடுத்த லின்சொற் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே - ஓதலின்
அன்புடையார்க் குள்ளன வாறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. 5

## குறிப்புரை

**ஏலாதி :** இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஏலம்+ஆதி; ஏலம் முதலாகிய மருந்துப் பொருள்களின் சேர்க்கையாகிய பொடிக்கு 'ஏலாதி' என்பது பெயர். ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகியவற்றைக் குறித்த அளவில் கலந்து செய்யப் பெறுவது ஏலாதிச் சூரணம் எனவும் வழங்கும்.

உடல் நோய்கள் போக்கும் ஏலாதியைப்போல உள நோயைப் போக்கி உயிர்க்கு உறுதி பயக்கும் நீதிகள் அமைந்துள்ள பாடல்களை உடைமையால், இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூல் எண்பது பாடல்களை உடையது.

**நூலாசிரியர் :** கணிமேதாவியார். சமண சமயத்தவர். காலம்: கடைச்சங்க காலம்.

1. நிறை - மனத்தை நெறியில் நிறுத்துதல்; நீர்மை - நல்லியல்பு; பொய்மைக்கண்ணும், புலாற்கண்ணும் மறையுடைமை என்க; மறை - மறுத்தல்; வேய் - மூங்கில். வேயன்ன தோளாய் - மகடூஉ முன்னிலை.

2. மெய் உரையான் - பிறர்க்குத் துன்பந்தரும் மெய்யானவற்றைக் கூறுன்; விட்டுரைத்தல் - வெளிப்படக் கூறல்; எய் - வறுமைத் துன்பம்; கூந்தல் - தோகையுமாம்; குழீஇய - சொல்லிசை அளபெடை. ஆம்-செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

3. மூப்பு - பெற்றோர் முதலிய மூத்தோர்; ஆகுபெயர்; ஊண் - உணவு; படையராய் - நால்வகைப் படைகளை உடையராய்; 'பயின்று வாழ்வார்' எனக்கூட்டுக.

4. உயர்கதி - வீடு பேறு; மாறு - நிலை மாறுதல்.

5. கவறல் - உள்ளங் கலங்குதல்; மென்புடை - மென்மைத் தன்மை.

## வினாக்கள்

1. தாய் என்று கருதப்படுபவன் யார்?
2. விண்ணோர்க்கு வேந்தனுவான் யார்?
3. யாவர் மண்மேல் படையராய் வாழ்வார்?
4. வீட்டுலகின் தன்மை ஏலாதியில் எவ்வாறு கூறப்படுகிறது?
5. அன்புடையாரிடத்துக் காணத்தக்க குணங்கள் யாவை?
6. **பின் வரும் தொடர்களைப் பிரிக்க :** பல்லுயிர்; எய்யுரையான்; இனிதுயில்; புணர்வுவத்தல்.

## இ. சிறுபஞ்சமூலம்

### பொருளும் அருளும்

பொருளுடையான் கண்ணதே போக மறனும்
அருளுடையான் கண்ணதே யாகு—மருளுடையான்
செய்யான் பழிபாவம் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக் குய்த்து. 1

### நகை விளைப்பன

நாணிலான் சால்பும் நடையிலான் நன்ஞேன்பும்
ஊணிலான் செய்யு முதாரதையு—மேணிலான்
சேவகமும் செந்தமிழ் தேற்ருன் கவிசெயலும்
நாவகமே நாடின் நகை. 2

### கூற்றம் ஆவன

சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான் - வலம்படா
மாவிற்குக் கூற்றமாம் ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை. 3

### பெருமையும் சிறுமையும்

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 4

### இன்சொல்லும் வன்சொல்லும்

இன்சொலா னாகும் கிளைமை இயல்பில்லா
வன்சொலா னாகும் பகைமைமன்—மென்சொல்லின்
ஓய்வில்லா ஆரருளா மவ்வருள் நன்மனத்தான்
வீவில்லா வீடாய் விடும். 5

## குறிப்புரை

**சிறுபஞ்சமூலம்:** இந்நூலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. சிறு+பஞ்ச+மூலம் - ஐந்து சிறு வேர்கள்: கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர் ஆகிய ஐந்து வேர்களை மருத்துவ நூலிற் குறித்த அளவில் கொணர்ந்து செய்யப்படும் மருந்து மக்கள் உடல் நோய் போக்கி உறுதி அளிப்பது. அதுபோல, உளநோய் தவிர்த்து உயிர்க்கு உறுதி பயக்கும் ஐந்தைந்து கருத்துகளை உடைய பாடல்களாலான இந்நூலுக்கு இப்பெயர் அமைந்தது. இந்நூல் நூறு பாடல்களையுடையது.

**நூலாசிரியர் :** காரியாசான் என்பவர். சமண சமயத்தவர். காலம் : கடைச்சங்க காலம்.

1. போகம் - இன்பம்; புறமொழி - புறஞ்சொல்; உய்யான் - உயிர் வாழான்; உய்த்து - கொண்டு சென்று. செவிக்கு - உருபு மயக்கம்.

2. நடை - நல்லொழுக்கம்; உதாரதை - ஈகை; ஏண் - வலிமை; சேவகம் - வீரச்செயல்; கவி செயல்- கவியியற்றல்.

3. சிலம்பி - சிலந்தி; சினை - முட்டை; கோடு - கொம்பு; வலம் - வெற்றி, வலிமை; மா - கவரிமா; ஞெண்டு - நண்டு; பார்ப்பு- குஞ்சு.

4. பிழைத்தல் - பிறனொருவன் செய்த பிழை; 'பல்பொருளார் நகை, நல்லார் நகை' எனக் கூட்டுக. நகை-இகழ்வு பற்றிய நகை.

5. இளமை - உறவு; மன் - பெருமை; மென்சொல்லினுல் பெருமையும் அருளும் ஆகும் என்க. வீவு-கேடு.

## வினுக்கள்

1. அருள் உடையான் இயல்புகள் யாவை?
2. நகைப்பைத் தரும் செயல்கள் யாவை?
3. சிலம்பி, ஞெண்டு, நா - இவற்றிற்குக் கூற்றமாவன யாவை?
4. பெருமையும், சிறுமையும், நன்மையும் ஆகக் காரியாசான் கூறுவன யாவை?
5. இன்சொல், வன்சொல்-இவற்றுல் ஆவன யாவை?
6. சிறுபஞ்சமூலம்-நூலின் பெயர்க் காரணம் எழுதுக.
7. **பின் வரும் தொடர்களைப் பிரிக்க :** நன்ஞேன்பு, நாவகம், இயல்பில்லா, ஆரருள், வீவில்லா.

## ஈ. திரிகடுகம்

### மெய்ப்பொருள் கண்டு வாழ்வார்

வைததனை யின்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானு—மூறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 1

### புகழ் உடம்பு எய்துவோர்

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானு—முண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானு மிம்மூவர்
சாவா வுடம்பெய்தி னார். 2

### செல்வத்தை அழிக்கும் படை

தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை. 3

#### குறிப்புரை

**திரிகடுகம் :** சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று பொருள்களின் தொகுதியாகிய 'திரிகடுகம்' என்னும் மருந்து, உடல் நலத்துக்கு உதவுவதுபோல, மனநலத்திற்குரிய மும்மூன்று நீதிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆகிய நூல். இது பதினெண்கீழ்க் கணக்கு வகையைச் சேர்ந்தது; 101 வெண்பாக்களையுடையது.

இந்நூலை இயற்றியவர் **நல்லாதனார்** என்பவர். இவர் வைணவ மதத்தினர். கடைச்சங்க காலத்தைச் சேர்ந்தவர்.

1. ஊறிய கைப்பு - மிக்க கசப்பு ; கட்டி - வெல்லக்கட்டி.

2. கூவல் - கிணறு. சாவா உடம்பு - புகழ் உடம்பு.

3. தன்னை வியந்து - தன்னைத்தானே மிக மதித்து; தருக்கல் - செருக்குக் கொள்ளல்; தாழ்வு-அடக்கம்; கொன்னே-வீணாக.

#### வினாக்கள் :

1. மெய்ப் பொருள் கண்டு வாழ்வோர் யாவர் ?
2. புகழ் உடம்பு எய்துவோர் யாவர் ?
3. செல்வத்தை அழிக்கும் கருவிகள் யாவை ?

# III. தொடர்நிலைச் செய்யுள்

## அ. மணிமேகலை

### ஆதிரை பிச்சையிட்ட காதை

நாகர் சாதுவனைக் காணல்

ஆங்கவள் கணவனும் அலைநீர் அடைகரை
ஓங்குயர் பிறங்கல் ஒருமர நீழல்
மஞ்சுடை மால்கட லுழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ள,அச் சூர்மலை வாழும்
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து, 'பரிபுலம் பினனிவன்;
தானே தமியன் வந்தனன்; அளியன்;
ஊனுடை யிவ்வுடம் புணவு'என் றெழுப்பலும்,

சாதுவன் நாகர் தலைவனைச் சேர்தல்

மற்றவர் பாடை மயக்கறு மரபிற்
கற்றனன் ஆதலின், கடுந்தொழில் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
ஆங்கவ ருரைப்போர், 'அருந்திறல்! கேளாய் :
ஈங்கெங் குருமக னிருந்தோன்; அவன்பாற்
போந்தருள் நீ'யென, அவருடன் போகிக்
கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய இருக்கையில்
எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுடன் இருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மைய னாகிக்
கோடுயர் மரநிழல் குளிர்ந்த பின்னவன்,

நாகர் தலைவனின் பரிவு

'ஈங்குநீ வந்த காரணம் என்?'என
ஆங்கவற் கலைகடல் உற்றதை உரைத்தலும்,
'அருந்துதல் இன்றி அலைகடல் உழந்தோன்
வருந்தினன் அளியன் வம்மின், மாக்காள்!
நம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து

வெங்களும் ஊனும் வேண்டுவ கொடும்,'என
அவ்வுரை கேட்ட சாதுவன் அயர்ந்து
'வெவ்வுரை கேட்டேன்; வேண்டேன்,' என்றலும்,

நாகனின் சீற்றமும் சாதுவன் அறவுரையும்

'பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மாக்கட்கு
உண்டோ ஞாலத் துறுபயன்? உண்டெனில்
காண்குவம் யாங்களும் காட்டுவா யாக'எனத்
தூண்டிய சினத்தினன் சொல்லெனச் சொல்லும் :
'மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் ; கேளாய் :
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற துண்மையின்
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்,
அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்,
உண்டென வுணர்தலி னுரவோர் களைந்தனர்;
கண்டனை யாக'எனக் கடுநகை எய்தி,

உயிரின் இயல்பைச் சாதுவன் விளக்கல்

'உடம்புவிட் டோடும் உயிருருக் கொண்டோர்
இடம்புகும் என்றே எமக்கீங் குரைத்தாய்!
அவ்வுயிர் எவ்வணம் போய்ப்புகும்? அவ்வகை
செவ்வனம் உரை'யெனச் 'சினவா திதுகேள் :
உற்றதை உணரும் உடலுயிர் வாழ்வுழி,
மற்றைய உடம்பே மன்னுயிர் நீங்கிடின்
தடிந்தெரி ஊட்டினுந் தானுண ராதெனின்,
உடம்பிடைப் போனதொன் றுண்டென உணர்நீ;
போனர் தமக்கோர் புக்கிலுண் டென்பது
யானே வல்லேன்? யாவரும் உணர்குவர்;
உடம்பீண் டொழிய உயிர்பல காவதம்
கடந்துசேண் சேறல் கனவிலுங் காண்குவை;
ஆங்கனம் போகி அவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையின் புகுவது தெளிநீ,'

நாகர்களுக்கு ஏற்ற நல்லறத்தைச் சாதுவன் விளக்கல்

என்றவன் உரைத்தலும் எரிவிழி நாகனும்

நன்றறி செட்டி நல்லடி வீழ்ந்து
'கள்ளும் ஊனும் கைவிடின் இவ்வுடம்பு
உள்ளுறை வாழுயிர் ஓம்புதல் ஆற்றேன்;
தமக்கொழி மரபின் சாவுறு காறும்
எமக்காம் நல்லறம் எடுத்துரை,' என்றலும்,
'நன்று சொன்னாய்! நன்னெறிப் படர்குவை;
உன்றனக் கொல்லும் நெறியறம் உரைக்கேன்:
உடைகல மாக்கள் உயிருய்ந் தீங்குறின்
அடுதொழில் ஒழிந்தவர் ஆருயிர் ஓம்பி
மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிக,'எனச் சிறுமகன் உரைப்போன்,

### சாதுவன் புகார் நகருக்கு மீளல்

'ஈங்கெமக் காகும் இவ்வறம் செய்கேம்;
ஆங்குனக் காகும் அரும்பொருள் கொள்க'எனப்
'பண்டும் பண்டும் கலங்கவிழ் மாக்களை
உண்டேம்; அவர்தம் உறுபொருள் ஈங்கிவை;
விரைமரம் மென்றுகில் விழுநிதிக் குப்பையோடு
இவையிவை கொள்க'என எடுத்தனன் கொணர்ந்து
சந்திர தத்தன் என்னும் வாணிகன்
வங்கம் சேர்ந்ததில் வந்துடன் ஏறி
இந்நகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமும் செய்தனன்;

### மணிமேகலை ஆதிரையிடம் ஆருயிர் மருந்து பெறல்

ஆங்கனம் ஆகிய ஆதிரை கையால்
பூங்கொடி நல்லாய்! பிச்சை பெறுக'என,
மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும்,
தொழுதுவலம் கொண்டு துயரறு கிளவியோடு
அமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக'என
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென்.

—சீத்தலைச்சாத்தனார்

## குறிப்புரை

**மணிமேகலை :** இது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. கோவலன், மாதவி இவர்கள் மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் நூல். ஆசிரியப்பாவாலாகிய முப்பது காதைகளை உடையது.

**சீத்தலைச் சாத்தனார் :** இவர் மதுரையில் வாழ்ந்தவர். 'சீத்தலை' இவர் பிறப்பிடம். இளங்கோவடிகளின் காலத்தவர். புத்த மதத்தினர்.

1. அவள் கணவன் - ஆதிரை கணவன், சாதுவன்.
2. ஓங்கு உயர் - ஒரு பொருட்பன்மொழி. பிறங்கல் - மலை.
3. மஞ்சு - மேகம்.
4. துஞ்சுதுயில் - மிக்கதுயில். சூர்மலை - அச்சம் தரும் மலை.
5. நயமிலர் - இனிமை இல்லாதவர்.
6. பரிபுலம்பு - மிக்க வருத்தம்.
7. தமியன் - ஒருவனாய். அளியன் - எளிமை உடையவன்.
9. பாடை-மொழி. மயக்கறு மரபில் - ஐயமற.
11. சுற்று நீங்கி - விலகி.
13. குருமகன் - ஆசிரியன். போந்தருள் - வந்தருள்.
15. கள் அடு குழிசி - கள்ளைக் காய்ச்சுகின்ற பானை.
16. என்புஉணங்கல் - எலும்பு வற்றல்.
17. எண்கு - கரடி. பிணவு - பெண் கரடி.
19. பிணித்து- அவன் வசமாகி. 20. கோடு - கிளைகள்.
22. கடல் உற்றதை - கடலில் பட்டதை.
24. விம்மின் - வாருங்கள். 25. நம்பி - ஆடவரில் சிறந்தவன்.
26. வெங்கள் - விருப்பம் தரும் மது.
28. வெவ்வுரை - கொடுஞ்சொல்.
30. ஞாலம் - உலகம்.
32. தூண்டிய சினத்தினன் - மிக்க கோபத்தை உடையவனாய்.
34. கயக்கு - கலக்கம். கடிந்தனர் - விலக்கினர்.
37. நல்லுலகு - வானுலகு. 38. அல்லறம் - தீவினை.
39. உரவோர் - அறிஞர். களைந்தனர் - நீக்கினர்.
41. உருக்கொண்டு - வேறு வடிவம் கொண்டு.
43. எவ்வணம் - எவ்வாறு. 44. செவ்வனம் - நன்கு.
47. தடிந்து எரி ஊட்டினும் - வெட்டித் தீயில் இட்டாலும்.
51. காவதம் - ஏறக்குறையப் பத்து மைல்.
52. சேண் சேறல் - நெடுந்தூரத்தில் செல்லுதல்.
55. எரிவிழி - தீப்போலும் கண்; உவமைத்தொகை.
56. நன்று அறி - அறத்தினை அறிந்த.
57. கைவிடின் - விட்டுவிட்டால்.
59. சாவுறுகாறும் - சாகும் வரை.
60. எமக்குஆம் - எமக்குப் பொருந்தும்.

61. படர்குவை - செல்வாய்.
62. ஒல்லும் - இயலும்.
64. அடுதொழில் - கொல்லுந்தொழில்.
65. மூத்து விளி - முதுமையுற்று இறக்கும்.
66. தீத்திறம் - கொலே. சிறுமகன் - கீழோனுகிய நாகன்.
69. கலங்கவிழ் - மரக்கலம் கவிழ்ந்து வந்த.
70. உறு பொருள் - மிக்க பொருள்.
71. விரை மரம் - மணமுடைய மரம் (சந்தனம், அகில்).
விழுநிதிக்குப்பை - சிறந்த பொருட்குவியல்.
74. வங்கம் - கப்பல்.
80. புனேயா ஓவியம் - அணி செய்யப்படாத ஓவியப் பாவை.
81. துயரறு கிளவி - இன்சொல்.
83. பாரகம் அடங்கலும் - நிலவுலகம் முழுவதும்.
84. ஆருயிர் மருந்து - உணவு.

## வினுக்கள்

1. சாரணராகிய நாகர் சாதுவனே எங்குக் கண்டனர்? என்ன கூறினர் ?

2. சாதுவன் நாகர் தலேவனேக் கண்ட காட்சியை ஆசிரியர் எங்ஙனம் தெரிவிக்கிருர் ?

3. சாதுவனேக் கண்ட நாகர் தலேவன் அவனே, எங்ஙனம் உபசரித்தான்?

4. 'ஞாலத்து உறுபயன் காட்டுவாயாக' என்ற நாகர் தலேவனுக்குச் சாதுவன் கூறிய அறவுரை யாது?

5. உயிரின் இயல்பைச் சாதுவன் நாகர் தலேவனுக்கு எவ்வாறு எடுத்துக் கூறினுன்?

6. 'எமக்காகும் நல்லறம் எடுத்துரை' என்ற நாகர் தலேவனுக்குச் சாதுவன் கூறிய ஏற்றநெறி யாது ?

7. நாகர் தலேவன் செய்த பிரிவுபசாரமும், சாதுவன் புகார் நகரம் திரும்பிய விதமும் பற்றி எழுதுக.

8. 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக.' — இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

## ஆ. பெருங்கதை

### இலாவாண காண்டம்

அவலந் தீர்ந்தது.

### உதயணன் பிறப்பு வரலாறு

#### மிருகாபதி நிலா முற்றத்தில் துயிலுதல்

'இன்றே யன்றியும் தொன்றுவழி வந்த
குன்றாக் கற்பினெங் கோப்பெருங் கிழவோள்
நித்திலம் பொதிந்த இப்பி போலத்
திருவயிற் றகவயின் உருவொளி யருஅ
நின்னைத் தாங்கிய நன்னாள் அமையத்துக்
கண்ணிழல் ஞாறிய காமர் பள்ளியுள்
வெண்ணிலா முற்றத்து விரும்பி யசைதலின்

#### சிம்புள் பறவை மிருகாபதியைத் தூக்கிச் செல்லல்

ஒள்ளொளி யரத்தம் ஊனென நசைஇப்
பல்வலிப் பறவை பற்றுபு பரிந்து

#### பறவை மிருகாபதியைத் தந்தை பள்ளியருகு வைத்தல்

விபுல.மென்னும் வியன்பெருங் குன்றத்து
அருவரை யருக ராய்நலங் கவினிய
ஆலங் கானத் தணியொடு பொலிந்த
ஞாலங் காவல் நஞ்சென நீக்கிப்
பாய்பரி யிவுளி யேயர் பெருமகன்
தன்கட் கொற்ற மெல்லாந் தன்மகன்
வென்றித் தானை விக்கிரற் கருளி
மறுவில் நெஞ்சமொடு மாதவந் தாங்கி
உறுபெருங் காட்சி யோங்கிய படிவத்து
அறம்புரி தந்தை பள்ளிய தருகர்ப்
பறந்துசெல் சிம்புள் பையென வைத்தலும்

#### மிருகாபதி கருவுயிர்த்தல்

கயலேர் கண்ணி துயிலேற் றெழவே
உயிர்போ யுருமையி னுறுபுட் போக
அச்ச வகையினு மந்தரச் செலவினும்

பொற்றொடி மாதர் பொறைநோய் கூர
எல்லாக் கோளும் நல்வழி நோக்கத்
திருமணி விளக்கந் திசைநின் றழலப்
பெருமணிப் பாவையிற் பிறந்தனை கிடந்தோய்!
திருமெய் தழீஇ யருமைத் தாக
நிகழ்ந்தை யறியாள் கவன்றன ளிரங்க

### தந்தை சேடக முனிவன் மகளென அறிந்து பாதுகாத்தல்

ஆத்திரை போந்த வருந்தவன் கண்டுதன்
ஆத்த காதன்மக ளாவ தறிந்துசென்று
அஞ்ச லோம்பென நெஞ்சகம் புகலப்
பள்ளிக் கொண்டுபுக் குள்ளழி வோம்பி

### உதயணன் என்று பெயரிடல்

அதிரா ஞாலத் தரசுவீற் றிருந்த
கதையுரைக் கெல்லாம் காரண னாதலின்
புதையிரு ளகற்றும் பொங்கொளி மண்டிலம்
உதய மிவர்தர வுதித்தோன் மற்றிவன்
உதயண னாகெனப் பெயர்முதற் கொளீஇப்

### உதயணனும் யூகியும்

பரம விருடிகள் பல்லோர்க்குத் தலைவன்
தருமந் தாங்கிய தவாஅக் கொள்கைப்
பிரமசுந் தரனெனும் பெரும்பெயர் முனிவற்குப்
பழிப்பில் கற்பிற் பரமசுந் தரியெனும்
விழுத்தகு பத்தினி விரும்பிப் பெற்ற
புத்திரன் தன்னொடு வத்தவர் தோன்றலும்
இருவிரு மவ்வழி மருவிவிளை யாடிச்
செல்லா நின்ற சில்லென் கானை

### கலைப் பயிற்சியும் யாழ் பெற்றதும்

வெஞ்சின வேழ வெகுளி நீக்கும்
மந்திர நாமம் வந்துநீர் கன்மெனத்
தேவவிந் திரனில் திருந்தப் பெற்ற
ஆய்பெரு நல்லியா ழமைவர எழீஇக்

கான யானையும் கரந்துறை புள்ளும்
ஏனைய பிறவு மானா வுவகையொடு
கேட்டவை யெல்லாம் வேட்டவை விரும்பி
வேண்டிய செய்தலின் ஈண்டிய மாதவன்
வரத்தின் வல்லே வல்லை யாகென
உரைத்தம் முனிவன் உவந்தனன் கொடுத்துப்
பெறலரும் பேரியாழ் பெற்ற வாறும்

### உதயணன் யூகியைத் தோழனாகப் பெற்றது

ஆர்வ நெஞ்சின னாகிய கல்வி
நேர்தனக் கில்லா நெஞ்சு ணமைதி
யூகி நினக்கிங் கடைக்கல மென்பதும்
போகிய புகழோன் பணிப்பக் கொண்டு
தோழ னாகித் தோமில் கேள்வி
யாழும் பாட்டும் அவைதுறை போகிக்

### தெய்வ யானையை வசப்படுத்தல்

கல்லா நின்ற சில்லென் காலத்து
மைவரை மருங்கின் மடப்பிடி சூழத்
தெய்வ யானை நின்றது நோக்கிக்
கண்டே நின்று காத லூர்தர
மந்திர வாய்ப்பும் வல்ல யாழின்
கந்திர வகையும் காண்பல் யானென
எழீஇயவ ணியக்கப் பொழிமத யானை
வேண்டிய செய்தலின் ஈண்டிய மாதவன்

### யானை கனவிற் கூறுதல்

பள்ளிக் குய்ப்ப நள்ளிருட் கூறும்
'பாக ரேறினும் தோற்கயி றிடினும்
நீமுன் னுண்ணினும் நீங்குவல் யான்',என
ஆகு பொருள்கேட் டறிவுற் றெழுந்து
போதுங் காலை மாதவ னொருமகன்

### சேடக முனிவனும் விக்கிரமனும்

வீயாச் செங்கோல் விக்கிர னொருநாள்,
'எச்ச மின்மையின் எவ்வங் கூராத்

துப்புர வெல்லாம் துறப்பென் யான்'எனத்
தற்பயந் தெடுத்தவன் தாணிழல் வந்தோன்,
'மதலை யாகுமிப் புதல்வன் யார்?' என,
'செருமிகு சீற்றத்துக் குருகுலத் தரசன்
சாயாச் செங்கோல் சதானிகன் தேவி
அருமைசால் கற்பின் மிருகா பதியெனும்
நுங்கை தன்னகர்க் கங்குற் கிடந்தோட்கு
இன்னது நிகழ இவ்வயிற் றந்த
பொன்னணி பைம்பூட் புதல்வன் தானிவன்;
ஐயாண்டு நிறைந்தன னாதலி னிவனைத்
தெய்வ ஞானந் திறப்படக் காட்டித்
தன்னகர்க் குய்ப்பென்' என்றலும், அடிகள்,

### விக்கிரமன் உதயணனை வேண்டிப் பெறுதல்

'என்னுழைத் தம்மின் இறையென வியற்றித்
தாய மெல்லாந் தனக்குரித் தாக
ஏயர் கொற்றம் இவன்வயிற் கொடுத்துப்
பெறலரும் பெருந்தவத் துறுபயன் கொள்வல்'என்று
ஆய்புகழ் முனிவனொடு தேவியை யிரந்து
செருமிகு குருசிறன் மருமகன் தழீஇ
நீல யானை நின்றது பண்ணிக்
கோல எருத்தம் குலவ ஏற்றி
வளநகர் புக்குத்தன் னுளமனைக் கெல்லாம்

### உதயணனை அரசனாக்குதல்

உதயணன் இறையென அறிவரச் சாற்றி
வேத்தவை நடுவண் வீற்றினி திருத்தி
ஏயர் குலமுதற் கிறைவ னாகி
அவ்வழி மற்றுநீ வளர—

—கொங்கு வேளிர்

## குறிப்புரை

**பெருங்கதை:** பெரியதாகிய கதையைக் கூறும் நூல். பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. கடைச் சங்க காலத்திற்குப் பின் சங்க நூல்களின் நடையை ஒட்டி இயற்றப் பட்ட நூல் இது. குணாட்டியர் என்பார் பைசாச மொழியில் இயற்றிய 'பிருகத் கதா' என்னும் நூலை ஆதாரமாகக் கொண்டு துர்விநீதன் என்னும் அரசன் இயற்றிய உதயணன் வரலாறு கூறும் வடமொழி நூல், இப்பெருங்கதைக்கு முதல் நூலாகும். பிருகத் கதா என்ற வடமொழித் தொடரின் மொழி பெயர்ப்பே பெருங் கதை என்னும் தொடர். இந்நூல் உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம் என்னும் ஐந்து காண்டங்களையும் ஒவ்வொரு காண்டத்துள்ளும் பல காதைகளையும் உடையது. கொங்குவேளிர் என்பார் இயற்றியமை யால், இந்நூல் 'கொங்குவேள் மாக்கதை' எனவும் வழங்கும்.

**நூலாசிரியர்:** கொங்கு வேளிர். சமயம்: சமணம். காலம்: கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது.

**இலாவாண காண்டம்:** இலாவாணம் என்னும் நகரில் உதயணன் இருந்த பொழுது நிகழ்ந்த செய்திகளைத் தொகுத்துக் கூறுவது. இது நகர் கண்டது முதலிய இருபது கதைகளை யுடையது. பாடப்பகுதி பதினேராவதாகிய **அவலந் தீர்ந்தது** என்னும் கதையிலுள்ளது.

### கதைச் சுருக்கம்

கௌசாம்பி நகர மன்னன் சதானிகன், ஒருநாள் நிலாமுற்றத் தில் உறங்கிய தன் தேவி மிருகாபதியைக் காணமல் திடுக்கிட்டு, நிகழ்ந்ததை அறியாமல் பலவிடங்களுக்கும் தன் பரிவாரங்களை அனுப்பித் தேடுவித்துக்கொண்டே காலம் கழித்து வந்தான். ஒரு நாள், அவன் முக்கால உணர்ச்சியுள்ள **சுவிருதர்** என்னும் முனிவரையடைந்து தன் குறையைத் தெரிவித்து வருந்தினன். அவர், மன்னன் மனைவியைச் சரபப் பறவை எடுத்துச்சென்று விபுலகிரியில் வைத்ததுமுதல், உதயணன் வைசாலியில் அரசாட்சி செய்துகொண்டிருத்தல் இறுதியாக உள்ள செய்திகளையெல்லாம் விளங்கக் கூறினர். இவ்வரலாற்றை உதயணன் தோழன் உருமண்ணுவா என்பவன் அம்முனிவர் பெருமையை உதயண னுக்கு எடுத்துக்கூற நேர்ந்த பொழுது, அம்முனிவன் சதானிக னிடம் கூறிய வரலாற்றை உருமண்ணுவா உதயணனிடமே கூறுகின்றான்.

1. தொன்று வழி வந்த கற்பு - பழமையான நெறியில் சிறந்த கற்பு.

2. கோப்பெருங்கிழவோள் - மிருகாபதி; உதயணனுடைய தாய்.

3. நித்திலம் - முத்து. நித்திலம் உதயணனுக்கும், இப்பி மிருகாபதிக்கும் உவமை.

3 - 5. உன்னை மிருகாபதி கருவுற்றிருந்த காலத்தில்.

6. ஞாறிய - தோன்றிய; கண்ணுடிகளின் மிகுதியால் நிழல் தோன்றுவதாயிற்று.

7. அசைதலின் - துயிலுதலின்.

8. ஒள்ளொளி அரத்தம் - மேலே போர்த்தப்பட்டிருந்த மிக்க ஒளியையுடைய சிவந்த ஆடையால். ஊன் என நசைஇ - மிருகாபதியைத் தசையாக எண்ணி உண்ண விரும்பி.

9. பல்வலிப் பறவை - சிம்புள் என்னும் பறவை.

10. விபுலமலேயில்

11. வரை - பக்கமலே. அருகர் - அருகே.

12. ஆலங்கானம் - விபுலமலேயின் பக்கத்தில் மிருகாபதியின் தந்தை தவம் செய்துகொண்டிருந்த இடம்.

14. பரியிவுளி - சிறந்த நடையையுடைய குதிரை. ஏயர்பெருமகன் - சேடகன் என்பவன்; இவன் சேதி நாட்டிலுள்ள வைசாலி நகரத்தரசன்; ஏயர் குலத்தவன்.

15. கொற்றம் - அரசுரிமை.

16. விக்கிரன் - மிருகாபதியின் தமயன்.

14—17. ஏயர் பெருமகன் தன் அரசவுரிமைகளே விக்கிரமனுக்கு ஈந்து.

19—20. தந்தையாகிய முனிவனுடைய ஆச்சிரமத்தினருகே மிருகாபதியைச் சிம்புள் மெல்ல வைத்தலும்.

21. கயல் ஏர் கண்ணி - மீன் போன்ற கண்ணேயுடையவள்; மிருகாபதி.

22. அவள் உயிரோடிருந்தமையின் அந்தப் பறவை அவளே விட்டுவிட்டுச் சென்றுவிட. சிம்புள் - உயிர்க்கொலே செய்யாத பறவை.

23. அந்தரச் செலவு - வான்வழிச் சென்றமையாலும்.

24. பொறை நோய் கூர - கருப்பவேதனேயாகிய நோய் அதிகரிக்க.

25. கோள் - கிரகங்கள்.

26. மணி விளக்கம் - மாணிக்கமாகிய விளக்கு; அழல - ஒளிவிட.

27. பெருமணிப் பாவையின் - பெரிய மாணிக்கப் பாவையைப் போல.

29. கவன்றனள் - மிருகாபதி கவலேயுற்று.

30. ஆத்திரை - யாத்திரை. ஆத்திரை போந்த - நீராடுதற்கு வந்த. அருந்தவன் - மிருகாபதியின் தந்தையாகிய முனிவன்; சேடகன் என்னும் பெயரினன்.

31. ஆத்த காதல் மகளாவது - தன்னுடைய காதலால் பிணிப்புற்ற மகளாதலே. அறிந்து - ஞானத்தால் அறிந்து. சென்று - அவ்விடம் போய்.

32. அஞ்சலோம்பு - அஞ்சுதலே ஒழி. புகல - விரும்ப.

33. உள்ளழிவு - மன வருத்தம்.

35. எல்லாக் கதைகளுக்கும் இவன் காரணனுக இருத்தலின்.

36. ஒளி மண்டிலம் - சூரிய மண்டலம்.

37. உதயம் - உதயகிரி.

37—38. 'சூரியன் உதயமாகையிற் பிறத்தலால், இவன் பெயர் உதயணன்,' என்று கூறி.

44. வத்தவர் தோன்றல் - வத்த நாட்டவர் குலத்தில் தோன்றிய உதயணனாகிய நீயும்.

40—44. பிரமசுந்தர முனிவனுக்குப் பரம சுந்தரி என்னும் மாது பெற்ற. புத்திரனோடு - யூகியோடு.

45. இருவிரும் - யூகியும் நீயுமாகிய இருவிரும்.

46. சில்லென் காலை - இளம்பிராயத்தில்.

47. வேழம் - யானை.

48. மந்திர நாமம் - இருபெயரொட்டு. நீர் கன்ம் (கல்லும்) என - நீங்கள் இருவிரும் கற்றுக்கொள்ளுங்கள் என்று பிரமசுந்தர முனிவன் இருவருக்கும் உபதேசித்து. கன்ம் - மகரக் குறுக்கம்.

50. எழீஇ - எழுப்பி, இசைத்து.

51. கரந்துறை புள் - மறைந்து வாழும் பறவைகள்.

55. வல்லே - விரைவில்.

49—56. இந்திரனால் தான் பெற்ற யாழ், யானையையும் பறவைகளையும் வசப்படுத்துதலை அறிந்து அம்முனிவன் அந்த யாழினை உதயணனுக்கு அளித்து. யாழின் பெயர் கோடபதி என்பது.

61. போகிய புகழோன் - எங்கும் சென்று பரந்த கீர்த்தியுடையோன், பிரமசுந்தர முனி.

62. தோழனாகி - யூகிக்குத் தோழனாகி. தோமில் - குற்றமற்ற.

63. பாட்டு - மிடற்றுப் பாடல்.

64. சில்லென் காலத்து - இளம்பருவத்தில்.

66. நோக்கி - உதயணன் பார்த்து.

67. கண்டு - ஆராய்ந்து.

68. மந்திர வாய்ப்பும் - மந்திர சித்தியையும்.

69. கந்திர வகையும் - இசையின் வகையையும்; கந்திரம்- கந்திருவம் என்பதன் சிதைவு.

70. எழீஇ அவண் இயக்க - ஒலியை எழுப்பி அங்கே யாழ் வாசிக்க.

70—72. அந்த யானை வசமானதால் அதனை உதயணன் தான் இருக்குமிடத்திற்குக் கொண்டுபோக, அவன் கனவில் அது கூறியது.

73—74. 'பாகர் ஏறுதல் முதலிய மூன்று குற்றங்களுள் ஒன்று நிகழுமாயின் யான் உன்னை விட்டு நீங்குவேன்' என்று கூறியது.

78. எச்சம் - சந்ததி, மக்கள்.

79. துப்புரவெல்லாம் - நுகரத்தக்க பொருள்களை எல்லாம்.

80. வந்தோன் - வந்த விக்கிரன்.

81. என - என்று தந்தையாகிய முனிவனை வினவ.

83. சாயா - வளையாத.

85. நுங்கை - உன் தங்கை.

86. இவ்வயின் தந்த - இங்கே பெற்ற.

87. பைம்பூண் - பசுமையான ஆபரணங்கள்.

89. இவனுக்கு ஞானோபதேசம் செய்து.

90. என்றலும் - என்று அம்முனிவன் கூறலும்.

91. தம்மின் - கொடுங்கள். இறையென - அரசனாக.

92. தனக்கு - இவனுக்கு.

93. ஏயர்க்குரிய அரசவுரிமையை இவனுக்கு அளித்து.

94. உறுபயன் - மிக்க பயன்; தவப்பயனை யான் அடைவேன் என்று சொல்ல.

95. தேவியை - மிருகாபதியை.

96. குருசில் - விக்கிரமன்.

97. நீலயானை - ஒரு வகை யானை.

98. எருத்தம் - பிடரி. ஏற்றி - இருத்த.

101. வேத்தவை - அரசசபை.

102. ஏயர்குலம் - சேதி நாட்டிலுள்ள வைசாலி நகரத்தரசன் குலம்.

## வினாக்கள்

1. பல்வலிப் பறவை ஊன் என எண்ணி யாரை எடுத்துச் சென்றது? எங்கு வைத்தது? அதனை உண்ணாது ஒழிந்தது ஏன்?

2 ஆத்திரை போந்த அருந்தவனைப் பற்றியும், அவன் தன் மகளைக்கண்டு ஆதரித்ததைப் பற்றியும் விளக்குக.

3, உதயணன் - பெயர்க்காரணம் கூறுக.

4. உதயணனது கல்விப்பயிற்சியைப் பற்றி விவரிக்க.

5. யூகி என்பவன் யார்? இவன் உதயணன் தோழனான வரலாற்றைத் தெரிவிக்க.

6. உதயணன் தெய்வயானையை வசப்படுத்திய வரலாற்றை விளக்குக.

7. தெய்வயானை உதயணன் கனவில் தோன்றிக் கூறியன யாவை?

8. விக்கிரமன் என்பவன் யார்? அவன் சேடக முனிவனிடத்தில் வந்தது ஏன்?

9. விக்கிரமன் உதயணனை அழைத்துச் சென்று அரசனாக்கிய வரலாற்றை விவரிக்க.

10. 'நித்திலம் பொதிந்த இப்பி போல'—இவ்வுவமையைப் பொருளோடு புணர்த்தி விளக்குக.

## இ. வில்லி பாரதம்

### வாசுதேவனைப் படைத்துணையழைத்த சருக்கம்

அரர்வணை துறந்து போந்தன் றசோதைகண் களிப்ப நீடு
தராதலம் விளங்க வெண்ணெய்த் தாழிசூழ் தரநின் ருடிக்
குராமணங் கமழுங் கூந்தற் கோவியர் குரவை கொண்ட
புராதனன் றனையேயேத்தும் புனிதர்தாள் போற்றி செய்வாம். 1

### துரியோதனன் அமைச்சருடனிருந்து சிந்தித்தல்

புரோகிதன் றூது வந்து போனபின் புயங்க கேது
விரோசனன் சுதனைக் கங்கா சுதனெடும் வெகுளி மாற்றித்
துரோணனை முதலா மிக்க தொன்மதி யமைச்ச ரோடுஞ்
சரோருக சதன மென்னத் தனித்திருந் தெண்ணி னனே. 2

### கண்ணனை அழைக்கத் துரியோதனன் தானே செல்லுதல்

தேயமெங் கெங்குஞ் செங்கோல் செலுத்துமத் திகிரி வேந்த
ராயவர் தம்மைக் கூட்ட வடைவினிற் றூது போக்கிக்
காயமு முயிரு மாகிப் பொருடொறுங் கலந்து நின்ற
மாயவன் றன்னைக் கூட்ட வளர்மதிற் றுவரை சேர்ந்தான். 3

### துவாரகை நகர் மதில் வருணனை

மாடநீள் வீதி மூதூர் வயங்குமா மதிலின் றேற்றம்
'ஏடவிழ் துளப மாலங் கிருந்தனன்', என்று கேட்டுச்
சேடன்வந் தனந்த கோடிச் செங்கதிர் மணியின் பத்திச்
சூடிகா மகுடத் தோடுஞ் சூழ்ந்ததோர் தோற்றம் போலும். 4

### அகழி வருணனை

கார்க்கடல் வண்ணன் றன்பால் கண்டுயி லொழிந்து போந்து
மேற்கடற் றுவரை மூதூர் மேவரும் விரகு நோக்கிப்
போர்க்கடற் பொறிகள் யாவும் பொறுத்தவப் புரிசை தன்னைப்
பாற்கடல் வளைத்த தொக்கும் பன்மல ரகழி யம்மா. 5

### கொடிகளின் காட்சி

'ஈண்டுநீ வரினு மெங்க ளெழிலுடை யெழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட் கல்லாற் படைத்துணை யாக மாட்டான்;
மீண்டுபோ'என்றென் றந்த வியன்மதிற் குடுமி தோறுங்
காண்டகு பதாகை யாடை கைகளாற் றடுப்ப போன்ற. 6

### துரியோதனன் துவாரகை நகர வீதியில் செல்லுதல்

அருள்குடி யிருக்குங் கண்ணு னவதரித் தனனென் றெண்ணித்
தரணியின் மீது வந்து தன்னுடைச் சோதி வைகும்
பரமமா ஞான போகப் பதிகுடி யிருந்த தன்ன
திருநகர் வீதி புக்கான் சித்தசித் துணர்வி லாதான். 7

### துரியோதனன் வரவறிந்த கண்ணன் துயில் கொள்ளுதல்

வந்தமை யறிந்து கொற்ற வாயிலோர் தம்மை நோக்கி,
'அந்தன்மா மதலை வந்தா லறிவியா தொழிமின்' என்று
சந்திர னொடுங்கி நிற்பத் தபனனே சரிக்கு மாறு
பந்தனை யிலாதான் யோகத் துயில்வரப் பள்ளி கொண்டான். 8

### துரியோதனன், துயில் கொண்டிருந்த கண்ணன் தலைப்பக்கம் சேர்தல்

பொற்புடைப் புனிதன் கோயிற் புறத்தினி லனிக நிற்பச்
சற்பவெம் பதாகை வேந்தன் றடையறத் தனிச்சென் றெய்தி
உற்பல வண்ணன் பள்ளி யுணர்தரு காறு மிட்ட
சிற்பவண் டவிசி னேறித் திருமுடிப் பக்கஞ் சேர்ந்தான். 9

### திருவடிப்பக்கம் சேர்ந்த அருச்சுனனைக் கண்டு கண்ணன் அருள் செய்தல்

வந்திலன் விசய னென்று வான்றுயில் புரிந்த வண்ணல்
சிந்தனை செய்யும் வேலைச் சிந்தையிற் கடிய தேரோன்
பந்தனை யறுக்கும் பாத பங்கயம் பணிந்து நிற்ப
முந்துற விழித்து நோக்கி முகமலர்ந் தருள்செய் தானே. 10

### துரியோதனன் வரவை அருச்சுனன் அறிவித்தல்

நின்றவ னிருந்த வேந்தன் வரவினை நிகழ்த்த, நேமிப்
பொன்றிகழ் படையோ னந்த பொய்த்துயிற் பாய னீங்கி,
'மன்றலந் தொடையன் மார்பா! வரவெமக் குரைசெ யாதென்?'
என்றுர நெருங்கப் புல்லி யின்சொலா லுவகை செய்தான். 11

### இருவரும் வந்த காரணத்தை இயம்புதல்

'இருவிரும் வந்த வாறென்? இயம்புதிர்,' என்று வாச
மருவிரி துளப மாலை மரகத வண்ணன் கேட்பச்
செருவினீ யெமக்கு வெம்போர் செய்துணை யாக வேண்டும்
பொருவிலோய்!' என்று கொண்டவ் விருவரும் புகன்ற காலை.

### 'பாண்டவர்க்கே படைத்துணை ஆவேன்,' எனக் கண்ணன் கூறல்

'உற்றம ருதவி செய்வா னுதிட்டிரன் றனக்கு முன்னே
சொற்றன மாங்கண்; இங்குந் துயிலுணர் பொழுதத் தின்று
விற்றிறல் விசயன் முந்த விழிக்கிலக் காணுன்,' என்று
பற்றறத் துணிந்து சொன்னுன் பாண்டவர் சகாய னுஞன். 13

### துரியோதனன் கண்ணனிடம் வேண்டிய வரம்

முடைகமழ் முல்லை மாலை முடியவன் றன்னைப் 'போரிற்
படையெடா தொழிமின்' என்று பன்னக துவசன் வேண்ட
நெடியமா முகிலு நேர்ந்து, 'நினக்கினி விசய! போரில்
அடுபடையின்றிச்செய்யுமாண்மையென்அறைதி' என்றான். 14

### அருச்சுனன் கூறிய மறுமொழி

'செருமலி யாழி யங்கைச் செழுஞ்சுடர் நின்றென் றேரிற்
பொருபரி தூண்டி னிந்தப் பூதலத் தரச ரொன்றோ,
வெருவரு மியக்கர் விண்ணோர் விஞ்சைய ரெனினு மென்கை
வரிசிலை குனிய வாங்கி மணித்தலை துமிப்பன்!' என்றான். 15

### கண்ணன் துரியோதனனுக்குக் கூறிய உறுதி மொழி

அடர்சிலை விசய னிவ்வா றிசைத்தனு மமலன் வஞ்சப்
படவர வுயர்த்த வென்றிப் பார்த்திவன் றன்னை நோக்கி,
'நடையுடைப் புரவித் திண்டேர் நானிவற் கூர்வ தன்றி
மிடைபடையேவிநும்மோடமர்செயேன்வேந்த!' என்றான். 16

### கண்ணன் துரியோதனனுக்கு மேலும் சில கூறல்

'எம்மையே யொழிய வுள்ள யாதவ குலத்து ளோர்கள்
தம்மையு மெம்மு னன தாலகே துவையுஞ் சேரச்
செம்மையோ டுதவி யாகக் கொண்டுநீ செல்க!' என்று
மும்மையுமுணர்ந்தநாதன்முன்னுறப்பின்னுஞ்சொன்னான். 17

### துரியோதனன் சென்று பலராமனைக் காணல்

'கிருதவன் மாவக் குரோணிக் கிளர்படை யோடு நின்பால்
வருவன்,'என் றுரைத்து வேண்டு மதுரவாய்மைகளுங் கூறி
மருதுபோழ்ந் திட்ட செங்கண் மாயவன் விடுப்ப வேகிக்
கருதலான் வினய மொன் றுங் கண்ணன் முன்னோனைக் கண்டான்.

### துரியோதனன் பலராமனைப் படைத்துணையாக வேண்டுதல்

கண்ணனங் கருளிச் செய்த கட்டுரைப் படியே சங்க
வண்ணனுக் கிளவல் சொன்ன மாற்றமு மரசன் சாற்றி,
'எண்ணருந் தொகைகொள் சேனை யாதவ குமர ரோடே
அண்ணலே! வருகெ'ன் றேகி யத்தின புரிபுக் கானே. 19

### கண்ணன் அருச்சுனனோடு அத்தினபுரம் செல்லுதல்

கூறிய வேக நாகக் கொடியவ னகன்ற பின்னர்த்
தேறிய விசய னோடுஞ் செழும்புனற் றுவரை நீங்கி
ஆறிரு நாமத் தோனும் ஐயிரு நாமத் தோனும்
ஊறிய கருணை நெஞ்சி னுதிட்டிர னிருக்கை புக்கார். 20

#### குறிப்புரை

வில்லி பாரதம் - வில்லிபுத்தூராழ்வாரால் இயற்றப்பட்ட பாரதம் வில்லி பாரதம் எனப்படும். இது பரதனது குடியில் தோன்றியவர்களது வரலாற்றைக் கூறும் நூல். பரதனது குடியிற் பிறந்தவர்கள் பாண்டவரும் துரியோதனாதியரும். எனவே, அன்னாரது வரலாறு கூறும் நூல் பாரதம் எனப்பட்டது.

இந்நூலாசிரியர் வில்லிபுத்தூராழ்வார் என்பவராவர். இவர் நடுநாட்டிலுள்ள சனியூர் என்னும் ஊரில் பிறந்தவர். இவரது தந்தையார் வீரராகவாசாரியார் என்னும் பெயரினர். இவரை ஆதரித்தவன் வக்கபாகை வரபதியாட்கொண்டான் என்னும் சிற்றரசன். காலம் - 500 ஆண்டுகட்கு முன்.

கண்ணபிரானை, நிகழ இருக்கும் பாரதப் போருக்குத் தத்தமக்குத் துணையாக வருமாறு துரியோதனனும் அருச்சுனனும் அழைத்த வரலாறு பற்றிக் கூறுவதே பாடமாய் வந்துள்ள இப்பகுதியாகும்.

1. அராவணை - பாம்புப் படுக்கை. தராதலம் - நிலவுலகம். குரா - குரவம்பூ.

2. புரோகிதன் - உலூகன். புயங்ககேது - அரவக் கொடியோன். விரோசனன் சுதன் - சூரியன் மகன் கன்னன். கங்காசுதன் - கங்கையின் மகன்; பீஷ்மர். சரோருகசதனம் - பிரம சபை.

3. திகிரி - சக்கரம். அடைவினில் - முறையாக. துவரை - துவாரகை.

4. எடு அவிழ் - இதழ் விரிந்த. சேடன் - ஆதிசேடன். பத்தி - வரிசை. சூடிகை மகுடம் - ஒரு பொருட் பன்மொழி. ஆதிசேடன், திருமால் துவாரகையில் கண்ணபிரானயிருத்தலால் ஆண்டுவந்து தன் மகுடங்களோடு சூழ்ந்திருந்தது போலிருந்தது என்று புலவர் தம் குறிப்பை மதில்மீதேற்றிக் கூறுவதால், இது தற்குறிப்பேற்றமாம். மேல் வரும் மூன்று செய்யுள்களிலும் இவ்வணி பயிலுதல் காண்க.

5. கார்க்கடல் வண்ணன் - கரிய கடல் நிறத்தன். மேவரும் - விரும்பி எழுந்தருளியிருக்கும். பொறி - மதிலின்மேல் வைக்கப் பட்டிருக்கும் பொறிகள் (இயந்திரங்கள்).

6. எழில் - அழகுமிக்க. எழிலிவண்ணன் - மேக நிறத்தோன். விரைவு பற்றி 'என்று என்று' என அடுக்கிற்று. குடுமி - உச்சி. காண்டகு - காணத்தகும். பதாகை - கொடி. கொடி காற்றில் அசைந்த தோற்றம்.

7. பரம - மேலான. சித்து - அறிவுடைப் பொருள். அசித்து - அறிவில்லாப் பொருள்.

8. அந்தன் - குருடன்; திருதராட்டிரன். சந்திரன் ஒடுங்கி நிற்ப - சந்திர கலையாகிய இடக்கலைக் காற்று அடங்கி நிற்க. தபனனே சரிக்குமாறு - சூரிய கலையாகிய பிங்கலைக் காற்றே இயங்குமாறு. பந்தனையிலாதான் - பாசங்களின் (இயல்பாகவே) நீங்கினன்.

9. அனிகம் - படை. சற்பம் - எதுகை நோக்கிச் சர்ப்பம், சற்பமாயிற்று. பதாகை - கொடி. உற்பலம் - நீலோற்பலம்; கருங் குவளை மலர். பள்ளி உணர்தருகாறும் - துயில் நீத்தெழும் வரை.

10. வான்றுயில் - உயர்ந்த துயில்; அதாவது அறிதுயில். தேரோன் - அருச்சுனன். பாதபங்கயம் - திருவடியாகிய தாமரை. பாதத்தில் வணங்கிய அளவில் எழுந்து அவனை வரவேற்றுணுதலின் முடிப்பக்கத்திலுள்ள துரியோதனனை முதலிற்காணுது அடிப்பக்கத் துள்ள அருச்சுனனையே முதலிற்கண்டான்.

11. பாயல் நீங்கி - படுக்கையினின்றும் எழுந்து. மன்றல் - மணமுடைய. தொடையல் - மாலை. உரம் நெருங்க - மார்போடு இறுக. புல்லி - தழுவி. சொல்லால் உவகை செய்தான் என்ருல் மனத்தில் உள்ளூர அன்பில்லையென்பதாயிற்று.

12. இயம்புதிர் - சொல்லுவீர்; முன்னிலைப் பன்மை. செருவில் - போரில். பொருவிலோய் - ஒப்பற்றவனே. புகன்ற - சொன்ன.

13. சொற்றனம் - சொல்லியிருக்கின்ருேம்; தன்மைப் பன்மை. பற்றற - ஒருசார் பற்றில்லாமல் (வெளிக்கு). பாண்டவர்களுக்குச் சகாயனுனதால் வெளிக்கு இங்ஙனம் கூறினன் என்க.

14. முடை - மணம். பன்னக துவசன் - பாம்புக்கொடியோன். மாமுகில் - கருமுகில் போன்ற கண்ணன். அடுபடை - கொல்லும் படைக்கலம்; வினைத்தொகை. அறைதி - சொல்லுக.

15. செருமலி ஆழி - போர்த்திறம் மிக்க சக்கரத்தை. செழுஞ்சுடர் - செழுமையான ஒளிப்பிழம்பாகிய நீர். ஒன்ருே - மட்டுமோ. வெருவரு - அஞ்சத்தக்க. குனிய - வளைய. துமிப்பன் - அறுப்பேன்; தன்மை ஒருமை முற்று.

16. அமலன் - மலமற்ருேன்; கண்ணபிரான். பார்த்திவன் - அரசன்.

17. எம்முனை - எமக்கு முன் தோன்றலாகிய. முன்னை என்றதன் தொகுத்தல் விகாரம். தாலகேது - பனைக்கொடியோன் (பலராமன்). மும்மை - மூன்று காலமும்.

18. கிருதவன்மா - வாசுதேவனுக்குச் சிறிய பாட்டன். மருது போழ்ந்திட்ட - மருதமரத்திடைத் தவழ்ந்து அதை (பிளந்திட்ட) முரித்திட்ட. வினயமொன்றும் கருதலான் - (கண்ணன்) சூழ்ச்சி ஒன்றையும் உய்த்துணராதவனாய்.

19. சங்கவண்ணன் - சங்குபோன்ற வெண்ணிறமுடையோன் (பலராமன்).

20. ஆறிரு நாமத்தோன் - பன்னிரு பெயருடையோன்; கிருட்டிணன். ஐயிரு நாமத்தோன் - பத்துப் பெயரன்; அருச்சுனன். ஊறிய கருணை - (மேலும் மேலும்) சுரக்கின்ற அருள்.

## வினாக்கள்

1. வில்லிபுத்தூராழ்வார் பற்றிய வரலாற்றுக் குறிப்பு வரைக.
2. துரியோதனன் வந்த போது துவாரகை நகரில் பறந்த கொடிகள் பற்றி ஆசிரியர் கூறுவது என்ன? அதில் அமைந்துள்ள அணி யாது?
3. கண்ணன் அருச்சுனனையும் துரியோதனனையும் எங்ஙனம் வரவேற்றான்?
4. 'போருக்குத் துணை செய்ய வேண்டும்' என்று வேண்டிய துரியோதனனுக்குக் கண்ணன் கூறிய விடை யாது?
5. "படை எடாது நான் உனக்கு என்ன துணை செய்வேன்?" என்று கூறிய கண்ணனுக்கு அருச்சுனன் சொன்ன மறுமொழி யாது?
6. துரியோதனன் பலராமனிடம் தெரிவித்தது என்ன?
7. நிகழிடம் காட்டிப் பொருள் விளக்குக:—
   (1) வரவு எமக்கு உரைசெயாதென்?
   (2) வரிசிலை குழைய வாங்கி மணித்தலை துமிப்பன்.
8. ஆறிருநாமத்தோன், ஐயிருநாமத்தோன், பன்னக துவசன், தாலகேது, நாகக்கொடியவன், பாண்டவர் சகாயன் - இத்தொடர்கள் யார் யாரைக் குறிக்கும்?
9. பின் வரும் தொடர்களைப் பிரிக்க:—பொருடொறும், பொன்றிகழ் படையோன், பொருவிலோய், விற்றிறல், அங்கை, திண்டேர்.
10. கண்ணன், துரியோதனன், அருச்சுனன் - இவர்கள் கூற்றை உரையாடலாக அமைக்க.

## ஈ. பெரியபுராணம்

### பூசலார் நாயனர் புராணம்

———

திருநின்றவூர்ச் சிறப்பு

உலகினில் ஒழுக்கம் என்றும்
உயர்பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க
நான்மறை விளங்கு மூதூர்
குலமுதற் சீலம் என்றுங்
குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வம் மல்கி
நிகழ்திரு நின்ற வூராம். 1

பூசலாரின் ஒழுக்கமும் கல்வியும்

அருமறை மரபு வாழ
அப்பதி வந்து சிந்தை
தருமுணர் வான எல்லாந்
தம்பிரான் கழன்மேற் சார
வருநெறி மாரு அன்பு
வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
பொருள்பெறு வேத நீதிக்
கலையுணர் பொலிவின் மிக்கார். 2

பூசலாரது ஒழுக்கம்

அடுப்பது சிவன்பால் அன்பர்க்கு
ஆம்பணி செய்த லென்றே
கொடுப்பதெவ் வகையுந் தேடி
அவர்கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி ஐயர்
மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டார்
இருநிதி யின்மை எண்ணூர். 3

மனக்கோயில் தொடக்கம்

மனத்தினுற் கருதி எங்கும்
மாநிதி வருந்தித் தேடி,

எனைத்துமோர் பொருட்பே றின்றி,
'என்செய்கேன்!' என்று நைவார்;
நினைப்பினல் எடுக்க நேர்ந்து
நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச்
சிந்தையால் திரட்டிக் கொண்டார். 4

### கோயிலுக்கு அடி நிலை அமைத்தல்

சாதனத் தோடு தச்சர்
தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக் கால யஞ்செய்
நலம்பெறு நன்னாட் கொண்டே
ஆதரித் தாக மத்தால்
அடிநிலை பாரித் தன்பால்
காதலிற் கங்குற் போதுங்
கண்படா தெடுக்க லுற்றார். 5

### கோயில் எழுப்புதல்

அடிமுதல் உபான மாதி
ஆகிய படிக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற
மனத்தினல் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானும்
முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில்
நிரம்பிட நினைவாற் செய்தார். 6

### கோயிலின் சுற்றுப்புற அமைப்பு

தூபியும் நட்டு மிக்க
சுதையுநல் வினையுஞ் செய்து
கூவலும் அமைத்து மாடு
கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும்
வேண்டுவ வகுத்து மன்னுந்
தாபனஞ் சிவனுக் கேற்க
விதித்தநாள் சாரு நாளில். 7

### காடவர் கோமான் கனவு

காடவர் கோமான் கச்சிக்
கற்றளி யெடுத்து முற்ற

மாடெலாஞ் சிவனுக் காகப்
பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமால் அறியா தாரைத்
தாபிக்கு மந்நாள் முன்னுள்
ஏடலர் கொன்றை வேய்ந்தார்
இரவிடைக் கனவி லெய்தி 8

சிவபெருமான் காடவர் கனவில் கூறுதல்

"நின்றவூர்ப் பூச லன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து
நாளைநாம் புகுவோம்; நீஇங்
கொன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய்," என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில்கொண் டருளப் போந்தார். 9

வேந்தன் நின்றவூர் வருதல்

தொண்டரை விளக்கத் தூயோன்
அருள்செயத் துயிலை நீங்கித்
திண்டிறல் மன்னன், "அந்தத்
திருப்பணி செய்தார் தம்மைக்
கண்டுநான் வணங்க வேண்டும்,"
என்றெழுங் காத லோடும்
தண்டலைச் சூழல் சூழ்ந்த
நின்றவூர் வந்து சார்ந்தான். 10

வேந்தன் பூசலார் கோயிலைப்பற்றி விசாரித்தல்

அப்பதி யணைந்து, "பூசல்
அன்பரிங் கமைத்த கோயில்
எப்புடை யது?" என் றுங்கண்
எய்தினர் தம்மைக் கேட்கச்
"செப்பிய பூசல் கோயில்
செய்தவொன் றில்லை," என்றார்;
'மெய்ப்பெரு மறையோ ரெல்லாம்
வருக,' என் றுரைத்தான் வேந்தன். 11

### வேதியர்கள் வருதல்

பூசுர ரெல்லாம் வந்து
புரவலன் தன்னைக் காண,
'மாசிலாப் பூச லார்தாம்
ஆர்?'என மறையோ ரெல்லாம்
'ஆசில்வே தியனிவ் வூரான்,'
என்றவ ரழைக்க வொட்டா
தீசனு ரன்பர் தம்பால்
எய்தினன் வெய்ய வேலான். 12

### வேந்தன் பூசலாரைச் சந்தித்தல்

தொண்டரைச் சென்று கண்ட
மன்னவன் தொழுது, 'நீரிங்
கெண்டிசை யோரும் ஏத்த
எடுத்தவா லயந்தான் யாதிங்
கண்டர்நா யகரைத் தாபித்து
அருளுநாள் இன்றென் றும்மைக்
கண்டடி பணிய வந்தேன்
கண்ணுத லருள்பெற்' றென்றான். 13

### பூசலார் தாம் கோயிலெடுத்தமை பற்றிக் கூறல்

மன்னவன் உரைப்பக் கேட்ட
அன்பர்தாம் மருண்டு நோக்கி,
'என்னையோர் பொருளாக் கொண்டே
எம்பிரான் அருள்செய் தாரேல்
முன்வரும் நிதியி லாமை
மனத்தினல் முயன்ற கோயில்
இன்னதாம்' என்று சிந்தித்
தெடுத்தவா றெடுத்துச் சொன்னார். 14

### அரசன் காஞ்சிக்கு மீளுதல்

அரசனும் அதனைக் கேட்டங்
கதிசயம் எய்தி, 'என்னே
புரையறு சிந்தை யன்பர்
பெருமை!' என் றவரைப் போற்றி,

விரைசெறி மாலை தாழ
  நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து,
முரசெறி தானை யோடும்
  மீண்டுதன் மூதூர் புக்கான். 15

**பூசலார் சிவபதமடைதல்**

அன்பரும் அமைத்த சிந்தை
  யாலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத்
  தாபித்து நலத்தி னோடும்
பின்பூபூ சனைக ளெல்லாம்
  பெருமையிற் பலநாட் பேணிப்
பொன்புனை மன்று ளாடும்
  பொற்கழல் நீழல் புக்கார். 16

### குறிப்புரை

**பெரிய புராணம் :** பெருமை பெற்ற சிவனடியார்களது வரலாற்றைக் கூறும் நூல். சிவனடியார், தனியடியார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்பதின்மருமாகிய எழுபத்திருவர். புராணம் - பழைய வரலாறு. இந்நூல், 'பெரிய புராணம்' என வழங்கி வருகின்றது.

**சேக்கிழார் :** இவர் தொண்டை நாட்டில் குன்றத்தூரில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர். இவரது இயற்பெயர் அருண் மொழித் தேவர். சேக்கிழார் என்பது குடிப்பெயர். இவர் அநபாய சோழனின் முதன்மந்திரியராய் விளங்கி, அவனது வேண்டுகோட் கிணங்கி இந்நூலை இயற்றினார். இவரது காலம் 12-ஆம் நூற்றாண் டின் முற்பகுதி என்பர்.

1. 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து,' என்பது ஆன்றோர் மொழி. குலம் முதல் சீலம் என்றும் குறைவு இலா - உயர்குடிப் பிறப்பிற்கு முதன்மையாக வேண்டிய நல்லொழுக்கம் என்றும் குறைதலில்லாத. திருநின்ற ஊர், தின்னனூர் என்று இப் பொழுது வழங்குகிறது.

2. மறை மரபு - அந்தணர் குலம். மிக்கார் - மிகு - பகுதி

3. அடுப்பது - செய்யத்தக்கது. கங்கை மடு பொதி வேணி ஐயர் - கங்காநதியைச் சடைமுடியில் கொண்ட தலைவர். பொதிதல் - நிறைதல்.

4. எனைத்தும் - சிறிதளவும். பேறு - பெறுதல்; இங்கு, செல்வம் என்று பொருள்பட்டது நைவார் - வருந்துவார். தினை - மிகச் சிறியதற்கு எடுத்துக்காட்டும் ஓரளவை. நிதியம் - செல்வம்.

5. சாதனம் - கருவி. அடி நிலை - அஸ்திவாரம். பாரித்து - பரப்பி. கங்குல் - இரவு.

6. உபானம் - கீழ்ப்படை; (பூமி மட்டத்திற்குமேல் எல்லா வற்றையுந் தாங்கும் சித்திரவரி). மானம் - விமானம். சிகரம் - உச்சி. முன்னிய - நூல்களில் கூறியுள்ள. முழத்தில் கொண்டு - அளவுப்படி அமைத்துக்கொண்டு.

7. சுதை - சுண்ணும்பு. வினை - சித்திரம் முதலிய வேலைப் பாடுகள். கூவல் - கிணறு. மாடு - அருகே. போக்கி - அமைத்து. வாவி - குளம். தொட்டு - தோண்டி. தாபனம் - பிரதிஷ்டை.

8. காடவர் கோமான் - பல்லவ அரசன். கச்சி - காஞ்சீபுரம். கல்+தளி - கற்றளி. தளி - கோயில். மாடு - பொருள். ஏடு அலர் கொன்றை வேய்ந்தார் - இதழ் விரியப்பெற்ற கொன்றை மலரை யணிந்த சிவபிரான்.

9. நினைந்து செய்த ஆலயம் - மனத்தாற்கட்டிய கோயில். நன்று நீடு ஆலயம் - சிறப்பு மிகுந்த கோயில். தொண்டு - அடிமை.

10. தூயோன் - சிவபெருமான். விளக்க - பிறவினை. தண்டலை - சோலை.

11. எப்புடையது - எவ்விடத்திலுள்ளது. புடையது - குறிப்பு வினைமுற்று.

12. பூசுரர் - அந்தணர். புரவலன் - அரசன். ஆசு - குற்றம். ஒட்டாது - உடன்படாமல்.

13. அண்டர் நாயகர் - தேவர்களுக்கெல்லாம் தேவரான ஈசரை. கண் நுதல் - நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான்.

14. பிரான் - தலைவர். மருண்டு - மருள் - பகுதி.

15. புரை அறு சிந்தை அன்பர் பெருமை - குற்றமற்ற மனத்தோடு கூடிய தொண்டரின் பெருமை. விரை - மணம். முதுமை+ஊர் - மூதூர்.

16. அரனர் - சிவபெருமான். பேணி - விருப்பத்தோடு நடத்தி பொன் புனை மன்று - கனகசபை; சிதம்பரத்திலுள்ளது.

## வினக்கள்

1. பூசலாரின் இயல்பை வரைக.
2. பூசலார் மனக்கோயில் கட்டிய வரலாற்றை வரைக.
3. சிவபெருமான் காடவர் கோமான் கனவில் தோன்றிக் கூறியன யாவை?
4. காடவர் கோமான் திருநின்றவூரில் பூசலாரைக் கண்ட வரலாற்றை வரைக.
5. பூசலாரைக் கண்டு வணங்கிய காடவர் கோமான் அவரிடம் கூறியது யாது?
6. காடவர் கோமானுக்குப் பூசலார் சிந்தித்துக் கூறியன யாவை?
7. பூசலாரது உண்மை நிலையுணர்ந்த காடவர் கோமானது செயல்களை வரைக.

# உ. பாஞ்சாலி சபதம்

## துரியோதனன் விதுரனை நோக்கி உரைப்பது

''செல்வாய் விதுரா! நீ சிந்தித் திருப்பதேன்?
வில்வா ணுதலினாள், மிக்க எழிலுடையாள்,
முன்னேபாஞ் சாலர் முடிவேந்தன் ஆவிமகள்,
இன்னேநாம் சூதில் எடுத்த விலைமகள்பால்
சென்றுவிளை வெல்லாம் செவ்வனே தானுணர்த்தி,
மன்றினிடை யுள்ளானின் மைத்துனனின் னோர்தலைவன்
நின்னை யழைக்கின்றான் நீள்மனையி லேவலுக்கே'
என்ன வுரைத்தவளை இங்குக்கொணர் வாய்,'' என்றான்.

## விதுரன் சினந்து கூறல்

துரியோ தனனிச் சுடுசொற்கள் கூறிடவும்
பெரியோன் விதுரன் பெரிதும் சினங்கொண்டு,
'மூட மகனே! மொழியொணா வார்த்தையினைக்
கேடு வரலறியாய் கீழ்மையினால் சொல்லிவிட்டாய்.
புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வதுபோல்
பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்போல்
ஐவர் சினத்தின் அழலை வளர்க்கின்றாய்;
தெய்வத் தவத்தியைச் சீர்குலையப் பேசுகிறாய்;
நின்னுடைய நன்மைக்கிந் நீதியெல்லாம் சொல்லுகிறேன்;
என்னுடைய சொல்வே றெவர்பொருட்டு மில்லையடா!
பாண்டவர்தாம் நாளைப் பழியிதனைத் தீர்த்திடுவார்,
மாண்டு தரைமேல் மகனே! கிடப்பாய்நீ,
சொல்லிவிட்டேன்; பின்னொருகால் சொல்லேன், கவுரவர்காள்!
புல்லியர்கட் கின்பம் புவித்தலத்தில் வாராது!
பேராசை கொண்டு பிழைச்செயல்கள் செய்கின்றீர்!
வாராத வன்கொடுமை மாவிபத்து வந்துவிடும்.
பாண்டவர்தம் பாதம் பணிந்தவர்பாற் கொண்டதெலாம்
மீண்டவர்க் கேஈந்து விட்டு, விநயமுடன்,
'ஆண்டவரே யாங்கள் அறியாமை யாற்செய்த
நீண்ட பழியிதனை நீர்பொறுப்பீர்,' என்றுரைத்து,
மற்றவரைத் தங்கள் வளநகர்க்கே செல்லவிடீர்.

குற்றம் தவிர்க்கும் நெறியிதனைக் கொள்ளீரேல்,
மாபார தப்போர் வரும்; நீர் அழிந்திடுவீர்,
பூபால ரே!'' என்றப் புண்ணியனுங் கூறினான்.

## துரியோதன் கூறுதல்

சொல்லிதனைக் கேட்டுத் துரியோ தனமூடன்
வல்லிடிபோல் 'சீச்சீ! மடையா, கெடுகநீ!
எப்போதும் எம்மைச் சபித்தல் இயல்புனக்கே.
இப்போதுன் சொல்லை எவரும் செவிக்கொளார்.
யாரடா, தேர்ப்பாகன்! நீபோய்க் கணமிரண்டில்
பாரதர்க்கு வேந்தன் பணித்தான்' எனக்கூறிப்
பாண்டவர்தம் தேவிதனைப் பார்வேந்தன் மன்றினிலே
ஈண்டழைத்து வா'என் றியம்பினான். ஆங்கேதேர்ப்

## தேர்ப்பாகனும் திரௌபதியும்

பாகன் விரைந்துபோய்ப் பாஞ்சாலி வாழ்மனையில்
சோகம் ததும்பித் துடித்த குரலுடனே,
''அம்மனே போற்றி! அறங்காப்பாய், தாள்போற்றி!
வெம்மை யுடைய விதியால் யுதிட்டிரனார்
மாமன் சகுனியொடு மாயச்சூ தாடியதில்
பூமி யிழந்து பொருளிழந்து தம்பியரைத்
தோற்றுத் தமது சுதந்தரமும் வைத்திழந்தார்,
சாற்றிப் பணயமெனத் தாயே! உனைவைத்தார்.
சொல்லவுமே நாவு துணியவில்லை; தோற்றிட்டார்
எல்லோரும் கூடி யிருக்கும் சபைதனிலே
நின்னை யழைத்துவர நேமித்தான் எம்மரசன்,''

## திரௌபதியும் தேர்ப்பாகனும் உரையாடல்

என்ன வுரைத்திடலும், ''யார்சொன்ன வார்த்தையடா!
சூதர் சபைதனிலே தொல்சீர் மறக்குலத்து
மாதர் வருதல் மரபோடா? யார்பணியால்
என்னை யழைக்கின்றாய்?'' என்றாள். அதற்கவனும்,
''மன்னன் சுயோதனன்தன் வார்த்தையினால்,'' என்றிட்டான்.
''நல்லது; நீ சென்று நடந்தகதை கேட்டுவா.
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்

என்னைமுன்னே கூறி யிழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?
சென்று சபையிலிச் செய்தி தெரிந்துவா,''
என்றவளும் கூறி, இவன்போ கியபின்னர்த்

### திரௌபதியின் நிலை

தன்னந் தனியே தவிக்கு மனத்தளாய்,
வன்னங் குலைந்து மலர்விழிகள் நீர்சொரிய
உள்ளத்தை அச்சம் உலைவுறுத்தப் பேய்கண்ட
பிள்ளையென வீற்றிருந்தாள்.

### தேர்ப்பாகன் துரியோதனனிடம் கூறுதல்

பின்னந்தத் தேர்ப்பாகன்
மன்னன் சபைசென்று, ''வாள்வேந்தே! ஆங்கந்தப்
பொன்னரசி தாள்பணிந்து 'போதருவீர்' என்றிட்டேன்.
'என்னை முதல்வைத் திழந்தபின்பு தம்மையென்
மன்ன ரிழந்தாரா? மாறித் தமைத்தோற்ற
பின்னரெனைத் தோற்றாரா?' என்றேநும் பேரவையை
மின்னற் கொடியார் வினவிவரத் தாம்பணித்தார்.
வந்துவிட்டேன்,'' என்றுரைத்தான்.

### அவையோர் நிலை

மாண்புயர்ந்த பாண்டவர்தாம்
நொந்துபோ யொன்றும் நுவலா திருந்துவிட்டார்.
மற்றும் சபைதனிலே வந்திருந்த மன்னரெலாம்
முற்று முரையிழந்து மூங்கையர்போல் வீற்றிருந்தார்.

### துரியோதனன் சொல்வது

பாக னுரைத்தது கேட்டனன்—பெரும்
பாம்புக் கொடியவன் சொல்கின்றான்: — ''அவள்
பாக னழைக்க வருகிலள்—இந்தப்
பையனும் வீமனை யஞ்சியே—பல
வாகத் திகைப்புற்று நின்றனன்;—இவன்
அச்சத்தைப் பின்பு குறைக்கிறேன்—தம்பீ!
போகக் கடவையிப் போதங்கே;—இங்கப்
பொற்றொடி யோடும் வருகநீ!'

## குறிப்புரை

**பாஞ்சாலி சபதம்** - பாஞ்சாலியினது சபதத்தைக் கூறும் நூல். பாஞ்சாலி - பாஞ்சால நாட்டு அரசனுகிய பாஞ்சாலனது மகள். பாஞ்சாலனுக்குத் துருபதன் என்பது இயற்பெயர். துருபதன் மகள் திரௌபதி எனப்பட்டாள். சபதம் - சூளுரை.

**பாரதியார் :**—இவர் தேசியக் கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதி யாராவர். பாண்டி நாட்டில் எட்டையபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கு இலக்குமி அம்மாளிடம் தோன்றியவர். இளமையிலேயே தமிழ்ப்பற்றுடையவராய்த் தமிழ் நூல்களைப் பயின்று பாடலியற் றும் ஆற்றல் மிக்க கவிஞர். புத்தம்புதிய பாக்கள் இயற்றித் தமிழருக்கு நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் வளர்த்த தேசியக் கவிஞர். இவரியற்றிய நூல்களில் காவியமாகப் பாராட் டப்படுவது பாஞ்சாலி சபதமாகும். இவரது காலம் கி. பி. 1882—1921.

(துரியோதனன் திரௌபதியை அரசவைக்கு அழைத்து வரும்படி விதுரனை ஏவ, விதுரன் துரியனுக்குப் புத்திமதி கூறல்.)

*1—10* : நுதலினுள் - நெற்றியை யுடையவள். எழில் - பேரழகு. செவ்வனே - நன்ருக. ஏவலுக்கு -தொண்டு செய்வதற்கு.

*11—20* : மொழியொணு-சொல்லத்தகாத. அழல் - நெருப்பு. தவத்தி - தவத்திஞற்பிறந்தவள். மாண்டு - இறந்து.

*21—30* : கவுரவர்காள் - குரு வமிசத்தில் தோன்றிய துரியோதனுதியர்களே. புல்லியர்கட்கு - அற்பர்களுக்கு. புவித்தலத் தில் - பூமியில். மா விபத்து - பெரிய ஆபத்து. விநயத்துடன் - அன்புடன். வளநகர்க்கு - செழிப்புள்ள இந்திரப் பிரஸ்தத்திற்கு.

*31—40* : பூபாலரே - அரசர்களே. புண்ணியன் - விதுரன். வல்லிடி - கொடிய இடி. கணம் - நொடிப்பொழுது. பாரதர் - பாரதநாட்டு மக்கள். பணித்தான் - கட்டளையிட்டான். மன்றினிலே - சபையிலே.

*41—50* : தாள் - பாதம். சாற்றி - சொல்லி. பணயம் - பந்தயப் பொருள். நாவு - நாக்கு.

*51—60* : நேமித்தான் - நியமித்தான். சூதர் - சூதாடுவோர். தொல்சீர் - பழமையான சிறப்புடைய. மரபு - முறைமை.

பணி - கட்டளை. சுயோதனன் - துரியோதனன். மாண்பு - பெருமை. நாயகர் - கணவர்.

61—70: மனத்தளாய் - மனமுடையவளாய். வன்னம் - அழகு. போதருவீர் - வருவீர்.

70—84: பேரவை - பெரிய சபை. நொந்து - மனம் புண்பட்டு. நுவலாது - சொல்லாமல். மூங்கையர் - ஊமைகள். பாம்புக் கொடியவன் - துரியோதனன். பொற்றொடி - பொன் வளையலையணிந்த திரௌபதி.

### வினாக்கள்

1. துரியோதனன் விதுரனுக்கிட்ட கட்டளை யாது? அதற்கு விதுரன் சினங்கொண்டு கூறிய அறிவுரைகள் யாவை?
2. 'சொல்லிவிட்டேன், இன்னொருகால் சொல்லேன்'—என்று விதுரன் கூறியதென்ன?
3. துரியோதனன் விதுரனை வெகுண்டு கூறியதென்ன?
4. தேர்ப்பாகன் திரௌபதியிடம் சென்று என்ன தெரிவித்தான்? அதற்குத் திரௌபதி அவனை என்ன கேட்டாள்?
5. திரௌபதி தேர்ப்பாகனிடம் கூறியதென்ன?
6. திரௌபதி தனிமை நிலையை விவரிக்க.
7. தேர்ப்பாகன் துரியோதனனிடம் கூறியதென்ன?
8. தேர்ப்பாகன் கூறியதைக் கேட்ட அவையோர் நிலை என்ன?
9. துரியோதனன் தன் தம்பியிடம் என்ன கூறினான்?
10. பின் வரும் உவமைகளை விளக்கி உவமேயம் தருக:
    (i) புள்ளிச் சிறுமான் புலியைப்போய்ப் பாய்வதுபோல்.
    (ii) பிள்ளைத் தவளை பெரும்பாம்பை மோதுதல்போல்.
    (iii) பேய்கண்ட பிள்ளையென.

## ௨௯. இரட்சணிய யாத்திரிகம்

### தீய மகன் திருந்தியது

#### தந்தை இளைய மைந்தனுக்குப் பங்களித்தல்

ஒருவனன் புடைய தந்தைக்
 கோரிரு புதல்வ ருள்ளார்;
இருவரி லிளையான், 'ஐய!
 என்னொரு பாக மெற்குத்
தருக'என் றிரந்து கேட்பத்
 தந்தைதன் னுரிமை யாவும்
இருவிகற் பாகப் பங்கிட்
 டுதவினன் நேர்மை யாக. 1

#### இளைய மகன் செல்வம் இழத்தல்

கைப்பொருள் கண்டான் தந்தை
 கரைந்தசொற் பொருளைக் காணன்
மெய்ப்பொரு ளறியா னுள்ளம்
 விழைந்தசிற் றின்ப மாய
மெய்ப்பொருள் நச்சி ஓடிப்
 புறம்புபோய்த் தந்தை யீந்த
அப்பொரு ளிழந்தான்; அந்தோ!
 அகதியா யினன்சின் னளில். 2

#### இளையவன் வறுமையால் வருந்துதல்

அங்கொரு குடும்பி தன்னை
 அடுத்தவன் பன்றி மேய்த்துத்
திங்களோ ரிரண்டு மூன்று
 செல்லவத் தேச மெங்கும்
வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து
 வெதுப்பிடும் பசிக்காற் றனய்
நுங்கினன் பன்றிக் கூட்டும்
 நொருங்குகுற் றுமித்த விட்டை. 3

#### இளையவன் தன் குற்றம் உணர்தல்

குற்றுமித் தவிடுங் கிட்டாக்
 கொடும்பஞ்ச மதிக ரிக்கச்

சற்றுளந் தெளிந்தா னகிச்
சஞ்சலித் தழுதெ'தன் றந்தைக்
குற்றவூ ழியரனேக
ருண்டுதேக் கெறிய யானோ்
துற்றுண வின்றி யாவி
சோர்குவல்; இதென் துர்ப் புத்தி. 4

## தந்தையிடம் செல்ல நினைத்தல்

'புகலொன்று மில்லேன்,' என்னுப்
புந்தியிற் பிழையை யுன்னி
மிகவுள முடைந்து நைந்தான்;
மெய்ம்மனத் தாபங் கொண்டான்;
தகவுடைத் தாதை பக்கற்
சார்குவ னேல்தான் பெற்ற
மகவெனப் பரிவ ரல்லால்
மறுத்திடார்,' எனத்தே றுற்ருன். 5

## தந்தை தன் மைந்தனை வரவேற்றல்

ஒல்லையே யெழுந்தான் றந்தை
உத்தம குணமுன் னீர்க்க
அல்லல்செய் பசிபி னுந்த
அடுத்தன னறிந்து தந்தை
வல்லைவந் தணைந்து முத்தி
மகிழ்ந்தனன்; மகவா சைக்கோர்
எல்லையு முளதோ மைந்தன்
எத்தனை பிழைசெய் தாலும்? 6

## இளையவன் தன் பிழையைக் கூறுதல்

'எந்தையே! எந்தை யே!'என்
றேங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந்து, 'உமக்கு முன்னுந்
தெய்வத்துக் கெதிரு மாகப்
புந்தியற் றளவில் பாவம்
புரிந்தனன்; இனியா னுந்தம்
மைந்தனென் றுரைக்கத் தானும்
அபாத்திரன் மதியொன் றில்லேன். 7

### இளையவன் தந்தையை வேண்டுதல்

'ஐயமன் னிக்கச் சித்த
மாயின்மற் றளிய னேன்யான்
உய்யுமா றருளி நும்பால்
ஊழியத் தொருவ னுக்கி
வையகத் திருத்து'கென்று
வாய்திறந் தாற்றி நிற்ப
'நையல்'என் றருளிக் கூட்டிச்
சென்றன னகத்துள் நண்பால். 8

### தந்தை தன் மகனைப் போற்றுதல்

'மகனிவன் மரித்தான், இன்னே
மறித்துயிர் பெற்று னகத்
தகவுடை விருந்தெ மர்க்குச்
சமைக்'கெனப் பணித்து மைந்தற்கு
உகவையின் வத்தி ராதி
உடுத்தருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ்கொண் டாடி
யிருந்தனன் புதல்வ னேடும். 9

—எச். எ. கிருட்டிணப் பிள்ளை

### குறிப்புரை

**இரட்சணிய யாத்திரிகம்:** இது இரட்சிப்பு அடைய வேண்டிய ஆத்துமாவினது யாத்திரையைப் பற்றிக் கூறும் நூல். **ஜான் பனியன்** என்பவர் இயற்றிய மோட்சப் பிரயாணம் என்னும் ஆங்கில நூலைத் தழுவி இந்நூல் இயற்றப்பட்டது. இந்நூலை இயற்றியவர் ஹென்றி ஆல்பர்ட் கிருட்டிணப்பிள்ளை என்பவர்.

1. எற்கு - எனக்கு. நிருவிகற்பாக - வேறுபாடு இல்லாமல்.

2. கரைந்த - சொல்லிய. நச்சி - விரும்பி. அகதி - திக்கற்றவன்.

3. வெதுப்பிடும் - துன்புறுத்தும். நுங்கினன் - தின்றான்.

4. துற்றுணவு - ஒரு கவள உணவு. சோர்குவல் - தளர்ச்சியடைவேன்.

5. புகல் - செல்லுமிடம். நைந்தான் - வருந்தினன். மெய்ம் மனத்தாபங் கொண்டான் - தான் செய்த குற்றத்தை உணர்ந்து உண்மையாய் வருந்தினன். பரிவர் - அன்பு கொள்வர்.

6. ஒல்லை - விரைவாக. ஈர்க்க - இழுக்க. முத்தி - முத்தம் கொடுத்து.

7. நெட்டுயிர்த்து - பெருமூச்சு விட்டு. அபாத்திரன் - தகுதி யில்லாதவன்.

8. அளியனேன் - கருணைக்குரியவன். நையல் - வருந்தாதே.

9. இன்னே - இப்பொழுதே. எமர்க்கு - எம்மைச் சேர்ந்த வர்களுக்கு. உகவையின் - (உவகையின்) மகிழ்ச்சியினால்; 'உவகை' என்பது எதுகையின் பொருட்டு 'உகவை' ஆயிற்று. வத்திராதி - ஆடை முதலியன. கலம் - ஆபரணம். புகர் அறு - குற்றமில்லாத.

## வினாக்கள்

1. இளைய மகன் தன் தந்தையிடம் கேட்டதென்ன? தந்தை என்ன செய்தான்?
2. இளைய மகன் செல்வத்தை என்ன செய்தான்? முடிவில் அவன் அடைந்த நிலை யாது?
3. இளைய மகன் வறுமையில் எவ்வாறு வருந்தினன்?
4. இளைய மகன் நல்லறிவு பெற்றது எவ்வாறு? அப்பொழுது அவன் எண்ணியதென்ன?
5. இளைய மகன் தன் குற்றத்தையுணர்ந்து என்ன செய்ய எண்ணினன்?
6. இளைய மகன் தன் தந்தையிடம் எவ்வாறு சென்றான்?
7. இளைய மகன் தன் தந்தையிடம் தன் குற்றத்தை உணர்ந்து சொன்னதென்ன?
8. தந்தை தன் மகனை எவ்வாறு அன்புடன் போற்றினன்?
9. தீய மகன் கதையால் அறியும் நீதி யாது?

# IV. பல் சுவை

## அ. வருணனை

### 1. சிலப்பதிகாரம்

#### காவேரி

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி !
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி!

—இளங்கோவடிகள்

### 2. பெரிய புராணம்

#### சோழ நாட்டு வளம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடவன்னங் குளமெல்லாங் கடலன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம்.

—சேக்கிழார்

### 3. கம்பராமாயணம்

#### வயல் வளம்

சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும் பண்ணை.

—கம்பர்

### 4. காஞ்சிப் புராணம்

#### நெற்பயிர்

உருத்திட்ப முருக்காலை தலைநிறீஇ யுற்றதற்பின்
தருக்கற்று நனிவணங்கிப் பழுத்தகதிர்த் தடஞ்சாலி
பெருக்கத்து வேண்டுமாற் பெரும்பணிவு மிகச்சிறிய
சுருக்கத்து வேண்டுமுயர் வெனுமொழியின் சுவைதேற்றும்.

—சிவஞான முனிவர்

### 5. திருவிளையாடற்புராணம்

#### தென்றல்

பொங்கரில் நுழைந்து வாவி புகுந்துபங் கயம்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணம்கூட் டுண்டு குளிர்ந்துமெல்லென்றுதென்றல்
அங்கங்கே கலைகள் தேரும் அறிவன்போல் இயங்கு மன்றே,

—பரஞ்சோதி முனிவர்

## குறிப்புரை

1. மருங்கு - இரு பக்கங்களிலும். ஆர்ப்ப - ஒலிக்க. ஒல்கி - அசைந்து. திருந்து - நேர்மையான. கயற்கண் - உவமைத் தொகை. இக்கவியில் பூவை ஆடையாகவும் கயலைக் கண்ணாகவும் காவிரியைப் பெண்ணாகவும் கூறப்பட்டுள்ளது உருவக அணி. வண்டு - வளையல். மணி - முத்து என்றும் கொண்டு காவிரி இளம் பெண் போலச் செல்கின்றாள் என்றும் கொள்க.

2. கழை கரும்பு - மூங்கில் போலப் பருத்த கரும்பு. கா - சோலை. குழைக்கு அரும்பு - தளிர்களில் மலர் அரும்புகள். நெருங்கு வளை - நெருங்கிக் கிடக்கும் சங்குகள். கோடு - குளக் கரை. கடல் அன்ன - கடல்போன்ற பரப்புடையன. நீர் நாடு - சோழநாடு.

3. சேல் உண்ட - சேல் மீன் போன்ற. உண்ட - உவம உருபு. மால் உண்ட - பெருமை பொருந்திய. நளினம் பள்ளி - தாமரைப் படுக்கை. மழலை பிள்ளை - இளங்குஞ்சு. கால் உண்ட - காலிற்பட்ட. மேதி - எருமை. உள்ளி - நினைத்து. தேரை - தவளை. பண்ணை - வயல்.

4. உரு - உருவத்தில். திட்பம் - பால் பிடித்தலாகிய வலிமை. நிறீஇ - நிமிர்ந்து நின்று. தருக்கு அற்று - செருக்கு இல்லாமல். தட சாலி - பெரிய செந்நெற்பயிர். மொழி - திருக்குறள். சுவை தேற்றும் - பொருட்சுவையை வெளிப்படையாகத் தெரிவிக்கும்.

5. பொங்கர் - சோலை. வாவி - குளம். பங்கயம் - தாமரை. பசுமை+கடி. கடி - மணம். மயிலை - இருவாட்சி மலர். பந்தர் - பந்தல்; கடைப்போலி. கொங்கு - மகரந்தத்தையுடைய. கூட்டுண்டு - கவர்ந்து. தென்றல் - தெற்கிலிருந்து வீசும் இளங்காற்று. அறிஞன் - அறிவுடைய மாணவன்.

## வினாக்கள்

1. இளங்கோவடிகள் காவிரியின் செலவை எங்ஙனம் வருணித்துள்ளார்?
2. சோழநாட்டின் வளத்தினைச் சேக்கிழார் வருணித்துள்ளதை விளக்கி வரைக.
3. வயல் வளம் கம்பரால் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
4. நெற்பயிர் எந்தத் திருக்குறளின் பொருட்சுவையை விளக்குகிறது? விளக்குக.
5. பரஞ்சோதி முனிவர் தென்றலின் இயக்கத்தை எங்ஙனம் வருணித்துள்ளார்?
6. அங்கங்கே கலைகள் தேரும் அறிவன் போல் - இவ்வுவமையைப் பொருளோடு பொருத்தி விளக்குக.

## ஆ. சீட்டுக் கவி

ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்
தெழுதிப் படித்தவிரகன்,
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்கும்ஓலை,
சேடாதி பன்சிரம் அசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த
செழியனெதிர் கொண்டுகாண்க;
பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,
பற்றிக்கொ லாதகோணம்,
பறவாத கொக்கனற் பண்ணுத கோடை,ஐம்
படையில்தொ டாதகுந்தம்,
சூடாத பாடலம், பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்,
சொன்னசொல் சொல்லாத கிள்ளையொன் றெங்கும்
துதிக்கவர விடல்வேண்டுமே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

### குறிப்புரை

**சீட்டுக்கவி :** புலவர் வள்ளல்களுக்குத் தாம் விரும்பும் பொருளைக் கொடுத்தனுப்ப வேண்டிச் செய்யுள் வடிவில் கடிதம் எழுதினர். அது 'சீட்டுக்கவி' எனப்படும். இச்செய்யுள் அந்தகக் கவி வீரராகவ முதலியார் சேலத்து அரசன் செழியதரையன் என் பானுக்குக் குதிரை வேண்டி எழுதியனுப்பியதாகும்.

விரகன் - வல்லவன். இமம் - இமயமலை. சேது - இராமேசு வரம். ஓலை - திருமுகம். சேடன் - ஆதிசேடன். சிரம் - தலை. திரிபதகை - கங்கை. செழியன் - பாண்டியன். கந்தருவம் - குதிரை (இசைப்பாட்டு). கந்துகம் - குதிரை (பந்து). கோணம் - குதிரை (வாள்). கொக்கு - குதிரை (ஒரு பறவை). கோடை - குதிரை (வேனிற்காலம்). குந்தம் - குதிரை (வேல்). பாடலம் - குதிரை (பாதிரிமலர்). மா - குதிரை (மா மரம்). சடிலம் - குதிரை (சடை). கிள்ளை - குதிரை (கிளி).

### வினாக்கள்

1. வீரராகவ முதலியார் தம் பெருமையை எவ்வாறு எடுத் துரைத்துள்ளார்?
2. சீட்டுக்கவியில் வீரராகவ முதலியார் வேண்டுவதென்ன? அதனை எவ்வாறு தெரிவித்துள்ளார்?

## இ. இரட்டுற மொழிதல்

### சிவபெருமான் முப்புரமெரித்தது

அடுத்தமதிச் சென்னியின்மே லம்பிருக்கும் மற்றோர்
இடத்திலே நாரி யிருக்கும்—தடக்கையிலே
ஏந்துசிலை விட்டிருக்கு மெம்மருணை நாதனார்
போந்து புரமெரித்த போது. 1

—எல்லப்ப நாவலர்

### பாம்பும் வாழைப்பழமும்

நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டான் மீளாது—விஞ்சுமலர்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம். 2

—காளமேகப் புலவர்

### குறிப்புரை

1. அடுத்த - தம்மைச் சரணடைந்த. சென்னி - தலை. அம்பு இருக்கும் - அம்பு தங்கியிருக்கும். மற்று ஓர் இடத்திலே நாரி இருக்கும் - வேறு ஓரிடத்தில் நாண் இருக்கும். தடக்கை - பெரிய (நீண்ட) கை. ஏந்து சிலை விட்டிருக்கும் - ஏந்திய வில் முறிந் திருக்கும்.

முறிந்த வில்லைக் கையிலேந்தி, அம்பு ஓரிடத்திருக்க, நாண் மற்றோரிடத்திருப்ப, சிவபெருமான் முப்புரம் எய்தது என்னே என்று வியந்து கூறியவாறு. வியப்பும் அதோடு நகைச் சுவையும் தோன்றுவது காண்க. வில், அம்பு முதலியன வேண்டாதே முப் புரங்களையும் எரித்தார் என்பது கருத்து.

இனி, (அம்பு - தண்ணீர்), கங்கை நீர் தலையிலிருக்கும் என்றும், இடப்பாகத்தில் (நாரி - பெண்) உமாதேவி இருப்பாள் என்றும், கையில் ஏந்திய (சிலை) விட்டிருக்கும் - தமருகம் தன்னிடத் தில் பொருந்திய ஒலியைச் செய்துகொண்டிருக்கும் என்றும் சிலேடையால் இன்னொரு பொருளுங்கொள்க.

2. மலையில் பாம்பும், மலை வாழைப்பழமும் சிறந்தன. அவை இரண்டையும் சேர்த்துப் பாடி இன்புறுத்துகின்றார் புலவர்.

**பாம்பு:** நஞ்சிருக்கும் - நஞ்சை உடைத்தாயிருக்கும். தோல் உரிக்கும் - அவ்வப்போது தனது சட்டையைக் கழற்றும். நாதர் முடி - இறைவனது திருமுடி. வெம்சினத்தில் - கொடிய சினத்தில். மீளாது - நஞ்சு இறங்காது.

**வாழைப்பழம்:** நஞ்சிருக்கும் (கனிந்து) நைந்து இருக்கும். நைந்து என்பதற்கு நஞ்சு போலியாய் வந்தது; ஐந்து, அஞ்சு என்று வருவது போல. தோல் உரிக்கும் - வாழைப்பழத்தோல் உரிக்கப் படும். வெஞ்சினத்தில் - உணவு ஆகுங்கால், மீளாது - (பற்களால் அரைத்த பின் விழுங்கப்படுவதால்) திரும்ப வெளியே வாராது. விஞ்சு மலர் - மிகுதியான பூக்கள்.

### வினாக்கள்

1. சிவபெருமான் முப்புரம் எரித்த செய்தி வியப்பும் நகைப்பும் தோன்றக் கூறியுள்ள நயத்தை விளக்குக.
2. பாம்பும் வாழைப்பழமும் எவ்வகையில் ஒப்பாகும்?

## ஈ. சிற்றிலக்கியம்

### 1. அழகரந்தாதி

#### அழகருக்கன்பு செய்யுங்கள்

ஏத்துமின் பத்தியி னுலெட் டெழுத்தும் இணையடிக்கே
சாத்துமின் பத்திரத் தண்ணந் துழாய்மதி தாங்கிக்கஞ்சம்
பூத்துமின் பத்தி செயும்பச்சை மாமுகில் போலழகர்
காத்துமின் பத்தி லிருத்தியும் வைப்பர் கருணைசெய்தே.

—பிள்ளைப்பெருமாளையங்கார்

### 2. திருவரங்கக் கலம்பகம்

#### மறம்

பேசவந்த தூத! செல்ல ரித்தவோலை செல்லுமோ?
பெருவரங்கள் அருளரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா!
வாசலுக்கி டும்படல்க வித்துவந்த கவிகைமா
மகுடகோடி திணையளக்க வைத்தகாலும் நாழியும்;
வீசுசாம ரம்குடில்தொ டுத்தகற்றை சுற்றிலும்
வேலியிட்ட தவர்களிட்ட வில்லும்வாளும் வேலுமே.

—பிள்ளைப்பெருமாளையங்கார்

## 3. திருக்குற்றுலக் குறவஞ்சி

### சிங்கன் வேட்டைக்குப் புறப்படுதல்

கண்ணி கொண்டு வாடா—குளுவா!
கண்ணி கொண்டு வாடா.
மீறு மிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேட்குற வன்முதல் வேட்டைக்குப் போனநாள்
ஆறு நாட்கூடி ஒருகொக்குப் பட்டது
அகப்பட்ட கொக்கை அவித்தொரு சட்டியில்
சாருக வைத்தபின் வேதப் பிராமணர்
தாமும்கொண் டார்சைவர் தாமுங்கொண் டார்தவப்
பேரு முனிவரும் ஏற்றுக்கொண் டாரிதைப்
பிக்குச்சொல் லாமலே கொக்குப் படுக்கவே. (கண்ணி)

—திரிகூடராசப்பக் கவிராயர்

## 4. காவடிச் சிந்து

### மலை வளம்

மூசுவண்டு, வாசமண்டு காவில்மொண்டு தேனையுண்டு
மோகன முகாரிராகம் பாடுமே; மைய
லாகவே பெடையுடனே கூடுமே. அலை
மோதுவாரிதி நீரைவாரிவிண் மீதுலாவிய சீதளாகர
முகில்பெருஞ் சிகரமுற்றும் மூடுமே; கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே.
தேசுகொண்ட பாரதந்த வீரதும்பி ராசிஅண்டர்
தேவதாரு வைக்கரத்தாற் பிடிக்குமே; சுற்றும்
மேவிய கிளையைவளைத் தொடிக்குமே; ஒளிர்
சேயசந்திர னேடுரிஞ்சுப லாமரங்களி லேநெருங்கிய
தீங்கனி மதுரசத்தை வடிக்குமே; மந்தி
பாங்கில்நின் றதனையள்ளிக் குடிக்குமே.

—சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்

### குறிப்புரை

**அழகரந்தாதி:** அழகரைப் பற்றி அந்தாதித் தொடையில் பாடப்பட்ட நூல். அழகர் - பாண்டி நாட்டில் திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியுள்ள திருமாலின் திருப்பெயர். **அந்தாதி** -

முன்பாட்டின் அந்தத்தை அடுத்த பாட்டு ஆதியாக உடைய நூல். அதாவது முன் செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர், அடி என்பனவற்றுள் ஏதேனும் ஒன்று அடுத்து வரும் செய்யுளின் முதலாக வரும்படி அமைத்துப் பாடும் நூறு செய்யுள்களையுடைய சிற்றிலக்கியம்.

ஏத்துமின் - துதியுங்கள். எட்டெழுத்து: 'ஓம் நமோ நாராயணாய' என்னும் திரு மந்திரம். இணையடிக்கு - இரண்டாகிய திருவடிகளை (உருபு மயக்கம்). பத்திரம் - இலை. மதி - சந்திரன். கஞ்சம் - தாமரை. மின் பத்தி - மின்னலின் வரிசை. இதில் இல் பொருளுவமை வந்துள்ளமை காண்க.

**திருவரங்கக் கலம்பகம் :** திருவரங்கத்தைப் பற்றிக் கூறும் கலம்பகம் என்னும் நூல். **கலம்பகம் :** தமிழிலுள்ள 96 வகைச் சிறு நூல்களுள் ஒன்று. கொச்சகக்கலிப்பா முதலாக நால்வகைப் பாக்களும் பாவினங்களும் அந்தாதியாக வரப் பாடப்படுகின்ற பதினெட்டு உறுப்புகளைக் கொண்ட நூல்; நூறு செய்யுள்களை யுடையது.

**பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்:** இவர் அழகிய மணவாள தாசர் என்னும் இயற்பெயருடையவர். வெண்மணி என்னும் பதியில் பிறந்த வைணவ அந்தணர். திருவரங்கத்தில் வாழ்ந்து அஷ்டப்பிர பந்தம் முதலிய நூல்களை இயற்றியவர்; இவர் காலம் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னது என்பர்.

செல்லரித்த ஓலை - எழுத்தாணியால் எழுதப்பட்ட ஓலை. பின்னை கேள்வர் - நப்பின்னை கணவரான கண்ணன். பாசம் - ஆசை. பதி - இடம். கவிகை - குடை. மா - பெரிய. காலும் நாழியும் - மரக்காலும் படியும். குடில் - சிறுவீடு.

**திருக்குற்றாலக் குறவஞ்சி :** திருக்குற்றாலத்தைப் பற்றிய குற வஞ்சி என்னும் சிற்றிலக்கியம். குறத்தி ஒருத்தி தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் குறி கூறுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் குறத்தி பாட்டு, குறவஞ்சி நாடகம் எனவும் வழங்கப்படும். இப் பாடப் பகுதி சிங்கன் குளுவனைப் பார்த்துக் கண்ணி கொண்டுவரச் சொல்லுவதாக அமைந்துள்ளது.

**திரிகூடராசப்பக் கவிராயர் :** இவர் பாண்டி நாட்டிலுள்ள மேல கரம் என்னும் ஊரில் சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர்; சொற்சுவை, பொருட்சுவை, பத்திச் சுவை ததும்பக் கவிகள் இயற்றுவதில் வல்லவர். இவரது காலம், 200 ஆண்டுகளுக்கு முன்னது என்பர்.

சிங்கன் - குறமகள் கணவன். குளுவன் - சிங்கனது பணியாள். கண்ணி - வலை. மீறும் - வளங்கள் அதிகப்படும். இலஞ்சி வனம்,

திருக்குற்றுலத்தை அடுத்துள்ள ஓர் ஊர். குறத்தி - வள்ளி. செவ்வேள் - முருகப் பெருமான். கொக்கு - பறவை; மாமரமாகி நின்ற சூரபதுமன். அவித்து - வேகவைத்து; ஆணவத்தைக் கெடுத்து. சட்டி - மண்பாத்திரம்; ஆறுவது நாள்; ஐப்பசித் திங்களில் வளர்பிறை முதல் நாள் முதல் ஆறுவது நாளாகிய சஷ்டி வரை. சாறு - குழம்பு; திருவிழா. பிக்கு - பிசகு. படுக்க - பிடிக்க.

**காவடிச் சிந்து:** முருகனுக்குக் காவடி எடுப்போர் பாடும் சிந்து என்னும் ஒரு வகை இசைப்பாட்டுகள் அடங்கிய சிற்றிலக்கியம்.

**அண்ணுமலை ரெட்டியார் :** இவர் திருநெல்வேலிச் சீமையிலுள்ள சென்னிகுளம் என்னும் ஊரில் பிறந்தவர்; ஊற்றுமலை சமஸ்தானப் புலவராய் விளங்கியவர்; திரிபு, யமகம் பாடுவதில் வல்லவர்; ஏறக்குறைய எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்.

மூசு வண்டு - மொய்க்கின்ற வண்டுகள். கா - (மலையிலுள்ள) சோலை. வாரிதி - கடல். சீதளாகரம் - குளிர்ச்சியின் இருப்பிடம். முகில் - மேகம். சிகரம் - மலையுச்சி. தேசு - ஒளி. பாரதந்தம் - பெரிய தந்தங்கள். தும்பி ராசி - யானைக் கூட்டம். அண்டர் - தேவர்கள். சேய - தூரத்திலுள்ள.

## வினுக்கள்

1. அந்தாதி, கலம்பகம், குறவஞ்சி - இலக்கணம் வரைக.
2. பிள்ளைப் பெருமாளையங்கார் அழகரை வணங்குமாறு கூறும் அறிவுரைகள் யாவை? அச்செய்யுளில் அமைந்துள்ள அணி யாது? விளக்குக.
3. செவ்வேட்குறவன் வேட்டையாடிய கொக்கை யார் யார் ஏற்றுக்கொண்டார்கள்? என்ன செய்தார்கள்? அச்செய்யுளிலுள்ள நயத்தை விளக்குக.
4. அண்ணுமலை ரெட்டியார் மலை வளத்தைச் சொல் நயத்துடன் புலப்படுத்தியுள்ளதை விளக்கி வரைக.
5. மலையில் வண்டுகள், மயிலினம், யானைகள், மந்திகள், ஆகியவை செய்யும் செயல்களாக அண்ணுமலை ரெட்டியார் கூறுவன யாவை?

# உ. வழிபாட்டுப் பாடல்கள்

## பெரிய திருமொழி

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாஎன்னும் நாமம். 1

—திருமங்கையாழ்வார்

## தேவாரம்

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
எம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரு ரானைம றக்கலு மாமே? 2

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## சீவக சிந்தாமணி

ஆதி வேதம் பயந்தோய்நீ
அலர்பெய்ம் மாரி யமைந்தோய்நீ
நீதி நெறியை யுணர்ந்தோய்நீ
நிகரில் காட்சிக் கிறையோய்நீ
நாத னென்னப் படுவோய்நீ
நவைசெய் பிறவிக் கடலகத்துன்
பாத கமலந் தொழுவேங்கள்
பசையாப் பவிழப் பணியாயே. 3

—திருத்தக்க தேவர்

## பொதுமை வேட்டல்

### புத்தர் பெருமான்

சீலமெல்லாம் ஒருருவாய்த் திரண்டெழுந்தா
லெனவுதித்த செல்வம் போற்றி!
கோலமிகு மனைவிடுத்துக் கொடுங்காட்டில்
தவங்கிடந்த குணமே போற்றி!
மாலரசின் அடியிருந்து மயக்கமற
அறமுரைத்த மணியே போற்றி!
சாலறத்துக் குழுவிளங்கச் சங்கம்வளர்
புத்தகுரு சரணம் போற்றி! 4

### யேசு பெருமான்

உலக முய்ய வொளிவீசி
உதித்த தெய்வச் சேய்போற்றி!
மலையி லெழுந்து மாசில்லா
மறையைப் பொழிந்த மழைபோற்றி!
சிலுவை யறைந்தா ரிடத்துமருள்
செய்த பொறுமை நிலைபோற்றி!
அலகில் பாவர் கொழுகொம்பாம்
அன்பு கிறிஸ்துன் அடிபோற்றி! 5

### மகம்மது நபி

அரபிய நாட்டிற் றேன்றி
ஆண்டவன் ஒருவன் என்னும்
மரபினை வாழச் செய்த
மகம்மது நபியே போற்றி!
தரையினில் பொதுமை மல்கிச்
சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த
கருணையே போற்றி போற்றி! 6

—திரு. வி. கலியாண சுந்தரனார்

### குறிப்புரை

1. குலம் - உயர்ந்த தொண்டக் குலம். நிலந்தரம் செய்யும் - தரைமட்டமாக்கிவிடும். நீள் விசும்பு - வைகுந்தப் பதவி. பெரு

நிலம் - (பாகவதர்களுக்குத் தொண்டு செய்யும்) பெரிய பதவி. வலம் - வலிமை. ஆயின - மிக்க நன்மையானவற்றை.

2. போகம் - இன்பம். தவிர - நீங்க. அறிய ஒண்ணு - அறிய முடியாத. எம்மானை - எம் தலைவனை; சிவபெருமானை. எளி வந்த - எளிதாக அருள் புரிந்த. பழனம் - வயல்கள்.

3. ஆதி வேதம் - கொலை முதலியவற்றைப் பற்றிக் கூறாத பழைய வேதத்தினை. பயந்தோய் - தோற்றுவித்தோய். நிகர்-ஒப்பு. காட்சி - ஞானம். நாதன் - தலைவன்; அருகதேவன். நவை - குற்றம். பசை யாப்பு - உலகப் பற்றுகளாகிய தளை. பணியாய் - திருவருள் புரிவாய்.

4. சீலம் - உயர்ந்த ஒழுக்கங்கள். செல்வம் - செல்வமே; புத்த பெருமானே. கோலம் - அழகு. மால் அரசு - பெருமை யுடைய அரசமரம்; போதி மரம். சால் - நிறைந்த. சரணம் - திருவடி.

5. தெய்வச் சேய் - தெய்வத் தன்மை வாய்ந்த திருக் குழந்தை. மறை - வேதம்; விவிலிய நூல். அலகு இல் - அள வில்லாத. பாவர் - பாவம் செய்தோர்.

6. கரவு - வஞ்சனை. மறை - குர்ஆன்.

### வினாக்கள்

1. நாராயணா என்னும் திருப்பெயரை ஓதுவதன் பயன் களாகத் திருமங்கையாழ்வார் கூறுவனவற்றை வரைக.
2. ஆரூரானை மறக்கவியலாமைக்குச் சுந்தரர் கூறும் காரணங் கள் யாவை?
3. திருத்தக்கதேவர் கூறும் இறைவனது இயல்புகளையும் அவன்பால் அவர் வேண்டுவதையும் வரைக.
4. புத்தர், சேசு, மகம்மது நபி - இவர்களின் சிறப்பியல்பு களாகத் திரு.வி.க. அவர்கள் எடுத்துக் கூறுவனவற்றைத் தனித்தனியே வரைக.

# 1. வாழ்விக்க வந்த காந்தி

அனைத்திந்திய காங்கிரஸ் தலைவர் மேதகு திரு. கு. காமராசர்

'பாம்பின் கால் பாம்பறியும்,' என்பது நமது நாட்டுப் பழமொழி. ஒரு சிறந்த தலைவரின் இயல்பையும் பெருமையையும் அவரைப் போன்ற ஒரு பெரிய தலைவரால்தான் உணர்ந்து கொள்ளமுடியும். தம்முடைய சிறைவாசம் முடிந்து 1914ஆம் ஆண்டு லோகமான்ய திலகர் சிறையினின்றும் வெளியே வந்தார். அச்சமயத்தில் காங்கிரசைத் தலைமை ஏற்று நடத்திச் செல்ல, சிறந்த தலைவர் யாரும் இல்லை. புயலுக்கு இடையே அகப்பட்ட கப்பலில் மீகாமனும் இல்லாதிருந்தால், அக்கப்பலின் கதியைப் பற்றி யார் என்ன சொல்லமுடியும்? அதைப் போன்று காங்கிரஸ் நிலைமையும் இருந்தது. மிதவாதிகளுக்கும், லோக மான்ய திலகருக்குமிடையே சூரத் காங்கிரசில் ஏற்பட்ட பிளவு முற்றிலும் மறக்கப்படாமல் இருந்தது.

இச்சமயத்தில்தான் அன்னி பெசன்ட் அம்மையார் தம் இரண்டாவது ஹோம்ரூல் இயக்கத்தை ஆரம்பித்தார். முதல் ஹோம்ரூல் இயக்கம் திலகரால் பூனாவைத் தலைநகராகக் கொண்டு தொடங்கப்பட்டது. ஆனால், பெசன்ட் அம்மையாரின் தலைமையிலே ஏற்பட்ட ஹோம்ரூல் இயக்கம், நாளடைவில் மக்களிடையே சிறந்த செல்வாக்குப் பெற்று, காட்டுத் தீப்போல நாடெங்கும் பரவியது. குறிப்பாகத் தென்னாட்டில் அதனுடைய வளர்ச்சி மிகவும் வியக்கத்தக்கதாய் இருந்தது. சென்னையிலுள்ள மாதர்களும் அதில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டு ஊர்வலங்களும் நடத்தினார்கள் என்றால், அதனுடைய செல்வாக்கை நாம் நன்கு அறிந்துகொள்ளலாம்.

அமைதியான எதிர்ப்பு :

1916இல் மீண்டும் திலகர் காங்கிரசிலே சேர்ந்தார். ஆலோசனைக்குழுவுக்கு (Subject Committee) வேண்டிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையில் திலகருக்கும் மிதவாதிகளுக்கும் இடையே ஓர் ஒற்றுமை ஏற்படவில்லை. எனவே, திலகர் தம்முடைய தோழர்களிடம் முற்போக்கு நிறைந்த தேசியவாதிகளையே தேர்ந்தெடுக்கும்படி கூறினார். ஒரு மிதவாதியின் பெயரும், ஒரு முற்போக்குவாதியின் பெயரும் ஒரே சமயத்தில் மொழியப்பட்டதால், முற்போக்கு வாதியே பெரு

வாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்விதம், காந்தி அடிகளின் பெயரோடு ஒரு முற்போக்கு வாதியின் பெயரும் மொழியப்பட்டது. வழக்கம் போல, முற்போக்கு வாதிக்கு வாக்குகள் அதிகமாய் இருந்தன. ஆனால், திலகர், காந்தியடிகளே வெற்றி பெற்றதாக அறிவித்தாராம். திலகர் பெருமானைத் தவிர மகாத்துமா காந்தியின் பெருமையினை அக்காலத்தில் வேறு யாரால் சரிவர உணர முடியும்?

இதற்குப் பின்னர், அரசாங்கம் பெசன்ட் அம்மையாரைக் காவலில் வைத்தது. அதைக் கண்டு மக்கள் உள்ளம் கொதித்தார்கள். பெசன்டை விடுதலை செய்ய ஓர் அமைதியான எதிர்ப்பை உருவாக்க வேண்டுமெனவும் திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால், காந்தி அடிகளோ, அச்சமயத்தில் நாட்டு நிலைமையை ஊன்றி ஆராய்ந்துகொண்டிருந்தார்; இந்திய நாட்டின் முதுகெலும்பாய் உள்ள உழவர்களின் திக்கற்ற பரிதாப நிலையைத் தெரிந்துகொள்வதில் தம்முடைய நாட்டம் முழுவதையும் ஈடுபடுத்தினர்.

பம்பாய் மாநிலத்திலுள்ள சம்பரான் என்னும் வட்டத்திலே உள்ள உழவர் எண்ணற்ற இடையூறுகளுக்கு ஆளாகி அவதிப்பட்டனர். பஞ்சத்தாலும், வெள்ளையர்களின் ஆதிக்கத்தாலும் அவர்கள் நிலை, பரிதாபமாய் இருந்தது. அவர்களுடைய அவலக் குரலை ஆங்கில அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. இந்நிலையில் உண்மை நிலையினை ஆராயச் சென்ற காந்தி அடிகளின் மீது தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. ஆனால், அவரோ, அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தடை உத்தரவை மீறிச் சென்றூர்; அல்லற்படும் குடியானவர்களுக்கு அறிவு ஒளி காட்டினர். "அரசாங்கத்தின் அநீதியான வரி விதிப்பைக் கண்டிக்க அவர்களுக்கு உரிமை உண்டு. அரசாங்க அதிகாரிகள் அவர்களின் எஜமானர் அல்லர். குடிமக்களின் ஊழியர்களே அவர்கள். அவர்களைக் கண்டு அஞ்சுவது அறிவீனம் மட்டும் அன்று; கோழைத்தனமுமாம்," என்றும் கூறினர். இச்சத்தியாக்கிரகத்தில் இவருடன் தோளோடு தோளாகத் தோழமை பூண்டு தொண்டாற்றியவர்கள் பாபு ராஜேந்திர பிரசாதும், காலம் சென்ற வல்லபபாய் பட்டேலும் ஆவார்கள்.

### வழி காட்டி:

இவ்வெற்றிக்குப் பிறகு காந்தி அடிகள், ஆமதாபாது தொழிலாளர்களின் போராட்டத்தில் பங்கு கொண்டு சாதித்த செயல், வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய நிகழ்ச்சியாகும். தொழிலாளர்களின் குறைகளை நீக்கிப் பரிகாரம்

எங்ஙனம் காண வேண்டும் என்பதற்கு வழிகாட்டியாக இருப்பதாகும். காலைக் கதிரவன்போலக் காந்தியடிகளின் புகழ் நாடெங்கும் பரவியது. 'ரௌலட்' சட்டத்தைஎதிர்த்துக்காந்தியடிகள் சத்தியாக்கிரகம் தொடங்கப்போவதைக் கேட்டதும் பலருக்கு அது மிகவும் விநோதமாய் இருந்தது. சுய ஆட்சிக்காகப் போராட வேண்டிய தகுந்த காரணம் இருக்க, இச்சிறு செய்கைக்காக ஏன் சத்தியாக்கிரகம் செய்ய வேண்டும் என்றனர். அதைப் போன்றே, பாஞ்சால அநீதிக்காகவும் கிலாபத்துக்காகவும் அவர் ஒத்துழையாமையை ஆரம்பித்த போதும் அவர்களால் அதை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

நம்முடைய நாட்டை வெள்ளையர்கள் கைப்பற்றி ஆண்டதற்கும்,அதற்கு முன்னே மற்ற அந்நியர்கள் கைப்பற்றியதற்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. மற்றவர் வரும்போதே உருவிய வாளுடன் இந்நாட்டில் நுழைந்தனர். ஆனால், ஐரோப்பியர்களோ, கும்பிட்ட கையுடன் இங்கு வந்தனர்; பின்னர், மறைத்து வைத்திருந்த தங்களின் ஆயுதங்களையும் பிரித்தாளும் சூழ்ச்சியையும் வெளிப்படுத்தி, இந்நாட்டிலே தங்களின் ஆட்சியை மிக உறுதியாக நிறுவினர்.

புதிய முறை :

இவர்களை எதிர்த்துச் சுயராஜ்யத்தை அடைவதற்கும் காந்தியடிகள் புது முறையையே கையாண்டார். உலகத்திலே உள்ள மற்ற நாடுகள், வாளின் மூலமே தங்களின் விடுதலையை அடைந்தன. ஆனால், காந்தி அடிகளோ, கத்தியின்றி இரத்தமின்றி உண்மையையும் கொல்லாமையையும் துணையாகக் கொண்டு தம் போராட்டத்தைத் தொடங்கினார்.

அவர் நாடு முழுதும் சுற்றுப் பயணம் செய்தார். சென்ற இடமெல்லாம் மக்கள் உற்சாகத்தோடு அவரை வரவேற்றனர். 'ரௌலட்' சட்டத்தை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்வதில் சென்னை, மற்றவர் எதிர் பாராத முறையிலே தன்னுடைய பேராதரவை அளித்தது.

ஹோம்ரூல் இயக்கம் சென்னையில் வலுப்பெற்றிருந்த போதிலும் காந்தி அடிகளின் சத்தியாக்கிரகத்துக்குச் சென்னை ஏன் அவ்வாறு வரவேற்பளித்தது? சத்தியாக்கிரகம், அதனுடைய இயல்புக்கு முற்றிலும் உகந்ததாய் இருந்தது.எனவே, காந்தி அடிகளை முற்றிலும் பின்பற்றி அவர் காட்டிய வழியிலே செல்ல எப்போதும் அது தயாராய் இருந்தது.

மக்களுக்கு அப்போதைக்கப்போது ஏற்படும் துன்பங்களை உணர்ந்து அவற்றை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவதன்

மூலம் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தார் காந்தி அடிகள்; பின்னர், அதைப் போக்குவதற்காகப் போராடும் வன்மையையும் அவர்களுக்கு ஊட்டினர்.

'உப்புக்காகப் போராட்டமா?' என்று சிலர் பகடி ஆடினர். ஆனால், காந்தி அடிகள் அப்போராட்டத்தின் மூலம் விடுதலை இயக்கத்தை ஆண்டி முதல் அரசன் வரை அறியும் வகையில் நன்கு பரப்பினர். உப்பைப் பயன்படுத்தாதவர் யாருமே இல்லை. எனவே, உப்பு வரியை நீக்க வேண்டுமென்று அவர் கூறியது, எல்லோர் காதிலும் விழுந்தது. இவ்வாறுதான் அவர், சுதந்தர இயக்கத்தை நாட்டு மக்கள் அனைவரும் உணர்ந்து அதிலே பங்கு கொள்ளும்படி செய்தார்; குடி மக்களின் இயக்க மாகவே நாளடைவில் அதை மாற்றினர்.

'பொது மக்களுக்கு வேண்டுவது என்ன? அவர்களுக்கு அதை எப்படிச் சொல்ல வேண்டும்? எவ்வாறு சொன்னல் அதிலே அவர்கள் பங்கு கொள்வார்கள்?' என்பதை முற்றிலும் உணர்ந்தவர் அவர். அடிமைத்தனத்திலே உழன்றுகொண் டிருந்த நம்மை அச்சேற்றினின்றும் கரையேற்றிய பெருமான் அவர். துப்பாக்கியைக் கண்டால் நடுநடுங்கிய கோழைகளை வீரர்க ளாக்கிய மாபெருந்தளபதி அவர். மண்ணல் செய்த மனிதப் பொம்மைகளுக்கு உயிரும், உணர்வும் கொடுத்து அவைகளுக்கு வீரமும் ஊட்டிய அரும்பெருந்தலைவர் அவர். இவ்வளவையும் அவர் சத்தியம், அகிம்சை ஆகிய இரண்டு ஆயுதங்களையே துணையாகக்கொண்டு சாதித்தார். அவ்விரண்டு ஆயுதங்களை யும் நாம் மறவாது நாளும் நடைமுறையில் பயன்படுத்தினல் தான் அவருக்கு நாம் நன்றி செய்தவர்களாவோம். நம்மை வாழ் விக்க வந்து வாழ்வித்த அவரை நாம் மறவாமல் பாராட்டியவர்க ளாவோம்.

வாழ்கநீ எம்மான்! இந்த
　　வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
　　விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
　　பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
　　மகாத்மாநீ வாழ்க! வாழ்க!

— பாரதியார்

## அருஞ்சொற்பொருள்

புயல் - மேகம். மீகாமன் - மாலுமி. கதி - நிலை. தேசியவாதி - தேச சுதந்தரத்திற்குப் பாடு படுபவர். மிதவாதி - அரசினரோடு ஒத்துழைத்துச் சுதந்தரம் பெற முயன்றவர். முற்போக்குவாதி - தீவிரவாதி; தீவிரமாக எதிர்க்க முற்படுவோன். குழு - கூட்டம். ஹோம்ரூல் இயக்கம் - சுய ஆட்சிக் கிளர்ச்சி இயக்கம். ஆதிக்கம் - முதன்மை. அவலக்குரல் - துன்பக்குரல். அல்லற்படும் - துன்பப் படுகின்ற. சத்தியாக்கிரகம்-அறப்போர். சாதித்த - வென்ற. பரிகாரம் - உதவி. கதிரவன் - சூரியன். கிலாபத்து - முதல் உலகப் போருக்குப் பின் துருக்கி காரணமாக இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் வெள்ளையனை எதிர்த்துத் தொடங்கிய இயக்கம். ரௌலட் சட்டம் - மான்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் இந்தியரை அடக்குவதற்கு ஸர் சிட்னி ரௌலட் என்பவரால் கொண்டு வரப்பட்ட அடக்குமுறைச் சட்டம். பேராதரவு - பெரிய உதவி. உகந்ததாய் - விருப்பம் தருவதாய். பகடி ஆடினர் - விகடம் செய்தனர். அகிம்ஸை - பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமை.

## வினாக்கள்

1. 1914ஆம் ஆண்டில் காங்கிரஸ் நிலையை விவரிக்க.

2. ஹோம்ரூல் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யாவர்? அதன் வளர்ச்சியைப் பற்றியும் தெரிவிக்க.

3. காந்தியடிகளின் பெருமையைத் திலகரே அக்காலத்தில் நன்குணர்ந்தவர் என்பதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குக.

4. சம்பரான் சத்தியாக்கிரகத்தைப்பற்றி நீவிர் அறிந்ததைத் தெரிவிக்க.

5. காந்தியடிகளின் புகழ் பரவக் காரணமாயிருந்த செயல்கள் யாவை?

6. சுயராச்சியத்தை அடையக் காந்தியடிகள் கையாண்ட புதிய முறைகள் யாவை?

7. உப்புப் போராட்டத்தின் மூலம் விடுதலை இயக்கத்தைக் காந்தியடிகள் பரப்பியதைப்பற்றி விவரிக்க.

8. நம்மை வாழ்விக்க வந்து வாழ்வித்தவர் காந்தியடிகள்-விளக்கி வரைக.

# 2. வாழ்க்கையின் நோக்கம்

மகா வித்துவான் திரு. ரா. இராகவையங்கார்

இளைஞர்களே!

உலகின்கண் தோன்றி வாழ்ந்து வரும் எண்பத்து நான்கு நூருயிரம் உயிர்த்தொகுதிகளுள் நன்மை தீமைகளை உணர்வதற்கான பகுத்தறிவும், மனத்தில் தோன்றும் கருத்துகளைப் பிறர் அறியும்படி பேசுந்திறனும், கருதிய கருமத்தை முடிக்கும் ஆற்றலும் பெற்றுளிர்வது மனித இனமே. இது பற்றியே, 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது!' என முதியோர் கூறியுள்ளார். இவ்வரிய மனிதப் பிறவியில் நீங்கள் நிறைவேற்ற வேண்டியுள்ளன யாவை? வாழ்க்கையின் நோக்கத்தைத் தெளிவாகவும், நன்ருகவும் அறிந்து ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தத்தம் வாழ்நாளை நடத்திளுல்தான் பிறவிப் பயனை எய்துதல் கூடும்.

இவ்வரிய மனிதவுடல், வினை புரிவதற்கு ஏற்ற கருவியாக அமைந்துளதென்பதும், இறத்தலால் முடிவுருமல் உயிர் தொடர்ந்து நிற்குமென்பதும், அது பயன் தரக்கூடிய குறிக்கோளை நோன்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் பல மதங்களுக்கும் ஒத்த கொள்கை. ஆதலால், என்றென்றும் நன்மையளிக்கும் வினைகள் யாவை என்பதை ஆராய்ந்தறிய வேண்டும்.

'' தவந்தானம் வேள்வியிவை தரையினுளார் ஏவருக்கும்
உவந்தான முதற்ருெழிலாய் உரவோர்கள் விதித்தனரால், ''

என்றபடி இவ்வுலகிற் செய்ய வேண்டிய வினை தவம், தானம், வழிபாடு என மூவகைப்படும். இவற்றுள் தவம் தனக்குச் செய்வது; தானம் பிறர்க்குச் செய்வது; வழிபாடு இறைவனுக்குச் செய்வது.

தவம் என்பது,

'' உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு, ''

என்று திருவள்ளுவ நாயனுர் அருளியவாறு தனக்குறும் இடையூறுகளைப் பொறுத்துக்கொள்வதும், பிறருக்குத் துன்பம் செய்யாமையுமேயாம். தன்னடக்கமே தவத்தின் பண்பு.

தானமென்பது, பிறருக்குச் செய்யவேண்டிய கடமையாகும். நன்னெறியிலீட்டிய பொருள் முதலியவற்றைத் துயரடைந்த எளியவர்கட்கும்; பிணியாளர்கட்கும், ஆதரவற்றவர்கட்கும் கொடுத்துதவ வேண்டும். வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியா வண்ணம், தன் பெருமையைப் பிறர் அறிய வேண்டு மென்று எண்ணுது அளிக்கப்படுவதே சிறந்த தானமாகும். தான தருமத்திற் செலவு செய்யும் பொருளே உண்மையில் நாம் நமக்குச் சேர்த்து வைக்கும் பொருளாகும். ஆதலால், இரப்பவர்களைக் கண்டால் அஞ்சி ஒளியாமல், அவர்கள் நமக்கு நன்மை செய்ய வந்தவர்களெனக் கருதி, மகிழ்ந்தளித்தலே சிறந்தது. ஏற்போர்க்கு இல்லை என்னுது வழங்கிய தமிழ் வள்ளல்கள் பலர் வரலாறுகள், நமக்கு வழி காட்டிகளாய் நிற்கின்றன.

வழிபாடு என்பது, தன்னையும் பிறவுயிர்களையும் படைத்துக் காக்கும் இறைவனை மனமாரத் துதித்து வணங்குதல். இவ் வழிபாடு, வேள்வி எனவும்படும். உடலுறுப்புகள் இறைவனை வழிபட அமைந்தனவே.

'' கண்ணவனைக் காண்க! இரு காதவனைக் கேட்க! வாய்
பண்ணவனைப் பாட! பதஞ்சூழ்க!—எண்ணிறைந்த
நெய்யொத்து நின்ருனை நீலமிடற் ருனையென்
கையொத்து நேர்கூப் புக !''

என்றது காண்க. எடுத்த காரியங்கள் இனிது நிறைவேறவும், இம்மையில் எல்லா நன்மைகளையுமடையவும், மறுமையில் வீடு பெறவும் இறைவன் வழிபாடு இன்றியமையாதது. இவ்வழி பாடு பற்பல சமயங்களிலும் பற்பல வகையாக உறுதி செய்யப் பட்டுள்ளது. அந்த அந்த மதத்தினர் தத்தம் முறைப்படி தொழுவதே மிகவும் சிறந்தது.

தவம், தானம், வழிபாடு என்ற மூவகைப் பெருஞ்செயல் களும் நாடோறும் ஒன்ருேடொன்று சேர்ந்தே நிகழவேண்டுவன. தன்னடக்கமில்லாத தானமும், தானமில்லாத வழிபாடும் பயன் படா. மேலும், இம்மூவகைச் செயல்களும் அன்பு காரணமாகவே நிகழ்தல் வேண்டும். ஏனெனில், ''அன்பின் வழியது உயிர்நிலை,'' என்றவாறு, அன்பே ஆன்மாவின் உண்மை நிலை. அதுவே இறைவன் தன்மை. தன்னிடம் அன்பு கொண்டவன் தன் பொருட்டுத் தவத்தை மேற்கொண்டு மனமடங்குவதும் இன்றி யமையாதது. அவ்வாறே பிறவுயிரிடத்து அன்பு கொண்டவன், அவ்வுயிர்களின் வருத்தம் கண்டவிடத்துத் தன்னுல் இயன்ற

உதவியைச் செய்து நிற்றல் நெறியாகும். இங்ஙனமே, எல்லா வற்றையும் படைத்துக் காக்கும் கடவுளிடத்து அன்பு வைத்து வழிபடுவது பெருநலம் தரும்.

இனி, உயிர் உடலிலிருந்தே மேற்குறித்த மூன்று நல்வினைகள் ஆற்றவேண்டியிருப்பதால், உடலோடு உயிர் வாழ நமக்கு உணவை உண்டாக்கிக்கொள்ளக் கூடிய ஒரு நல்வழியை மேற்கொள்வது, முறையாகும். உண்ணும் சோறும், பருகும் நீரும், உடை முதலிய இன்பப்பொருள்களுமே மனிதத் தேவையாகும். இவைகளைத் 'தாரக, போஷக, போக்கியம்' என்பர். இவைகளில் உணவுப்பொருளைப் பற்றிய முயற்சி அதிகமாகவும், பானங்களைப் பற்றிய முயற்சி சிறிது குறைவாகவும், போக்கியப் பொருள்களைப் பற்றிய ஊக்கம் மிக மிகக் குறைந்தும் இருத்தல் வேண்டுமென்பது பெரியோரது துணிபு.

ஆகையால், மேற்கூறிய முயற்சிகளைக் கடைப்பிடித்து நல்வழியில் உயிர் வாழ வேண்டும். இல்வாழ்க்கையில் பிழைபட்டால் பாவமடைதலும், மேம்பட்டால் அறமடைவதும் உண்டாம்.

நம் முன்னோரின் சிறந்த கொள்கை, இவ்வுலகில் உடலோடு உயிர் நெடுங்காலம் வாழ்தல் மட்டுமன்று; இவ்வாழ்க்கையிற் பாவம் வாராது அறவழியிலே வாழ்ந்து, மேற்சொல்லிய தவம், தானம், வழிபாடு என்ற மூன்று பெருஞ் செயல்களையும் நாளும் செய்து, இறைவன் அருள் பெற்று, இம்மையிலும் மறுமையிலும் இன்பம் எய்த இருப்பது வாழ்க்கையின் பயனென்று நம் பெரியோர் கருதினராவர். இளமையிலே மன அடக்கத்தையும், பிறர்க்கு உதவுதலையும், தெய்வத்தை வழிபடுதலையும் நீவிர் மேற்கொண்டு வாழ்வது நன்னெறியாகும். இவற்றிற்குத்தக நீவிர் வாழ்க்கை நடத்தி இன்புறுவீராக!

'' ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் ''

அருஞ்சொற்பொருள்

ஒளிர்வது - விளங்குவது. வினை புரிதற்கு - செயல்களைச் செய்வதற்கு. நோன்பாக - விரதமாக. கேள்வி - வழிபாடு. ஏவருக்கும் - எவருக்கும். உவந்து - மகிழ்ந்து. உரவோர்கள் - அறிவுடையோர்கள். நோன்றல் - பொறுத்துக்கொள்ளுதல். உறுகண் - துன்பம், அற்றே - அவ்வளவினதே. ஈட்டிய - தேடிய. இரப்பவர் - யாசிப்பவர். ஏற்போர்க்கு - இரப்பவருக்கு. பண் - இசை. பதம் - திருவடிகள்.

எண்ணிறைந்த (எள்+நிறைந்த) - எள்ளில் நிறைந்துள்ள. மிடற்றுனை - கழுத்தை உடையவனை. விழுப்பம் - சிறப்பு. ஓம்பப்படும் - பாது காக்கப்படும்.

## வினாக்கள்

1. 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது!' என்றது ஏன் ?
2. பல மதங்களுக்கும் ஒத்த கொள்கை யாது ?
3. என்றென்றும் நன்மையளிக்கும் வினைகள் யாவை ?
4. தவம், தானம், வழிபாடு — இவற்றைத் தனித்தனியே விளக்கி வரைக.
5. மூவகைப் பெருஞ்செயல்களும் எவ்வாறு நிகழ்தல் வேண்டும் ? ஏன் ?
6. இறைவன் வழிபாட்டால் எய்தக் கூடிய நன்மைகள் யாவை?
7. மனிதத் தேவை யாவை ? அவை எவ்வாறிருத்தல் வேண்டும்?

# 3. கலை மகள் வழிபாடு

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பி.ஏ., பி.எல்.

'அழகிய பொருளால் அடைவது என்றும் ஆனந்தமே,' என்று ஆங்கிலக் கவிஞர் ஒருவர் அருளிப்போந்தார். கண்ணினைக் கவரும் அழகையும், கருத்தினைக் கவரும் அறிவையும் தெய்வ நலங்களாய்க் கருதி வழிபட்ட பெருமை, பாரத நாட்டினர்க்குரியதாகும். அழகினைத் திருமகள் என்றும், அறிவினைக் கலைமகள் என்றும் கொண்டு பாரத நாட்டு முன்னோர் போற்றினர். 'வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருக்கும்' கலைமகளைப் பாரதியார் போற்றும் முறை சாலச் சிறந்ததாகும்.

இவ்வுலகில் வழங்கும் கலைகளைக் கவின் கலையென்றும், பயன் கலை என்றும் பகுத்துக் கூறுவதுண்டு. கண்ணையும் செவியையும் கவர்ந்து, அவை வாயிலாக மனத்திற்கு இன்பம் ஊட்டும் கலைகள் கவின் கலைகளாகும். மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் பல திறப்பட்ட பொருள்களை ஆக்கிக்கொள்வதற்குத் துணையாகிய கலைகள், பயன் கலைகள் எனப்படும். இவ்விரு வகைக் கலைகளின் வடிவமாக நாமகள் விளங்குகின்றாள் என்னும் உண்மையைப் பாரதியார் நன்கு அருளிப்போந்தார்.

செஞ்சொற்கவி இயற்றும் கலைவாணர் கருத்திலும், உள்ளொளி வாய்ந்த உரவோர் மனத்திலும், உலகினர்க்கு ஒளி நெறி காட்டும் உயரிய மறையிலும் கலைமகள் மகிழ்ந்துறைகின்றாள். இன்னும், இன்னிசை வீணையை மலர்க்கரத்திலேந்திய கலைமகள், மக்கள் பேசும் மழலை மொழியிலும், மாதர் இசைக்கும் மதுரப்பாட்டிலும், கீதம் பாடும் குயிலின் குரலிலும், சிறையாரும் மடக்கிளியின் செந்நாவிலும் அமர்ந்திருக்கின்றாள். அன்றியும், மாடகூடங்களை அழகு செய்யும் ஓவியங்களிலும், கோயில்களில் அமைந்த சீரிய சிற்பங்களிலும் கலைமகள் விளங்குகின்றாள். எனவே, செவியினைக் கவரும் இயற்கவியும் இன்னிசையும், கண்ணினைக் கவரும் ஓவியமும் சிற்பமும் அறிவுத் தெய்வம் உறையும் இடங்களாகும்.

இவ்வுலகில் வாழும் மக்களுக்குப் பயன்படும் பொருள்களை ஆக்கி அளிக்கும் தொழிலாளர் பலராவர். இரும்பையுருக்கி வெம்படை வடிக்கும் கருங்கைக் கொல்லரும், திண்ணிய மரத்தைத் தறித்து முரித்துப் பணி செய்யும் தச்சரும்,

குழைத்த மண்ணுற் பாண்டங்களை வனையும் குயவரும், பட்டாலும் பருத்தி நூலாலும் ஆடைகள் நெய்யும் சாலியரும் உலக வாழ்க்கைக்குப் பயன்படும் கலைகளைப் பயின்று பணி செய்கின்ருர்கள். அன்னர் பணிகளிலும் கலை மாது பண்புற்று இலங்குகின்ருள்.

இன்னும் வேதம் பயிலும் வேதியரும், வீரம் விளைக்கும் வேந்தரும், வான்பொருளீட்டும் வணிகரும், தாளாண்மையிற் சிறந்த வேளாளரும் ஒருங்கே வணங்கும் விழுமிய தெய்வம், அறிவுத் தெய்வமேயாகும். மாந்தரது உள்ளத் தாமரையில் இனிதுறைந்து, அவர் அறிவினுக்கறிவாய் நின்று, புன்னெறி விலக்கி நன்னெறி காட்டும் தெய்வம் கலைத்தெய்வமேயாகும். மேலோரென்றும் கீழோரென்றும் எண்ணுது, செல்வரென்றும் வறிஞரென்றும் கருதாது, முதியரென்றும் இளையரென்றும் பாராது, 'எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அறிவினை விரும்புவோர் அனைவரும் வருக!' என்று அருள் கூர்ந்து அழைத்திடுந்தெய்வம் அறிவுத்தெய்வமேயாகும்.

இத்தகைய தெய்வத்தை நிறைமொழி மாந்தர்கள், மறைமொழியாற்போற்றினுர்கள். அறிவறிந்த மாந்தர்கள் ஆண்டு தோறும் எண்ணும் எழுத்தும் அமைந்த ஏடுகளை வரிசையாக அடுக்கிக் கலை விழா எடுத்தார்கள்; விரையுறு நறுமலர் தூவி வணங்கினுர்கள்; வண்ணமும் சாந்தமும் வழங்கினுர்கள். இவ்வாறு ஆண்டுதோறும் நிகழும் நாமகள் விழாவினைக் கண்ட பாரதியார்,

"செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர் !
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர் !
வந்த னம்இவட் கேசெய்வ தென்ருல்
வாழி ய.ஃதிங் கெளிதன்று கண்டீர்!
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்த னத்தை மலரை யிடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை யன்ரும்,"

என்று சாற்றியருளினர். ஆண்டிற்கொருமுறை கலையேடுகளை எடுத்தடுக்கி மலர் மாலை புனைவதும், சந்தனம் சார்த்துவதும், மந்திரம் முரல்வதும், வந்தனை செய்வதும் உயரிய வழிபாடென்று கருதுதல் பெருந்தவருகும். 'பொக்க மிக்கவர்' பூவையும் நீரையும் கலைமகள், பொருளாகக் கருதமாட்டாள். கலை வடிவாய நாமகளுக்குகந்த வழிபாடுதான் யாதோ என்றறிய விரும்புவோர்க்குப் பாரதியார் நல்வழி காட்டுகின்ருர்.

தமிழ் நாட்டிலுள்ள வீடுதோறும் கலையின் ஒளி சிறக்க வேண்டும். வீதிதோறும் இரண்டொரு கல்லூரி இலங்க வேண்டும். நகரந்தோறும் கலாசாலைகள் ஓங்க வேண்டும். கல்வி நலம் அறியாத கசடர் வாழும் ஊர்களை எரியினுக்கு இரையாக்க வேண்டும். இவ்வாறு அறியாமையை அழித்து ஒழித்து யாண்டும் கலையின் மணம் கமழச் செய்தலே நாமகளின் அருள் பெறுதற்குரிய நல்ல வழிபாடென்று பாரதியார் அறிவிக்கின்றார்.

நாட்டிலுள்ள ஏழை மாந்தர்க்கு எழுத்தறிவித்தல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாய அறமென்னும் உண்மையை,

> '' இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
> இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
> அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
> ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
> பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
> பெயர்வி ளங்கி ஒளிர நிறுத்தல்
> அன்ன யாவினும் புண்ணியங் கோடி
> ஆங்கோ ரேழைக்கெ ழுத்தறி வித்தல்.''

என்று பாரதியார் அறிவித்துப் போந்தார். பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அறத்தின் பெருமையை அறிந்து அதனை ஆர்வமுற வளர்த்த நாடு தமிழ் நாடாகும். வருந்தி வந்தவர் அரும்பசி களைந்து அவர் திருந்திய முகங்கண்டு திளைத்த நாடு இந்நாடாகும். கொழு கொம்பின்றிக் குழைந்து கிடந்த சிறு முல்லைக் கொடியின் துயர் கண்டு தரியாது, அக்கொடி படருமாறு தன் பொற்றேரை நிறுத்திச் சென்ற புரவலன் வாழ்ந்த நாடு இந்நாடாகும். வழி நடந்து செல்லும் ஏழை மக்கள் வெங்கதிரோன் கொடுமையால் வருந்தா வண்ணம் இனிய சாலைகளும் சோலைகளும் அமைத்து அறம் வளர்த்த நாடு இந்நாடாகும். மும்மைசால் உலகுக்கெல்லாம் முதல்வனாய இறைவனுக்குச் செம்மை சான்ற கோயில்களும் கோட்டங்களும் எடுத்த நாடு இந்நாடேயாகும். இங்ஙனம், அன்ன சாலைகள் அமைத்தலும், ஆலயங்கள் எடுத்தலும், சாலைகள் வகுத்தலும், சோலைகள் வளர்த்தலும் சிறந்த அறங்களே எனினும், அறிவை வளர்க்கும் கலாசாலைகள் நிறுவுதலே தலையாய அறமென்று பாரதியார் அறிவுறுத்தினர்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்,' என்னும் உண்மையைப் பழந்தமிழ் மக்கள் பொன்னே போலப் போற்றி

னர். கல்வி நலம் வாய்ந்தவரே மக்களாவரென்றும், அந்நலம் அமையப் பெருத மானுடர் விலங்கனையர் என்றும், பழந் தமிழ்ப்பனுவல் பகுத்துரைக்கின்றது. 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்ருர் நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தர். எனவே, உடம்பினை வளர்க்கும் அன்னசாலையினும் உயிரினை வளர்க்கும் அறிவுச்சாலை சிறந்ததென்று அறைதலும் வேண் டுமோ? 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி'யாய இறைவன், 'கல்லார் நெஞ்சில் நில்லான்,' என்னும் உண்மையை உணர்வோ மாயின், இறைவனை வணங்குதற்குரிய ஆலயங்களை அமைத் தற்கு முன்னே அறிவினை வளர்க்கும் கல்லூரிகளை அமைத்தல் வேண்டும் என்பது இனிது விளங்குவதாகும். இதனுலேயே, கலை நலம் அறியாது வருந்தும் எளியவர்க்கு எழுத்தறிவிக்கும் அறம், ஏனைய அறங்களினும் நூருயிரம் மடங்கு மேலான தென்று பாரதியார் அறிவித்தார். இத்தகைய கல்விச் சாலைகளை நாடெங்கும் நாட்டுதலே கலைமகள் உள்ளத்தை மகிழ்விக்கும் உயரிய வழிபாடாகும். கல்லூரிகளிற்போந்து, எண்ணும் எழுத்தும் பயிலும் மாணவர் கண்ணெதிரே, கலைமகளின் வீணையும் கையும் விரிந்த முகமலரும் விளங்கித் தோன்றும்.

### அருஞ்சொற்பொருள்

வெள்ளைக்கலை - வெண்ணிற ஆடை. பணி - ஆபரணம். சால - மிகவும். கவின் - அழகு. செஞ்சொற்கவி - செம்மையான சொற் களாலான பாடல். உரவோர் - அறிவு வன்மையுடையோர். கீதம் - இசை. சிறையாரும் - சிறகு பொருந்திய. மடக்கிளி - இளமையான கிளி. வெம்படை - கொடிய ஆயுதங்கள். வடிக்கும் - செய்கின்ற. கருங்கை - வலிய கை. திண்ணிய - உறுதியான. வான் - மேலான. தாளாண்மை - முயற்சி. புன்னெறி - (புன்மை+நெறி) இழிவான வழி. விரையுறு நறுமலர் - மணம் நிறைந்த நல்ல மலர்கள். சாந்தம் - சந்தனம். முரல்வது - சொல்வது. பொக்கம் - பொய். கசடர் - கீழ்மக்கள். தலையாய - முதன்மையான. தரியாது - பொருமல். புரவலன் - அரசன். மும்மை - மூன்று தன்மை. பனுவல் - நூல். அறைதலும் - எடுத்துரைத்தலும்.

### வினுக்கள்

1. அழகையும் அறிவையும் பாரத நாட்டு முன்னேர் எங்ஙனம் போற்றினர்? பாரதியார் போற்றும் முறை யாது?

2. கலைமகளின் இருப்பிடங்களெனப் பாரதியார் குறிப்பன வற்றைத் தொகுத்துரைக்க.

3. தமிழ் மக்கள் கலைத்தெய்வத்தை எங்ஙனம் போற்றி வணங் குவர்? பாரதியார் எங்ஙனம் போற்ற வேண்டுமென்று கூறியுள்ளார்?

4. சிறந்த அறங்களெனப்படுவன யாவை? 'தலையாய அறம்' எனப்படுவது யாது? ஏன்?

5. எழுத்தறிவிக்கும் அறமே ஏனை அறங்களினும் மேலானது— விளக்குக.

# 4. மானங்காத்த மைந்தன்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

## 1

தமிழ் நாட்டில் உள்ள சில ஊர்களில் பரம்பரையாகக் கவிஞர்கள் இருந்து வருகிறார்கள். அவ்வூர்களுள் வேம்பத்தூரென்பது ஒன்று. அது மதுரைக்குக் கிழக்கேயுள்ளது. சங்க காலமுதல் இன்றளவும் அவ்வூரில் கவிஞர் இருந்து வருகின்றனர். அங்கே உள்ள சோழியப் பிராமணர்களுள் இளைஞர்களும் எளிதிற் செய்யுள்கள் இயற்றும் ஆற்றலுடையவர்களாய் இக்காலத்தும் விளங்குகின்றார்கள். வேம்பத்தூர்க் குமரனார் என்னும் சங்கப்புலவர் அவ்வூரினரென்றே கருதப்படுகிறார்.

அவ்வூர்ச் சோழியர்களுட் பலர், பண்டைக்காலத்தில் வேறு வேறிடஞ்சென்று தங்கள் தங்கள் கல்வி மிகுதியையும் வருத்தமின்றிச் செய்யுள்கள் இயற்றும் வன்மையையும் புலப்படுத்தி, அங்கேயுள்ள அரசர், பிரபுகள் முதலியோரால் நன்கு மதிக்கப்பட்டு, விளைநிலம் முதலியவற்றை அடைந்து வாழ்ந்துவந்தனர். அங்ஙனம் அவர்கள் இருந்த ஊர்கள், வீரசோழன் அல்லது வீரை, தென்காசி, கீழைப்பாலூர், வல்லநாடு, இருப்பையூருணி, திருநெல்வேலி, கரி வலம் வந்த நல்லூர், கற்குளம், பனையூர், குறுங்கா வனம் அல்லது குறுங்களா வனம் முதலியன.

வேம்பத்தூராருள் ஒருவராகிய பெருமாளையரென்னும் வித்துவான், திருநெல்வேலியிலிருந்த சைவவேளாளப் பிரபுகளின் பேராதரவால் அந்நகரத்தில் வசித்து வரலானார். வரன் முறையாக இலக்கிய இலக்கணங்களைப் பயின்ற அவர், நெல்லையப்பர்மீது ஏதேனும் நூல் இயற்ற வேண்டுமென்றெண்ணினார். அவருடைய அன்பர்களும், அவருக்கு ஆதரவளித்த பிரபுகளும் பிரபந்தமொன்று செய்தால் நலமாயிருக்கும் என்று விரும்பினர். அங்ஙனமே சில தினங்களில் அவர் நெல்லை வருக்கக் கோவை என்னும் பிரபந்தத்தை இயற்றி முடித்தார். மொழிக்கு முதலாகும் உயிரெழுத்துகளிலும் உயிர்மெய்யெழுத்துகளிலும் ஒவ்வொன்று ஒவ்வொரு பாட்டின் முதலில் முறையே வரும்படி அகப்பொருட்டுறைகளை அமைத்துப் பாடுவது வருக்கக்கோவையாகும். பாம்பலங்காரர் வருக்கக்கோவை, மாறன் வருக்கக் கோவை முதலியவை அவ்வகையைச் சார்ந்தனவே.

நெல்லை வருக்கக்கோவை இயற்றி நிறைவேறியவுடன், பெருமாளையர் அதனை அரங்கேற்ற எண்ணினர். பலரால் நன்கு மதிக்கப்பட்ட பண்டிதராதலின், அரங்கேற்றம் சிறப்பாக நடைபெறவேண்டுமென்றெண்ணிய அன்பர்கள், அதற்காவன செய்தமைத்தார்கள். பெருமாளையரும் தாம் இயற்றிய அந்நூல் சிறப்பாக அரங்கேற்றி முடியுமென்ற உவகையிலாழ்ந்திருந்தார்.

ஸ்ரீசாலீவாடீசுவரப்பெருமான் திருமுன் அரங்கேற்றுதற்குரிய முயற்சிகள் செய்யப்பட்டன. அரங்கேற்றும் நாள் வந்தது. உள்ளூராரையன்றி, அயலூர்களிலிருந்தும் பிரபுகளும் வித்துவான்களும் வந்திருந்தார்கள். பெருங்கூட்டத்தினிடையே பெருமாளையர் இருந்து அரங்கேற்றத் தொடங்கினர். அவருடைய மனம் மிக்க ஊக்கத்தோடு இருந்தது. காப்புச்செய்யுளை அவருடைய மாணுக்கருள் ஒருவர் படித்தார். அது,

''தேரோடும் வீதியெலாஞ் செங்கயலுஞ் சங்கினமும்
நீரோ டுலாவிவரும் நெல்லையே—காரோடும்
கந்தரத்த ரந்தரத்தர் கந்தரத்த ரந்தரத்தர்
கந்தரத்த ரந்தரத்தர் காப்பு,''

என்பது.

இதைப் படித்தவுடன் கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து நின்று, 'இக்கவியில் ஒரு தடை இருக்கிறது,' என்று சொன்னர். பெருமாளையருக்கு, 'எடுத்தவுடனேயே அபசகுனம் போல இந்த மனிதன் ஏதோ சொல்லுகின்ருனே!' என்ற எண்ணம் வரவே, அவருடைய ஊக்கம் தளர்ந்துவிட்டது. தடை செய்தவர், 'வீதியெல்லாம் செங்கயலும் சங்கினமும் நீரோடுலாவி வரும் என்று பாடியிருக்கிறீரே! வீதியில் கயலும் சங்கினமும் நீரோடு ஓடுகின்றனவா?' என்ருர்.

பல காலமாகப் பிரபுகள், தமிழ்க் கவிஞர்கள் முதலியவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்துவந்த பெருமாளையர், தடை கூறியவருக்கு விடை கூறுவதைப்பற்றி யோசிக்கவில்லை. அப்பொழுது, 'முதன்முதலாக அரங்கேற்றத் தொடங்கிய நூலுக்கு இறங்குதுறையில் நீத்தானது போலத் தடை உண்டாயிற்றே! நம்முடைய நன்மதிப்புக்கு இழுக்கு வந்துவிட்டதே!' என்ற எண்ணம் அவர் நெஞ்சில் தோன்றி வருத்தத் தொடங்கியது. அதனல், அவர் எல்லாவற்றையும் மறந்து திசை மயக்கம் அடைந்தவர் போலச் சிறிது நேரம் இருந்தார். தடைக்கு விடை சொல்ல இயலாமல் அவர் விழிப்பதாகவே அங்கிருந்தவர்கள் யாவரும் எண்ணினர்கள்.

பெருமாளேயருக்குச் சிறிதுநேரம் கழிந்த பிறகுதான், 'நாம் இன்னநிலேயில் இருக்கிறேம்' என்ற நினேவு வந்தது. தம்மேல் அவமதிப்பு அதிகமாகும்படி அவ்வளவு நேரம் மௌனமாய் இருந்துவிட்டதற்கு வருந்தினுர். அவருக்கு அந்நூலே அரங் கேற்ற மனம் இடந்தரவில்லே. ஆகையால், "கடவுளுடைய அருள் இப்பொழுது முழுவதும் என்பால் இல்லேயென்று தோன்று கிறது. அதனுல், அரங்கேற்றம் இப்பொழுது நடைபெற என் மனம் உடன்படவில்லே. பின்பு வைத்துக்கொள்ளலாம்," என்று சொல்லிவிட்டு மனத்துயரோடு வீடு சென்றனர்.

வந்திருந்த யாவரும் தத்தமக்குத் தோன்றியவாறு பல வித மாக எண்ணிக்கொண்டு சென்றனர். தமக்கிருந்த நன்மதிப்புக் குப் பெருங்குறைவு வந்துவிட்டதாக எண்ணி எண்ணிப் பெரு மாளேயர் வருந்தினுர்; அவருடைய மனப்புண் ஆறவேயில்லே. சில காலத்துக்குப் பின்னர் அவருக்குக் குமாரர் ஒருவர் பிறந்தார். குமாரர் பிறந்த சில ஆண்டுகளுக்கப்பால் பெருமாளேயர் இறந்தனர்.

## 2

பெருமாளேயருடைய குமாரர் உரிய பருவத்தில் அவ்வூரிலுள்ள வித்துவான்களிடத்தில் தமிழ்க்கல்வி கற்றுவந்தார். 'குலவிச்சை கல்லாமற் பாகம் படும்,' என்பதற்கேற்ப, அவருக்குத் தமிழறிவு விரைவாகப் பெருகலாயிற்று. தமிழ் இலக்கிய இலக்கண நூல் களில் நல்ல பயிற்சியைப் பெற்று விளங்கினுர்; கவி இயற்று வதிலும் சொற்பொழிவு செய்வதிலும் முறையே ஆற்றலுடைய வராஞர். ஒரு நாள் அவர் தம் வீட்டிலுள்ள சுவடிகளே எடுத்து ஆராய்ந்து வருகையில் 'நெல்லே வருக்கக்கோவை' கிடைத்தது. அது, தம் தந்தையாரால் இயற்றப்பெற்றதென்றறிந்து அதைப் படித்துப் பார்த்து இன்புற்ருர். அந்நூல் இருப்பதாகவே அது காறும் அவர் அறியவில்லே. அக்காலத்தில் அவருடைய தாயார் இருந்தனர். அவரிடம் அதைப்பற்றி விசாரிக்கலாஞர்:

குமாரர்: அம்மா, அப்பா இயற்றிய நூல் ஏதாவது உண்டா?

தாயார்: ஒரு புத்தகம் எழுதினுர்; அதை எழுதப் போய் தான் அவருக்கு மகிழ்ச்சியேயில்லாமற்போயிற்று.

குமாரர்: அந்தப் புத்தகந்தானு இது?

குமாரர் தாயாருக்குக் கையிலிருந்த சுவடியைக் காட்டினுர்.

தாயார்: ஐயோ! அந்தச் சுவடியை நீ ஏனப்பா எடுத்தாய்? உன்னுடைய தகப்பனுர் அதனுல் அடைந்த வருத்தம்

போதாதா? அதை ஆற்றிலாவது கிணற்றிலாவது போட்டுவிடு! அதுதான் உன் தகப்பனுரைக் கெடுக்க வந்த சனியன்!

குமாரர்: என்ன அம்மா, அப்படிச் சொல்லுகிருயே? அப்பா எவ்வளவு அழகாக இதை இயற்றியிருக்கிருர்! இந்த அருமையான நூலை இப்படி இழிவுபடுத்திப் பேசலாமா? தவறல்லவா?

தாயார்: தவரு! எங்களுடைய மகிழ்ச்சியெல்லாம் போனதற்கு இதுதானே காரணம்!

குமாரர்: எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இந்தப் புத்தகம் உங்களை என்ன பண்ணியது?

தாயார்: அது பழைய கதை; அதைப்பற்றி அந்தக் காலத்தில் துக்கப்பட்டது போதாதென்று இப்பொழுது வேறு சொல்லி வருத்தப்பட வேண்டுமா?

குமாரர்: ஏதாயிருந்தாலும் சொல்லிவிடு; எனக்கு இந்தப் புத்தகத்தைப் படித்துப் பாடம் சொல்லிப் பரவச் செய்யவேண்டுமென்ற ஆசை தோன்றியிருக்கிறது. இதை எப்போது அப்பா இயற்றினுர்? எங்கே அரங்கேற்றினுர்?

தாயார்: அரங்கேற்றமா! அதைப்பற்றிச் சொல்லுகிறேன் கேள்: நீ பிறப்பதற்கு முன்பே இதை அவர் பாடினுர். அரங்கேற்றத்துக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள். அரங்கேற்றம் ஆரம்பிக்கும் போது எவனே ஒருவன் முதற் பாட்டே தப்பு என்ருனும். அவ்வளவுதான். உடனே அவருக்கு மானத்தால் மனம் ஒடிந்து போய்விட்டது. அதன் பிறகு அவருக்குப் பழைய மகிழ்ச்சி வரவேயில்லை. அரங்கேற்றமே நடக்கவில்லை. அந்தச் சுவடியையும் மூலையிலே போட்டுவிட்டார்.

குமாரர்: முதற்பாட்டிலே என்ன தப்பு? ஏதாவது ஞாபகம் இருக்கிறதா?

தாயார்: அவர் ஒன்றும் பேசவேயில்லை. யாரோ சொல்லிக்கொண்டிருந்தார்கள்; அதுதான் என் காதில் விழுந்தது; 'வீதியெல்லாம் மீனும் சங்கும் நீரோடு ஓடுமா?' என்று அவன் கேட்டானும்; இதுதான் ஞாபகம் இருக்கிறது.

குமாரர் ஒரு வகையாய்த் தடை இன்னதென்பதை ஊகித்து அறிந்தனர்; பிறகு முதியவர்களிடம் விசாரித்தும் தெரிந்து கொண்டார். அவர் மீண்டும் மீண்டும் அந்த நூலைப் படித்துப் படித்து இன்புற்ருர். எவ்வாறேனும் தம் தந்தையாருக்கு இருந்த இகழ்ச்சியை நீக்கிவிட வேண்டுமென்ற உறுதியை மேற்கொண்டார். அந்த நூலைத் தாமே அரங்கேற்றி அதன்

பால் யாதொரு பிழையுமின்மையை எடுத்துக்காட்ட வேண்டு மென்றெண்ணினர்.

நெல்லையிலுள்ள அன்பர்கள் முயற்சியினல் இறைவன் திருமுன் அரங்கேற்றுவதற்காக ஒரு பெரிய சபை கூட்டப்பட்டது. முதற்பாட்டுக்கு அவர் பொருள் சொல்லத் தொடங்கினர்;[1] 'இது பிழையுள்ளதென்று முன்பு ஒருவர் தடுத்துரைக்க எந்தையார் மனவருத்தத்தால் அரங்கேற்றவில்லையெனக் கேள்வியுற்றேன். இதில் எவ்வகைப் பிழையும் இல்லை. 'வீதியெல்லாம் தேரோடும்; செங்கயலும் சங்கினமும் நீரோடுலாவிவரும்; இத்தகைய நெல்லை,' என முடிவு கொள்ள வேண்டும். இவ்வளவு அருமையான நூலை இயற்றிய என் தந்தையாருக்கு இந்தத் தடைக்கு விடை தெரியாமல் இருப்பதற்கு நியாயமில்லை. 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவன்னர்,' என்பதற்கேற்ப, மிக்க மானமுடையவராதலின், எல்லாவற்றையும் மறந்து துன்பக் கடலில் ஆழ்ந்தார். தடையுரைத்த பொருமைக்காரர் யாரோ தெரியவில்லை; அவ்வொருவருடைய செயலால் அக்காலத்தில் இருந்த பலரும் இந்நூலின் அருமை பெருமைகளையறிந்து இன்புறக்கூடவில்லை. என் செய்வது!' என்று சொல்லிவிட்டு, மேலே நூல் முழுவதற்கும் விரிவாகப் பொருள் கூறி, அரங்கேற்றி நிறைவேற்றினர். அந்நூலின் சுவையில் ஈடுபட்டவர்கள், 'இதுகாறும் இந்த நூலை அறியாமல் இருந்தோமே!' என்றெண்ணி இரங்கினர்கள். மிக்க முதுமையையுடையவர்கள், 'இவ்வளவு அரிய நூலைச் செய்தும் அதை நாங்களெல்லாம் தெரிந்து இன்புறவும் அதனல் உண்டாகும் பயனைப் பெருமானையர் அடையவும் இயலாமற்போயிற்றே!' என்று வருந்தினர். 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? முன்னே முளைத்த காதினிலும் பின்னே முளைத்த கொம்பு வலிதென்பதற்கு இலக்கியம் போன்றவர் இந்த இளைய வித்துவான்!' என்று அவரை வித்து

---

1. இச்செய்யுளின் பிற்பகுதியின் பொருள் வருமாறு:—கார் ஓடும் - கருநிறம் பரவிய, கந்தரத்தர் - திருக்கழுத்தையுடையவரும், அந்தரத்தர் - ஞானகாயத்தைத் திருமேனியாகக் கொண்டவரும், கந்து அரத்தர் - பற்றுக்கோடாகிய செம்மைநிறமுடையவரும், அம் தரத்தர் - திருமுடியில் நீரைத் தாங்கியவரும், கந்தர் அத்தர் - முருகக் கடவுளின் தந்தையாரும், அம் தரத்தர் - அழகிய தகுதியையுடையவருமாகிய சிவபெருமான், காப்பு-காவல் புரிந்து வீற்றிருக்கும் இடம்.

'நெல்லை காப்பு' என்று முடிக்க.

'அத்தலத்துக்கு உரியதாக அடியேன் இயற்றும் நூல் இனிது முடியும் வண்ணம் பாதுகாத்தருள்வர்,' என்பது கருத்து.

அந்தரம் - ஆகாயம்; கந்து - பற்றுக்கோடு; அரத்தம் - சிவப்பு; அம் - நீர்; அழகு. தரம் - தகுதி.

வான்கள் கொண்டாடினர்கள். யாவரும் மகிழ்ந்து பல பெருஞ் சிறப்புகளை அவருக்குச் செய்தனர்.

அவர் தம் வீட்டிற்கு வந்தார். அவருடைய தாயார், அரங் கேற்றம் நிறைவேறியதும், தம் குமாரர் சிறப்புப் பெற்றது மாகியவற்றை முன்பே அறிந்தவராய், எல்லையில்லாத உவகை யுடன் அவர் வரவை எதிர்நோக்கியிருந்தார். வரும்போதே குமாரர், 'அம்மா! அப்பாவுக்கு இருந்த குறையை நீக்கி விட்டேன்!' என்று சொல்லிக்கொண்டு வந்தார்.

'என் சிங்கமே, இப்பொழுது அவர் இருந்து மகிழக் கொடுத்து வைக்கவில்லையே!' என்னும் பொழுதே தாயாரின் கண்களில் ஆனந்தக் கண்ணீரும் துக்கக் கண்ணீரும் கலந்து சிந்தின.

### அருஞ்சொற்பொருள்

பேராதரவு - பெருந்துணை. பிரபந்தம் - சிறு நூல். அரங்கேற்றம்- புலவர்கள் முன் படித்து அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தல். உவகை - மகிழ்ச்சி. காப்புச் செய்யுள் - கடவுள் வணக்கச் செய்யுள். கயல் - மீன். அபசகுனம் - தீய நிமித்தம். விச்சை - வித்தை, கல்வி. நீப்பின் - நீக்கப்பட்டால். கவரியா - கவரி மான். நெல்லை - திருநெல்வேலி.

### வினக்கள்

1. வேம்பத்தூர் பெருமாளையரைப்பற்றி நீவிர் அறிந்துள்ளதைத் தெரிவிக்க.
2. பெருமாளையர் இயற்றிய நூல் யாது? இயற்றக் காரணம் என்ன?
3. வருக்கக் கோவை - குறிப்பு வரைக.
4. நெல்லை வருக்கக் கோவை அரங்கேற்றம் நடைபெற்ற விதத்தைத் தெரிவிக்க.
5. அரங்கேற்றம் தடைபட்டது ஏன்? பெருமாளையர் நிலையை யும் விவரிக்க.
6. மானங்காத்த மைந்தர் யார்? அவர் மானங்காத்த வரலாற் றைச் சுருக்கி வரைக.

# 5. சிக்காகோச் சொற்பொழிவு

சுவாமி விவேகானந்தர்

அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே, சகோதரர்களே!

அன்பினோடும் ஆர்வத்தினோடும் நீங்கள் அளித்த வாழ்த்துரைக்கு மறுமொழி கூற யான் எழுந்து நிற்கும் இச்செயலானது, சொல்லுதற்கரிய உவகையினாலே எனது உள்ளத்தை நிறைவுறச் செய்கின்றது. உலகிலுள்ள துறவொழுக்க நிலையங்களிலே மிகு பழமை வாய்ந்த நிலையத்தின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். எல்லாச் சமயங்களுக்குந் தாயாகிய சமயத்தின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். பல்வேறு வகுப்பினராய்ப் பல பிரிவாகிய மதங்களைக் கைக்கொண்டொழுகுங் கோடிக்கணக்கான இந்திய மக்களின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்த மேடைமீதுள்ள உரையாளருட்சிலர், கிழக்கு நாட்டிலிருந்து வந்த பிரதிநிதிகளைக் குறித்துப் பேசும்பொழுது, 'சேய்மையிலுள்ள மக்கட்கூட்டத்தினரிடையேயிருந்து வந்த இப்பிரதிநிதிகள் பண்புடைமையாகிய எண்ணத்தினை எல்லா நாட்டிற்கும் கொண்டு செல்லுகின்ற பெருமைக்கு உரிமையுடையார்,' எனக் கூறினார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். பிறருடைய கொள்கையை வெறுத்தொதுக்காத பண்புடைமை, அக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற பொது நோக்கு என்னுமிரண்டனையும் உலகிற்குக் கற்பித்த சமயத்துக்கு நான் உரியவனெனப் பெருமை பாராட்டுகின்றேன்! எல்லாச் சமயங்களையும் அன்பினோடு நோக்குகின்ற பண்புடைமையிலே எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அது மாத்திரமன்று; எல்லாச் சமயங்களையும் உண்மை மார்க்கங்களென நாங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றோம். உலகத்திலுள்ள எல்லாச் சாதியாராலும் மதங்களாலும் துன்புறுத்தியொதுக்கப்பட்ட மக்களுக்கு அடைக்கலம் தந்து காப்பாற்றிய ஒரு சாதிக்கு நான் உரியேன் என்பதைக் குறித்துப் பெருமை பாராட்டுகின்றேன்! உரோமருடைய கொடுஞ் செயலினாலே, தமது பரிசுத்த தேவாலயம் சின்னபின்னப்பட்ட ஆண்டிலே, தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் அடைக்கலம் புகுந்த கலப்பில்லாத இஸ்ரவேல் சாதியாரில் மிஞ்சியிருந்த

வர்களை நாங்கள் அன்பினேடு அணைத்துக்கொண்டோம் என்பதனை உங்களுக்கு எடுத்துச சொல்லும் பெருமை எனக்கு உண்டு. மகத்துவம் பொருந்திய சொராஸ்திரிய சாதியாரிலே எஞ்சியிருந்தோருக்கும் புகலிடங்கொடுத்து, இன்றும் பாது காத்து வருகின்ற ஒரு சமயத்துக்கு யான் உரியேன் எனப் பெருமை பாராட்டுகின்றேன். எனதன்புள்ள சகோதரர்களே! இளமையிலே நான் பல முறை ஓதியதும், இன்றும் கோடிக் கணக்கான மானிடர்களாலே ஓதப்படுவதுமாகிய ஒரு கீதத்தி லிருந்து சில அடிகளை எடுத்து உங்கள் முன்னிலையிலே சொல்லுவேன்.

"எண்ணுமிரு நிலத்தெழுந்த பலநதியும்
இறுதியில்வந் தெறிநீர் வேலை
நண்ணுகின்ற வியல்பதுபோற் பலவேறு
தகைமையராய் ஞானம் நாடும்
மண்ணகத்தோர் செல்லுநெறி செம்மையதாய்க்
கோடணையாய் மருவு மேனும்
புண்ணியனே! நினையடையு மார்க்கமவை
யனைத்துமெனப் புகல்வன் யானே."

இதுவரை ஒரு காலத்திலும் ஏற்படாத மகா மகத்துவம் பொருந்திய சர்வசமய ஆராய்ச்சிக் கழகமாகிய இம்மகா சபையானது கீதையிலே கூறப்பட்டிருக்கும் ஒரு பெரிய அற்புத மாம் உண்மையைத் தெளிவுபடுத்தி வற்புறுத்துகின்றது.

"மெய்வகையது இதுவென்ன வேண்டியவர் வேண்டியன, அவ்வகைய தெய்வமுமா யளிப்பேனும் யானேகாண்." "யாதாயினும் ஒரு மார்க்கத்தைப் பின் பற்றி என்னை யாவன் நாடுகின்ருனே, யான் அவனை அடைகின்றேன். ஈற்றிலே என்னை அடைகின்ற மார்க்கங்களிலே எல்லா மக்களும் முயன்று செல்கின்ருர்கள்," என்பது அவ்வுண்மையாகும்.

மத விகற்பங்களும் மதச்சண்டைகளும், அவற்றினின்று ஏற்பட்ட கொடிய பிடிவாதமும் ஆகிய இவை, இந்த அழகிய பூவுலகத்தை நெடிது பற்றியிருந்தன. இந்நிலவுலகத்தை அவை கொடுஞ்செயலினலே நிறைத்துவிட்டன. மீட்டும் மீட்டும் மானிட உதிரத்தை எங்கும் பரவச் செய்து நாகரிக வாழ்க்கையை அழித்து, மக்கட்கூட்டத்தினரைத் திகைக்கும்படி செய்துவிட்டன. இந்தக் கொடிய பசாசுகள் தோன்ருதிருந் தால், மக்கட்கூட்டமானது இப்பொழுது இருக்கின்ற நிலையினும் பார்க்க மிகவும் உன்னதமான நிலையில் இருந்திருக்கும். குறித்த பசாசுகள் அழிந்து போகின்ற காலம் நெருங்கிவிட்டது.

இன்று காலையிலே இந்த மகாசபை கூடும்பொழுது அடித்த மங்கல மணியானது மூடக்கொள்கைகளின் சாவுமணியாகுக. வாளினாலோ, எழுதுகோலினாலோ, ஒருவரையொருவர் பகைக்கின்ற கொடுஞ்செயலானது அகன்றுவிடுக. ஒரே நோக்கத்தினைக் கொண்டு ஒன்றினையே நாடிச் செல்கின்ற மக்களிடையே அன்பினோடு கூடிய எண்ணங்கள் நிறைவு பெறுக!

## அருஞ்சொற்பொருள்

ஆர்வம் - ஆசை. சேய்மை - தொலைவு. உரையாளர் - சொற்பொழிவு செய்வோர். மார்க்கம் - சமயம். தகைமையர் - கொள்கைகளையுடையவர். புகலிடம் - அடைக்கலம். கீதம் - பாடல். இருநிலம் - பெரிய பூமி. வேலை - கடல். கோடணையாய் - முறைப்படுத்தியதாய். சாவுமணி - மரிக்கும்போது அடிக்குமணி. மகாமகத்துவம் - மிகப்பெரிய பெருமை. உன்னதமான - மிகவுயர்ந்த. விகற்பம் - வேறுபாடு.

## வினாக்கள்

1. விவேகானந்தர் நன்றி கூறும் முறையைப் புலப்படுத்துக.
2. விவேகானந்தர் பிரதிநிதிகளைப் பாராட்டிக் கூறியதென்ன ?
3. பிற நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து தங்கிய இரண்டு சமயத்தினர் யாவர் ?
4. விவேகானந்தர் தம்மைப் பற்றிப் பெருமையாகக் கூறிக் கொண்டுள்ளன யாவை ?
5. சர்வசமய ஆராய்ச்சிக் கழகம் வற்புறுத்தும் உண்மையென விவேகானந்தர் கூறுவன யாவை ?
6. மதவிகற்பம், மதச்சண்டைகள் பற்றி விவேகானந்தர் கூறியன யாவை ?

# 6. போரும் நீரும்

வித்துவான் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், எம்.ஏ.

## 1

இளமைக்காலத்திலே பட்டத்தைப் பெற்றவன் பாண்டியன் நெடுஞ்செழியன். சூழ இருந்த சிற்றரசர்களும் பேரரசர்களும் பாண்டி நாட்டின்மேல் எப்போதும் ஒரு கண் வைத்திருந்தார்கள். ஐந்து வகையான நிலங்களும் விரவியுள்ள நாடு அது; தமிழுக்குச் சிறந்த பிரதேசம். செந்தமிழ் நாடு என்ற சிறப்புப் பெயரைப் பெற்றதன்றோ பாண்டி நாடு ?

நெடுஞ்செழியன் இளம்பிள்ளையென்று எண்ணிய பகைவர்கள், அவனோடு பொருது வென்றுவிடலாம் என்று எண்ணினார்கள். முக்கியமாக, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற சேர அரசனுக்கு இந்த எண்ணம் அதிகமாய் இருந்தது. "இப்போதுதான் இவன் பட்டத்துக்கு வந்திருக்கிறான்; சின்னஞ்சிறுவன்; இவனுக்கு அடங்கி நடக்கும் அமைச்சரோ படைத்தலைவரோ அதிகமாய் இருக்கமாட்டார்கள். நாம் சில மன்னர்களையும் துணையாய்க் கொண்டு போருக்கு எழுந்தால், மிக எளிதில் வெற்றி பெறலாம்," என்றெல்லாம் அவன் மனக்கோட்டை கட்டினான்; தன் கருத்தை மெல்லப் பரவ விட்டான். 'இவ்வளவு பெரிய அரசன் போருக்குப் புறப்பட்டால், வெற்றி கிடைப்பதற்கு என்ன தடை? நாம் இவனுடன் சேர்வதால் இவனுக்குத் துணை வலி மிகுதியாகும் என்பதைக் காட்டிலும், கிடைக்கும் வெற்றியில் நமக்குப் பங்கு கிடைக்கும் என்பதுதான் உண்மை. தக்க சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது,' என்று எண்ணிய வேற்று அரசர் சிலர் அவனுடைய கருத்தைப் பாராட்டினார்கள்; தாங்களும் அவனுடன் போருக்கு எழுவதாக உறுதி மொழியும் கூறினார்கள்; படைகள் சேர்த்தார்கள்; போருக்கும் எழுந்தார்கள். நெடுஞ்செழியன் இளையவனே; ஆனாலும், வீரத்திற்சிறந்த பேரரசர் பரம்பரையில் தோன்றியவன். குட்டியானாலும் பாம்பு பாம்புதானே ?

பகையரசர் கூடிப் பொர வருவதைக் கேள்வியுற்று அவன் சீறினான்; "ஓகோ! இவர்கள் என்னை இளம்பிராயத்தவனென்று எண்ணிவிட்டார்களோ! இவர்களை அடியோடு ஒழித்துவிடாமல் வேறு காரியம் பார்ப்பதில்லை!" என்று உறுதி பூண்டான்.

ஒற்றன் ஒருவன் வந்தான்; "அரசே, சேர நாட்டிலும் மற்ற இடங்களிலும் இந்த நாட்டுப் பெருமை தெரியாமல் பலர் பிதற்றிக்கொண்டிருக்கிறார்கள்; 'இந்த அரசனுடைய நாட்டின் பெருமையைப் பெரிதாக உயர்த்திக் கூறுபவர்களைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது. அதைக் கண்டு நாம் ஏமாந்து போக மாட்டோம். சின்னஞ்சிறு பிள்ளையாகிய அரசனுக்கு என்ன தெரியப் போகின்றது?' என்று பேசிக் கொள்கின்றார்கள்," என்றான்.

அரசன் சற்று மனம் உளைந்தான்; "அவர்களுடைய படைகள் எத்தகையவை?" என்று ஒற்றனைக் கேட்டான்.

"யானை, தேர், குதிரை, வீரர் என்னும் நால்வகைப் படைகளையும் தொகுத்துக்கொண்டிருக்கிறார்கள். சேர நாட்டு யானைகளை நானே பார்த்தேன்," என்றான் ஒற்றன்.

"இருக்கட்டும்; அதனால் என்ன? மணி ஒலிக்கும் பெரிய யானைகளும் தேரும் குதிரையும் படைகளுமுடைய மற்றவர்களும் இருக்கிறார்களென்று அவர்களுக்குச் செருக்கு உண்டாகியிருக்கின்றது. பகையுணர்ச்சி மூண்ட உள்ளத்தில் நிதானம் இராது. என்னுடைய படைப்பலத்தை அவர்கள் கருதவில்லை; அதனை நினைந்து அஞ்சாமல் சினம் மிகுந்து சின்னத்தனமான வார்த்தைகளைச் சொல்லித் திரிகின்றார்கள். கிடக்கட்டும்! அதற்குப் பதில் சொல்லிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை."

அரசன் யோசனையில் ஆழ்ந்தான்; படைத்தலைவரையும் மந்திரிமாரையும் வருவித்தான்; ஆலோசனை செய்தான். "போர் செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய நாட்டின் எல்லைக்குள்ளே அவர்கள் வருவதற்குமுன் நாம் எதிர் சென்று போராட வேண்டும்," என்று நெடுஞ்செழியன் வீரம் ததும்பக் கூறினான். படைத்தலைவர் உடம்பட்டனர். மந்திரிமார் பின்னும் யோசனை செய்தனர்.

"இனி யோசனைக்கு நேரம் இல்லை. சிறுசொல் சொல்லிய வேந்தரைச் சிதையும்படி அருஞ்சமத்தில் தாக்கி, அவர்களை அவர்களுடைய முரசத்தோடு ஒருங்கே சிறைப்படுத்துவதாக உறுதி கொண்டுவிட்டேன்! இதோ ஆணையிடுகின்றேன்! கேளுங்கள்: அவர்களைச் சிறை செய்யாவிட்டால், என்னுடைய குடை நிழலில் வாழ்பவர் யாவரும் புகலிடம் காணாமல் வருந்தி, 'எம் அரசன் கொடுங்கோலன்!' என்று கண்ணீருடன் நின்று பழி தூற்றும் பாவி ஆகக் கடவேன்!"

அரசன் முகம் சிவந்தது. அவனுடைய இளமை அழகிலே இப்போது வீரமுறுக்குத் தெளிவாகத் தோன்றியது. மந்திரி

மார் வியப்புடன் அவனை உற்று நோக்கினர். 'பரம்பரைக்கு ஏற்ற வீரம்!' என்ற நினைவுதான் அவர்கள் உள்ளத்தில் தோன்றியது.

"இந்தப் பாண்டி நாடு தமிழ் வளர்ந்த இடம். பாண்டிய அரசர்கள் புலவரைப் போற்றித் தமிழை வளர்த்தார்கள். மிகச் சிறப்புற்ற புலவர்கள் இந்த நாட்டையும் எங்கள் மரபினரையும் புகழ்ந்து பாடியிருக்கின்றார்கள். நான் போர் செய்ய அஞ்சினேனானால் அந்தப் புகழ் என்னாவது? பகைவரை வெல்லாமற்போவேனானால், ஓங்கிய சிறப்பும் உயர்ந்த கேள்வியும் உடைய மாங்குடி மருதனார் முதலிய புகழ் பெற்ற புலவர் என் நாட்டைப் பாடாமல் ஒதுக்கும் நிலை வருவதாகுக! என்னுடைய குடிகளும் சுற்றத்தாரும் துன்புற்று வாட, என்னிடம் வந்து இரப்பவர்களுக்குக் கொடுக்க முடியாத வறுமை என்னை வந்து அடையட்டும்! இந்த வஞ்சினத்தைப் பாண்டிய அரசர் வழி வந்தவன் என்ற உணர்ச்சியோடு நான் சொல்லுகின்றேன்."

அரசன் வஞ்சினங் கூறும் போது சிங்கம் முழங்குவது போல இருந்தது. உடன் இருந்தோர் அஞ்சி நடுங்கினர். அரசன் தோள் துடித்தது; கண்கள் சிவந்தன; வார்த்தை ஒவ்வொன்றும் அழுத்தமாய் வந்தது. 'இனி இந்த உலகமே எதிர் நின்றாலும், போரை நிறுத்த முடியாது,' என்பதை மந்திரிமார் உணர்ந்துகொண்டனர்; போருக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்யலாயினர்.

## 2

போர் மூண்டுவிட்டது. அரசனே நேரில் சென்று போரிடத் தொடங்கினான். "இத்தனை சிறுபிள்ளை போர்க்களத்துக்குப் போயிருக்கிறானே!" என்று அச்சமும் வியப்பும் கொண்டனர் மக்கள்.

"நேற்று வரையில் கிண்கிணி கட்டியிருந்த இளங்கால் அது; இன்று போர் வந்ததென்று வீரக்கழலைக் கட்டிக்கொண்டான். முதல் முறையாகக் குடுமி களைந்த விழா, சில நாள்களுக்கு முன்தானே நடந்தது! அந்தத் தலையில் குலத்துக்குரிய அடையாளமாகிய வேம்பையும், போர்ப் பூவாகிய உழிஞையையும் அணிந்துகொண்டான். சிறு வளைகளை அணிந்திருந்த கை, இப்போது வில்லைப் பற்றிக்கொண்டது. சிங்கக் குட்டி தாவுவது போலத் தேரில் ஏறி நிற்கின்றானே! இப்படியும் வீரத் திருக்குழந்தை உலகத்தில் உண்டா? அவன் மாலை வாழட்டும்! அவன் பெருமை வாழட்டும்!" என்று புலவர்கள் வாழ்த்தினார்கள்.

போரில் பகைவராய் வந்தவர் ஒருவர் இருவர் அல்லர். சேரனும் சோழனும் அவர்களுடன் ஐந்து சிற்றரசரும் சேர்ந்து கொண்டனர். தலையாலங்கானம் என்ற இடத்தில் போர் மிகக் கடுமையாய் நடந்தது. இரண்டு பக்கத்திலும் படைப்பலம் மிகுதியாகவே இருந்தது.

இடைக்குன்றூர் கிழார் என்ற புலவர் இதைக் கேள்வி யுற்றார்; தலையாலங்கானத்துக்கும் சென்று பார்த்து வந்தார். பாண்டிய மன்னனுடைய வீரத்தை எண்ணி அவர் பிரமித்துப் போனார். "இந்த உலகத்தில் எத்தனையோ போர்கள் நடந் திருக்கின்றன. அவற்றைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். ஒரு மன்னனை மற்றொரு மன்னன் எதிர்த்துப் போர் செய்தலும் அதில் ஒருவன் தோல்வியுறுதலும் உலகத்து இயற்கை. ஆனால், இந்த மாதிரி நாம் கேட்டதே இல்லை. நெடுஞ்செழியனுடைய பெருமையையும் பலத்தையும் அறியாத ஏழுபேர் கூடிக்கொண்டு அவனை எதிர்க்கின்றார்கள். அவனோ, சலியாமல் முரசு முழங்க மேற்சென்று அடுகின்றான். இதைக் கதையிலும் கேட்ட தில்லையே!'' என்று வியந்து பாடினார்.

போர் நாளுக்கு நாள் மிகுதியாயிற்று. சிற்றரசர்களுக்குப் போரில் எதிர்த்து நிற்கும் ஆற்றல் இல்லை. சிலர் போரில் இறந்தனர். சிலர் பின் வாங்கினர். கடைசியில் யாரும் கைவிடவே, சேர மன்னன் பலமிழந்து சிறைப்பட்டான். நெடுஞ் செழியன் செய்த கன்னிப்போரில் இத்தகைய வெற்றி கிடைத் ததைக் குறித்துப் பாண்டி நாடே குதூகலித்தது.

இளமையில் போரில் ஈடுபட்டுவிட்டமையால் அரசனுக்கு மேலும் மேலும் போரைப்பற்றிய சிந்தனை மிகுதியாயிற்று. அவன் படைகளைத் திரட்டிக்கொண்டேயிருந்தான்.

### 3

அரசன் தன் பருவத்துக்கு மிஞ்சிய வெற்றி மிடுக்கினால் பூரித்திருந்தான். பெரும்போர் நிகழ்ந்ததால் நாட்டின் விளை பொருளுக்கு அதிகச் செலவு ஏற்பட்டது. போர் நின்றவுடன் நாட்டு வளம் பெருகும் துறையில் அரசன் கவனம் செலுத்த வில்லை. அரியணை ஏறியவுடன் வில்லைப்பிடிக்க வேண்டி நேர்ந் தமையால் நாட்டைப்பற்றி அப்போது சிந்திக்க இயலவில்லை. போருக்குப்பின் அதில் கிடைத்த வெற்றியிலே மயங்கியிருந் தமையால் பின்பு அதைப்பற்றிய நினைவு எழவில்லை.

ஏரிகளும் குளங்களும் மேடிட்டிருந்தன. கரைகள் உடைந்து பயனில்லாமல் கிடந்தன சில. நீர் வளம் இல்லாமையால் நில

வளம் குறைந்தது. விளைவு குறைந்தது. பஞ்சம் வந்துவிடுமே என்ற அச்சம் பாண்டி நாட்டு மக்களுள்ளத்து எழுந்தது.

அரசன் படை சேர்ப்பதை விட்டு, வீர விளையாட்டை நிறுத்தி, நாட்டின் நிலையை உணர்ந்து வளம்படுத்த வேண்டும் என்று சொல்வார் யாரும் இல்லை. மந்திரிமார் சொல்ல அஞ்சினர். இளம்பருவம் உடையவனுனாலும் கோபத்திலும் வீரத்திலும் மிகமிக ஓங்கி நிற்பவன் என்பதை அவர்கள் தம் கண் முன்னே பார்த்தவர்கள்.

'இந்த நிலை நீடித்தால் பாண்டி நாட்டில் நிச்சயமாகப் பஞ்சம் வந்துவிடும்,' என்பதை அறிந்தனர் மந்திரிமார்; அரசனுக்கு யோசனை கூறவோ, அஞ்சினர். என்ன செய்வது என்று ஏங்கி நின்ற தறுவாயில் சமயசஞ்சீவி போல ஒரு புலவர் வந்தார். குடபுலவியனுர் என்பது அவர் பெயர். தமிழ்ப்புலவர்கள் பொதுவாகவே யாருக்கும் அஞ்சாதவர்கள்; நியாயத்தையே எடுத்துரைப்பவர்கள். அவருள்ளும் குடபுலவியனுர் நயமாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர். அவரிடம் அமைச்சர்கள் தம் கருத்தைக் கூறி, "எப்படியேனும் நீங்கள் மனம் வைத்து அரசரை வழிக்குக் கொண்டு வரவேண்டும்!" என்று வேண்டிக் கொண்டார்கள். "என்னுல் இயன்றதைச் செய்வேன்," என்று அவர் உடம்பட்டார்.

## 4

"தலையாலங்கானத்துச் செருவைப் பற்றி இன்று உலகத்தில் பாராட்டாத புலவர்களே இல்லை," என்ருர் குடபுலவியனுர்.

"ஆம், பெரிய போர்தான். நான் பட்டத்துக்கு வந்தவுடன் முதல் வேலை இந்தப் போரில் வெற்றி பெறுவதாகிவிட்டது," என்ருன் நெடுஞ்செழியன்.

"எல்லாம் உங்கள் குலத்தின் பெருமை. நாவலந்தீவு முழுவதும் ஒரு குடைக்கீழ் ஆண்ட உரவோர் பாண்டிய மன்னர். அவர்களுடைய மரபில் வந்த அரசர்பிரான் கோடி கோடி ஆண்டுகள் வாழ வேண்டும்!"

"அவர்கள் பெருமையே பெருமை! பாண்டி நாட்டின் பெருமை வேறு எந்த நாட்டுக்கு இருக்கிறது? மதுரை மாநகரின் சிறப்பை வேறு எங்கே பார்க்க முடியும்? பகையரசர் என்ன தான் முயன்ருலும் இந்த நகருக்குள்ளே புக முடியுமா?"

"ஆழமான அகழியையும், உயரமான மதில்களையும் பெரியோர்கள் அமைத்திருக்கின்ருர்கள். இத்தகைய வளம் பெற்ற பழைய நகரம் வேறு எங்கும் இல்லை என்பது உண்மை. இந்த நகரில் வாழ்ந்த அரசர்களெல்லாம், இம்மை மறுமைப்

பயன்களைக் குறைவின்றிப் பெற்றவர்கள்; வீரத்தில் சிறந்தவர்கள்; அதனால் புகழைப் பெற்றவர்கள்.''

''அவர்கள் சென்ற நெறியிலே நானும் செல்ல வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்.''

''அப்படியே ஆகட்டும். புண்ணியமும் வெற்றியும் புகழும் ஒருங்கே கிடைப்பதற்கு மூல காரணம் ஒன்று உண்டு. அதனை உடையவர்கள், மறுமையுலகத்துச் செல்வமும், அரசரை வென்று நிற்கும் திறனும், நல்லிசையும் பெறுவார்கள்.''

''படைப்பலத்தையா சொல்கிறீர்கள்?''

''அல்ல, அல்ல; யானை முதலிய படைகள் அல்ல; வேறொரு படை. உழுபடை படைகளுக்கெல்லாம் உணவளிக்காவிட்டால் அவை போரிட முடியுமா? உடம்பிலே உயிர் தங்கியிருக்கும்படி செய்தாலல்லவா போரிட முடியும்?''

''நான் படை வீரர்களுக்கு வேண்டிய உணவைக் கொடுத்தேன்; அவர்களுக்கு இனியும் குறைவின்றிக் கொடுக்கக் கட்டளை பிறப்பித்திருக்கின்றேன்.''

''நல்ல காரியந்தான். உண்டி கொடுத்தவரே உயிர் கொடுத்தவராகின்றார்கள். உணவு இல்லாவிட்டால் உடலும் இல்லை. ஆனால், அந்த உணவு எப்படி வருகிறது? அது தானே கிடைத்துவிடாது. நிலமும் நீரும் சேர்ந்தால் உணவு கிடைக்கும்; உணவுப் பொருள் விளையும். அந்த இரண்டையும் சேர்ப்பவர்களே உடம்பையும் படைத்தவர்களாகிறார்கள்.''

''நமது நாட்டில் விளைநிலத்துக்குக் குறைவில்லையே?''

''உண்மைதான். ஆனாலும், நிலம் மாத்திரம் இருத்தல் போதுமா? எவ்வளவுதான் பரந்த நிலங்கள் இருந்தாலும், விதைத்துவிட்டு வானத்தைப் பார்க்கும்படியாக இருந்தால் அந்த நிலங்களால் உடையவனுக்கு என்ன பயன்? அரசே, சற்றுக் கவனிக்க வேண்டும். படை இருக்கலாம்; ஆனால், அதற்கு என்றும் கொடுத்து வர உணவு வேண்டும். நிலம் இருக்கலாம், ஆனால் அதை விளையும்படி செய்ய நீர் வேண்டும். வானத்திலே நீர் இருக்கிறதென்று நம்பியிருந்தால், நமக்கு வேண்டிய பொழுது அது வழங்காது. அது வழங்கும்போது நாம் சேமித்து வைக்க வேண்டும். நிலம் பள்ளமாகக் குழிந்திருக்கும் இடங்களில் வேண்டிய கரை கட்டியும், ஏரி குளங்களைக் கரை திருத்தியும் பாதுகாக்க வேண்டும். அப்படி நீரைத் தடுத்தால் நாடு வளம் பெறும். நீரைத் தேக்கினவர் யாரோ, அவர் புகழையும் தேக்குவார்.''

அரசன் சிந்தனையில் ஆழ்ந்தான். ஏரி குளங்களைச் சீர் திருத்த வேண்டும் என்று எப்பொழுதோ யாரோ சொல்லிக் காதில் விழுந்ததாக நினைவு வந்தது. அமைச்சர் சொன்னதைத் தான் பராமுகமாகக் கேட்டிருந்தான். இப்போது அதையே அழுத்தந்திருத்தமாகப் புலவர் சொன்னார்; படிப்படியாகச் சொன்னார்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர். நீரையும் நிலத்தையும் சேர்த்தவர்களாலேயே உடம்பையும் உயிரையும் சேர்த்து வைக்க முடியும். வானம் நம்முடைய விருப்பப்படி பெய்யாது. நீரைத் தேக்கினவரே புகழைத் தேக்குவார்." இந்தப் பொன்னான வாக்கியங்கள் ஒவ்வொன்றாக அவன் உள்ளத்தில் கணீர் கணீர் என்று மணியடிப்பதுபோல மீட்டும் ஒலித்தன.

"புலவர் பெருமானே, நானும் நீரைத் தேக்கிப் புகழைத் தேக்க முயல்வேன்," என்ற வார்த்தைகள் அரசன் வாயிலிருந்து வந்தபோது அங்கிருந்த அமைச்சர் முகங்கள் என்றும் இல்லாத மலர்ச்சியைப் பெற்றன.

### அருஞ்சொற்பொருள்

விரவியுள்ள - கலந்துள்ள. எளிதில் - சுலபமாக. சீறி - கோபித்து. பொர - போர் செய்ய. உளைந்தான் - வருந்தினான். அருஞ்சமத்தில் - அரிய போரில். வஞ்சினம் - சூளுரை, சபதம். கிண்கிணி - குழந்தைகள் அணியும் காலணி. கன்னிப்போர் - முதற்போர். உரவோர் - வலிமையுடையோர். நல்லிசை - நல்ல புகழ். குதூகலித்தது - மகிழ்ந்தது. செரு - போர். நெறி - வழி. வானம் - ஆகாயம். வழங்காது - கொடுக்காது. வளம் பெறும் - வளப்பமடையும். தேக்குவர் - நிலை பெறச் செய்வர்.

### வினாக்கள்

1. பாண்டி நாட்டின் சிறப்பினை ஆசிரியர் எங்ஙனம் கூறியுள்ளார்?
2. மாந்தரஞ்சேரல் இரும்பொறை, நெடுஞ்செழியனைப் பற்றி யாது நினைத்தான்?
3. பகையரசர் பொர வருவதைக் கேள்வியுற்ற நெடுஞ்செழியன் சீறிக் கூறியவை யாவை?
4. ஒற்றன் நெடுஞ்செழியனிடம் யாது கூறினான்?
5. ஒற்றனுடைய கூற்றுகளைக் கேட்ட நெடுஞ்செழியன் கூறிய மொழிகளையும், உடனே ஆற்றிய செயல்களையும் விளக்கி எழுதுக.
6. அரசன் கூறிய வஞ்சின மொழிகள் யாவை?
7. நெடுஞ்செழியனுடன் பொர எதிர்த்த வேந்தர் யாவர்?
8. நெடுஞ்செழியன் ஆற்றிய கன்னிப்போர் நிகழ்ச்சிகளை விளக்கி எழுதுக.
9. போர் முடிந்தவுடன் நாட்டின் நிலை எவ்வாறு இருந்தது?
10. குடபுலவியனார் நெடுஞ்செழியனுக்குக் கூறிய உரைகளை எழுதுக.

# 7. சிறுபாணாற்றுப்படை

திரு. பெ. தூரன் அவர்கள்

"எனக்குத் தீராத தலை வலி ஏற்பட்டிருக்கிறது. என்ன செய்வதென்றே தோன்றவில்லை!" என்கின்றான் ஒருவன்.

"தலை வலியா? பாலக்காட்டிலே ஒரு மருத்துவன் இருக்கின்றான். அவனிடம் போனால் ஒரே நாளில் குணப்படுத்தி விடுவான். அவனைக் கண்டாலே தலை வலியெல்லாம் பறந்து விடும்!" என்கின்றான் மற்றொருவன்.

இவ்வாறு கூறி, அவன் தலை வலியால் துன்புறுபவனை மருத்துவனிடம் வழிப்படுத்துகின்றான்.

இந்த உரையாடலிலிருந்து இரண்டு கருத்துகள் தெளிவாகின்றன. நோய்க்கு நல்ல மருந்து கிடைக்கும் இடம் தெரிகின்றது; அந்த மருந்தை உதவிடும் மருத்துவனுடைய திறனும் புகழும் வெளியாகின்றன. இவ்வாறு தமக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்கு வெளிப்படுத்தும் இப்பழக்கம் மக்களிடையே இயல்பாகக் காணப்படுகின்றது.

இதை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது, ஆற்றுப்படை என்னும் பிரபந்தம். தீராத வறுமையாலோ, வேறு துன்பத்தாலோ துயருறும் ஒருவனை அதைத் தீர்க்கக்கூடிய ஒருவனிடம் வழிப்படுத்துவதுதான் ஆற்றுப்படை.

வறுமையால் வாடிப் பரிசில் பெறக் கருதிய ஒருவனைப் பரிசில் பெற்று வந்த வேறொருவன், தனக்கு அதையளித்த வள்ளலிடம் செல்லுமாறு, அவ்வள்ளலின் புகழையும் கொடை வளத்தையும் எடுத்துக் கூறி ஆற்றுப்படுத்துகின்றான்.

பத்துப்பாட்டு என்ற சங்க இலக்கியத் தொகை நூலிலே ஐந்து ஆற்றுப்படைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபாணாற்றுப்படை. இது, ஓய்மானாட்டு நல்லியக் கோடனைப் புகழ்ந்து, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. யாழ்ப்பாணர்கள், பெரும்பாணரென்றும் சிறுபாணரென்றும் இரு வகைப்படுவார்கள். அவர்களுள் சிறுபாணன் ஒருவனை ஆற்றுப்படுத்தியதால், இந்நூலுக்கு இப்பெயர் வந்தது போலும்! ஆசிரியப் பாவால் இயற்றப்பட்டு, முந்நூற்றுக்கும் குறைந்த அடிகளை உடையதாதலால், அடிகளின் சிறுமை பற்றி இப்பெயர் வந்ததென்றும் கூறுவர்.

வள்ளன்மை மிக்க தலைவன் ஒருவனது உயர்வு தோன்றப் பாடுவதற்கு ஆற்றுப்படை என்னும் நூல் வகை சிறந்த சாதன மாய் இருக்கின்றது. இதிலே அத்தலைவனை நேர் முகமாகப் புகழாது, பிறனொருவனுக்குக் கூறுமுகத்தாலே புகழுவது, சாலச் சுவை பொருந்தியிருக்கின்றது. இவ்வாறு புகழ்ந்து பேசுவது தான் உயர்ந்த புகழ்ச்சியாகும்.

சிறுபாணாற்றுப்படையில் விரிந்துள்ள செய்தியை இனி ஆராய்வோம்; ஆற்றொணு வறுமையில் ஆழ்ந்த பாணனொருவன், ஓய்மாநாட்டு நல்லியக்கோடனிடம் சென்று, யானையும் தேரும் மற்றப் பொருள்களும் பரிசிலாகப் பெற்றுத் திரும்புகின்றான். வழியிலே அவன் வேறொரு பாணனைச் சந்திக்கின்றான். அந்தப் பாணனும் வறுமையால் வாடித் துயர் ஆற்றுப்படுத்த, விறலியர் கூட்டம் சூழப் பாலை நெடுவழியில் வருந்தி வந்தவன். அவனுடைய நிலையைக் கண்டு, பரிசில் பெற்று வந்த பாணன், "நீ பரிசில் பெற விரும்புவாயாயின், வஞ்சியும் மதுரையும் உறந்தையும் தரும் செல்வம் வறிதென்று தோன்றும்படி, ஏழு வள்ளல்களின் வள்ளன்மையையும் தான் ஒருவனே தாங்கி நிற்கும் ஓய்மாநாட்டு நல்லியக்கோடனிடம் செல்லுக," என்று வழிப்படுத்துகின்றான். "போகும் வழியிலே முதலில் அவனுடைய எயிற்பட்டினத்தில் மனைதோறும் மீன் சூட்டுடன் உபசரிக்கப் பெறுவாய். கேணியிற்பூத்த பூவே, முருகப் பெருமானது கை வேலைப் போல வெற்றி கொடுத்த வேலூரிலே, புளிங்கறியிட்ட சோறும் ஆமானிறைச்சியும் அன்புடன் வழங்கப் பெறுவாய். அந்தணர் சுருங்காத அவனது ஆமூரிலே, ஞெண்டு கலந்த உணவை, உழத்தியர் விருப்புடன் அளிப்பார்கள். அங்கிருந்து நல்லியக்கோடனது மூதூர் அண்மையிலேயே உள்ளது. அவனது அரிய காவலையுடைய கோபுர வாயில் பொருநருக்கும் புலவருக்கும் அந்தணருக்கும் என்றும் திறந்திருக்கின்றது. அதைக் கடந்து சென்று, பல் மீன் நடுவண் பால் மதி போன்று வீற்றிருக்கும் நல்லியக்கோடனையணுகி, 'முதியோரை வணங்கும் கையாய்!' என்றும், 'இளையோருக்கு மலர்ந்த மார்பா!' என்றும், 'உழவருக்கு நிழல் செய்யும் செங்கோலாய்!' என்றும், 'பகைவருக்கு அழல் தரும் வேலையுடையாய்!' என்றும் சில மொழிகள் கூறுவதற்கு முன்பே, அவன் உனக்கு நல்ல ஆடையை அணிவிப்பான்; காண்டவ வனத்தை எரியூட்டின அருச்சுனனுக்கு முன்னவனான வீமசேனன் கண்ட மடைநூல் நெறியில் வழுவாது செய்த அடிசிலைப் பொற்கலத்திட்டு, விருப்பமொடு தானே நின்று உண்ணச் செய்வான்; அதன் பின், நிதியமும் அணிகலன்களும் தேரும் குதிரையும் பண்டியும் செலுத்தப் பாகனும் தந்து, உன்னை

அனுப்பி வைப்பான்; அவனிடம் செல்க,'' என்று கூறி முடிக்கின்றான்.

பாணனுடைய உரையிலே, ஓய்மானாட்டு நல்லியக்கோடனின் வள்ளன்மை, நிலைத்த புகழ் பெற்று விளங்குகின்றது. மூவேந்தர்களது தலைநகர்களுக்குச் சென்றால் அங்கே கிடைக்கும் நிதியமும் வறிதென்று தோன்றும்படி, வள்ளல்கள் எழுவரின் கொடைத் தன்மையை அவன் ஒருவனே கொண்டிருப்பதாக அவன் கூறுகின்றான். மேலும், நல்லியக்கோடனே நின்று, பாணர் உண்ணும்படி, விரும்பிய உணவைத் தருவதாகக் கூறுவதிலிருந்து அவனுக்குப் புலவரிடத்துள்ள அன்பும் மரியாதையும் வெளியாகின்றன. 'நல்லியக்கோடன் செய்ந்நன்றி அறிபவன்; சிற்றினம் சேராதவன்; இன்முகம் உடையவன்; இனியன்; அஞ்சினவர்களுக்கு அருள் செய்பவன்; வெஞ்சினம் இல்லாதவன்; பகைவர் படையிற்புகுந்து அதை உடைப்பவன்; தனது படை நிலை குலைந்த காலத்து அதைத் தாங்குபவன்; கருதியது முடிப்பவன்; அறிவில்லாதார்மாட்டு அறியாமை பூண்டிருப்பவன்; அறிவுடையோர் குழுவில் அறிவு நன்கு உடையவன்; பரிசிலருக்குத் தரமறிந்து கொடுப்பவன்; வரையாது கொடுப்பவன்,' என்று இவ்வாறு கவிஞர் அவனைப் புகழ்ந்து பாடுகின்றார்.

மேலும் அவர், தமது வறுமை நிலையை உள்ளத்தை உருக்கும் வகையில் திறம்பட எடுத்துரைக்கின்றார்: 'எங்கள் வீட்டு நாய், தான் ஈன்ற கண் விழியாத இளங்குட்டிகளுடன் பசி மிகுதியால், பொறுக்கமாட்டாது குரைத்துக்கொண்டு எங்கள் அடுப்பிலே படுத்திருக்கும்;கறையான் அரித்துக்கொண்டிருப்பது எங்கள் அடுப்பு, காளான் பூத்தது எங்கள் அடுப்பு,' என்று அடுப்பை வருணிக்கின்றார் நல்லூர் நத்தத்தனார்.

அடுப்பிலே நெருப்பிட்டு எத்தனை நாள்களாயினவோ! என்றாவது ஒரு நாள் நெருப்பிட்டாலும், அவருக்கு உணவுப் பொருளாகக் கிடைப்பது குப்பையில் முளைத்துக் கிடக்கும் வேளைக்கீரையேயாகும். அதை உப்பின்றி வேகவைத்து, பிறர் கண்டால் நகைப்புக்கிடமாகுமென்று அஞ்சி, வாயிலடைத்துத் தமது சுற்றத்தாருடன் உண்பாராம்.

> 'குப்பை வேளை உப்பிலி வெந்ததை
> மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
> இரும்பேர் ஒக்கலொ டொருங்குடன் மிசையும்'

'இரும்பே ரொக்கல்' என்கின்றார், 'சுற்றத்தாருக்குப் பஞ்சமே இல்லை; உணவுக்குதான் பஞ்சம்' என்பது தோன்ற!

நிலங்களின் தன்மையையும் வனப்பையும் விரித்துரைப்பதில் கவிஞர் நத்தத்தனுர் மிக வல்லவராய்க் காணப்படுகின்ருர். நெய்தல் நிலப் பட்டினத்தைப் பற்றிக் கூறும்போது, 'அங்கே தாழை அன்னம்போலப் பூக்கின்றது; செருந்தி, தமனியம்போல இருக்கின்றது; கழிமுள்ளி, ஒளி வீசும் நீலமணி போலப் பூக்கின்றது; புன்னை, முத்துப் போல அரும்புகின்றது,' என்று அழகாக அந்நிலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்ருர்; 'வேலூரிலே அவரை, பவழம் போன்ற பூக்களைக் கொண்டிருக்கின்றது. மயிலின் கழுத்தைப் போலக் காயா மலர்கின்றது; முசுண்டை, கொட்டம் போல விரிகின்றது; காந்தள், கைவிரல் போல இதழ் அவிழ்கின்றது; கொல்லையில் இந்திரகோபப் பூச்சிகள் ஊர்கின்றன,' என்கின்ருர்.

மருதநிலக் காட்சி ஒன்றை அவர் எவ்வாறு தீட்டுகின்ருர் என்று பார்ப்போம்: தாமரையைப் பற்றிக் கூறிவிட்டால் மருத நிலத்தின் செழிப்பும் செவ்வியும் பளிச்சென்று விளங்கிவிடுமல்லவா? நத்தத்தனுர் இதை நன்கு அறிந்திருக்கின்ருர். 'நீர் நிலையில் நெடிது நேரம் காத்திருந்து, நீரின் மேல் மட்டத்திற்கு வந்த கயல் மீனை முழுகி எடுத்த பொன்னிறம் போலும் வாயையுடைய நீலமணிச் சிரல் பாய்வதாலே கிழிபட்ட இலைகளையுடைய தாமரை,' என்று அவர் எழுதுகிருர்.

'நிலையருங் குட்டம் நோக்கி நெடிதிருந்து
புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்உகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளுடைத் தாமரை'

என்ற அடிகளிலே மருதநிலத்தின் நீர் வளம் சுரந்த பேரெழில் கொப்புளித்து, நம் மனக்கண் முன்பு தெளிவாக நிற்கின்றது.

ஆசிரியர் நத்தத்தனுர் கையாளும் உவமைகள் மிகப் பொருத்தமாகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றன. மகளிர் கூந்தலைப் பற்றிக் கூறுமிடத்து, அது, 'மெல்லியதாய், வீழ்ந்து தாழ்கின்ற மழையைப் போல இருக்கின்றது - 'ஐதுவீழ் இகுபெயல் அழகுகொள் கதுப்பு' என்கின்ருர்; 'வாழைப் பூவெனப் பொலிந்த ஓதி' என்றும், 'பிடிக்கை அன்ன பின்னுவீழ்' என்றும் கூந்தலை வெவ்வேறு வகையாய் முடிப்பதைப் பற்றிக் கூறுகின்ருர். இளமங்கையரின் காலின் மென்மைக்கு, நாயின் நாக்கை உவமிக்கின்ருர்; யாழின் நரம்புக் கட்டு நெகிழ்வதும் இறுகுவதும் கருங்குரங்கின் கையில் பிடிபட்ட பாம்பு, அதன் கையைச் சுற்றி இறுகுவதையும் நெகிழ்வதையும் போன்றிருக்கின்றதென்று சொல்லுகின்ருர். 'பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன, அங்

கோடு செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவு' என்பது அவர் வாக்கு. மேலும், 'ஒட்டகம் துயில் மடிந்தன்ன வீங்குதிரை' எனவும், 'எரிமறிந்தன்ன நாவின் பேய் மகள்' எனவும், 'பாம்பு வெகுண்டன்ன தேறல்' எனவும் ஏற்ற உவமைகளை ஆசிரியர் பயன் படுத்துவதை நோக்க நோக்க அவருடைய கவிதைத் திறன் நன்கு புலனாகின்றது.

யாழைப்பற்றி ஆசிரியர் கூறுகின்ற போது, 'அமிழ்தத்தைத் தன்னிடத்தே பொதிந்து துளிக்கும் நரம்பு-அமிழ்து பொதிந்திலிற்றும் அடங்குபுரி நரம்பு' என்று எழுதுகின்றார். அதனால், யாழின் சிறப்பை அவர் நன்குணர்ந்தவர் என்பது தெரிகின்றது.

> 'பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்வி
> கூடுகொ ளின்னியம் குரல்குர லாக
> நூனெறி மரபிற் பண்ணி'

என்று அவர் எழுதுவதிலிருந்து அவர் இசையறிவு வாய்ந்தவரென்பதையும் அறியலாம்.

சங்க காலப் புலவர்கள், இயற்கை அழகில் பெரிதும் ஈடுபட்ட உள்ளமுடையவர்கள். அவர்கள் கண்டு அனுபவித்த இயற்கைக் காட்சிகளைத் தங்கள் பாக்களில் மிக அழகாகப் பொறித்திருக்கின்றார்கள். நல்லூர் நத்தத்தனாரும் இயற்கையில் திளைத்த உள்ளமுடையவர். அவர் குறிஞ்சி நிலக் காட்சியொன்றை எவ்வாறு தீட்டுகின்றார் என்பதைப் பார்ப்போம்:

மகளிர் கூந்தல் போன்ற அழகிய கலாபத்தை 'மஞ்சிடை விரித்து, மூங்கில் அசைந்தாடிக்கொண்டிருக்கும் மலையின்மேல் நின்று மயில் ஆடுகின்றது,' என்று அவர் கூறுகின்றார்.

மேலும், சிறுபாணாற்றுப்படையைப் படிக்கின்ற போது அதன் சொல்லாட்சியும் சொற்றொடர்களும் பொருட்செறிவும் நமது உள்ளத்தைக் கவர்கின்றன. 'வயங்கிழை உலறிய அடி', 'வண்முகை யுடைந்து, திருமுகமவிழ்ந்த தெய்வத் தாமரை', 'நாடா நல்லிசை', 'பைந்நனை யவரை பவழங் கோப்ப', 'எயிற்கதவம் உருமுச் சுவல் சொறியும்' என்பன போன்ற சொற்றொடர்களையும், அடிகளையும் படிக்குந்தோறும் படிக்குந்தோறும் தேன் ஊறுகின்றது.

'செங்கழுநீர்ப் பூவைத் தின்ற பெரிய வாயையுடைய எருமையானது, பசிய மிளகுக்கொடி படர்ந்த பலா மரத்தின் நிழலிலே, காட்டு மல்லிகையாகிய படுக்கையிலே, தனது முதுகை, மஞ்சள் இலை மெதுவாகத் தடவத் துயில் கொள்ளும்

படியான சேர நாடு' என்றும், 'உப்பு வாணிகர் வளர்த்த மந்திகள், மகளிர் பல் போன்ற முத்துகளைக் கிளிஞ்சிலிலிட்டு அதைக் கிலுகிலுப்பை போல ஆட்டிக்கொண்டு, உப்பு வாணிகரின் பிள்ளைகளுடனே விளையாடும் கொற்கை' என்றும், 'செந்தாமரைப் பீடத்திலே தும்பி தனது துணையுடன் துயின்று, பின் சீகாமரமென்னும் பண்ணைப் பாடிக்கொண்டிருக்கும்படியான சோழநாடு' என்றும் அவர் எழுதியிருப்பது மிக இனிமை வாய்ந்திருக்கின்றது.

மேலும், ஏழு வள்ளல்களின் கொடைப் பெருமையைச் சில அடிகளில் திறம்படக் கூறியிருப்பதும், தமிழ் வேந்தர்களைச் சொல்லாது அவர்களது மதுரை, வஞ்சி, உறந்தை என்னும் நகரங்களையே குறித்து, ஆங்குப் பெறும் பரிசிலும் வறிதாகத் தோன்றும் என்று கூறும் சொல் நயமும் படித்து இன்புறற் பாலன.

இவ்வாறு சிறுபாணாற்றுப்படை, நல்லியக்கோடனுடைய வள்ளன்மையையும், நத்தத்தனார் கவித்திறமையையும் ஒருங்கே வெளியிடும் பாமணியாய்த் திகழ்கின்றது.

### அருஞ்சொற்பொருள்

ஆறு+படை - ஆற்றுப்படை. ஆறு - வழி. வறுமை - ஏழ்மை. ஆற்றொணா - பொறுக்க முடியாத. விறலியர் - நாட்டியமாடும் மகளிர். மீன் சூட்டு - மீன் வறுவல். ஆமான் - காட்டுப்பசு. ஞெண்டு - நண்டு. உழத்தி - உழவன் மனைவி. ஒக்கல் - உறவினர். தமனியம் - பொன். கொட்டம் - ஒரு பனையோலைப் பெட்டி. வள் உகிர் - கூரிய நகம். ஐது வீழ் இகுபெயல் - மெல்லியதாய் வீழ்ந்து தாழ்கின்ற மழை. பாசடை- பசுமை+அடை. அடை - கீரை. இன்னியம் - இனிமையான வாத்தியம். முகை - மொட்டு. உருமு - இடி. சுவல் - தோள்.

### வினாக்கள்

1. 'ஆற்றுப்படை' என்பது என்ன? சிறுபாணாற்றுப்படை என்பதைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
2. நல்லியக்கோடன் எத்தகைய வள்ளல்?
3. ஓய்மானாட்டைச் சார்ந்த சிறந்த ஊர்கள் எவை? அங்கு வரும் விருந்தினர் எவ்வாறு போற்றப்படுவர்?
4. நல்லூர் நத்தத்தனாரின் வறுமையைப் பற்றி ஆசிரியர் கூறுவதென்ன?
5. 'நெய்தல் நிலப்பட்டினம், வேலூர்'—இவை எவ்வாறு இயற்கைக் காட்சி அளிக்கின்றன?
6. மருதநிலம், குறிஞ்சி நிலம்—இவற்றின் காட்சிகளை ஆசிரியர் எவ்வாறு வருணிக்கின்றார்?
7. சிறுபாணாற்றுப்படை ஆசிரியர் கூறும் உவமைச் சிறப்புகளில் மூன்றனைக் கூறி விளக்குக.

# 8. வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகள்

திரு. வி. கலியாண சுந்தர முதலியார்

அக்கால இராயப்பேட்டை வேறு; இக்கால இராயப் பேட்டை வேறு. அதன் உடைமை இயற்கைப் பசுமை; இதன் உடைமை வெறுஞ்செயற்கைக் கல்லடுக்கு. அந்த இராயப்பேட்டையிலே மருத்துவச்சாலை மிகச் சுருங்கியிருந் தது; இந்த இராயப்பேட்டையிலே அச்சாலை மிகவும் பருத்துப் பெருத்திருக்கிறது. மருத்துவச்சாலையின் சுருக்கமும் பெருக் கமும் முறையே பழைய புதிய இராயப்பேட்டைகளின் தன்மையை உணர்த்துவனவாம். அழகிய பசுமை பழைய இராயப்பேட்டையை இயற்கை வழியில் நடாத்தி வந்தது.

இராயப்பேட்டை, தேனம்பேட்டை, ஆழ்வார் பேட்டை, மயிலாப்பூர் முதலிய ஊர்கள் ஒரு சிறு கோட்ட மெனத் திகழ்ந்தன. இவைகளின் பேரூர் மயிலாப்பூர். இவ் வூர்களின் ஒருமைப்பாட்டுக்கு உயிர் நாடியாயிருந்தது ஒரு சிற்றேரி. அதன் இடம் தேனம்பேட்டை. ஆனால், அது மயிலாப்பூர் ஏரி என்றே வழங்கப்பட்டது. அவ்வேரி மயிலைக் கோட்டத்தை ஓம்பியது. பின்னே அது மறைந்தது. மயிலைக் கோட்டத்தின் கட்டுங்குலைந்தது.

## இயற்கை வரவேற்பு

அந்நாளில் இராயப்பேட்டையினின்றும் மயிலாப்பூர் செல்வோர் வெயிலின் தாக்குதலின்றியே போய்ச் சேர்தல்கூடும். செல்வோர்க்கு வழி நெடுக வரவேற்பு நிகழும். எத்தகைய வர வேற்பு? இயற்கை வரவேற்பு. இயற்கை அன்னை பலபட்ட பசுமைக்கோலம் பூண்டு வரவேற்பளித்த வண்ணமிருப்பாள். வழிப்போக்கரைக் கொடிகளிற் குலவும் வெற்றிலைத் தாள்கள் வாழ்த்தும்; வாழைகள் பழங்களைத் தாங்கிக் கைகளை நீட்டி அழைக்கும்; மாமரங்கள் காய்கனிகளை ஏந்தி இறைஞ்சும்; தென்னைகள் காய்களைச் சுமந்து, 'இளநீர் பருக வாரும் வாரும்' என்று தலையாட்டும்; கரும்புகள், 'அருந்துக! அருந்துக!' என்று சாறு பொழியும்; ஆலும் அரசும் வேம்பும் ஆங்காங்கே குடை பிடித்து நிற்கும். செஞ்சாலிக் கதிர்கள் சாமரை இரட்டும். பொய்கைப் பூக்கள் கண்ணுக்கு விருந்தாகும். ஏற்றமும் மூங் கிலும் வண்டும் பறவையும் செவிக்கமுதமூட்டும். இவ்வர வேற்புகள் இப்பொழுதுண்டோ? இப்பொழுது கல் வேலியும் இரும்பு வேலியும் எவரையும் 'வரல்வேண்டா; வரல்வேண்டா;'

என்று காய்ந்து தகைகின்றன. ஏரிச்செல்வம் வற்றியது. பசுமை அன்பு அழிந்தது. இதயங்கள் கல்லும் இரும்பும் ஆயின.

பழைய இராயப்பேட்டை ஒரு சிற்றூர்; இயற்கைப் பசுங்குடில்; விருந்தின் உறையுள். அதனுள் மலையில்லை; அருவியில்லை; காடில்லை; கடலில்லை. ஆனால் மலையையும் அருவியையும் காட்டையும் கடலையும் நினைவூட்டும் இயற்கைக் கூறுகள் இருந்தன. பட்டத்தினின்றும் வீறி எழுந்து, வெற்றிலைக் கொடிகளாம் மரகத ஆரங்களைப் புனைந்து, தலைகளைச் சாய்த்து, ஒன்றுடன் ஒன்று முட்டியும், அசைந்து வீழாதவாறு பிணிப்புண்டு தொடர்ந்த முகடுகள் கொண்ட வாரை நிரைகளின் ஈட்டங்கள் தொடர்குன்றுகளைக் கருத்திலிருத்தும். கிடங்குகளில் பாயும் நீரோட்டம் மலைமுகடுகளினின்றும் இழிதரும் அருவிகள் போன்றிருக்கும். அட்லன் தோட்டம் என்ற சிறுவனம் காட்டைக் கடுக்கும். அவ்வனம் இராயப்பேட்டைக்குப் பொதுவுடைமையாகப் பயன்பட்டது. அதில் அத்தி, விளா, மா, நெல்லி, நாகை, கிச்சிலி, இலந்தை, இலுப்பை, புளி, புரசை, புன்கு, முண்முருக்கு, கொன்றை, மகிழம், அசோகு, புன்னை, நுணா, ஆல், அரசு, வேம்பு, பனை, மூங்கில் முதலிய மரங்கள் விரிந்து, பரந்து, அடர்ந்து, ஓங்கி, வெய்யோனுடன் பொருதும்; பெருங்களா, காரை, நொச்சி, ஆமணக்கு, எருக்கு, வட்டத்தாரை முதலிய செடிகள் பரவி மரங்களை நோக்கும்; சிறுகளா, சங்கம், கள்ளி, கண்ணி, மருட்டி, படர்காரை முதலிய தூறுகள் செடிகளைப் பார்த்து நகைக்கும்; தாளி, கோவை, பாலை, பிரண்டை முதலியன மரங்களையும் செடிகளையும் தூறுகளையும் பிணித்துப் பின்னிப் படர்ந்து இறுமாந்து கிடக்கும்; முண்டகம், கண்டகம், முள்ளி, முளரி, ஆடாதோடை, ஆடு தின்னாப்பாளை, செருப்படை, தூதுவளை, தும்பை, துழாய், சுண்டை, நாயுருவி, நாய்க்கடு, ஊமத்தை, கற்றாழை, கொடி வேலி, கண்டங்கத்திரி, அவுரி முதலிய மூலிகைகள் மருத்துவஞ்செய்யும்; ஆங்காங்கே குளம், கேணி, ஓடை முதலிய நீர் நிலைகள் தண்மை வழங்கும்; அவைகளின் உள்ளிலும் புறத்திலும் கொட்டி, ஆம்பல், தாமரை, நீலோற்பலம் முதலிய பூக்களும், அறுகு, தருப்பை, நாணல் முதலிய புல்லினங்களும், பொன்னாங்கண்ணி, கையாந்தகரை, வள்ளை, வல்லாரை முதலிய கீரை வகைகளும் பொலிந்து இன்பமூட்டும்; அங்கும் இங்கும் பழங்கள் தாமே கனிந்து கனிந்து வீழும்; பாம்பு, கீரி, உடும்பு, முயல், காட்டுப் பூனை, காட்டுக் கோழி முதலியன இரிந்தோடும்; கொக்கு, உள்ளான், நாரை, கள்ளிக் காக்கை, கிளி, பூவை, சிட்டுக் குருவி, தவிட்டுக் குருவி, வர்ணக் குருவி முதலிய பறவைகள் பறந்தும், இருந்தும், பாடி

யும் மகிழும்; கால்நடைகள் உலவும்; மேயும்; நீர் அருந்தும்; படுக்கும்; உறங்கும். மக்கள் விளையாடலும் நிகழும். அட்லன் தோட்டம் ஊருக்கு விறகு, பழம், கீரை, எருமுட்டை முதலியன உதவும். அதை இராயப்பேட்டையின் வனதேவதை என்று கூறலாம்.

இராயப்பேட்டை தோட்டங்களுக்குப் பேர் பெற்றது. அம்மையப்ப முதலி வீதி முனையிலுள்ள ஒரு சிறு சந்தில் நுழைந்து சென்றால், வேல் முதலியார் தோட்டம், மாசிலாமணி முதலியார் தோட்டம், அப்பாசாமி முதலியார் தோட்டம், முனி சாமி முதலியார் தோட்டம், அய்யாசாமி முதலியார் தோட்டம், செருக்காத்தம்மாள் தோட்டம், அரங்கநாத முதலியார் தோட்டம், திவான் சாயபு தோட்டம், மன்னுதை முதலியார் தோட்டம், பூங்காவன முதலியார் தோட்டம், திருமழிசை முதலியார் தோட்டம், திருப்புளி முதலியார் தோட்டம், (திரும்பினால்) சலவன் தோட்டம், பச்சையப்ப முதலியார் தோட்டம், மாங் காட்டு முதலியார் தோட்டம், செந்தாமரை முதலியார் தோட்டம், மூலத் தோட்டம், கன்னித் தோட்டம் போய்த் திரும்பிக் கோலக்காரன் தோட்ட வழியே புகுந்து, மீண்டும் அம்மையப்ப முதலி தெருவை அடையலாம். இத்தோட்டப் பரப்பை என் னென்று சொல்வேன்! பசுங்கடல் ஒன்று பொங்கிப் பரவிய ஒரு பெருந்தேக்கம் என்று சொல்லலாம். இராயப்பேட்டையின் மலையும் ஆறும் காடும் கடலும் எங்கே? அவை எங்கே போயின? அவை மறைந்தன. அவ்விடங்களில் பல விதப் புரங் கள் தோன்றியுள்ளன. மயிலாப்பூர் ஏரி, தியாகராயநகராய் மாறினமையால், இராயப்பேட்டை தன் பழங்காலக் காட்சியை எப்படி வழங்குவதாகும்? பழைய இராயப்பேட்டை வேனிலிலும் மக்களை வதைப்பதில்லை. ஓய்வு நல்வழியில் செலவாகும்.

### கல்வி முறை

யான் விடியற்காலத்தில் எழுவேன்; பழம்பாடங்களைப் படிப்பேன்; புதிய பாடங்களையும் நெட்டி நெட்டிப் பார்ப்பேன்; விளங்காத இடங்களை இராயப்பேட்டையில் வதியும் நல்லாசிரி யரை அணுகித் தெளிவு செய்துகொள்வேன். அவைகள் பின்னே பள்ளிக்கூடத்தில் போதிக்கப்படுங்கால் பழமை யாகவே தோன்றும். எக்கூத்தாடினாலும் நான் படிப்பில் கண்ணுங்கருத்துமாயிருப்பேன்.

### பிள்ளை விளையாட்டு

காலையில் மாணக்கர் சிலர் என் வீட்டுக்கு வருவர். அவருடன் யான் தோட்டங்கட்குப் போவேன். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு தோட்டம் எங்களை அழைக்கும். தோட்டத்

தில் நாங்கள் பலவாறு பிரிந்து பிரிந்து ஆடுவோம். சிலர் ஏற்றமிறைப்பதிலும், கவலையடிப்பதிலும் தலைப்படுவர். அவ் விரண்டிலும் என் மனம் செல்வதில்லை. யான் கிடங்குகளில் நீத்தியெடுத்து இறைத்துப் பார்ப்பேன்; வெற்றிலை கிள்ளுவோருடன் சேர்ந்துகொள்வேன்; வாழை அறுப்பதில் கருத்துச் செலுத்துவேன். வாழைப்பூக் கொய்வதிலும், தண்டு உரித்தெடுப்பதிலும் எனக்கு வேட்கை அதிகம். அகத்திக் கிளைகளை வெட்டிச் சாய்த்துக் கீரைக் காம்புகளைச் சுமையாகக் கட்டுவதில் இறங்குவேன். நாங்கள் கூட்டங்கூட்டமாய் இறைப்புத் தலைப்புகளிலும், ஓடைகளிலும் துணி தோய்ப்போம்; குளிப்போம்; ஆடுவோம்; பாடுவோம். எங்கள் ஆடல்கள் தோட்டக் காரருக்கு மகிழ்ச்சியூட்டும். சிற்சில போது அவர்கள் எங்கட்கு அகத்திக்கீரை, வாழைப்பூ, வெற்றிலை முதலியன தருவார்கள். அவைகளைப் பெரிதும் யான் நல்லாசிரியர் வீடுகளிற்சேர்ப்பேன்.

தேனும்பேட்டையிலே ஒரு பெரிய தென்னந்தோப்பு உண்டு. அது சிவசங்கர முதலியாருடையது; அதில் சில மாமரங்களும் இருந்தன. அத்தோப்புக்குள் புக நேரும் போதெல்லாம் அங்கே நாங்கள் பல மணி நேரம் கழிப்போம். எங்கட்கு உச்சி வேளையும் தோன்றாது; பசியும் தோன்றாது. பிள்ளை விளையாட்டு என்னதான் செய்யாது! எங்களைக் கண்டதும் மாமரங்கள் அஞ்சும். அவைகள் கொள்ளையாகும். பூ, பிஞ்சுகளும் உதிர்க்கப்படும். மரமேறிகள் இளநீர் கொடுப்பார்கள். அவைகளில் எங்கள் நாட்டம் பெரிதுஞ்செல்வதில்லை. எங்களுள் ஒருவராகிய நடேசன் என்பார் மரமேறித் தள்ளும் இளநீரிலேயே எங்கள் நாட்டஞ்செல்லும். யானும் மரமேறுவேன்.

ஒவ்வொரு போது எங்கள் கூட்டம் அட்லன் தோட்டத்துள் புகும்; புகுந்ததும், நாங்கள் வானரச்சேனைகள் ஆவோம் என்று கூறும் அளவில் நின்றுவிடுகின்றேன். அட்லன் தோட்டத்துப் பல பொருள்கள் இராயப்பேட்டைக்கு விருந்தாவன. அவைகளுள் ஒன்று சிறந்தது; அது பருங்களாக்காய். அக்களாச் செடி அட்லன் தோட்டம் முழுவதுஞ் செறிந்திருக்கும். அக்களா ஊறுகாயில்லாத வீட்டை இராயப்பேட்டையில் காண்டல் அரிது.

### ஒரு நிகழ்ச்சி

ஒரு சமயம் பருங்களாப் பறிப்பதற்கென்று ஒரு சிறு தொகையினருடன் அட்லன் தோட்டம் போந்தேன். நாங்கள் ஒரு பெருந்தூறுக்குள் நுழைந்து காய் பறித்துக்கொண்டிருந்தோம். அவ்வேளையில் ஒரு தடியன் அங்கே வந்தான்; எங்களை அதட்டினான்; தூறுக்குள் புக முயன்றான். அது கண்ட நண்பரெல்லாரும் கலங்கி, ஒரு வழியே ஓட்டம் பிடித்தனர். தடியன்

அவரைத் துரத்திச் சென்ருன். யான் நண்பருடன் கூடி ஓடினேனில்லை. சுற்றும் முற்றும் பார்த்தேன். எனக்கு ஒரு வாயில் புலனுயிற்று; அதன் வழியே வெளி வந்து விரைந்து நடந்தேன்; பக்கத்திலுள்ள வெற்றிலைத்தோட்டத்தை அடைந்தேன். அத் தோட்டக்காரரிடம் நிகழ்ந்ததைச் சொன்னேன். அவர், 'எவனே ஒரு வழிப்போக்கன் உங்களை மருட்டினுன்' என்று சில ஆள்களை அட்லன் தோட்டத்துக்கு அனுப்பினுர். அவர்கள் ஒருவரையுங் காணுது திரும்பினுர்கள். யான் உடைந்த மனத்துடன் வீடு சேர்ந்தேன். மனம் நிலைபெறவில்லை. கவலை பெருகிற்று. சில மணி நேரத்தில் நண்பரெல்லாம் ஒவ்வொருவராக வீடு சேர்ந்தனர். தடியன், தம்மை நீண்ட தூரம் துரத்தி வரவில்லையென்றும், தமது அச்சம் தம்மைச் சிதறவடித்து ஓடச் செய்ததென்றும், எவரெவர் எவ்வெவ்விதம் எவ்வெத்தோட்டம் வழியே ஓடினரென்றும் விளக்கிக் கூறினர். ஒவ்வொருவரும் யான் என்ன ஆனேனே என்று கவலை கொண்டதைத் தெரிவித்தனர். எனது மனம் உற்ற கவலையை நண்பர்கட்கு அறிவித்தேன். மூன்ரும் நாள், நாங்கள் பெருங்கூட்டமாக அட்லன் தோட்டம் புகுந்து பருங்களாவைச் சூறையாடினேம்.

அருஞ்சொற்பொருள்

கோட்டம் - நாட்டின் ஒரு பகுதி. ஓம்பியது - பாதுகாத்தது. இறைஞ்சும் - வணங்கும். செஞ்சாலி - ஒரு வகை நெல். காய்ந்து - கோபித்து. தகைகின்றன - தடுக்கின்றன. இங்குத் தற்குறிப்பேற்ற அணிகள் அமைந்திருத்தலைக் காண்க. உறையுள் - இருப்பிடம். கூறுகள் - பகுதிகள். முகடுகள் - உச்சிகள். நிறை - வரிசை. ஈட்டம் - கூட்டம். கடுக்கும் - ஒவ்வும். வெய்யோன் - சூரியன். பொருதும் - போரிடும். தூறுகள் - புதர்கள். மூலிகை - மருந்துச் செடி. மருத்துவம் - வைத்தியம். இரிந்து - ஓடி. புரம் - நகரம். வேட்கை - விருப்பம். வாயில் - வழி. புலனுயிற்று - தோன்றிற்று.

வினுக்கள்

1. இக்கால இராயப்பேட்டையின் தன்மைகள் யாவை?
2. மயிலைக் கோட்டத்தின் கட்டுக் குலையக் காரணமென்ன?
3. இயற்கை அன்னை வழிச்செல்வோரை வரவேற்கும் தன்மைகள் யாவை?
4. மலையையும் அருவியையும் காட்டையும் கடலையும் நினைவூட்டத் தக்க இயற்கைக் கூறுகள் இருந்தன—அவை யாவை?
5. அட்லன் தோட்டத்தில் வாழும் பிராணிகளும் பறவைகளும் யாவை?
6. ஆசிரியர் காலையில் செய்து வந்த காரியங்கள் யாவை?
7. அக்காலத்துப் பிள்ளைகள் ஆடும் ஆடல்கள் யாவை?
8. 'நாங்கள் வானரச் சேனைகள் ஆவோம்'—பொருள் கூறுக.
9. 'இராயப்பேட்டையின் வனதேவதை' என்பது யாது? அப் பெயர் உண்டாகக் காரணம் யாது?
10. இப்பாடத்தில் வந்துள்ள மரங்கள், செடிகள், தூறுகள், மூலிகைகள், கீரைகள் இவற்றின் பெயர்களை எடுத்தெழுதுக.

# 9. மகனுக்குக் கடிதம்

**காந்தி அடிகள்**

[காந்தியடிகளின் இரண்டாவதுசிறைத் தண்டனை (தென்னுப் பிரிக்காவில்) 1908, டிசம்பர், 13-ஆம் நாள் முடிந்தது. ஆயினும், குடியேற்றத் தடையை எதிர்த்துச் சட்ட எதிர்ப்பு இயக்கம் தொடர்ந்து நடந்தது. மூன்ருவது தண்டனை அடைந்து மீண்டும் **வால்க்ஸ்ரஸ்ட் சிறைக்கு** 1909, பிப்பிரவரி, 25-ஆம் தேதி காந்தியடிகள் வந்து சேர்ந்தார். அங்கே புதிதாய்க் கட்டிய சிறையில் உட்கார்ந்துதான் இந்தத் தண்டனைக் காலத்தைக் காந்தியடிகள் கழித்தார். **ஹரிலால்** அப்போது தம்முடைய ஆறு மாதத் தண்டனையை வால்க்ஸ்ரஸ்ட் சிறையில் கழித்துக்கொண்டிருந்தார். அப்போது காந்தியடிகளுக்கு வயது நாற்பது.

சிறையிலிருந்து **மணிலாலுக்குக்** காந்தி ஒரு கடிதம் எழுதினுர். அது அழியாத நீலநிறப் பென்சில் கொண்டு கையால் எழுதிய கடிதம். சிறையில் வழங்கிய கிரீம் நிறமுள்ள நீண்ட ஐந்து தாள்களில் இரண்டு பக்கத்திலும் ஆங்கிலத்தில்* காந்தியடிகள் எழுதியிருக்கின்ருர். வழக்கமாகக் குஜராத்தியில்தான் மணிலாலுக்கு அவர் எழுதுவார். ஆனுல், ஒவ்வொரு பக்கத்திலும் தாளின் இடப்பக்க ஓரத்தில் சிறைக்கட்டளை அச்சிட்டிருக்கின்றது. ஆங்கிலம், டச்சு, ஜெர்மன், பிரெஞ்சு, கா:பிர் இந்த ஐந்து மொழிகளிலேயே கடிதம் எழுதவேண்டுமென்று அந்தக் கட்டளை கூறுகின்றது.

**மணிலாலுக்கு** அப்போது வயது பதினேழு. அவருடைய வாழ்க்கைக்குரிய தொழில் பற்றியும் வருங்கால வாழ்வு பற்றியும் கவலைப்படுவோர் யாரும் இல்லாததால், தாமே கவலைப்படலானுர். முறையான கல்வி போதனை அவருக்கு இல்லை. பண்ணையிலும் 'இண்டியன் ஒப்பீனியன்' பத்திரிகையிலும் இப்போது அவர் தம் தந்தையாரின் காரியஸ்தராய் இருந்தார்.]

வால்க்ஸ்ரஸ்ட் சிறை,
25—3—1909

"என் அருமை மகனே,

மாதம் ஒரு கடிதம் எழுத எனக்கு உரிமை உண்டு. அதே விதமாக எனக்கு வரும் ஒரு கடிதத்தைப் பெற்றுக்கொள்ள

---

* தமிழாக்கம் தி. ஜ. ர.

லாம். யாருக்கு நான் எழுதுவது என்ற உணர்ச்சி எழுந்தது. மிஸ்டர் ரிட்ச் (இண்டியன் ஒப்பீனியன் ஆசிரியர்), மிஸ்டர் போலக், நீ - ஆகிய நீங்கள் மூவருமே என் நினைவுக்கு வந்தீர்கள். உன்னையே தேர்ந்தெடுத்தேன். ஏனென்றால், நான் படிக்கும் போதெல்லாம் உன்னைப் பற்றிய நினைப்பே எனக்குப் பெரிதும் உண்டாயிற்று.

என்னைப் பற்றி நான் அதிகமாய்ச் சொல்லக்கூடாது; சொல்ல அனுமதியும் இல்லை. நான் முற்றிலும் நிம்மதியாய் இருக்கின்றேன். என்னைக் குறித்து யாரும் கவலைப்படத் தேவை இல்லை.

அம்மாள் இப்போது முற்றும் நலமடைந்திருப்பாள் என்று நம்புகிறேன். உன்னிடமிருந்து எனக்குப் பல கடிதங்கள் இங்கே வந்து சேர்ந்திருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். ஆனால், அவற்றை அதிகாரிகள் என்னிடம் கொடுக்கவில்லை. ஆயினும், டெபுடி கவர்னர் அன்பு கூர்ந்து, அம்மாள் குணமடைந்து வருவதாய்த் தெரிவித்தார். அவள் நலத்துடன் நடமாடுகிறாளா? காலையில் அவளும் நீங்கள் எல்லாருமே சவ்வரிசிக் கஞ்சியும் பாலும் சாப்பிடுகின்றீர்கள் என்று நம்புகின்றேன்.

சஞ்சி (ஹரிலாலுக்கு மனைவியான குலாபின் செல்லப் பெயர்) எப்படியிருக்கின்றாள்? அவளது உடம்பில் இருந்த புண்ணெல்லாம் ஆறியிருக்குமென்று நம்புகின்றேன்: அவளும் ராமியும் (ஹரிலாலின் சிறு மகள்) முற்றிலும் நலமாய் இருக்கின்றார்கள் என்று நம்புகின்றேன்.

இராமதாஸ், தேவதாஸ் இருவரும் நலத்துடன் தங்கள் பாடங்களைப் படித்துக்கொண்டு எந்த விதமான தொல்லையும் கொடாமலிருக்கின்றார்கள் என்று நம்புகிறேன். இராமதாஸின் இருமல் குணமாகிவிட்டதா?

இனி உன்னைக் குறித்த செய்திக்கு வருகின்றேன். நீ நலமா? நான் உன் தோளில் பெரும்பொறுப்பைச் சுமத்தி விட்டேன். அதைச் சுமக்க நல்ல திறமை உனக்கு உண்டு. மகிழ்ச்சியுடனேயே நீ அதைச் சுமக்கின்றாய் என்றுதான் நான் எண்ணுகின்றேன். ஆயினும், நேரே இருந்து உனக்கு நான் வழி காட்டுவது இன்றியமையாதது என்று அடிக்கடி நினைக்கின்றேன். அதுதான் என்னால் இயலவில்லை. உனக்குக் கல்வி அளிக்காமல் அலட்சியம் செய்கிறோம் என்று சில சமயம் நீ எண்ணுவதும் எனக்குத் தெரியும். சிறையிலே இப்போது ஏராளமாய்ப் படிக்கின்றேன். எமர்சன், ரஸ்கின், மாஜினி இவர்களுடைய நூல்களையெல்லாம் படித்து வருகின்றேன். ஒரு கருத்தையே

இவையெல்லாம் உறுதிப்படுத்துகின்றன. கல்வி என்பது ஏட்டுப் படிப்பன்று; நற்பண்புகளை வளர்த்துக்கொள்வதே. கடமை அறிவே கல்வி. நம் சொந்த மொழி (குஜராத்தி)ச் சொல், பயிற்சி என்றே கல்வியைக் குறிக்கின்றது. இதுவே சரியான கருத்து என்றால்,—அப்படித்தான் எனக்குத் தோன்றுகின்றது—இயன்ற மட்டும் மிகச் சிறந்த கல்விப் பயிற்சியை நீ பெற்று வருகின்றாய். உன் தாய்க்குப் பணிவிடை செய்; அவளுடைய சிடுசிடுப்பைத் தாங்கிக்கொள். சஞ்சியைப் பராமரி. அவளுடைய தேவைகளையெல்லாம் அவள் கேட்கு முன்பே பூர்த்தி செய்; ஹரிலால் இல்லையே என்று அவள் வருந்தாதபடி அவளிடம் நடந்துகொள். இராமதாஸ், தேவதாஸ் இருவரையும் பாதுகாத்து வா. இதையெல்லாம் செய்ய உனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பைவிடச் சிறந்த ஒன்று வேறில்லை. இதிலெல்லாம் நீ வெற்றியடைந்தாயானால், உன் கல்வியில் பாதிக்குமேல் பெற்றவனாவாய்.

உபநிடதங்களுக்கு நாதுராம் எழுதியுள்ள முன்னுரையில் உள்ள ஒரு வாசகம் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. 'பிரமசரிய ஆச்சிரமம் அதாவது முதற்படி, கடைசிப் படியை அதாவது சந்நியாச ஆசிரமத்தைப் போன்றதே,' என்று அவர் கூறுகின்றார். இது உண்மை. ஒன்றுமறியாப் பருவத்தில்தான்-அதாவது பன்னிரண்டு வயது வரையில்தான்-விளையாட்டெல்லாம். நல்லது கெட்டதை அறியும் பருவத்தை ஒரு பையன் அடைந்தவுடனே, அவனுடைய பொறுப்புகளை அவன் அறிந்து நடந்துகொள்ளும்படி போதித்துவிட வேண்டும். ஒவ்வொரு பையனும் அந்த வயதிலிருந்து கருத்திலும் செயலிலும் தன்னடக்கத்தைப் பயிலவேண்டும்; உண்மையே பேசவேண்டும்; எந்த உயிரையும் வதைக்கக்கூடாது. அவனுக்கு இது ஏதோ தொல்லையான படிப்பாயும் பயிற்சியாயும் இருக்கக்கூடாது. இயல்பாய் அமைய வேண்டும்; அவனுக்கு இன்பம் தரவேண்டும். ராஜ்கோட்டில் இவ்விதம் இருந்த பல சிறுவர்களை எனக்கு ஞாபகம் வருகின்றது. உனக்கு ஒன்று சொல்லுகின்றேன்: நான் உன்னைவிட இளைஞனாயிருந்த போது, என் தந்தைக்குப் பணிவிடை செய்வதே எனக்குப் பெரிய இன்பமாயிருந்தது. எனக்குப் பன்னிரண்டு வயதான பிறகு, ஏதோ கொஞ்சம் விளையாடினால் உண்டு; அல்லது விளையாட்டே இராது. இந்த மூன்று அறங்களையும் நீ பயின்றால், இவை உன் வாழ்க்கையோடு வாழ்க்கையாய் அமைந்துவிடுமானால், என்னைப் பற்றிய மட்டும், உன் கல்வி - உன் பயிற்சி-பூர்த்தியடைந்ததாகவே மதிப்பேன். என்னை நம்பு. இந்த மூன்று அறங்களையும் ஆயுதங்களாய்த் தாங்கினையானால்,

உலகின் எந்தப் பகுதியிலும் நீ உன் வாழ்க்கைக்குச் சம்பாதித்துக்கொள்ள முடியும். அதனுடன் உன்னையும் கடவுளையும் பற்றிய உண்மையான ஆத்தும ஞானத்தைச் சம்பாதிக்கவும் வழி செய்துகொண்டவனுவாய். புத்தகப் படிப்பே நீ பெறக்கூடாதென்று இதற்குப் பொருளன்று. அதை நீ பெறவேண்டுவது தான்; பெற்றுக்கொண்டிருக்கிருய். ஆனல், அது உனக்குள் சள்ளைப்பட்டுக்கொண்டிருக்க வேண்டிய ஒரு செய்தியன்று. புத்தகம் படிக்க உனக்கு நிறைய ஓய்வு இருக்கின்றது. உன் பயிற்சி மற்றவருக்கு உபயோகமாயிருப்பதற்காகவே நீ படிக்க வேண்டும்.

ஒன்றை மட்டும் நன்ருய் நினைவில் வை. இப்போது முதல் வறுமையே நம் வாழ்வாயிருக்க வேண்டும். நான் சிந்திக்கச் சிந்திக்கச் செல்வச் சிறப்பைவிட வறுமை வாழ்வே பெரும் பாக்கியம் என்று உணர்கின்றேன். செல்வப் பயன்களைவிட வறுமைப் பயன்களே அதிக இனிமையானவை.

இப்போது மீண்டும் உன் செய்திக்கு வருகின்றேன். நீ மிகுதியாகத் தோட்ட வேலை செய்; நன்ருய்க் கொத்து; களை பறி; மற்ற வேலைகளையும் செய். இனித் தோட்டத்தைக்கொண்டே நாம் வாழ வேண்டும். குடும்பத்தின் தோட்ட நிபுணனுக நீ விளங்க வேண்டும். உன் கருவிகளையெல்லாம் அவற்றிற்குரிய இடங்களில் வை; முற்றும் சுத்தமாக வைத்திரு. உன் பாடங்களுள் கணிதம் சம்ஸ்கிருதம் இரண்டிலும் மிக அதிகக் கவனம் செலுத்து. சம்ஸ்கிருதம் உனக்கு முற்றும் அவசியம். வாழ்க்கையின் பின்னுளில் இந்த இரண்டும் கற்கக் கடினமாய்விடும். உன் சங்கீதத்தை அசட்டை செய்யாதே. ஆங்கிலத்திலோ, குஜராத்தியிலோ, ஹிந்தியிலோ எதில் இருந்தாலும் சரி, சிறந்த வசனங்கள், துதிக்கீதங்கள், கவிதைகள் இவற்றைப் பொறுக்கி எடுத்து, ஒரு நோட்டுப் புத்தகத்தில் நல்ல கையெழுத்தில் எழுதி வை. ஓர் ஆண்டுக் கடைசியில் இந்தத் திரட்டு மிகவும் மதிப்பரியதாயிருக்கும். ஒழுங்காக நீ வேலை செய்து வந்தாயானல், இதையெல்லாம் எளிதாய்ச் செய்துவிடுவாய். ஒரு போதும் மனச்சோர்வு அடையாதே. அதிக வேலை இருக்கின்றதே என்று எண்ணுதே. அப்புறம் எதை முதலில் செய்வது என்று திண்டாடாதே. எதை எப்பொழுது செய்வது என்று அனுபவத்தில் உனக்குத் தெரிந்துவிடும். ஒரு கண நேரத்தையும் வீணுக்காதே. சரியான கணக்கு வைத்து வருவாய் என்று நம்புகின்றேன். வீட்டுக்குச் செலவழித்த ஒவ்வொரு சல்லிக் காசுக்கும் க்ணக்கு இருக்க வேண்டும்.

எமர்சனின் கட்டுரைகளைப் படிக்கும்படி மகன்லால் பாய் (பண்ணையில் உள்ள ஒரு மாணவர்)க்கு நான் யோசனை கூறிய தாய் அவரிடம் சொல்லு. டர்பன் நகரில் ஒன்பது பென்னிக் காசுக்கு அந்தக் கட்டுரைகள் கிடைக்கும். அவற்றின் மலிவுப் பதிப்பு ஒன்று வெளியாகியிருக்கிறது. அதைப் படித்தால் நல்ல பயன் உண்டு. அவர் படிக்க வேண்டும்; படித்து முக்கியமான வாசகங்களை அடையாளம் இடவேண்டும். இறுதியில் ஒரு நோட்டுப் புத்தகத்தில் அந்த வாசகங்களை எழுதி வைக்க வேண்டும். மேல் நாட்டினரான ஒரு குரு உபதேசிக்கும் இந்திய ஞானம் அந்தக் கட்டுரைகளில் அடங்கியிருப்பதாக என் மனத்துக்குத் தோன்றுகின்றது. நமக்குச் சொந்தமான உபதேசங்களையே இப்படி வேறு உருவத்தில் பார்க்கும் போது ஒரு சுவை இருக்கின்றது.டால்ஸ்டாய் எழுதியுள்ள 'உனக்குள்ளே கடவுளின் ராச்சியம்' என்ற நூலையும் மகன்லால் பாய் படிக்க வேண்டும். அது தருக்க முறையில் அமைந்த ஒரு புத்தகம். அதன் ஆங்கில மொழி பெயர்ப்பு மிக எளிய நடையில் இயன்றிருக்கின்றது. இதையெல்லாம்விட ஒரு முக்கிய சிறப்பு உண்டு. டால்ஸ்டாய் தாம் உபதேசிப்பதைத் தாமே கடைப்பிடிக்கின்றார்.

இந்தக் கடிதத்துக்குப் படிகள் எடுத்து, போலக்கு, கால்லன் பாக், இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்ற 'ஸ்வாமி' இவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு பிரதி அனுப்பு. போலக்கு, கால்லன்பாக் இருவரின் பதில்களும் வரும் வரையில் காத்திருந்து உன் சொந்தப் பதிலில் அவற்றை இழைத்துவிடு. ஆனால் போராட்டம் பற்றிய எந்தச் செய்தியும் உன் பதிலில் இருக்கக்கூடாது. அதைத் தணிக்கை அதிகாரி அனுமதிக்கமாட்டார்.

அட்சர கணிதம் (அல்ஜீப்ரா) ஒன்று வேண்டும். எந்தப் பதிப்பாயிருந்தாலும் நன்றே.

இனி எல்லோருக்கும் என் அன்பைத் தெரிவித்துக்கொண்டு, இராமதாஸ் - தேவதாஸ் - ராமி மூவருக்கும் முத்தங்கள் வழங்கி, கடிதத்தை முடிக்கின்றேன்.

"அப்பாவிடமிருந்து"

### அருஞ்சொற்பொருள்

*நிம்மதியாக - மனநிறைவுடன். உபநிடதங்கள் - வேதங்களின் உட்பொருள் கூறும் சாத்திரம். பணிவிடை - தொண்டு. பராமரித்தல் - ஆதரித்தல். பூர்த்தி செய் - நிறைவேற்று. பிரமசரிய ஆச்சிரமம் - மாணவநிலை. சந்நியாச ஆச்சிரமம் - துறவுநிலை. பயின்றால் - பழகினால். தோட்ட நிபுணன் - தோட்டக் கலையில் வல்லவன். இயன்றிருக்கின்றது - எழுதப்பட்டிருக்கின்றது.*

### வினாக்கள்

1. காந்தியடிகள் எங்கிருந்து யாருக்குக் கடிதம் எழுதியுள்ளார்?
2. இக்கடிதத்திலிருந்து நீங்கள் அறிந்துகொள்ளும் காந்தியடிகளின் குடும்பத்தினரைப் பற்றி வரைக.
3. காந்தியடிகள் சிறையில் படித்து வந்த நூல்கள் யாவை? அவை குறிக்கும் கருத்துகளென அவர் குறிப்பனவற்றையும் புலப்படுத்துக.
4. காந்தியடிகள் கல்வியைப் பற்றிய தம் கருத்தாக மணிலாலுக்கு அறிவுறுத்துவன யாவை?
5. கல்விப் பயிற்சி பூர்த்தியடைய வாழ்க்கையோடு அமைந்துவிட வேண்டிய மூன்று அறங்கள் எனக் காந்தியடிகள் குறித்துள்ளவற்றைப் பற்றி விளக்கி வரைக.
6. காந்தியடிகள் நன்றாக 'நினைவில் வைத்துக்கொள்ளுமாறு மணிலாலுக்கு எழுதியுள்ள செய்தி யாது?
7. கணப்பொழுதையும் வீணாக்காமல் மணிலால் நாடோறும் செய்ய வேண்டிய வேலைகளெனக் குறித்துள்ளவற்றைத் தொகுத்து எழுதுக.
8. மகன்லால் பாய் என்பவர் யார்? அவரைப் படிக்குமாறு குறித்துள்ள நூல்கள் யாவை?

## 10. 'யாதுமூரே; யாவருங்கேளிர்.'

திருமதி மேரி மாசில்லாமணியம்மையார், எம்.ஏ.

புறநானூற்றுப் பாடல்களுளொன்றில் கணியன் பூங் குன்றனர், 'யாதுமூரே; யாவருங்கேளிர்,' என்ற தொடர் மொழிகளை அமைத்துள்ளார். பண்டைத் தமிழ் மக்களைத் தமது அறிவுரைகளாற்றிருத்திய நல்லிசைப் புலவருள் இவரும் ஒருவர். உண்மைத் தமிழனெருவனுக்கு, 'உலகின் கண்ணுள்ள ஊரெல்லாம் தன் ஊரே; உலக மக்களெல்லோரும் உறவினரே' என்பது இவ்வடியின் கருத்து; சாதிமத பேதமகற்றி மக்கட்டொகுதியை ஒரே தொகுதியாய்க் கண்டவரிவர். வானத்தைக் கிழித்துச் செல்லும் ஆகாய விமானங்களும், திரை பொருங்கடலை நீந்திச் செல்லும் மரக்கலங்களும் பெருகிய இக் காலத்தில், இப்புலவர் பெருமான் கூறிய அப்பொன்மொழிகள் முன்னையைக்காட்டிலும் உண்மை மொழிகளாய்த் திகழ வழி யுண்டு. இப்புலவர் அன்றறிந்த நாடு தமிழ்நாடும் அந்நாட்டை யடுத்த நாடுகளுமே. இன்ரு, இவ்வுலக கோளத்திலடங்கி யுள்ள நாடுகளுடனெல்லாம், வியாபாரம், பொருளாதாரம், அரசியல், கல்வி முதலியவை சம்பந்தமான தொடர்பு நாம் பூண்டுள்ளோம்.

பல்வகைக் கேளிக்கைகட்கும் வேடிக்கை விநோதத்திற்கும் உறைவிடமாய்த் திகழ்வது பாரிஸ் நகரம். எனினும், அந் நகரே, மேல்நாட்டுச் சரித்திரத்தில் மத்திய கால (Medieval ages) நாகரிகத்திற்கும், கல்வி நிலைக்கும் நுண்கலைகட்கும் இருப்பிடமானது. சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று குறிக்கோள்களையும் ஒரு பெரும்புரட்சியால் சாதித்து, உலகினர்க்கு அவற்றைத் திரவியப் பொருளாயீந்த நகர் அப்பாரிஸ் நகரே. கோடைகால மாதங்களில், குவலயத்து மக்களுள், பணம் பதவி படைத்த மக்கள் பலருங்கூடி விநோத மாய்ப் பொழுது போக்கும் நகர் அது. மண்ணுலகில் மாபெரு நிலையமெனப் பெயர் பெற்ற நூல் நிலையம் (Bibliothequ Nationale) அங்குண்டு. அந்நிலையத்துள் நின்றுகொண்டு, பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள தண்டமிழ் நாட்டை என்றடைவோமென்றேங்கினேன். ஆனல், அங்கு நான் கண்ட காட்சி என்னைத் திகைக்க வைத்தது. நூற்றுக்கணக்கான தமிழ்ச்சுவடிகள், சங்கத் தமிழ் நூல்கள், கம்பர் பாடல்கள், பெரிய புராணப் பாடல்கள், பிரபந்த நூல்கள்—இவை யாவு

மடங்கிய பழஞ்சுவடிகள்; காந்தி மகான் கற்பித்த சொற் பொருள்களின் விளக்கமடங்கிய நூல்கள்—பண்டைத் தமிழர் சித்திரத்தைப் பாராட்டும் நூல்கள்—இவை யாவும் கண்டேன்.

இந்த வுலகினுக் கோர்நாடு—அது
என்னை மகிழ்விக்கு மோர்நாடு—அது
கம்பன் கபிலன் கணக்கறு பாவலர்
கண்டு களித்த தமிழ்நாடு.

என்று பாடித் தமிழின் பெருமையை வியந்தேன். பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்த அந்நகர், அந்நேரத்தில் எனது நாடாய்த் தோன்றிற்று. 'யாதுமூரே' என்று நான் முணு முணுத்துக்கொண்டேன்.

மற்றொரு நாள் அந்நகரின் உயர்ந்த மேடையில் கட்டப் பட்டுள்ள சாக்ரே கர் (Sacre Coear) என்ற கோவிலைப் பார்க்கச் சென்றேன். அன்று பூரணசந்திரன். ஆனால், மங்கிய ஒளி தான். மேகப்படலம் அடிக்கடி சந்திரனை மறைத்தது. கோவிலை நோக்கி, எண்ணற்ற கற்படிகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கடந்து ஏறிச் சென்றேன். படிகள் மீது ஏறும்போதே திரும்பித் திரும்பி, கீழேயிருந்த நகரையும், அந்நகர்ப் பெருவீதிகள் அமைக்கப்பெற்ற ஒழுங்கையும் எல்லையில்லா மின்சார விளக்கு கள் பல வர்ணத்துடன் விளங்கியதையும் கண்டேன்; கோவில் அடிவாரத்தையடைந்தேன். அங்குப் பல்வேறு மொழி பேசும் பல தேசத்தாருமிருந்தனர். அந்த மங்கிய நிலவொளியில் மௌனமாய் நின்று, அக்கோவிலின் கண்கொளாக் காட்சியையும் அந்நகர மக்கள் அவ்வெழில் சிகரத்தை இறைவனுக்கிருப்பிடமா யளித்த செயலையும் வியந்தோம். சீனன், ஆப்பிரிக்கன், அமெரிக்கன், இந்தியன் யாவருக்கும் உரிமையான அவ் வழகையும் அமைதியையும் ரசித்துக்கொண்டு, சொல்லொணு மகிழ்ச்சிக் கடலிலிருந்தோம். அந்த ஒன்றுபட்ட மனப்பான்மை யில், ஒருவர் மனத்துடன் மற்றொருவர் மனம் கலந்த அந்நிலையில், 'யாதுமூரே; யாவருங்கேளிர்,' என்ற தண்டமிழ்ப் புலவர் மொழியில் எத்தனை உண்மை என்று நினைத்துக்கொண்டேன்.

மாதங்கள் கடந்தன. பின்னொரு நாள் ஜெருமானிய தேசத் தில் பிராங்பர்ட் (Frankfurt) என்ற பட்டணத்தின் தெருக் களொன்றில் நடந்து சென்றேன். ஐயோ! அந்நகரில் எங்கெங்கே நோக்கினும், அங்கெல்லாம் பாழடைந்த வீடுகள், கோவில்கள், குண்டு வீழ்ந்து உடைந்த பாலங்கள், விறுவிட்ட சன்னல்கள், சுவர்கள் - யுத்தவரக்கன் தாண்டவமாடிச் சீரழித்த நாடென்பதை அத்தெருக்களே காட்டின. போன உலகப் பெரிய

யுத்தத்தில், எமக்கெதிர்ப்புறத்திருந்து போர் புரிந்து இந் நிலையடைந்தவரல்லரோ இவர் என்றதோரெண்ணம் என் மனக் கோட்டையில் நுழைந்தது. ஆனால், தங்கள் நாட்டை இப் பொழுது அயலகத்தாராகிய நான்கு பெருநாடுகள் பங்கிட்டு உரிமையாக்கிக்கொண்டதையும், தங்கள் மக்கள் பல்வகைச் சுதந்தரங்களையும் இழந்து, அளவற்ற பழிச்சொல்லை ஏற்றுக் கொண்டதையும் அறிந்தும், தோல்வி மனப்பான்மையை எடுத் தெறிந்துவிட்டுத் தம் நாட்டை மீண்டும் உயர்நிலைக்குக் கொண்டு வரத்திடச்சித்தம் கொண்ட அம்மக்களின் உயர்வுதான் என்னே! ஆடவரும் பெண்டிருமாகிய அவர்கள், பகல்தொட்டு இரவுவரை உழைத்து உண்டாக்கியுள்ள எண்ணிறந்த ஆப்பிள் மரத் தோட்டங்கள், திராட்சைச்செடித் தோட்டங்கள் இவற்றைக் கண்டேன். "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழா துஞற்று பவர்," என்ற திருக்குறட்கு அரிய எடுத்துக்காட்டாய் விளங்குபவர் இவரன்றோ என்று வியந்து நின்றேன். காடு வெட்டி நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி, சலிப்படையா உழைப்பால் சிறந்த தமிழரசர்கள் ஆண்ட நாட்டிலிருக்கும் எனக்கு, அம்மக்களுடன் ஒரு நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தோன்றியது. அந்நிலையில், "யாதுமூரே; யாவருங்கேளிர்," என்று அறிந்தேன்.

உலகத்தில் பெரும்பகுதியை ஒரு காலத்தில் தமக்கே உரிமையாக்கிக்கொண்ட ஆங்கிலேயர் - பாரத நாட்டைத் தமக் கடிப்படுத்தி, இந்திய மாதாவின் சுதந்தரவுணர்ச்சியை அழித்து, தேசத்தொண்டர் பலருக்கும் சிறை வாசமளித்த ஆங்கிலேயர் நாட்டின் தலைநகராகிய இலண்டன் பட்டணத்தில் பக்கிங்காம் அரண்மனையை அடுத்ததொரு வீதியில், வழி தெரியாது திகைத் துப்போய் நின்றுகொண்டிருந்தேன். எண்ணற்ற ஆங்கில மக்களும், அயல் நாட்டு மக்களும், அங்குமிங்கும் ஓடுவதும் சாடு வதுமாயிருந்தனர். அவரவர் தத்தம் பணியாற்ற விரைந்து சென்றுகொண்டிருந்தனர். ஒரு நொடியில் சோவென்று மழை பிடித்துவிட்டது. என் கையில் குடையுமில்லை; மழைச் சட்டையு மில்லை. கனமான தோல் பெட்டியொன்று வைத்திருந்தேன். மழைக்கு ஒதுங்குவோமென்று அந்நியர் வீட்டில் போய் நுழைகிற வழக்கம் ஆங்கிலேயரிடத்திலில்லை. அச்சமயத்தில், ஓரிளைஞன் ஓடிவந்தான். "மன்னித்துக்கொள்ளுங்களம்மா. நீங்கள் எங்கே போகவேண்டும்?" என்றான். நான் மஸ்வல் ஹில் (Muswell Hill) போகவேண்டுமென்றேன். "அப்படியானால் நீங்கள் 134-ஆம் நம்பர் வண்டியில் ஏற வேண்டும். இரண்டடி யெடுத்து வைத்தால், அவ்வண்டி நிற்குமிடத்தைப் போய்ச்

சேரலாம். இவ்விடத்தில் அவ்வண்டி நிற்பதில்லை. உங்கள் பெட்டியை நான் தூக்கிக்கொண்டு வர எனக்கு அநுமதியளிப்பீர்களா?'' என்று மிகவும் விநயமாய்க் கேட்டுவிட்டு, பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடந்தான். நாங்கள் வண்டி நிலையத்தைப் போயடைந்ததும் 134-ஆம் நம்பர் வண்டியும் வந்துவிட்டது. என்னை வண்டியில் ஏற்றிவிட்டுப் ''போய்வாருங்கள்'' என்று மலர்ந்த முகத்துடன் இனிய சொற்கூறி நகர்ந்தான் இளைஞன். ஊரும் பேரும் தெரியாத அவ்வாங்கில இளைஞனின் உதவியை எங்ஙனம் மறக்கவியலும்? ''யாதுமூரே; யாவருங்கேளிர்,'' என்ற நம் தமிழ்ப்புலவர் பொன்மொழியை வியந்துகொண்டே சென்றேன்.

உயர்தரப் புலவனொருவன் கூறிய கூற்று, அவன் காலத்திற்கு மாத்திரமே பொருந்தியதன்று. அது முக்காலத்திற்கும் பொருந்தியதாகும். இதற்கு உலகப் புலவர்களாகிய செகப்பிரியர் (Shakespeare), தாந்தே (Dante), ஹோமர் (Homer) முதலியோர் இயற்றியுள்ள நூல்களில் அழுந்திக்கிடக்கும் அரிய கருத்துகளே சிறந்த சான்றுயமைகின்றன. இக்கருத்துகளை, உலக மக்கள் யாவருக்கும் பொருந்திய உயர்தரக் காவியக் கருத்துகள் எனலாம். இந்த வகையில் அமைவதே நம் கணியன் பூங்குன்றனர் ''யாதுமூரே; யாவருங்கேளிர்,'' என்று கூறிய கூற்று.

### அருஞ்சொற்பொருள்

நல்லிசைப் புலவர் - சிறந்த புகழ் மிக்க புலவர். பேதம் - வேறுபாடு. திரை பொரும் - அலை மோதுகின்ற. கோளம் - உருண்டை. கேளிக்கை - நடனம் முதலிய இன்ப விளையாட்டுகள். திரவியம் - செல்வம். குவலயம் - உலகம். சொல்லொணு - சொல்ல முடியாத. தண்டமிழ் - குளிர்ந்த தமிழ். திடசித்தம் - உறுதியான உள்ளம். உப்பக்கம் - பின்புறம். உஞற்றுபவர் - முயற்சி செய்வோர். பணியாற்ற - வேலை செய்ய. விநயமாய் - பணிவாய். கேளிர் - உறவினர்.

### வினாக்கள்

1. 'யாதுமூரே யாவருங்கேளிர்'—இது யார் கூற்று? எந்த நூலிலுள்ளது? இக்கூற்று இன்றும் உண்மையாய்த் திகழ்கிறது என்று எங்ஙனம் கூறலாம்?
2. 'யாதுமூரே யாவருங்கேளிர்' என்ற கூற்று ஆசிரியருக்கு நினைவு வரக் காரணமாயிருந்த பாரிஸ் நகரக் காட்சிகள் யாவை?
3. ஊழையும் உப்பக்கம் காண்பவர் ஜெருமானிய மக்கள்—விளக்குக.
4. இலண்டன் பட்டணத்தில் 'யாதுமூரே யாவருங்கேளிர்' என்ற தொடரை நினைக்கக் காரணமாயிருந்த நிகழ்ச்சி யாது?

# 11. உலகம் ஏன் அழியவில்லை?

டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

உலகில் மக்கள் செய்யும் தொழில்கள், நல்லன சிலவாகவும், தீயன பலப்பலவாகவும் உள்ளன. தாமே வாழவேண்டும், தாமே அதிகாரம் செலுத்தவேண்டும், தாமே பெரும்பணக்காரர் என்று பெயர் வாங்க வேண்டும், தாமே பெரும்படிப்பாளிகள் என்று பிறரால் போற்றப்பட வேண்டும், மற்றவரெல்லாம் தமக்குக் கீழ்ப்படிபவராய், ஏழையராய், அஞ்சுபவராய், எதிர் பேசாதவராய் இருத்தல் வேண்டும் என்று எண்ணுபவரே உலகில் பெரும்பான்மையோர். எண்ணுகின்றபடி நிறைவேறுகின்றதோ, இல்லையோ, இத்தகைய எண்ணம் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பேர்களிடத்தில் இருக்கக் காண்கின்றோம். எண்ணத்திற்குத் தகவே தொழில்கள் நிகழ்வன. எனவே, தீய தொழில்களே மிகுந்துள்ளன உலகில் என்பது வெளிப்படை. இம்மிகுதி, இன்றுமட்டுமன்று, முன்னும், மிக மிகப் பண்டைக் காலத்திலும் கூட இருந்தே வந்துளது.

''தீமை மிகுதியால், உலகம் அழிதல் வேண்டும்! உலகம் தோன்றி எத்தனையோ கோடி ஆண்டுகள் ஆயின என்று கூறுகின்றனர். ஆனால் உலகம் அழியாமல் நிலைபெற்றிருக்கின்றதே!'' என்றால், அவ்வாறு நிலைபெற்றிருப்பது ஒருசிலரால், ஒரு சிலர் செய்யும் நல்ல செயல்களால் என்று காணலாம். ஒரு சிலர் செய்யும் நற்செயல்களால் உலகம் நிலைபெறுகின்றது என்றால், அனைவரும் அச்செயல்களைக் கடைப்பிடிப்பாராயின், உலகம் அழியாத பேரின்ப வீடாகும் என்பதில் தடை ஏதேனும் உண்டோ?

உலகின் பெரும்பகுதிகள், போரினால் அழிந்து போயிருக்கின்றன. போர் உண்டாவது பசி, பொருட்குறைவு முதலிய காரணங்களினால்தானே! எனவே, உணவு மிகுதியுடையோர், பொருள் மிகுதியுடையோர், அவை இல்லாதவர்க்குத் தாமே அவற்றைப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவராயின், போர் உண்டாக மாட்டாது; உலகம் அழியாது. இப்படியும் பங்கிட்டுக் கொடுப்பார் உண்டா? இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு, தமிழ் நாட்டில், ஒரு சிலர், அப்படிப் பங்கிட்டுக் கொடுத்து வாழ்ந்து வந்தனர். உணவு மட்டுமா! தேவாமிர்தம்

கிடைத்தாலும், அது மிக அருமையான பொருளாயிற்றே என்று கருதித் தாமே தமியராய் உண்ணுமல், பலரொடும் கூடி அதை உண்பர் அவர்.

அதுமட்டுமா! அவர் யாருடனும் வெறுப்புக் கொள்ளவே மாட்டார்; எல்லாருடனும் இனிமையாகவே பேசுவார். பிறருக்குத் தம்மிடத்தில் உள்ள ஒன்றைக் கொடுக்கும் போது முக மலர்ச்சியோடு இனிய சொல் கூறிக் கொடுத்தால்தான், கொடுப்பதை மற்றவர் ஏற்பர். சிறிது வெறுப்புக் கொண்டாலும், கொடுப்பதை மற்றவர் ஏற்கமாட்டார். எனவே, கொடுக்கும் இயல்புடையார், அதனேடு வெறுப்பில்லாமையையும் பூணுகக் கொள்வர்.

துன்பங்கண்டு அஞ்சுவதும், இன்பங்கண்டு மகிழ்வதும் மக்கள் இயற்கை. கொடையும், வெறுப்பின்மையும் உடையவர், பிறர் அஞ்சத் தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி, அது தீர்த்தற்பொருட்டுச் சோம்பலும் கொள்ளமாட்டார்; உடனே துன்பத்தைத் தீர்த்துக்கொள்ளவும் முயல்வர்.

துன்பத்தைப் போக்கிக்கொள்ள முயல்பவர், கள்ளத்தனமாகவோ, நெறியின்மையாகவோ சென்ருல், பலர் பழிக்கு ஆளாவர்; ஆதலால், நெறி பிறழாத வகையில் முயல்வர்; புகழ் பெறும் நெறியில் முயல்வர்; புகழ் நெறிக்கண் செல்லுதலில் தம் உயிரையும் கொடுப்பர்; பழி வருவதெனின், உலகம் முழுதுமே கொடுத்தாலும் கொள்ள இசையார். ஆகையால், அத்தகையோர்க்கு மனக்கவலை என்பதே ஏற்படுவதில்லை.

கொடையும், வெறுப்பின்மையும், துன்பங்கண்டு அஞ்சி அதைப் போக்கச் சோம்பல் கொள்ளாமையும், புகழின் பொருட்டு உயிரையும் தர இயைதலும், பழி வருவதெனின் உலகம் முழுதும் பெறுவதாயினும் கொள்ள இயையாமையும், மனக் கவலை இன்மையும் ஆகிய இத்தகைய மாண்புடைய குணங்களுடன், தமக்கென முயலாத, ஆனல் வலிய முயற்சியுடையராய்ப் பிறர்பொருட்டே முயல்வார் ஒரு சிலர் இருத்தலால், அவரைச் சூழ்ந்துள்ள இடங்கள் அழிதல் இல்லை. அது காரணமாக உலகம் முழுதும் அழியாதிருக்கின்றது. உலகம் முழுமையும் அத்தகையோர் போன்றவரே இருந்துவிடுவாராயின், எவ்வளவு சிறப்பை உலகம் பெறும்! ஏன் பெறுவதில்லை? அத்தகையோராக யாவரும் ஆகாமையால். ஏன் ஆகவில்லை?

உலகில் அனைவரும் தமக்கென முயலாது, பிறர்க்கெனவே முயலும் பெற்றியை அடையாதிருப்பதற்குக் காரணம் என்ன?

இந்தக் கேள்வியை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த ஒரு தமிழ்ப் புலவன் தனக்குள்ளே கேட்டுப் பார்த்தான். அமைதி தரும் பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. புலவனே, அரசனுங்கூட; அவனுக்கே தக்க பதில் கிடைக்கவில்லையென்றால் நாம் என் சொல்வது? பாண்டி மா நாட்டுக்கு அரசனாய், இளமையிலேயே பேரறிவு பெற்றவனாய், இளம்பெருவழுதி என்ற சிறப்புப் பெயர் உடையவனாய், கடற்படையெடுப்பில் முன் வைத்த காலைப் பின் வாங்காது போர் செய்து கடல் நடுவிலேயே இறந்தான் ஆதலின் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பின்னர் வழங்கப் பெற்றவனாய் வாழ்ந்த தமிழ்ப் புலவன், காரணம் கூறமாட்டாமல் கூறவில்லை என்பதற்கு இல்லை. "அவரவர் தாமாகத் திருந்தினாலொழியப் பிறவற்றால் திருந்தி நன்மக்களாகார். சட்டமோ, தண்டனையோ ஓரளவிற்குதான் பயன்படும், மக்களை நன்னெறியில் நிறுத்துதற்கு. தாமாகவே திருந்தியொழுகும் நன்மக்கள் ஒரு சிலர் இருக்கின்றனர். அவர் இருப்பதால்தான் உலகம் அழியாமல் நிலைபெறுகின்றது," என்று அவன் கண்டான். நெடு நாள் எண்ணி எண்ணி அவன் கண்ட உண்மையை ஒரு பாட்டாக நமக்குத் தந்து போயினன். அந்தப் பாட்டு நம் நல்வினையால் இன்று கிடைத்திருக்கின்றது. அவன் பாடியதன் நோக்கம், அப்படிப்பட்டவரால் உலகம் நிலைபெறுகிறது. ஆதலின், யாவரும் அவர் போலவே ஆதல் வேண்டும் என்பது. ஆகவே, அப்பாடலின் பொருளுணர்ந்து யாவரும் அவ்வாறு ஆக விரும்புவார்களாக!

'உண்டால் அம்மஇவ் வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்;பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.'

(புறநானூறு, 182)

அருஞ்சொற்பொருள்

தகவே - தக்கபடியே. தமியராய் - தனித்தவராய். பூணாக - ஆபரணமாக. பெற்றி - இயல்பு; தன்மை.

## வினக்கள்

1. உலகில் பெரும்பாலாரிடத்தில் எத்தகைய எண்ணங்கள் இருக்கின்றனவென ஆசிரியர் குறிக்கின்ருர்?

2. தீமை மிகுதியால் அழிய வேண்டிய உலகம் நிலைபெற்றிருப்பதேன்?

3. போர் உண்டாவது ஏன்? போரினல் உலகம் அழியாதிருக்க என்ன செய்ய வேண்டும்?

4. உலகம் முழுவதும் அழியாதிருக்கின்றது எதனல்?

5. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி - பெயர்க் காரணத்தைத் தெரிவிக்க.

6. இளம்பெருவழுதி தனக்குள் கேட்டுக்கொண்ட கேள்வி யாது? அவன் கண்டறிந்த விடை யாது?

7. 'அன்ன மாட்சி அனையர்'—அவர் மாண்புகளைத் தொகுத்து எழுதுக.

# 12. அறம் உரைத்த உழவர்

வித்துவான் திரு. அன்பு கணபதி அவர்கள்

கிள்ளி வளவன் என்பான் ஒரு மன்னன்; சோணாட்டினை அரசு புரிந்து வந்தனன். இவன் பின் காலத்திலிருந்த சேர பாண்டிய மன்னர்களிலும் சிறந்தவனாய் விளங்கினான்; கல்வி, அறிவு, ஒழுக்கம், வீரம் ஆகியவற்றால் உயர்ந்து, தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லாது மிளிர்ந்தான்;

"கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி."

என்று வள்ளுவர் அரசர்க்குரிய இயல்களாய்க் கூறிய நான்கிலும் சிறந்து விளங்கினான். கோவூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், ஆலத்தூர் கிழார், மாறோக்கத்து நப்பசலையார் முதலிய தண்டமிழ் நலம் சான்ற தமிழ்ப் புலவர் இவனால் தலையளி செய்யப்பெற்றனர். இப்புலவர்கள் கிள்ளி வளவன் சிறப்பியல்பு களைப் பாராட்டிப் பாடிய செய்யுள்கள் செந்தமிழிலக்கியங்களில் பலபடப் பரந்து கிடக்கின்றன.

கொடை, வீரம், கோன்முறை ஆகியவற்றால் சிறந் திருந்த கிள்ளி வளவனது நாடு, வளப்பத்தாலும் உயர்ந் திருந்தது. இத்தகைய செழிப்புள்ள சோணாட்டில் ஒரு முறை தொடர்ந்து சில ஆண்டுகள் மழையின்மையால் விளையுள் குறைந்தது. தங்கள் வாழ்க்கைக்கே போதிய வரு வாயினைப் பெறாத மக்கள், இறை வரி செலுத்த இயலாது இருந்தார்கள். இப்பஞ்ச நிலை, ஆட்சித் தலைவர்களால் வள வனுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை. ஆட்சித் தலைவர்களுள் சிலர், இச்சிறு பஞ்சத்தினை ஒரு பொருட்டாய் எண்ணினாரல்லர். நாட்டின் சில பகுதிகளிலிருந்த தண்டல் தலைவருட்சிலர் வரி தண்டுதலில் சிறிது கடுமை காட்டினர்; முறைப்படி வரி கொடுக்கு மாறு மக்களை நெருக்கினர். விளையுள் குறைவினை மக்கள் எடுத்துக் கூறி வரிக் குறைவு செய்யுமாறு வேண்டியும், அத் தலைவர்கள் அதனைச் செவி மடுத்திலர். அவர்கள் இந்நிலையினை அரசனுக்கு அறிவித்து, அவன் கட்டளையை நாடவும் இல்லை; தங்கள் கருமமே கண்ணாயிருந்தார்கள். எல்லாம் சரிவர நடப்ப தாகவே வளவன் எண்ணியிருந்தான்.

இவ்வாறு சில ஆண்டுகளாய்த் தொடர்ந்து வரி செலுத்த இயலாதிருந்தவர்களுள் நம் புலவர் வெள்ளைக்குடி நாகனாரும் ஒருவர்; தண்டல் தலைவரின் நெருக்குதலுக்குப் புலவரும் ஆளானார்; தம் ஊர்ப்பகுதியைச் சேர்ந்த மக்கள் படும் துன்பத்தையும் கண்டார்; காவலன் பார்வைக்கு இத்துன்பநிலை கொண்டு செல்லப்படவில்லை என்பதையும் பலர் வாயிலாகக் கேட்டறிந்தார். அரசனுக்கு இந்நிலை கூறி அறிவுறுத்துபவர் யார்? மக்கள் துன்பம் துடைப்பது எப்படி? அரசனைக் கண்டு இதற்கு ஒரு தீர்வு காண்பது தம் கடமை என நாகனார் எண்ணித் துணிந்தார்.

நாகனார் அரண்மனை சென்றார்; வாயிற்காவலன் மூலம் தம் வருகையினை வளவனுக்கு அறிவித்தார். புலவர் வருகை அறிந்த மன்னன், நாகனாரைத் தக்கவாறு வரவேற்று உபசரித்தான். நாகனாரின் புலமைத் திறத்தினை மன்னன் முன்னரே கேட்டு மகிழ்ந்தது உண்டு; நேரிற்கண்டவனல்லன். அவ்வாறே, நாகனாரும் அரசனது மாண்பு நலமெல்லாம் பலர் வாயிலாய்க் கேட்டிருந்தனரே தவிர, இதுவரை அவனுடன் நெருங்கிப் பழகியதில்லை. "புலவரே, உம் வருகையால் நான் பெருமகிழ்வடைந்தேன்! நீங்கள் அரண்மனையில் சில நாள் தங்கி என்னுடன் அளவளாவிச் செல்ல வேண்டும். இதுவே என் வேண்டுகோள்," எனக் கூறிய வளவனை நோக்கிப் புன்முறுவல் பூத்த புலவர், "அரசரே, அடியேனது சிறிய வேண்டுகோளினையும் ஏற்றருள வேண்டும்," என்றனர். "அது என்ன?" என மன்னன் கேட்கப் புலவர் கூறலானார்:

"பெருமானே, நீர் செறிந்த கடலைத் தன் சுற்றெல்லையாயும், காற்றும் உலவாத மிக உயர்ந்த வானத்தை மேல் எல்லையாயும் கொண்டது இவ்வுலகம். இவ்வுலகில் தண்டமிழ்க்கு உரியவராய், முரசு முழங்கு தானைகளையுடைய மூவேந்தர் உளர். அம்மூவருள் அரசு என்ற சிறப்பினைப் பெற்றது சோழ அரசராகிய உம்முடைய அரசே."

இதைக் கேட்ட வளவன் புன்னகை புரிந்தான். புலவர் மேலும் கூறுவாராயினர்:

"குணதிசையில் விளங்கும் கதிரினையுடைய பகலவன் நான்கு திக்கிலும் தோன்றினாலும், நேரே செல்ல வேண்டிய ஒளி விடும் வெள்ளிமீன் தென்திசை நோக்கிச் சென்றாலும், அழகிய காவிரி தன் பாய்ச்சலில் குறையாது, நீரைக் கொண்டுவந்து பல கால்வாய்கள் வழியாய் ஓட வைத்துக் கன்னலை ஊட்டும். அந்நீரினை உண்ட கரும்பு, கணுக்கள் முற்றிப் பருத்து வளர்ந்து

பூத்து நிற்கும். வயல்களில் காற்றில் அசைந்து காணப்படும் அப்பூக்களின் தொகுதி, வெள்ளிய வேல்களின் கூட்டமே போலக் காட்சி அளிக்கும். இத்தகைய வளமிக்க சோழ நாடே உமது நாடு. அந்நாட்டினையும் அந்நாடு தரும் பல வகைச் செல்வத்தை யும் பெற்றதால் உற்ற பெருமை மிக்க வேந்தரே!''

இவ்வாறு அழைத்து, நாகனர் சற்று நிறுத்தினர். புலவரின் புகழ்ச்சி உரைகளைத் தொடர்ந்து கேட்ட மன்னவன் மனம், மேலும் மகிழ்ந்தது. ஆயினும், புலவர் உள்ளத்தில் வேறு ஏதோ மறைந்து கிடக்கின்றது என்பதைக் குறிப்பாக உணர்ந் தான் மன்னன். அதனை அறிய ஆவல் கொண்டான்; அந்த ஆவலை முகத்திலும் காட்டினன். வளவனது ஆவலைக் கண்ட நாகனர், 'இதுவே சமயம்!' என எண்ணித் தம் உரையைத் தொடர்ந்தார்:

''உம்முடைய செயல்களாய சில கூறுவேன்; என்னுடைய சில சொற்களைக் கேட்டருள்க: அறக்கடவுள் பொருந்தி ஆராய் வது போன்று, செங்கோலால் நீதி ஆராய்வது வழக்கம். அவ்வாறு நீதி வேண்டுங்காலத்து வந்த குடி மக்களுக்குச் செவ்வி காட்ட வேண்டும். அங்ஙனம் காட்டியோர் தாம் வேண்டு மென்று நினைத்த காலத்தில் தப்பாது மழையைப் பெறுவர்.''

மன்னனுக்குப் புலவரின் உள்ளம் என்ன என்பது விளங்க வில்லை. தன்னிடம் வந்த மக்களைப் பார்க்க விரும்பாது, தான் திருப்பி அனுப்பியதும் அவனுக்கு நினைவில்லை. புலவர் தொடர்ந்தார்:

'கூரிய வேலையுடைய வளவரே, ஞாயிற்றைத் தன் மேலே கொண்ட மேகம், நடுவு நின்று அதன் வெயிலை மறைத்தாற் போலக் கண்ணெளி பறிக்கும் வானை முட்டிய உமது வெண் கொற்றக்குடை, உமக்கு வெயில் மறைக்கப் பிடிக்கப்பட்டதோ? அன்று அன்று. பின் எதற்கு? வருந்திய குடிமக்களின் துயர் துடைக்கவே அது பிடிக்கப்பட்டது.''

''அவ்வாறெனில், என் குடை நிழலில் மக்கள் அல்லலுறு கின்றனரா? இக்குடை எனக்காக என்று யான் எந்தக் காலத் தும் நினைத்ததில்லையே? பின்பு, புலவர் உரையின் பொருள் தான் என்ன?'' இவ்வாறு மன்னன் கவலையுடன் எண்ணிப் பார்த்தான்.

தம் உரைகள் மன்னன் உள்ளத்தில் உறைப்பதைக் கண்ட புலவர் பின்னும் சொல்லலுற்றனர்:

''இளைய பனந்துண்டங்களைப் போலத் தனித்தனியே தரையில் உருளுமாறு எதிரிப்படையின் யானைகளை உம் வீரர்கள்

போர்க்களத்தில் வெட்டி வீழ்த்திஞர்கள்; தங்கள் மேல் வரும் எதிரிப் படைகளை, ஆண்மையுடன் தடுத்து நிறுத்திஞர்கள். உம் வீரர்களின் தாக்குதலுக்கு ஆற்ருது எதிரிகள் சரிந்து மீளுவதை—புறமுதுகிட்டு ஓடுவதைக்—கண்டு உவந்து ஆர வாரித்தார்கள்; உமக்கு வெற்றி தேடித் தந்தார்கள். இவ்வெற்றி யாரால் கிடைத்தது? இஃது எதன் பயன்? எண்ணிப் பார்த்தீரா? வயலில் கலப்பை ஊன்றிய சாலின் மருங்கே விளைந்த நெல்லின் பயன் அன்ருே?''

"இது உண்மையே. உணவில்லாது படை என் செய்யும்? போர்க்களத்துக்குச் செல்பவர் வீரர்களாயிருந்தாலும், உண்மை யில் வெற்றி தேடித் தருபவர்கள் உழவர்களே. இதை மறுத் தவர் யார்?'' இவ்வாறு மன்னன் எண்ண, நாகனுர், "பெய்ய வேண்டிய காலத்து மழை பெய்யாது பொய்த்தாலும், அதன் பயனுய் நாட்டில் விளைவு குறைந்தாலும், தங்கள் இயல்புக்கு மாருனவை, மக்கள் செயலிலே - அன்றி மக்கள் தலைவர்களின் செயலிலே - காணப்பட்டாலும், இந்த உலகம், இவைகளுக் கெல்லாம் காரணம் அரசனே என்று அவனைப் பழிக்கும்.''

அரசன் பொறுமை இழந்தான்; புலவரை நோக்கினுன். புலவர் பின் வருமாறு கூறினுர்:

"மன்னரே, இதனை நீர் நன்ருய் அறிவது உண்மையானுல், இனியாவது கோள் சொல்வாருடைய வெற்றுரைகளை நம்ப வேண்டா. நாட்டில் அனைத்தும் ஒழுங்காய் நடப்பதாய்க் கூறும் நாட்டுத்தலைவர் சிலரது பேச்சைக் கேட்டு நம்பி, உண்மை காண முயலாது வறிதே இருக்க வேண்டா. ஏரைப் பாதுகாக்கும் உழவரின் பாரத்தினை நீர் தாங்க வேண்டும். அதன் மூலம் ஏனைக் குடி மக்களையும் காக்க வேண்டும். இங்ஙனம் செய்தால், எதிரிகளை அடக்க நீர் வெளி நாடுகளுக்குப் படைகளை அனுப்பத் தேவையில்லை. எதிரிகள், தாங்களே வந்து உம் தாளிற் பணி வார்கள்.''

நாகனுர் தமது உரையை முடித்தார்; நிமிர்ந்து நோக்கினுர். நாட்டுத் தலைவர்களால் தன் குடிகளுக்குத் துன்பம் நேர்ந்து விட்டதை உணர்ந்தான் மன்னன்; அதனைத் திறம்படக் கூறித் தனக்கு அறிவுறுத்திய நாகனுரின் அறிவுத் திறத்தை வியந்து பாராட்டினுன்; நாகனுரைத் தழுவி மகிழ்ந்தான்; பிறகு மக்கள் படும் துன்பம் எல்லாம் நாகனுர் விளக்கமாய்க் கூறக் கேட்டு, உள்ளம் மிக வருந்தினுன்; அமைச்சரை விளித்து, நாட்டு நிலை யறிந்து, குறிப்பிட்ட அத்தண்டல் தலைவர்களுக்குக் கட்டளை

அனுப்புவதன் மூலம் பஞ்சத்தால் நொந்த மக்களுக்கு அவ்வாண்டு வரி விலக்கு அளிக்கச் செய்தான்.

புலவர் நாகனரும் பழஞ்செய்க்கடன் வீடு கொண்டார். அதுவரை அவர் செலுத்த வேண்டியிருந்த வரியை மன்னன் தள்ளி விட்டான்; அம்மட்டுமா? அது வரை நாகனர் உரிமையுடன் அனுபவித்து வந்த நிலமனைத்துக்கும் அவர் வரியே செலுத்த வேண்டுவதில்லை என்ற கட்டளையும் பிறப்பித்து, அந்நிலங்களை அவருக்கு 'இறையிலி'யாக வழங்கினன்; புலவர்க்குப் பரிசில் முதலிய வரிசை அளித்து வழியனுப்பினன்.

கிள்ளி வளவனது அன்பில் திளைத்த அறம் உரைத்த உழவர், குடி மக்கட்கும் தமக்கும் நன்மை தேடியவராய் மன்னனும் மக்களும் வாழ்த்த வெள்ளைக்குடிக்கு இனிது மீண்டார்.

### அருஞ்சொற்பொருள்

மிளிர்ந்தான் - விளங்கினன். இறை - வரி; அரசனுக்குச் செலுத்தும் வரி. தண்டல் தலைவர் - வரி வசூலிப்பவர். வளவன் - சோழன். கன்னல் - கரும்பு. அல்லல் - துன்பம். செய் - வயல். இறையிலி - வரி இல்லாத நிலம். வீடு கொண்டார் - விடுதலை கொண்டவர். மீண்டார் - திரும்பினர்.

### வினுக்கள்

1. சிறந்த அரசனுக்கு உரிய நான்கு செயல்கள் யாவை?
2. கிள்ளி வளவனல் தலையளி செய்யப்பட்ட புலவர்கள் யாவர்?
3. நாகனரைக் கண்ட அரசன் வேண்டிய வேண்டுகோள் யாது?
4. வேண்டிய காலத்துத் தப்பாது மழையைப் பெறுவோர் யாவர்?
5. உழவர் சிறப்பினைப் பற்றிப் புலவர் யாது கூறுகின்றார்?
6. மக்கள் எப்பொழுது அரசனைப் பழிப்பார்கள்?
7. புலவர் உரைகளைக் கேட்ட அரசன் யாது செய்தான்?
8. அரசன் நாகனருக்கு அளித்த பரிசில்கள் யாவை?

# 13. சமுதாய வளர்ச்சியும் கிராம இயக்கமும்

திரு. கோ. வேங்கடாசலபதி அவர்கள்

'பரவலாகப் பிரிந்துள்ள சனநாயக அமைப்பில், கிராமப் பஞ்சாயத்துகள் நிலைநிற்க வேண்டுமானால், செல்வம் முன்னை விட நீதியான முறையில் பங்கீடு செய்யப்பட வேண்டும். முக்கிய மாய்க் கிராமங்களில் நிலப் பங்கீடு நீதியாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் கிராமப் பஞ்சாயத்துகள், ஒத்துழைப்பைக் காட்டிலும் கொடுமை செய்யும் கருவிகளாகவே விளங்கும்.'

—ஆசாரிய வினோபா பாவே

கிராம சமுதாயத்தை அமைக்கும் பொழுது கிராமத்திலுள்ள அடிப்படைச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டுவது இன்றியமையாத தாகின்றது. இன்றுள்ள பெரிய உணர்ச்சி நிலத்தைப் பற்றியதே. ஒரு பக்கம் பாடு படாது பலனைத் துய்க்கும் நில வுரிமையாளர் இருக்கின்றனர். மறு பக்கம் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடு பட்டும், பலன் கிட்டாது வாடும் உழைப் பாளிகள் இருக்கின்றனர். இந்த இரண்டு பிரிவினர்களுக்கும் இடையில் பெரும்பள்ளத்தாக்குப் போன்ற 'வேற்றுமை எண்ணம்' நிற்கின்றது.

அரசாங்கம் 'உச்ச வரம்பு'ச் சட்டத்தின் மூலம் நிலச் சிக்கலுக்குத் தீர்வுகாண முயல்கின்றது. சில அரசியல் கட்சி கள் 'வன்முறைச் செயல்' வழியின் மூலமாகத்தான் இச்சிக்கலி லிருந்து விடுபட முடியுமென்று கருதுகின்றன. நாடு சுதந்தரம் பெற்றவுடன் காந்தியடிகள் மறைந்தது பெரிய அதிர்ச்சியாய் இருந்தது. அவர் இந்தச் சிக்கலைத் தீர்க்க வழி காட்டுவா ரென்று எதிர் பார்த்த உலகம், திகைத்து நின்றது. அந்தச் சூழ்நிலையில் வினோபா பாவேயின் இயக்கம் உலகத்திற்கே ஒரு வழிகாட்டும் ஒளி விளக்காய்ப் புதிய நெறி காட்டியது.

**வரலாறு:** சருவோதயப் பிரசுராலயத்தினர் வெளியிட் டுள்ள 'வினோபாவின் பூதானப் புரட்சி' என்றநூலின் பதிப்புரை சுருக்கமாகத் தரும் பூதான வரலாற்றை இங்குத் தொகுத்துத் தருவது மிகவும் பொருந்தும்; பயனும் கிட்டும்.

" ஆசாரிய விநோபா பாவே அவர்களுக்கு நிலப்பிரச்சினைக் குத் தெலுங்கானாவில் ஆண்டவர் ஓர் அன்பு வழி காட்டினார். 1951 ஏப்பிரல் 18-ஆம் நாள் தெலுங்கானாவில் போச்சம்பள்ளி என்ற கிராமத்தில், வேலையில்லாத சில அரிசன உழவர்கள் விநோபா பாவேவிடம் 80 ஏக்கர் நிலந்தான் (தானம்) கேட்டனர். அவர், இதை எப்படிக் கொடுப்பது என்று சிந்தித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், 'நான் நூறு ஏக்கர் இனமாய்க் கொடுக்கிறேன்' என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது. வாக்களித்தவர் இராமசந்திர ரெட்டியார் என்பவர். என்ன வியப்பு! சிலர் 80 ஏக்கர் நிலம் வேண்டுமென்று கேட்பதும், அவர்களுக்காக விநோபா அடிகளின் தூய உள்ளம் ஆண்டவனை வேண்டுவதும், ஒரு குரல் 100 ஏக்கர் நிலம் இனமாகக் கொடுக்க முன்வருவதும் எல்லாம் உண்மைதானா? இந்தக் காட்சியை நம்ப முடியவில்லை. பிறகு, இராமசந்திர ரெட்டியார் நூறு ஏக்கர் நிலத்தைத் தானமாகக் கொடுப்பதாக எழுதிக் கொடுக்கும்வரை விநோபாவுக்கும் நம்பிக்கையில்லை. அதிலிருந்து தான் முதல் பூதானப் பத்திரம் தோன்றியது. 'நிலம் இல்லாத வருக்காக நிலம் கேள்; தானமாகவே கிடைக்கும்,' என்பது ஆண்டவர் அருளிய அருள் வாக்கு. அதை வரமாய் ஏற்றுக் கொண்டு நாடோறும் கேட்டுக்கொண்டே போனார் விநோபா அடிகள்.

"தெலுங்கானாவில் எடுத்த அன்பு ஊற்று, நாளடைவில் தேசமெங்கும் பூதானக் கங்கையாய்ப் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தது. இன்று வரை ஏறக்குறைய 45 இலட்சம் ஏக்கர் நிலத்தை 5 இலட்சம் பேர்கள்—மிகச் சிறிய உழவர்களும், பெரு நிலம் படைத்தோரும்—மனமுவந்து, நிலம் இல்லாதவர்களுக் காகத் தானம் கொடுத்துள்ளார்கள். பணத்திற்காக அல்ல; அச்சத்தால் அல்ல; வன்முறைச் செயல்களால் அல்ல; சட்டத் தால் அல்ல; அன்பின் தூண்டுதலால் கொடுத்தார்கள்.

"1958 ஆகஸ்டு மாதம், "நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை யில், 'அன்பினால் கொள்ளையிடுபவர்' என்று விநோபா அடிகளாரை வருணித்து, ராபர்ட் டிரம்புல் என்பவர் எழுதிய முதல் கட்டுரை உலகத்தின் கவனத்தையே இழுத்தது.

"பின்னர் பூதானம் கிராமதானமாய் மலர்ந்தது. ஆரம் பத்தில் பூதானம், நிலத்தில் தனி உடைமையை ஓரளவு ஏற்றுக் கொண்டது. நிலமில்லாத உழவர் எவரும் இல்லை என்று சொல்ல நிலம் உள்ளவர்கள் தாமாகவே வலிந்து அவருக்கு ஒரு பங்கு தானமாய்க் கொடுப்பது பூதான இயக்கமாகும். நிலத்தின்

பேரில் உள்ள தம் தனி உடைமையையே கிராம சமுதாயத்திற்குக் கொடுத்துவிட்டுத் தாம் சமுதாயத்தில் சேர்ந்து வாழ்வது கிராமதானம்.

"கிராமதானம் மட்டுமல்ல. பூதான - கிராமத்தைப் புதிய சருவோதய சமுதாயமாய் அமைக்க, நிதி உள்ளவர்கள் சம்பத்துத் தானம் அளிக்கவேண்டும் என்று வினோபா அடிகள் அறைகூவினர். எல்லாத் தானமும் உழைப்பிலிருந்து வருவது. தனமுள்ளவர்கள் சமுதாயத்தின் தரும கருத்தாக்கள். ஒரு பகுதியை வலிந்து சமுதாயத்திற்கு ஆயுள் முழுவதும் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டுமென்பது சம்பத்துத் தானத்தின் தத்துவம். பூமி தானம் நிறைவேறத் தம்மையே உயிர்த்தானமாக ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஒப்புக்கொடுத்துக் கொண்டார். அவரைப்போல உயிர்த்தானம் அளித்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள். தங்கள் உழைப்பின் மூலம் உழைப்புத் தானமும், தம் நேரத்தில் ஒரு பகுதி செலவழிப்பவர்கள் சமயதானமும், இயக்கத்தின் வெற்றிக்கு அறிவு மூலம் உழைத்துப் புத்தி தானமும், இப்படியாய்த் தானப் பட்டியல் விரிந்துகொண்டே போயிற்று. எதற்கும் தனி உரிமையில்லை. தம்மிடத்தில் உள்ள எதையும் சமுதாயத்தின் நலத்திற்குத் தாமாக முன் வந்து பங்கிட்டுக்கொள்வதே பூதானத்தின் அடிப்படை.

"பூதான-கிராமதான இயக்கம் என்பது அகிம்ஸா சமுதாயப் புரட்சி மட்டுமல்ல. இது ஒரு கருத்துப் புரட்சியுமாகும். அரசியல் அற்றதல்ல; அறவியல் நிறைந்தது. 'உலக நீதி' என்பது சருவோதய அரசியல் ஆகும். 'தண்ட சத்தி' என்ற அடிப்படையில் உலகில் இன்று ஆட்சி நடைபெறுகின்றது. 'உலக நீதி' என்ற அறவாழ்வை எய்திய சமுதாயத்தில் ஆட்சி தேவையில்லை. ஆதலால், அது கரைந்துவிடுகிறது. இதையே தன் இறுதிக் குறிக்கோளாய்க் கொண்ட கம்யூனிசம், 'தண்ட சத்தி' ஆட்சியை வலுப்படுத்துகிற எதிர் வழியிலே செல்லுகிறது. சருவோதயம் தன் வழியே சென்று ஆட்சியைக் குறைத்து, இறுதியில் அதைக் கரைத்துவிடுகிறது. ஆகவே, சருவோதயம் ஆத்துமிகக் கம்யூனிசமாகும்.

"கிராமதானம் மூலம் கிராம ஆட்சியை நிறுவுவது சருவோதயத்தின் குறிக்கோள். அத்துடன் கிணற்றுத் தவளையாய் இல்லாமல் 'வையகம் வாழ்க' என்று உலக மக்களின் நல்வாழ்வுக்கும் உலக அமைதிக்கும் உகந்த பெருநோக்கத்துடன் வேலைத் திட்டத்தை அமைத்துக்கொண்டுள்ளது.

"சமுதாயத்தில் அடிப்படையாய் உள்ள தவறுன குறுகிய மதிப்புகள், மனக் கருத்துகள், நோக்கங்கள் இவற்றை எல்லாம் மாற்றுவதே சருவோதயத்தின் இறுதிக் குறிக்கோள். பூதான-கிராமதானம் மற்றத் தானமெல்லாம் வேலைத் திட்டங்கள் அல்லது வழிகளே அல்லாமல், அவை குறிக்கோள் அல்ல. உலக சருவோதய சமுதாயமே குறிக்கோள். சமயத்தையும் சமுதாயத்தையும் இணைப்பதும் சருவோதயமே.

"பூதான இயக்கம் கட்சிச் சார்பற்றது. 1957-இல் எல்வாலில் நடந்த சர்வ கட்சி மாநாட்டில் குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாது, பிரதம மந்திரி நேரு, காங்கிரசு, கம்யூனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு முதலிய கட்சித் தலைவர்கள் கலந்துகொண்டார்கள். பூதான-கிராம தானத்தை விேைபா அடிகள் விளக்கினர். பூதான கிராமதான இயக்கத்தை எல்லோரும் வரவேற்று ஓர் அறிக்கை விடுத்தனர்.

"சருவோதயம் அகிம்ஸா ஜனசத்தியை ஆதாரமாய்க் கொண்டது. ஆதலால், தண்ட சத்தியின் சின்னமான எந்த அரசியல் அதிகாரத்திற்கும் புறம்பானது சருவோதயம். அரசாங்கத்தின் மூலம் நடத்தப்படும் கிராம சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் குறிக்கோளும், பூதான-கிராம தானத்தின் குறிக்கோளும் பெரும்பாலும் ஒன்றுய் இருப்பதாகவும், சமுதாய வளர்ச்சித் திட்ட அதிகாரிகளும் ஊழியர்களும், பூதான-கிராம தான ஊழியர்களுடன் இணைந்து வேலை செய்யவேண்டுமென்றும் எல்வால் மாநாட்டின் அறிக்கையில் கூறப்பட்டது.

"1957-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் எல்வாலில் நடந்த சருவகட்சி மாநாட்டைப் பின்பற்றி, எல்லாச் சேவா சங்க ஊழியர்களும், அரசாங்க ஊழியர்களும் 1957-ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் மாதங்களிலும், 1958-ஆம் ஆண்டு மார்ச்சு-மே மாதங்களிலும் கூடிப் பேசி, கிராமதான இயக்கத்தையும் சமுதாய வளர்ச்சித் திட்டத்தையும் இணைக்கத்தக்க யோசனைகளைக் கூறினர்கள்.

"நடை முறை: கிராமதானக் கிராமங்கள் சமுதாயமாய் இயங்க, சட்டப்படி அவற்றை ஒப்புக்கொள்ள, 'கிராமதானச் சட்டத்தைச்' சில மாநிலங்கள் நிறைவேற்றியுள்ளன. கூட்டுக் குழுவின் அறிக்கையில், "ஒரு கிராமத்தில் நிலமுள்ளவர்களில் 80 சத விகிதத்தினர் தங்களது நிலத்தைத் தானமாய்க் கொடுத்தால், அப்படிக் கொடுக்கப்பட்ட நிலம், கிராமத்தின் மொத்த நிலத்தில் பாதிக்குமேல் இருந்தால், கிராமத்திலுள்ள வயது வந்தவர்களில் 80 சதவிகிதத்தினர்

கிராம சமுதாயத்தில் சேர ஒப்புக்கொண்டால், அத்தகைய கிராமத்தைக் கிராமதானமாகக் கருதுவதென்று குறிப்பிட்டுள்ளனர்.

"நிலத்தை மேற்பார்வையிட்டு விவசாயத்தை நடத்தும் முறை, கிராம சமுதாயத்திற்குக் கடனுதவி கிடைக்க வாய்ப்புகள், கிராமத் தொழில்களை நடத்தும் வழிகள், விளைபொருளைப் பங்கிட்டுக்கொள்ளும் கொள்கை, கல்வி, சுகாதாரத்தைக் கவனிக்கும் வகைகள் ஆகியவற்றை நடை முறைகளை ஒட்டி, கூட்டுக் குழு முடிவு செய்துள்ளது.

"கிராமச் சபைதான் எல்லா அதிகாரங்களையும் பெற்று நில மேற்பார்வையைக் கவனிக்கும். கிராம சபை நிலத்தில் என்னென்ன பயிரிடுவதென்றும், எப்படி மொத்த நிலத்தையும் பயன்படுத்துவதென்றும் முடிவு செய்யும். ஏறக்குறைய 10 சத முதல் 25 சதவிகிதம்வரை இருக்கும் நிலத்தைத் தனியாய்ப் பிரித்து, அதில் சமுதாயம் முழுவதும் சேர்ந்து கூட்டாக விவசாயம் நடத்தும். அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு நிலவரி போன்றவற்றைக் கட்டுவதோடு, மருத்துவ நிலையம், பள்ளி போன்றவற்றை நடத்துவதற்கு ஆகும் செலவையும் கிராம சபை செய்யும். மீதி நிலத்தைத் தனிக்குடும்பங்களின் தேவைகளைக் கணக்கிட்டு அதன்படி பிரித்தளிக்கும். இதனால் உற்பத்தி உச்ச நிலையை அடையும்.

"சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ்ப் பணியாற்றுகின்ற வட்டார வளர்ச்சி அதிகாரிகளும், பிற அதிகாரிகளும் தங்கள் எல்லைக்குள்ளிருக்கும் கிராமதானக் கிராமங்களில் சர்வ சேவா ஊழியர்களின் உதவியோடு வளர்ச்சிக்குரிய வேலைகளில் தனிக் கவனம் செலுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

"கிராமதானக் கிராமங்களில் இருந்து வரும் உணர்ச்சி, எப்படித் தேவையான கடனைப் பெறுவதாகும்? மனிதர்களுக்கு நிலத்தின்மீது உரிமை இல்லாததால், நிலத்தை ஈடாகக் காட்டி, இப்போதுள்ள கூட்டுறவுச் சங்க விதி முறைகளின்படி கடன் பெற முடியாது. கடன் கொடுக்கல் வாங்கல் செய்பவர்களோ, வியாபாரிகளோ, அத்தகைய கிராமங்களில் தனி மனிதர்களுக்குக் கடன் கொடுக்க முன் வருவதில்லை. இதனைப் பற்றி முடிவு செய்யக் கூட்டுக் குழு, கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளை ஓரளவுக்கு மாற்றுவதென்றும், மத்திய கால, நீண்ட காலக் கடன்களை அரசாங்கம் அதிக அளவிற்குக் கொடுக்கவேண்டுமென்றும் முடிவு செய்தது. இப்பொழுது மத்திய மாநில அரசாங்கங்கள்

பல வழிகளிலும் கிராமதானக் கிராமங்களுக்கு உதவி செய்து வருகின்றன.

“சாதனைகள்: 1961-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதி.வரை இந்தியா முழுவதும் கிராமதானம் கிடைத்த விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. பூமி தானமாகக் கிடைத்த நிலத்தை யெல்லாம் சில நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக உடனடியாகப் பங்கிட்டளிக்க இயலவில்லை. 1961-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை கிடைத்த நிலத்தையும் அதில் எவ்வவவு பங்கிடப்பட்டுள்ளது என்பதையும் பற்றிப் புள்ளி விவரங்கள் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

“வினோபா கால்நடையாக நாடெங்கும் சுற்றி வருகின்றார். இந்தியாவின் மொத்த நிலப் பரப்போடு கிடைத்துள்ள நிலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், மிகவும் குறைவாகத் தோன்றலாம். உண்மையில் நிலத்தின் அளவைக்கொண்டு இங்குச் சாதனை யைக் கணக்கிடக்கூடாது. நிலத்தைத் தானமாக அளித்தவர் கள் மனத்தில் உண்டான மாற்றத்தையும், அது உலகத்தின் அரசியல் பொருளாதாரக் கருத்துகளை எவ்வளவு மாற்றியிருக் கின்றதென்பதையும் உணர்ந்தால், வினோபாவின் மகத்தான சாதனையைப் புரிந்துகொள்ளலாம்.

“சருவ சேவா சங்கம்: காந்தியடிகள் அமைத்துச் சென்ற சருவ சேவா சங்கத்தின் ஊழியர்கள் ஆரம்பக் காலத்திலிருந்தே பூமிதான வேலையைப் பொறுப்பேற்று நடத்துகின்றனர்; முதல் சத்தியாக்கிரகியாய் விளங்கிய வினோபாவால் நாட்டின் நிலப் பிரச்சினைக்கு ஒரு வழி பிறந்தது என்ற நம்பிக்கை சருவ சேவா சங்க ஊழியர்களுக்கு இருக்கின்றது. மற்றைய நிருமாணத் திட்ட வேலைகளோடு இதையும் சேர்த்து, இதை முதல் வேலையாகப் பணியாற்றி வருகின்றனர்.

“அறப்புரட்சி: காந்தியடிகளின் அகிம்சை, உண்மை ஆகிய அடிப்படைகளில், அன்பு வழியில் செல்லும் வினோபா ‘அறப்புரட்சி’ வரலாறு, உலகம் காணாத புதுமை! சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்க விரும்பும் இலட்சியக் கிராம சமுதாயத்தைக் கிராமதானக் கிராமங்கள் உருவாக்கி வழி காட்டுமென்ற நம்பிக்கை ஊழியர்களிடையே வளர்ந்து வருகின்றது.”

### அருஞ்சொற்பொருள்

துய்க்கும் - நுகரும்; அனுபவிக்கும். உச்ச வரம்பு - உயர்ந்த எல்லை. தீர்வு - முடிவு. அறை கூவினர் - அழைத்தார். தத்துவம் -

உண்மை. எய்திய - அடைந்த. புறம்பானது - அப்பாற்பட்டது. மகத்தான சாதனை - மிகப் பெரிய வெற்றி.

### வினாக்கள்

1. கிராம சமுதாயத்தில் நிலவும் 'வேற்றுமை எண்ணம்' யாது? அதைப் போக்க யார் யார் எவ்வெவ்வாறு முயல்கின்றனர்?
2. பூதான வரலாற்றைத் தொகுத்துரைக்க.
3. பூதானம், கிராமதானம் விளக்குக.
4. தானப்பட்டியல் எவ்வெவ்வாறு விரிந்துள்ளது? அதன் தத்துவங்களை விளக்குக.
5. சருவோதயத்தின் குறிக்கோள்களை விளக்குக.
6. கிராமதானக் கிராமங்களின் நடைமுறைகளைப் பற்றித் தொகுத்துரைக்க.
7. வினோபா அடிகளின் மகத்தான சாதனையைப் பற்றி விளக்கி வரைக.

# 14. மனோன்மணீயம்

[நாடகம்]

வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனார் அவர்கள்

## சீவகபாண்டியன் வீரவுரை

*[சேரமன்னன் தன் நாட்டின்மீது படையெடுத்து வருவதை யறிந்த சீவகபாண்டியன் போர்க்கோலம் பூண்டு புரவிமீதேறி அமர்க்களம் நோக்கி வந்தான். அவனை எதிர்நோக்கி இருந்த குடிலன், மன்னனை வணங்கி வரவேற்று, அணிவகுத்து நின்ற நால்வகைப் படையின் திறத்தையும் காட்டி அறிவித்தான். மன்னனைக் கண்ட வீரர் விண்ணதிர ஆரவாரித்துத் தம் களிப்பைத் தெரிவித்தனர்.]*

**சீவகன் :** வேற்படைத் தலைவரே! நாற்படையாளரே! உமது போர்க்கோலங் கண்டு உள்ளங்களித்தோம். நீவிர் பெற்ற பேறே பெரும்பேறு! பிறவியெடுத்ததன் பெரும்பயனைப் பெறுதற்குரிய வாய்ப்பு உமக்கே கிடைத்துள்ளது. ஆ! யார்க்கிது வாய்க்கும்? தாயினும் சிறந்த தயை பூண்டனும் தேயமாகிய பாண்டிமாதேவிக்குத் தீமையிழைக்கத் துணிந்த இவ்வஞ்சக வஞ்சியரை நீவிர் எண்ணுந்தோறும் நுமது மனம் என்ன பாடு படும் என்பதை நாம் நன்கறிவோம். பெருமூச்சுப் புகைந்தெழவும், கண்களில் நெருப்புப்பொறி பறக்கவும், வளைந்த புருவங்கள் நீவிர் செய்யப்புகும் கொடும்போரைக் குறிக்கவும், மீசைகள் துடிக்கவும், நும் மனத்துள்ள சினத்தீயானது அடக்கியும் அடங்காது எழுந்து பொங்கும் தன்மையைக் களங்கமில்லாத உங்கள் முகங்களே காட்டுகின்றன. இதனைக் கண்டு பாண்டிமாதேவியே உவகை கொண்டனள்.

**படை வீரர்கள் :** பாண்டிமாதேவி வாழ்க! வாழ்க!

**சீவ :** இதோ! தன்பால் சுரந்து பெருகிய நீரால் உம்மை ஊட்டி வளர்த்த முதுநதி மாதா! தாம்பிரபரணித் தாய்! உமது போர்க்கோலங் கண்டு தன் அலைகளாகிய கைகளை வீசி ஆரவாரஞ்செய்கின்றாள்.

**படை :** தாம்பிரபரணி வாழ்க! வாழ்க!

சீவ: வீரர்காள்! நீவிர் தாம்பிரபரணியின் நீரை ஒரு துளியாவது பருகியிருப்பீராயின், அத்தாய் கூறுவதை எண்ணிப் பாருங்கள்: "மக்காள்! என்பாலுள்ள நீரை நீவிர் உட்கொண்டு வளருங்கள்! இந்த நீர், உமக்கு மேம் பட்டவர் எவருமே இல்லை என்று உரைக்கும்படி வீரமாகப் பரவிப் பழமையான சுதந்தரத்தின் சின்னமாகத் தோன்றி உமது இதயத்திலே பொருந்தியிருக்குமாக! வேற்றரசர் எவருக்கும் எக்காலத்திலும் உரிமையாகாத இந்நீரின் கற்புடைமைக்கு இழிவு நேருமாறு பிறர் கைப்படும் நிலை நேருமாயின், உயிர் விடும் வரையில் போர் புரியும் உமது மார்பிலிருந்து இந்நீரே இரத்தமாகப் பொழியுமாக!" என்றல்லவோ வாழ்த்தி உங்களையெல்லாம் வளரச்செய் தாள்? அவள் சொல்லிய சொல் பழுதின்ருக இப்பொழுது நீவிர் மேற்கொண்டுள்ள போர்க்கோலத்தைப் பார்த்தால்; அத்தாம்பிரபரணியன்னை ஆரவாரஞ்செய்து உம்மை வாழ்த் தாது என் செய்வாள்?

படை: தாம்பிரபரணி வாழ்க! வாழ்க!

சீவ: மேலும் விந்தமலையை அடக்கிய அகத்திய முனிவரால் வளர்க்கப்பட்ட நல்ல தமிழ் மொழி தம் உரிமையை இழந்த அற்பர்கள் வாயால் பேசவும்படுமோ?

படை: தமிழ்த்தாய் வாழ்க! வாழ்க!

சீவ: நீவிர் குழந்தையாய் இருந்த பொழுது நும் தாயார் நும்மைத் தொட்டிலிற்கிடத்திக் கண்ணுறங்கும்பொருட்டுப் பழந்தமிழ் மக்களின் பெருமையையும் உரிமையையும் புகழையும் புனைந்து தாலாட்டிப் பாராட்டியது நம் தமிழ் மொழியிலன்ருே? நீவிர் தொட்டிலிற்கிடந்தவாறே அத் தமிழ் முன்னேரது வலிமையையும் வீரத்தையும் அன்பை யும் எண்ணி, உம் கண்களில் நீர் வார, உறக்கங்கொள் ளாமல் விருப்பொடு கேட்ட அவ்வளமார்ந்த தமிழ் மொழி யால், 'மீண்டும் இப்பொழுது நாங்கள் ஆற்ருமை உடைய வர்களானேம்; வீரத்தையும் உரிமையையும் ஒருங்கே இழந்துவிட்டோம்!' என்று சொல்லத் துணிபவரும் உம்மில் உளரோ?

படை: சீச்சீ! அத்தகைய இழிந்தவர் எம்மில் எவரும் இல்லை! இல்லை!

சீவ: பொதியமலையில் தோன்றி இத்திருநெல்வேலிப்பதியில் இயல்பாக உலவி வரும் இத்தென்றற்காற்று, பகைவரை வணங்கி, 'நாங்கள் உங்கட்கு அடிமை,' என்று கூறி மான

மின்றி வாழ்வோர்க்கோ மூச்சாகும்? நாட்டுப்பற்றுச் சிறிது மில்லாது அயலாரின் அடி வருடி வாழும் அவர்கள் மக்கள் எனவும் தகுவார்களோ?

படை : சீச்சீ! மக்களோ அவர்கள்! மாக்கள்! மாக்கள்!

சீவ : பகைவர்களாகிய சேரர், நமது திருநெல்வேலிப்பதியில் நேற்றிரவு தம் படையோடும் திரிந்து உம் மனைவி மக்களுடைய உறக்கத்திற்கு இடையூறு உண்டாக்கிய தோடு, உமது நாட்டுப்பற்றையும் மொழிப்பற்றையும் ஒரு பொருளாக மதிக்காமல், தாய்ப்பாலோடு உட்கொண்ட உமது வீரத்தையும் சுதந்தர உரிமையையும் ஒருங்கே இகழ்ந்தமையால், அவர்கள்மீது நீவிர் கொண்ட சினம் முற்றும் பொருந்தும். அறிவிலி ஒருவன், தனது குகைக்குள் வந்து தன்னைச் சிறுமைப்படுத்த முயன்றால் சிங்கத்திற்குச் சினம் எழுவதும் வியப்போ? அந்தணர் வளர்க்கும் வேள்வித் தீயைவிட, உமது உள்ளத்தில் நாட்டுப்பற்றானது மூட்டிய சினத்தீயன்றோ அத்தேவர்களுக்கு எக்காலத்தும் உவகையூட்டுவது? நமது நாட்டின்மீது படையெடுத்து வந்துள்ள இழிந்த இப்பகைவர்கள், உமது உள்ளத்தில் பற்றி எரியும் சினத்தீயினுக்கு விறகுகளாகி அழியட்டும்!

படை : ஆகுக! ஆகுக! அவ்வாறே ஆகுக!

சீவ : இன்று போரில் நீவிர் பகைவரை எதிர்த்துச் சிந்தும் இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் இம்மண்ணில் நிலைத்து நின்று, பல்லூழி உங்கள் நாட்டுப் பற்றைச் சொல்லிக் கொண்டே இருக்குமே! அவ்விரத்தம், ''பகைவர்களே! இப்பாண்டி நாட்டு வீரர்கள் தங்கள் உரிமையை உயிராக மதிக்கும் உயர்பண்பினர்; அவர்களுடைய வீரவுணர்ச்சி யைத் தூண்டிவிடாதீர்; அவர்கட்கு உயிர் மூச்சு அன்று; சுதந்தரமே மூச்சாகும்; இதனை உங்கள் கனவிலும் நன்றாய் நினைவிற்கொள்ளுங்கள்,'' என்று எண்டிசைகளிலும் உள்ள வர்கட்கு முரசறையுமன்றோ!

படை : உண்மை! உண்மை! முற்றிலும் உண்மை.

சீவ : இப்போரில் நீவிர் ஏற்றிடும் விழுப்புண்கள், வெற்றித் திருமகள், நும் வீரங்கண்டு சித்தங்களித்து முத்தமிட்டு அளித்த முத்திரையாகி எத்தனைத் தலைமுறைக்கும் இலக் காய் நிற்கும்? போரின் அடையாளமாகிய காயமே புகழுக்குரிய காயமாகும். அப்புண் உயிரைக் கொடுத் தேனும் கொள்ளத் தக்கது அல்லவா? அது புண்ணோ? புகழின் கண்ணே அன்றோ?

படை : ஆம்! ஆம்! அது புகழின் கண்ணே தான்! அதில் ஐயமில்லை.

சீவ : இவ்வுலகத்தில் துன்பமடையாமல் புகழுடம்பை அடைந்துள்ளவர் ஒருவரேனும் உளரோ? இப்புகழுடம்பே மெய்யாவதன்றி அழிந்தொழியும் இப்புலாலுடம்போ மெய்யாகும்?

படை : இல்லை! இல்லை!

சீவ: கணந்தோறும் இவ்வுலகில் எத்தனையோ பேர் பிறந்து புகழின்றி இறக்கின்றனர். இவர்கள் உலகில் பிறந்தும் பிறந்தவர்களாக மதிக்கப்படுவரோ? அத்தி மரத்தின் ஒரு சிறு பழத்தினுள் தோன்றியழியும் கொசுகுகள் இவர்களிலும் பலகோடி என்னலாம். இவ்வுலகில் பிறந்தவர் என்போர் புகழுடன் கூடிய பெருமையுள்ளவரேயாவர். அப்பெருமை வாய்ந்த புகழுடம்பு எல்லோர்க்கும் கிடைப்பது அரிது. இதோ, அது உமக்கு எளிதிற்கிடைக்கவிருக்கின்றது. அதனை அடையவிருக்கும் உமது பேற்றைக் கண்டு பல முறை எண்ணி வியந்து போற்றுகிறோம்! புகழடையப் போகும் உமது பேற்றைக்கண்டு சிறிது அழுக்காறும் கொள்கின்றோம். இது சரியன்றாயினும், இன்று நாம் உம்மோடு கூடி அடையப்போகும் இணையிலாப் பெரும்புகழைப் பல்லாயிரம் கூறிட்டால், அதில் ஒரு சிறு பகுதியே எம்மைச் சாரும் என்ற நினைவு எழுகின்றது. ஆதலால், நீவிர் எம் பொருட்டுப் போர் புரிய வந்திருப்பதாகக் கருதாதிருப்பீராக!

படை : அவ்வாறு கருதோம்! நம் தாய் நாட்டைக் காக்க அல்லவோ இவண் கூடியுள்ளோம்?

சீவ : போர்க்கோலம் பூண்டு இங்கு நிற்கும் உங்களுள் யாராவது தமது உயிர், உடம்பு முதலியவற்றிற்கு நேரக் கூடிய துன்பத்தை எண்ணிக் கவலைகொள்வோர் இருந்தால், சொல்லுங்கள். வஞ்சகமின்றி உண்மையாகத் தெரிவிக்கின்றோம்: அவர்களை மரியாதையோடு நகரினுள் கொண்டு விடுத்து நலமாயிருக்கச் செய்திடுவோம். உத்தமரான பெண்டிர் பலர் அங்கே இருக்கின்றனர். அப்பெண்டிரே அவர்க்குத் துணையாவர்.

படை : இல்லை! இல்லை! அத்தகைய இழிந்தவர் இங்கு ஒருவரும் இல்லை!

சீவ : யாம் கூறியதனைக் குறைவெனக் கருதாதீர்கள். அத்தகையோரால் நமது புகழுக்குச் சிறிது இழுக்கு

நேருமே என்று எண்ணிக் கூறினேம். அதனை நீவிர் மாருகக் கருதாமல் உண்மையைக் கூறுங்கள்.

படை: எம் இறைவீர்! இல்லை! இல்லை! நம் நாட்டில் அத் தகைய கோழை ஒருவரும் இல்லை.

சீவ: நல்லது, வீரர்காள்! நும் தாய்நாட்டின் உரிமையைப் பாராட்டும் நுமது மேன்மையையும், அதனல் உமக்கு ஏற் படப் போகும் புகழையும் நாம் மறுக்கவில்லை. நாம் கூறிய மொழிகளைப் பொறுத்துக்கொள்க. வருக! வெற்றித் திரு மகள் உமக்காகக் காத்திருக்கின்ருள்! அன்றியும், உமது வெற்றி முரசின் ஒலியைக் கேட்டாலல்லாமல் நம் மனேன் மணி, தான் மேற்கொண்டுள்ள நோன்பைக் கைவிட மாட்டாள்!

படை: மனேன்மணி வாழ்க! இளவரசி வாழ்க! வீரர்களே, புறப்படுக போருக்கு! புல்லர்கள் வீழட்டும்! ஆண்மை பெருகட்டும்!

### அருஞ்சொற்பொருள்

வஞ்சியர் - வஞ்சி நாட்டார், சேரநாட்டார். உவகை - மகிழ்ச்சி. சுரந்து - ஊறி. சித்தம் - மனம். காயம் - புண், உடல். அழுக்காறு - பொருமை. இழுக்கு - குற்றம். புல்லர் - இழிந்தவர்.

### வினக்கள்

1. சீவக பாண்டியனின் வீர உரையைத் தொகுத்து எழுதுக.
2. தாமிரபரணியின் ஒரு துளி நீர் உரைப்பதாகச் சீவக மன்னன் கூறுவன யாவை?
3. தேவர்கட்கு உவப்பான தீ யாதெனச் சீவகன் கூறுகிருன்?
4. வீரர்களடையும் விழுப்புண்ணின் சிறப்பு யாது?
5. பாண்டிய மன்னன் வீரர்களைக் குறித்துச் சிறிது பொருமையும் கொள்ளுமாறு அவனைத் தூண்டியது யாது?

# 15. தமிழகத்து ஓவியங்கள்

திருமதி ஈ. த. பதுமாவதி அம்மையார், எம்.ஏ.,எல்.டி.

மனிதன் பொருள்களைக் காண்கின்ருன்; அனுபவிக்கின்ருன். அவ்வாறு திளைக்கின்ற திளைப்பினை வெளியிட்டாலன்றி அவன் அமைதி அடைவதில்லை. இனிய மாம்பழத்தினைத் தின்ருலும் நாவினைத் தட்டி இன்பத்தினை நாம் வெளிப்படுத்தவில்லையா? மனிதன் பாடுவான்; ஆடுவான்; எழுதுவான்; செதுக்குவான்; எவ்வாறேனும் ஒரு வழியாகத் தான் பெற்ற இன்பத்தினை உலகம் பெறுமாறு வெளிப்படுத்துவான். காவியம், சிற்பம், ஆடல், பாடல் என்ற இவற்றைப்போல ஓவியமும் ஒரு நுண்கலை. வெளிப்படுவதால் ஏற்படும் இன்பம் அன்றி வேறெரு பயனும் இங்கு இல்லை. குகையில் வாழ்ந்த நாள் தொட்டு இந்த ஓவியக் கலையின் வரலாற்றில் மனிதன் ஈடுபட்டு வருகின்ருன். தான் கண்ட விலங்குகளை நினைத்துத் தான் வாழ்ந்த குகையின் சுவரில் ஓவியன் எழுதிப்போன ஓவியங்கள் இன்றும் நாம் காண அங்கே வாழ்கின்றன.

தமிழ் நாட்டுக் குகை மனிதன் எழுதிய ஓவியங்கள் கிட்ட வில்லை. ஆனல், எழுத்துகள் எல்லாம் ஓவியங்களின் திரிபு களே ஆம். எழுத்து என்பதற்குச் சங்ககாலத்தில் ஓவியம் என்ற பொருளும் உண்டு. திருப்பரங்குன்றத்தில் இருந்த அழகிய ஓவிய மண்டபத்தினை எழுத்து நிலை மண்டபம் என்றே அந்நாளில் வழங்கி வந்தனர். தமிழில் பழைய நூல்கள் சங்க நூல்களேயாம். அந்த நாளில் எழுந்த கட்டடங்கள் செங்கல் லாலும் மரத்தாலும் ஆனவை; ஆதலின், அவை எல்லாம் அழிந்து போயின. ஆனல், அந்நாளைய ஓவியங்களைப் பற்றிய குறிப்புகள் சங்க நூல்களிலும், சங்க காலத்தை ஒட்டி எழுந்த சிலப்பதிகார மணிமேகலைகளிலும் நிரம்ப உண்டு. ஓவியக் கலையைப்பற்றிய நூலும், 'ஓவியச் செந்நூல்' என என்றும் பாராட்டும் வகையில் வழங்கி வந்தது. அதனைப் பரத்தையர் துறைபோகக் கற்றிருந்தனர். ஓவியப் புலவனைக் கண்ணுள் வினைஞன் என்ற 'பொருள் மிக்க' பெயர்கொண்டு வழங்கினர். செங்கல்லின்மேல் வெண்சுதை பூசி ஓவியந் தீட்டி வந்தார்கள் என அறிகின்ருேம். திருப்பரங்குன்றத்தின் குகையில் எழுதப் பட்ட ஓவியங்கள் பேரும் புகழும் பெற்றுப் பாட்டிலும் இடம் பெற்றுவிட்டன. கட்டடங்களின் வெளிப்புறங்களிலும் உட்சுவர்

களிலும், மேற்கட்டிகளிலும் பல வகை நிறத்தில் உருவங்கள் வரையப்பட்டிருந்தன. வானத்தில் செல்லும் சூரியனும் அவனைச் சூழ்ந்த கோள்களும் திங்களும், அவனைச் சேர்ந்த நாள்களும் அடிக்கடி எழுதப்பட்டன. புராண ஓவியங்களும் அந்நாளி லிருந்தே தமிழ் நாட்டில் பொதுமக்கள் உள்ளத்தினைக் கவர்ந்து வருதலையும் அறிகின்றோம். இயற்கை அழகினை மறவா இயல் பினையும் காண்கின்றோம். பொய்கைகள், பறவைகள், மான்கள், யானைகள், புலிகள் என்ற இவற்றின் ஓவியங்கள் மக்கள் கண்ணையே அன்றி விலங்குகளின் கண்ணையும் மருட்டினவாம். இயற்கைப் பொருளைக் கூறும்போதெல்லாம் அந்நாளைய புலவர் கள், ''ஓவியம் போல இருந்தது,'' என்று கூறுவதால், ஓவியம் எவ்வளவு தலைசிறந்த நிலையில் இருந்தது என ஒருவாறு உய்த் துணரலாம். கட்டடங்களில், வெண்சுதையில் வடிவங்களைத் தீட்டுவதோடு, மரப்பலகையிலும், கிழி என்ற திரையிலும் ஓவியம் எழுதி வந்தமையும் பழைய நூல்களால் தெரிய வரு கின்றது. ''உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியில் உரு எழுதி'' என்று பாடும் திருநாவுக்கரையர் ஓவியம் எழுதும் நுட்பத்தை விளக்குகின்றார்.

சங்க காலத்தின் பின்னர்க் கற்கோயில்கள் எழுந்தமை பல்லவர் காலத்திலாகும். மகேந்திரவர்ம பல்லவன் இவ்வாறு கற் கோயில் எழுப்பிய புதுமையைத் தானே முதலில் கையாண்ட தாகப் பெருமை பாராட்டிக்கொள்கின்றான். இவன் அருங்கலை விநோதன்; மத்தப் பிரகசனம் என்ற நகைச்சுவை நாடகம் எழுதி, நாடகக் கலையை வளர்த்தவன். குடுமியான் மலைக் கல் வெட்டுகளிலிருந்து இசைக் கலையை இவன் வளர்த்தமை புலனாகின்றது. 'சித்திரக்காரப்புலி' என்ற இவனது சிறப்புப் பெயர் ஓவியக்கலையில் இவன் கொண்ட ஈடுபாட்டினை விளக்கு கின்றது. புதுக்கோட்டைக்கு அருகே சிற்றன்னவாசல் என்ற ஊரில் உள்ள மலையில் குடைந்த மண்டபமே இன்றும் இவனது ஓவியக்கலையின் பெருமையை உலகம் முழுவதும் முரசறை கின்றது. இந்தியாவில் உள்ள அஜந்தா ஓவியங்களும் இலங்கை யில் உள்ள சிகிரியா ஓவியங்களும் போல, இவையும் இந்திய நாட்டுக் கலை ஒற்றுமையினையும் தலைசிறந்த அழகினையும் நிலை நாட்டுகின்றன. வெண்சுதை பற்றுதற்காகக் கல்லைப் பொளிந்து, அதன்மேல் சுண்ணம்பினைப் பூசி, ஈரத்திலேயே ஓவியத்தினை வரைந்திருத்தல் வேண்டும். இவற்றில் பல சிதைந்து கிடக் கின்றன. எஞ்சியுள்ளவற்றிலும் எவ்வளவு அழகு! எவ்வளவு கைத்திறம்! இங்குள்ள பொய்கை ஓவியத்திலும், அதில் பூத்த மலர்களின் அழகிலும், மொட்டும் இலையும் கொடியுமாய்ப்

படர்ந்தவற்றின் சிறப்பிலும், அங்கே உயிரோவியமாய்ப் பாயும் நீர் வாழ்வனவற்றிலும் அவற்றின் இயக்கத்திலும், கரையில் பூவினைக் கொய்தும் பூக்கொடி தாங்கியும் அல்லியையும் தாமரையையும் வலத்தோளிலும் இடத்தோளிலும் சார்த்தி நிற்கின்ற மக்களது ஆன்ம விளக்கக் கைத்தொண்டின் அழகொளியிலும், தம்மை மறந்து நில்லாதவர் யார்? இயற்கையழகிலும் கலையழகிலும் ஈடுபட்ட அந்நாளைய மக்கள், நாட்டிய மங்கையரின் ஓவியத்தையும் செடி கொடிகளையும் எழுதி எழுதி மகிழ்ந்த உண்மையினையும் அங்குக் காண்கிறோம். இந்த அழகோவியத்தின் வனப்பு 'டூப்ரவில்' போன்ற பிற நாட்டறிஞர் கருத்தையும் கண்ணையும் ஒருங்கே கவர்ந்தது. உலகினை மறந்தவர்கள் இந்நாட்டினர் என்ற பெரும்பழியை இவை எதிரே நின்று மறுத்துரையாடுகின்றன. மகேந்திரவர்ம பல்லவன் மனைவியோடு கோயில் செல்லும் காட்சியே என்று அறிஞர் முடிவு கட்டும் ஓவியமும் அங்குள்ளது. அவ்வரசனுக்கு என்ன, இயற்கை அன்னையின் உள்ளத்தின் வழியே ஓடாவியின் தூரிகையில் பூத்த நினைவு மலரே ஆகும் அந்த ஓவியம். சிற்றன்னவாசல் மட்டுமன்று பல்லவர் புகழைப் பாடுவது. பனைமலைக் கோயில் சுவர்களில் நீரரமகளிரும் கந்தருவருமாகிய வானகத்தாரோடு அந்நாளில் வாழ்ந்த மண்ணகத்தார் ஓவியங்களும் உள்ளன. பல்லவரது தலைநகரம் காஞ்சி அன்றோ? அங்கு அவர்கள் எழுப்பிய கோயில்கள் பலப்பல. அதற்கடுத்த திருப்பருத்திக் குன்றத்தினையும் அதன் எல்லைக்குள் அடக்கிவிடலாம். இங்குப் பல்லவர்கள் தீட்டிய ஓவியங்கள் மிகச்சிறந்த நிலையில் அவர்கள் ஆட்சியின் விளக்கங்களாக ஒளிர்ந்திருத்தல் வேண்டும். ஆனால், இன்று நாம் காண்பன மூலை முடுக்கிலுள்ள துண்டு துணுக்குகளே. கல்லில் பொளிந்த உருவங்கள் சுதை தீற்றி நிறம் பூசி அழகு செய்து வைத்திருந்தவை கண்கொளாக் காட்சியாகத் திகழ்ந்திருக்கும். இன்னும் பல பலவிடங்களிலிருந்தும் அவர்கள் ஓவியம் கண்டெடுக்கப்பட்டு வருகின்றது.

"கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்," என்று சுந்தரர் பாடிய பல்லவர்க்குப் பிறகு, அந்தப் பெருமை மறுபடியும் பூத்தது சோழப் பேரரசர்கள் காலத்திலாம். விஜயாலயன் எடுத்த நார்த்தாமலைக் கோயிலிலும் ஓவியங்கள் உண்டு. ஆனால், தஞ்சைப் பெரிய உடையார் கோயிலே இராஜராஜ சோழப் பேரரசரது கலைப் பெருமை விளக்கமாகும். முத்தமிழை வளர்க்க முற்பட்ட அச்சோழர் பெருமகனர், ஓவியக் கலைகொண்டும் தாம் கொண்ட கடவுளன்பிற்கு அழகு செய்தனர். கருப்பக்கிருகம்

என்ற கருவறையைச் சுற்றியுள்ள பகுதியில் ஓவியங்கள் விளங்கு கின்றன. சுந்தரரை ஆவணங்காட்டி அலைக்கழித்த காட்சி, அங்கு உயிரோவியமாய்த் தோன்றுகின்றது. சுந்தரர் சேர மானேடு கைலைக்கு விரைந்து செல்லும் அந்த விரைவெல்லாம் தோன்றக் காட்சி அளிக்கின்றது மற்றேர் ஓவியம். தில்லைக் கூத்தன், சோழரது கடவுள். அவனுடைய திருக்கூத்துகளில் சோழர் பெருமகனர் ஈடுபட்டிருந்தார். அவர் ஏற்படுத்திய அளவுகளுக்கு ஆடவல்லான் என்று பெயரிட்டனர் அன்றே? ஆண்டவனுடைய திருக்கூத்தின் காட்சி ஒருபுறம் தோன்று கின்றது. திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளின் தோற்றம் மற்ெருரு புறம் தோன்றுகின்றது. வீரச்சுவை எதிர், அசுரர் கழுத்தைக் கட்டியழுகின்ற மனைவிமாரின் அவலச் சுவை, மனத் தினை நீர்ப்பிண்டமாக உருக்குகின்றது. இக்கலைஞர்கள் வானத்தை நோக்கியதும், உலகினை மறக்கவில்லை என்பதனை எங்கும் காண்கின்றேம். தில்லைக் காட்சியில் அந்நாளைய மக்கள் நிலைமையை உள்ளவாறு அவர்கள் தீட்டிய இயல்பினையும் காண் கின்றேம். சுந்தரரது ஆவணக் காட்சித் திருவிளையாடலுக்கருகே நாளும் நாம் காணும் நாட்டுப்புறக் காட்சியினையும் ஓடாவி தீட்டி யுள்ளார். பெண்கள் மட்பானையில் சோற்றினைச் சமைக்க, பண்ணையாள் ஒருவன், பெண் ஒருத்தி கையில் உணவு பெற்று மகிழும் காட்சியும் ஓடாவியின் கருத்தினைக் கவர்ந்தது.

சோழர்களுக்குப் பின்னர்ப் பேரரசாய் விளங்கியது விஜய நகரப் பேரரசேயாம். சோழப் பேரரசுக்கும் விஜயநகரப் பேரரசுக்கும் இடைப்பட்ட காலத்திலும், விஜயநகரப் பேரரசு காலத்திலும் எழுந்த தென்னுட்டு ஓவியங்கள் திருவாங்கூர் அரண்மனைகளில் இன்றும் அழகு செய்யக் காணலாம். மேல் நாட்டுத் தொடர்பு கொண்ட ஓவியங்களும் தொடர்ந்து அங்கே தோன்றுகின்றன.

விஜயநகரப் பேரரசர்கள் இன்கலைகள் பலவற்றிலும் ஈடு பட்டார்கள். திருவரங்கம் முதலிய கோயில்களில் அவர்கள் எழுதிய ஓவியங்களைக் காணலாம். திருவரங்கத்துச் சுற்றுலையின் மேற்சுற்றில் தீட்டப்பட்ட காளைமாடுகளின் வடிவம் பலர் கருத் தினைக் கவர்ந்துள்ளது. புராண ஓவியங்களுக்கு எல்லையே இல்லை. 'இலேபாட்சி'யில் உள்ள ஓவியங்களின் பெருமையைப் பற்றி இன்று உலகம் உணர்ந்து வருகின்றது. இது தமிழகத்தில் இல்லாமற்போனுலும், மதுரை ஓவியங்களோடு தொடர்புடைய தாதலின் தமிழோவியத்தினை விளக்க இவை உதவி செய் கின்றன.

தஞ்சைப் பெரிய உடையார் கருவறையைச் சுற்றித் தோன்றும் ஓவியங்கள் இவர்கள் காலத்தனவே ஆம். இங்கு தான் மறத்தற்கரியதொரு கொடுமை தோன்றுகின்றது. பழைய சோழர் கால ஓவியங்களின்மேல், சுதையைத் தீற்றி இவர்களது ஓவியத்தினைப் பொறித்த கொடுமையை என்ன என்பது? விஜய நகரத்தார் காலத்து ஓவியப் படையைப் பேர்த்தெடுத்த போது தான் சோழர் கால ஓவியம் தோன்றலாயிற்று. மதுரையில் வாழ்ந்த திருமலை நாயக்கர் காலத்து ஓவியங்கள் மதுரை மீனாட்சி கோயிலில் விளங்கக் காண்கின்றோம். இங்குப் புராணங்கள் அசையாப் படங்களாய் மக்கள் மனத்தினைத் திருத்தி வந்த வரலாற்றைக் காணலாம்.

பின்னர், மராட்டியர் காலத்தில், தஞ்சையில் மராட்டிய ஓவியம் வளர்ந்தது. மராட்டிய மன்னர் ஓவியங்களைக் கண்ணாடி களில் எழுதியுள்ளனவற்றை இன்றும் காணலாம். மராட்டிய அரசர் ஆண்ட சரசுவதி மஹால், கல்யாண மஹால் முதலிய இடங்களில் இரத்தினங்கள் பதித்த சரசுவதி, இராமர், பரமபத நாதர், சுகர் முதலிய தெய்வவடிவ ஓவியங்களைக் காணலாம். கண்ணாடியிலும் பலகையில் ஒட்டிய திரைச்சீலையிலும் எழுதப் பெற்ற படங்கள் பழைய வீடுகளில் இன்னும் தொங்கக் காண் கின்றோம். இன்று இந்தக் கலை, போற்றுவார் அற்றுக் கெடு கின்றது. திருவிளையாடல், பெரிய புராணம் முதலியவற்றின் கதைகளை ஒரே படத்தில் தீட்டுகின்ற காட்சியையும் காண் கின்றோம். புராணங்களில் மட்டுமன்றி, அழகிய பெண்களின் அழகிலும் இந்த ஓடாவிகள் ஈடுபட்டு எழுதி வந்தார்கள்.

இவர்களுக்குப் பின்னர், மேனாட்டினர் தொடர்பும் அவர்கள் ஓவியக் கலைகளும் நம் நாட்டில் புகுந்தன. நம் நாட்டிலேயே பழமையை ஆராய்வதில் நாட்டம் எழுந்தது. இரவிவர்மாவின் ஓவியங்கள் எங்கும் பரவின. இவை, மேனாட்டுக் கலையின் ஒளி கொண்டு இந்நாட்டு ஓவியங்களை அழகு செய்வன. நம் நாட்டுக் கலைகளைக் காணாத குருட்டு நிலை ஒழிந்தது. அஜந்தா ஓவியம் முதலியன மக்கள் மனத்தினைக் கவரத் தொடங்கின. மறுமலர்ச்சி ஓவியங்கள் அந்தப் பழைய ஓவிய முறைகளைப் பின்பற்றத் தொடங்கின. இந்த மறுமலர்ச்சி, வங்கத்தில், தாகூர் பாவாணரைச் சூழ்ந்தெழுந்தது. தமிழ் நாட்டு ஓவியம் இன்னமும் விடுதலை பெற்றபாடில்லை. சிற்றன்ன வாயில் முதலாக விளங்கி வரும் தமிழோவிய வரலாறு தேங்காதவாறு தமிழர், அதனைக் கரை புரண்டோடும் பேராறாக ஓடவிட்டு அதனில் திளைத்துக்

குளித்து மகிழ்தல் வேண்டும். உலகமும் அது கண்டு இன்ப மடையும்.

### அருஞ்சொற்பொருள்

திரிபுகள் - வேறுபாடுகள். துறை போக - முற்ற. தீற்றி - பூசி. மருட்டின - மயக்கின. உய்த்துணரலாம் - ஆராய்ந்தறியலாம். உயிரா வணம் - மூச்சு விடாத நிலையிலிருந்தது. அருங்கலைவிநோதன் - அருமை யான கலைகளை ஆராய்தலையே விளையாட்டாகவுடையவன். ஓடாவி - சித்திரக்காரன். பூத்தது - தோன்றியது. ஆவணம் - பத்திரம். தில்லைக் கூத்தன் - சிதம்பரத்து நடராசப் பெருமான். திரிபுரம் - மூன்று நகரம். நீர்ப்பிண்டம் - நீர்த்தொகுதி. நாட்டம் - நோக்கம்.

### வினாக்கள்

1. குகை ஓவியம், எழுத்து நிலை மண்டபம், ஓவியச் செந்நூல் - குறிப்பு வரைக.
2. பழைய சங்க நூல்களால் தெரிய வருகின்ற ஓவியச் செய்தி களைத் தொகுத்துரைக்க.
3. சித்திரக்காரப் புலி என்ற சிறப்புப் பெயருடையவன் யார்? அவனமைத்த சித்தன்ன வாசல் ஓவியச் சிறப்புகளைத் தெரி விக்க.
4. சோழப் பேரரசர் காலச் சிற்பச் சிறப்புகள் புலப்படும் இடங்கள் யாவை? அச்சிறப்புகளையும் புலப்படுத்துக.
5. தஞ்சை மராட்டியர் கால ஓவியங்களைப்பற்றி நீவிர் அறிந் துள்ளவற்றைத் தெரிவிக்க.
6. இக்கால ஓவியக் கலையின் நிலையைப்பற்றி ஆசிரியர் குறிப் பன யாவை?

# 16. மூவருட் சிறந்தோர் யாவர்?

வித்துவான் திரு. த. கி. குப்புசாமி ஆழ்வாரவர்கள்

திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் உயர்நிலைப் பள்ளிக் கூட மாணவர் இலக்கியச் சொற்போர்க் கழகத்தின் சார்பில், ஒரு நாள் மாலை ஐந்து மணிக்குச் சொற்போர்க் கூட்டமொன்று நடைபெற்றது. அதன் நிகழ்ச்சி பின் வருமாறு:

### செயலாளர் செல்லப்பன்

அன்புள்ள தோழர்களே! வணக்கம். நமது கழகத்தின் இரண்டாவது கூட்டத்தில் ஆறு நண்பர்கள் மூன்று பிரிவினராய்ச் சொற்போர் நிகழ்த்துவார்கள். அவர்கள் திறமையுடன் நிகழ்த்தும் சொற்போரையும், தலைவரளிக்கும் தீர்ப்பையுங் கேட்டுக் களிக்கும் ஆவலுடன் நாமனைவரும் இங்குக் கூடியிருக்கின்றோம். இக்கூட்டம் சிறப்புறும்பொருட்டு நமது மதிப்புக்குரிய ஆசிரியர் களும் வந்துள்ளமை நமது பேருகும். இக்கூட்டத்திற்கு நண்பர் தங்கையன் அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். (மாணவர் கை தட்டல்)

### தலைவர் தங்கையன்

அன்புள்ள நண்பர்களே! அறிவிற்சிறந்த ஆசிரியர்களே! வணக்கம். என்னைத் தலைமை நிலையில் இருக்கச் செய்து பெருமையளித்ததற்கு மகிழ்ச்சியடைகின்றேன். செயலாளர்க்கும் ஏனையோர்க்கும் நன்றி. தலைமை தாங்கும் தகுதி அறிஞர்க்கே உரியது. ஆயினும், உங்கள் பேரன்பின் துணைகொண்டு இயன்ற வரையில் என் கடமையைச் செய்ய முயல்கின்றேன்.

தோழர்களே! இன்று சொற்போர் நிகழ்த்த எடுத்துக் கொண்ட பொருள், 'போர் வீரர், அமைச்சர், கவிஞர் இம் மூவருட் சிறந்தவர் யாவர்?' என்பதாகும். உலகத்தில் பல கோடி மக்களிருப்பினும் சிறந்த அறிவுள்ளவராய்த் திகழ்வோர் சில ஆயிரம் பேர்களே. அவர்களிலும் ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையில் திறமையுள்ளவர்களாய் விளங்குகின்றார்கள். இத் திறமையாளர்களில் போர் வீரர், அமைச்சர், கவிஞர் ஆகிய முத்திறத்தினரும் முதல்வராய் எண்ணத்தக்கவர். இம்மூவருட் சிறந்தவர் யாவர் என்பதை ஆராய்ந்தறியவே இங்குக் கூடியிருக்கின்றோம். போர் வீரரைப் பற்றிப் பொன்னையா,

புகழேந்தி ஆகிய இரு நண்பர்களும்; அமைச்சரைப் பற்றி அண்ணுமலை, அழகப்பன் ஆகிய இரு நண்பர்களும்; கவிஞரைப் பற்றிக் கந்தையா, கன்னையா ஆகிய இரு நண்பர்களும் சொற் போர் நிகழ்த்துவர். அவர்கள் எடுத்துக் காட்டும் காரணங்களைக் கொண்டு எனது முடிவை முடிவில் தெரிவிப்பேன். இனி வாதிடுவோரை வரிசையாய்த் தத்தம் கருத்துகளை எடுத் துரைக்க அழைக்கின்றேன்.

## 1. போர் வீரர்

பொன்னையன்: அன்பு மிக்க அவைத் தலைவரவர்களே! அறிவு சான்ற ஆசிரியப் பெரியோர்களே! நண்பர்களே! வணக்கம். ஓர் உடம்பில் கை சிறந்ததா, தலை சிறந்ததா, இதயம் சிறந்ததா? இது போன்றுதானிருக்கிறது, நம் முன் இருக்கும் கேள்வி. உடம்பை நாடென்று கொள்வோம். அங்ஙனம் கொண்டால், கை போர் வீரரென்றும், தலை அமைச்ச ரென்றும், இதயம் கவிஞரென்றும் கொள்ளலாம். இம்மூவரும் ஒவ்வொரு வகையிற்சிறந்தவரே எனினும், போர் வீரரே சிறந்தவர் என்பதற்குரிய காரணத்தைத் தெரிவிக்கின்றேன்.

ஒரு நாட்டில் அமைதி ஏற்பட்டால்தான் அரசாட்சி அமை வுறும். செம்மையான அரசாட்சி ஏற்பட்ட பின்னரே அமைச் சரும் கவிஞரும் வந்து தம் அறிவுத் திறனைக் காட்ட முடியும். அமைதி குலைந்து குழப்பமேற்பட்டால், இவர்கள் எங்கே யுள்ளார்களென்றே அறிய முடியாது! பிறரால் உடம்புக்குத் துன்பம் நேரும்பொழுது கைதானே முன்வந்து காக்கின்றது? பகைவர்களால் நாட்டுக்குத் துன்பம் வருங்கால், போர்வீரர்கள் தாமே முன்னணியிற்சென்று வீரத்துடன் போரிட்டுக் காக்கின்றார் கள்? ஆகையால், போர் வீரரே சிறந்தவர் என்பது எனது துணிபு. (கை தட்டல்)

## 2. அமைச்சர்

அண்ணுமலை: அன்பார்ந்த அவைத் தலைவரவர்களே! ஆசிரியப் பெருந்தகையோர்களே! தோழர்களே! வணக்கம். அன்பர் பொன்னையா நாட்டை உடம்புக்கு ஒப்பிட்டார். இது மிகவும் பொருத்தமான உவமை. இதன்பொருட்டு அவரை நான் பாராட்டுகின்றேன். ஆனால், கை, தலை, இதயம் மூன்றில் கைதான் சிறந்தது என்று அறுதியிட்டு உறுதியாய்ச் சொன்னாரே, அது எப்படிப் பொருந்தும்? 'எண்சாண் உடம்புக் குச் சிரசே பிரதானம்,' என்று வழங்கும் பழமொழி உங்களுக் கெல்லாம் தெரியுமே! இதை அவர் அறியாரா? அது போகட்டும். தலை மூளையின் இருப்பிடம். அம்மூளையின்

கட்டளையின்றிக் கை வேலை செய்யாது என்பதைக்கூடவா அவர் அறியவில்லை! இது வியப்புக்குரியதே!

ஆண்மை மிக்க ஒருவனின் தலைமையில்தான் போர் வீரர்கள் போரிட்டு நாட்டில் அமைதியை நிலைபெறச் செய்கின்றார்கள். அவ்வாண்மை மிக்கவனுக்கு அருகிலிருந்து அறிவுரை கூறுவோர் யார்? அறிஞரல்லரோ? அவர்தானே அரசாட்சி அமைந்ததும் அமைச்சராகின்றார்! பகையரசர் படையெடுத்து வந்தால், நாட்டுக்குத் துன்பந்தான்; அத்துன்பத்தைக் களைவோர் போர் வீரர்தாம். ஆனால், பகைவரை வெல்லுதற்குரிய இடம், காலம், கருவி, செயல் முதலியவற்றை ஆராய்ந்து திட்டம் வகுத்துக் கொடுத்தால்தானே வீரர் போரிட முடியும்? திட்டமில்லையெனின், வீரரின் செயல் வீணாகுமே! இனி நாட்டுக்குத் துன்பம் நேரிட்ட காலத்தில் கவிஞரின் பாட்டு அதைப் போக்குமோ? ஆகையால், அமைச்சரே சிறந்தவர் என்பது என் முடிவு. (கை தட்டல்)

### 3. கவிஞர்

**கந்தையன் :** அன்புடைத் தலைவீர்! ஆசிரியப் பெரியீர்! நண்பீர்! வணக்கம். நாட்டை உடலுக்கு ஒப்பிட்ட நண்பரை நானும் பாராட்டுகின்றேன். ஆனால், அவ்வுடலில் கை சிறந்த தென்றார் முன்னவர்! தலைதான் சிறந்ததென்றார் பின்னவர். நான் இதயமே சிறந்ததென்று இயம்புகின்றேன்! எவ்வாறென்றால் கையும் மூளையும் வேலை செய்யாவிட்டாலும் உடல் வாழும்; இதயம் வேலை செய்யாவிட்டால் உடல் வாழுமா? இன்னும், இதயம் இடையறாது சுருங்கி விரிந்து இரத்தத்தை உடல் முழுவதும் பரவச் செய்கிறதனாலேயே கையும் மூளையும் தத்தம் கடமையைச் செய்யும் ஆற்றலைப் பெறுகின்றன என்பதை நண்பர்கள் அறியாமற்பேசியது விந்தையாயிருக்கின்றது! 'சிரசே பிரதானம்,' என்ற பழமொழியை நண்பர் எடுத்துக்காட்டினார். நன்று! 'சிரசு' என்பது, தலை; இது மூளையென்று எவ்வாறு பொருள்படும்? ஐம்பொறிகளில், வாய், மூக்கு, கண், காது என்னும் முக்கிய உறுப்புகள் நான்கும் தலையில் அமைந்திருப்பதாலேயே பழமொழி, 'சிரசே பிரதானம்,' என்று தெரிவிக்கின்றது. இதை நண்பர் உற்று நோக்காமல் உரைத்தது வியப்பே!

உடலுக்கு வரும் துன்பத்தைக் கை காக்குமென்பதும், கையை மூளை ஏவி வேலை கொள்ளுமென்பதும் உண்மையே. இவை உடலுக்கு வரும் புறத் துன்பத்தையே போக்க முயல்கின்றன. மனத்திற்கு இருப்பிடமாகிய இதயமோ, காமம்,

வெகுளி, மயக்கம் முதலிய உடம்பின் அகத் துன்பத்தைப் போக்குகின்றது; இன்னும் நல்லொழுக்கமாகிய நன்மையை யுண்டாக்குகின்றது. இவற்ருல், இதயமே சிறந்ததென்று தெரிய வில்லையா? ஒரு நாட்டில் போர் வீரர் காவல் செய்து புறப் பகைவரைத் தடுக்கின்ருர்; அப்போர் வீரரை அமைச்சர் தம் வழியில் செலுத்துகின்ருர். இவ்விருவரும் நாட்டுக்கு இன்றியமை யாதவர்களே. ஆனல், நாட்டினுள் கல்வி, ஒழுக்கம், ஆண்மை முதலிய நற்பண்புகள் வளர்ந்து மக்கள் உயர்வடைவதற்குக் காரணமானவர் யார்? பொருமை பேராசை முதலிய தீய செயல்களையும் போக்க முயல்பவர் யார்? கவிஞரன்ருே?

போர் வீரரும் அமைச்சரும் செய்யும் செயல்கள் அவர்கள் இருந்த காலத்திற்கு மட்டுமே பயன்பட்டு இறந்தபின் நில்லாது கழிகின்றன. ஆனல், கவிஞரின் செயலோ, அவர் காலத்திற்குப் பின்னும் நின்று நாட்டுக்கு நன்மை செய்கின்றது. திருவள்ளுவர் காலத்தில் எத்தனையோ போர் வீரர்களும் அமைச்சர்களும் இருந்திருக்கலாம். அவர்கள் செயல்களால் இன்று விளையும் பயனென்ன? திருவள்ளுவரின் திருக்குறளன்ருே இன்றும் நமக்கு நன்மை செய்கின்றது! ஆகையால், கவிஞரே சிறந்தவ ரென்பது என் கருத்து. (கை தட்டல்)

### 1. போர் வீரர்

புகழேந்தி: தலைவர் பெருமானீர்! பெருந்தகையீர்! நண்பீர்! வணக்கம். நண்பர்கள் அமைச்சரும் கவிஞரும் சிறந்தவர்கள் என்று கூறியதை என்னல் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அறிவிற்சிறந்த அமைச்சரும் கருத்திற்சிறந்த கவிஞரும் இருந்தவிடத்தில் இருந்துகொண்டே இப்படி அப்படியென்று வாயினல் முழங்கிச் சொற்கோட்டை கட்டலாமேயன்றிப் போர்க்களத்தில் நின்று போரிட முடியுமா? போர் வீரர், பகைவரைப் போர்க்களத்தில் முரியடித்து வெற்றி முரசம் முழங்க வந்து, நாட்டில் அமைதியை நிலை நிறுத்தா விட்டால், அமைச்சரெங்கே, கவிஞரெங்கே? நாட்டு மக்களின் நல்வாழ்வெங்கே? பயிர்த்தொழில் கைத்தொழில்கள் நடை பெறுவதெங்கே? வாணிகத்தில் நிறைசெல்வம் வாரிக் குவிப்ப தெங்கே? கல்விப்பயிற்சி, கலை வளர்ச்சி காண்பதெங்கே? இன்னிசை, நடனக் கேளிக்கைகள் எங்கே? நாம் இப்பொழுது இதைப் பற்றிப் பேசுவதுதானெங்கே? எல்லாம் புயற்காற்றில் அகப்பட்ட இலவம்பஞ்சு போல அலைந்து திண்டாட வேண்டு மல்லவா?

அமைச்சரும் கவிஞரும் அறையில் அமர்ந்து ஏடுகளைப் புரட்டிச் செய்யும் செயலாலா சிறந்தவர்கள்? போர் வீரரால்

வெற்றி கிட்டியதும், அவ்வெற்றி விழாவில் மிகச் சுறுசுறுப்பாய் முன்வந்து நிற்பார் மதியமைச்சர்! வெற்றிச் சிறப்பை வெண் பாவில் வைத்துக் குயிலெனக் கூவ மேடைக்கு விரைவார் மேன்மைக் கவிஞர்! இன்பத்தில் முதற்பங்குகொள்ள முனையும் இவர்கள், துன்பத்தில் கடைப்பங்கேனும் கொள்ளக் கருதிய துண்டா? மனைவி மக்களைப் பிரிந்தவர் யார்? பெற்றோர் உற்றோரைத் துறந்தவர் யார்? காடு மலைகளைக் கடந்தவர் யார்? பனியிலும் வெயிலிலும் பதைத்தவர் யார்? இரவிலும் பகலிலும் இளைத்தவர் யார்? தூக்கமும் உணவும் நீக்கியவர் யார்? இரத்தம் சிந்தி நொந்தவர் யார்? உயிரையும் கொடுக்க முனைந் தவர் யார்? சொல்லுங்கள் நண்பர்களே! தந்நலங் கருதாமல் குறைந்த ஊதியம் பெற்று இத்தனை பாடு படும் போர் வீரர், நிறைந்த ஊதியம் பெற்று நிம்மதியாய் வீட்டில் உறங்கும் அமைச்சர் கவிஞர்களைக்காட்டிலும் சிறந்தவர் என்பது தெரிய வில்லையா?

## 2. அமைச்சர்

அழகப்பன்: தலைவீர், பெரியீர், நண்பீர், வணக்கம்! போர் வீரரைச் சிறப்பிக்கக் கருதிய நண்பர் போர் வீரராகவே நின்று ஆவேச மொழிகளை அள்ளி வீசினார். அவ்வுணர்ச்சி வேகத்தில் அமைச்சரைப்பற்றி ஆராயாமல் கூறிவிட்டாரென்றே தோன்று கின்றது. ஏடு புரட்டுகிறாரென்று இகழ்ச்சி தோன்றச் சொன்னார். ஏடு புரட்டுவது எல்லாராலும் ஏன் முடியவில்லையென்று அன்பரைக் கேட்கின்றேன். அறையில் ஏடு புரட்டும் அமைச்சர் நாடு முழுவதும் தம் மனத்தினுள் நிறுத்தி, ஒவ்வொரு செய லிலும் ஏற்படும் சிக்கல்களைச் சிந்தித்து, எவர்க்கும் எந்தக் குறைவும் நேராமல் காக்க அவர் படும் பாட்டை அன்பர் அறிவாரா? அவரது சிந்தனை சிறிது தவறினால் நாட்டின் நலமே தவறுமென்பதை நண்பர் அறியாரா?

உடல் உழைப்பைக்காட்டிலும் மூளை முயற்சியே உயர் வானது என்பதை நண்பர் உணரவில்லை. உழைப்புக்குரிய கைகால் உறுப்புகள் கீழிருக்கவும் சிந்தனைக்குரிய மூளை மேலேயிருப்பானேன்? இன்னும் மூளைக்கு எத்துணை பாது காப்பிருக்கின்றது? 'அறையில் அமைச்சர் அமர்ந்திருக்கின்றார்,' என்று கூறும் அன்பர், மண்டையோட்டினுள் மூளையமைந்திரு கும் இயற்கையமைப்பைப்பற்றி என்ன கூறுவாரோ? உடல் செயலற்ற நிலையில் தரையில் உறங்கும்பொழுது எல்லாவுறுப்பு களும் சமமாய்க் கிடந்தாலும், செயலாற்றும் நிலையில் ஒவ்வோர் உறுப்பும் தத்தம் நிலையிலிருந்துதானே கடனாற்ற வேண்டும்? 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்,' என்ற வள்ளுவர்

வாய்மொழி பொய்யா? மூளைக்கு நெய், பால், வாதுமைப்பருப்பு முதலிய கொழுமையான உயர்ந்த உணவுகளைக் கொடுப்பது போல, மூளை முயற்சியாளர்களுக்கு உயர்ந்த ஊதியங் கொடுக்க வேண்டுவது கட்டாயமல்லவோ? உடலுழைப்பே உயர்ந்த தென்றால், பளுவான பொருளுள்ள வண்டி இழுத்துச் செல்லும் மாடு, குதிரை முதலிய விலங்குகளுக்கன்றோ உயர்ந்த ஊதியம் கொடுக்க வேண்டும்? பொறுப்பைத் தலையிற்சுமந்து மூளை யுருகச் சிந்தித்து, நாட்டு நலனைக் கனவிலும் நினைவிலும் கருதி வாழும் அமைச்சர் எங்கே, பொறுப்பொன்றுமின்றிக் கடமை யைக் கழிக்கப் போர் புரியும் போர் வீரர் எங்கே? போர் வீரரை யும் மற்றவரையும் தம் கருத்துக்கிணங்கப் பணிபுரியும்படி ஆட்டி வைக்கும் அமைச்சர் எங்கே, அவரது அதிகாரக் கயிற்றில் கட்டுண்டு அவர் இழுத்த வழியில் ஆடும் பொம்மை போன்ற போர் வீரர் எங்கே? மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு தெரியவில்லையா? இவ்வளவு சிறந்த அமைச்சருடன், பொறுப் பேதுமில்லாமல் கற்பனையுலகில் வீண் கனவு கண்டு, பரிசு விரும்பிப் பாடல் புனைந்து திரியும் பாவலர் ஒப்பாகவும் நில்லாரே? அன்பர்களே! நடுவுநிலை நின்று ஆராய்ந்து பாருங்கள்! அமைச்சர் மற்றவரினும் சிறந்தவரென்பதற்குத் தடையுண்டோ?

### 3. கவிஞர்

**கன்னையன் :** தலைவரே! பெரியோர்களே! நண்பர்களே! வணக்கம். நண்பர் மூளை முயற்சி உயர்வானதென்று எடுத்துக் காட்டியது முற்றிலும் உண்மையே. ஆனால், கவிஞரைப்பற்றி நண்பர்கள் சிறிதும் சிந்திக்கவேயில்லை! கவிஞர் வாழ்க்கை தூய்மையானது; தன்னலமற்றது. இதை நண்பர்கள் கவனத்திற் கொள்ளத் தவறிவிட்டார்கள். கவிஞர் நிம்மதியாய் உறங்கு பவரா? பொறுப்பில்லாதவரா? நண்பர்களே! எண்ணிப்பாருங் கள்!

சோழ நாட்டில் நெடுங்கிள்ளி நலங்கிள்ளி என்னும் சோழ மன்னர் இருவர் மாறுபட்டுப் போர் புரிய முயன்ற பொழுது கோவூர் கிழார் என்னும் கவிஞர் பெருமான் நிம்மதியாய் வீட்டில் உறங்கிக்கொண்டா இருந்தார்? உயிருக்குத் தீங்கு நேரும் போர்க்களத்தில் புகுந்து இரு மன்னர்களுக்கும் அறிவுரை கூறிப் போரைத் தவிர்த்தது உங்களுக்குத் தெரியுமே! இக்கவிஞரோ பொறுப்பற்றவர்? நாடாளும் ஆசையால் குமண வள்ளலைக் கொல்லவும் துணிந்தான் இளங்குமணன். வறுமையால் வாடி வள்ளலை நாடி வந்த சாத்தனார், குமணன் காட்டில் உறை தலையும், தீயோர் துணையுடன் நாடாளும் அவன் தம்பியின்

நிலையையும் கண்டார்; உடனே தாம் வந்த செயலை மறந்து இளங்குமணனுக்கு அறிவுரை கூறித் திருத்தி, அண்ணனிடம் அன்பு கொள்ளச்செய்து, குமணனுக்கு முடி சூட்டி மகிழ்ந்தார். இவரா பொறுப்பற்றவர்? பாரியின் பறம்பு மலை மூவேந்தரால் முற்றுகையிடப்பட்டபொழுது கபிலர் நிம்மதியாகவா இருந்தார்? கோட்டைக்குள்ளிருந்தவர்களுக்கு உணவு தேடும் பொறுப்பில் ஈடுபடவில்லையா? ஔவையார், அதியமான் வேண்டுகோளுக் கிணங்கித் தொண்டைமானிடம் தூது செல்லவில்லையா? இவர் நாட்டு நலத்தில் பொறுப்பில்லாதவரா?

அமைச்சர் அரசனுக்குக் கட்டுப்பட்டவர்; போர் வீரர் இவ் விருவருக்கும் கட்டுப்பட்டவர்; கவிஞரோ, கடவுளைத் தவிர யாருக் கும் கட்டுப்பட்டவரல்லர். அதனாலேயே, அரசன் தீய வழியில் செல்லத் துணியும்பொழுது அஞ்சாது சென்று அறிவுரை கூறி நல்வழிப்படுத்த முடிகின்றது. போர் வீரர் போர் வெறியிலும் அமைச்சர் அதிகார வெறியிலும் தவறு செய்வார்கள்; கவிஞரோ அமைதியுள்ளமுடைய அறிஞராதலால், நடுவுநிலையில் நின்று தவறின்றி வாழ்ந்து, பிறர் தவறுகளையும் திருத்த வல்லவரா யிருக்கின்றார்.

பகைவரை வென்ற போர் வீரனின் வெற்றிச் செயல் அக் காலத்தவரால் புகழப்பட்டுப் பிற்காலத்தவரால் குற்றமுள்ள தாகக் கூறவும்படலாம்; அமைச்சர் ஏற்படுத்தும் சட்ட திட்டங் கள் ஒவ்வொரு நாட்டார்க்கு மட்டுமே ஏற்றனவாயிருந்து, பின்னர் வரும் அமைச்சரால் மாற்றப்பட்டுப் பயனின்றிப் போகலாம். ஆனால், கவிஞர் கூறும் விதி விலக்குகளோ, எந் நாட்டார்க்கும் எக்காலத்தார்க்கும் மாறாப் பயன் தரும் மாண் புள்ளனவாய் நின்று புகழ் பெறுகின்றன. கோவூர் கிழார், சாத்தனார், கபிலர் முதலிய புலவர்கள் கூறிய அறிவுரையாம் கவி மணிகள் இன்றும் புறநானூறு என்னும் நூலிலிருந்து ஒளிவீச வில்லையா? திருக்குறள் இன்றும் பயன் தரும் பான்மையினால் பிறநாட்டவரும் விரும்பித் தம் மொழிகளில் ஆக்கிக்கொள்ள வில்லையா?

கவிஞர் கற்பனையுலகில் திரிவதாக நண்பர் சொன்னார், இது உண்மையே. ஆனால், அவர் இதை இழிவாகக் குறித்தது சரியா? கவிஞர் உள்ளம் சுதந்தரமுள்ளது. ஆகையால், மக்கள் தொகுதியில் காணப்படும் வறுமை, பகைமை முதலிய சீர்கேடுகளையெல்லாம் சிந்தித்துணர்ந்து அவை நீங்கிய மக்கள் வாழ்வு எத்தகைய உயர்நிலையிலிருக்குமென்று கற்பனை செய்து கவி வாயிலாகத் தெரிவிக்கின்றார். இச்செயல், பிற்காலப் பெரு வாழ்வு விளைதற்கிட்ட வித்தென்று விளம்பலாமே! 'ஆனந்த

சுதந்தரம் அடைந்துவிட்டோமென்று ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே!' என்று கவிஞர் பாரதியார் நாற்பத்தைந்தாண்டு களுக்கு முன் கற்பனையுலகில் நின்று பாடி மகிழ்ந்த பாடலை நாம் இன்று மெய்யுலகில் நின்று பாடி மகிழவில்லையா? இதை வெறுங்கற்பனையென்று நம் நண்பரும் இகழமாட்டாரே! கற்பனை அரும்பிலிருந்துதான் செயல் மலர்கள் மலர்ந்து மணம் வீசு கின்றன என்பதை விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளிலிருந்து அறியலாமே!

நண்பர்களே! போர் வீரரின் செயலுக்கு ஊக்கமூட்டுபவரும் அமைச்சரின் செயலுக்கு ஆக்கந் தருபவரும் கவிஞரேயாவார். வீரவுணர்ச்சி நிரம்பிய பாட்டுகளைப் பாடிக்கொண்டு போர்க் களம் புகுகின்றனர் போர் வீரர்; திருக்குறள் போன்ற தெள்ளிய நூல்களின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே சட்டதிட்டம் வகுக்கின்றார்கள் அமைச்சர்கள்.

பகை நீக்கி அமைதி காக்கும் போர் வீரரின் உடல் வலிமையைக்காட்டிலும், விதி வகுத்து நாடு காக்கும் அமைச் சரின் அறிவு வலிமையைக்காட்டிலும், கடவுள் நெறி காட்டி, அன்பு, அருள், வாய்மை, தூய்மை ஒழுக்க மேன்மைகளை யுணர்த்தி, மக்கள் வாழ்வை மாண்புறச் செய்யும் கவிஞரின் மன வலிமையே விழுமிய பயன் தருகிறதென்றால், கவிஞரே சிறந்தவ ரென்று சொல்லவும் வேண்டுமோ? (கை தட்டல்)

## தலைவர் முடிவுரை

அன்பு மிக்க நண்பர்களே! ஆறு நண்பர்களும் அமுதமழை பொழிந்தாற்போல, அருங்கருத்துகளைக் காட்டிப் பேசி, அவை யினரை மகிழச் செய்தார்கள். நான் தீர்ப்புக் கூறும் கடமையில் எழுந்து நிற்கின்றேன்.

தொடக்கத்தில் 'மூவருட்சிறந்தவர் யாவர்?' என்று எண்ணி, முடிவில் என்ன கூறுவதென்று தெரியாமல் திகைத் திருந்தேன். நண்பர்களின் மொழிகளைக் கேட்குந்தோறும் அவரவர் கூற்றின் முடிவே சரியானதென்று என் உள்ளம் ஊசலாடியது. ஆயினும், முதல் நண்பர் கூறிய உவமையே தெளிவான முடிவுக்கு வர வழி காட்டியது.

'உடல் போன்றது நாடு' என்றும், 'கை போன்றவர் போர் வீரர்; தலை போன்றவர் அமைச்சர்; இருதயம் போன்றவர் கவிஞர்' என்றும் கூறியது மிக அருமையாயிருக்கின்றது. இவ்வுவமையை முத்திறத்தினரும் ஒப்புக்கொண்டது பற்றி மகிழ்ச்சியடைகின்றேன்! இதுவே எனது முடிவுரையை எளி தாக்கிவிட்டது.

போர் வீரர், தம் உடல் வலிமையால் வாட்படையின் துணை கொண்டு புறப்பகைவரையோட்டி மக்களின் புறவுடம்பையும் உடைமையையும் பாதுகாக்கின்றார்; அமைச்சர் தம் அறிவின் வலிமையால் நூல்களின் துணைகொண்டு மக்கள் உலக இன்ப மடைவதற்கேற்ற விதி விலக்குகளை ஏற்படுத்திப் புறவாழ்க்கையைப் பாதுகாக்கின்றார். ஆனால், கவிஞரோ, தம் மனவலிமையால் கவிகளாகிய வாட்படையின் துணைகொண்டு அழுக்காறு, அவா, வெகுளி முதலிய அகப்பகைவரையோட்டி, மக்கள் உள்ளத்தையும் உயிரையும் பாதுகாக்கும் போர் வீரராகவும், கற்பனையின் துணைகொண்டு உண்மையின்பம் அடைவதற்கேற்ற விதிவிலக்குகளைக்காட்டி மக்களின் அகவாழ்வைப் பாதுகாக்கும் அமைச்சராகவும் மேன்மையுடன் விளங்குகின்றார். ஆகையால், போர் வீரர், அமைச்சர், கவிஞர் என்னும் மூவருள் கவிஞரே சிறந்தவர் என்று தீர்ப்பளிக்கிறேன். இம்முடிவை எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்களென்று நம்புகின்றேன். வணக்கம். (கை தட்டல்)

ஆசிரியர் ஒருவரின் அணிந்துரை:-அன்புள்ள மாணக்கர்களே! கூட்ட நிகழ்ச்சியைக் கண்டும் கேட்டும் களிப்படைந்தோம். யாவரும் திறமையாய்ப் பேசியதைக்கண்டு உள்ளம் பூரிக்கின்றோம். இச்சொற்போட்டி எல்லோருக்கும் மனக்கிளர்ச்சியளித்து அறிவு வளர்ச்சி பெறத் தூண்டுமென்று உறுதியாய்ச் சொல்லலாம். ஆகையால், இது போன்ற சொற்போட்டிகளில் மற்றவர்களும் கலந்துகொண்டு திறமையாய் வாதிட முன்வர வேண்டும். வருங்கால மக்களாகிய நீங்கள் போர் வீரராகவும், அமைச்சராகவும், கவிஞராகவும் திகழ்ந்து நாட்டுக்கு நன்மை செய்யும் நல்லோராய் விளங்குவீர்களாக! நன்றி! (கை தட்டல்)

செயலாளர் நன்றியுரை:-நண்பர்களே! கூட்டம் மிக வெற்றியாய் முடிவுறுவதையெண்ணி மகிழ்வடைகின்றேன். தலைமை தாங்கி, தம் நுண்மதியால் நன்முடிவு காட்டிய தலைவர்க்கும், அவையினர் வியந்து களிக்கும்படி அறிவுத்திறன்காட்டிச் சொற்போரிட்ட நண்பர்களுக்கும், கூட்டம் நடத்துவதற்கு வழிகாட்டுபவராயிருப்பதுடன் நமக்கு ஊக்கமளிக்கும் வகையில் வந்திருந்தும் அன்புரை கூறியும் பெருமையளித்த ஆசிரியப்பெருந்தகையினர்க்கும், அமைதியுடனிருந்து கூட்டத்தைச் சிறப்பித்த உங்களுக்கும் கழகத்தின் சார்பில் நன்றி செலுத்துகின்றேன். யாவர்க்கும் வணக்கம். (நீண்ட கை தட்டலுடன் கூட்டம் கலைகின்றது).

## அருஞ்சொற்பொருள்

கழகம் - சங்கம். பேறுகும் - பாக்கியமாகும். நிகழ்ந்த - நடந்த. திறம் - வல்லமை, வகை. முத்திறத்தினர் - மூன்று வகையினர். வாதிடுவார் - சொற்போரிடுவார். பெருந்தகை - பெருமைக்குணங்கள். அறுதியிட்டு - முடிவு கட்டி. சிரசு - தலை. பிரதானம் - முதன்மை. களைவோர் - போக்குவோர். வெகுளி - கோபம். ஊதியம் - பயன். துறந்தவர் - விட்டவர். நொந்தவர் - துன்புற்றவர். நிம்மதியாய் - கவலையில்லாமல். அழுக்காறு - பொறாமை. திகழ்ந்து - விளங்கி.

## வினாக்கள்

1. ஒரு நாட்டுக்குப் போர் வீரரே சிறந்தவர் என்பதற்கு என்னென்ன காரணங்கள் கூறப்பட்டுள்ளன?
2. அமைச்சரே சிறந்தவர் என்பதற்கு என்னென்ன காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன?
3. கவிஞரே சிறந்தவர் என்பதற்கு என்னென்ன காரணங்கள் காணப்படுகின்றன?
4. உடம்பை நாடென்று கொண்டால், போர் வீரர், அமைச்சர், கவிஞர் ஆகியோரை என்னென்னவாகக் கொள்ளலாம்?
5. 'எண்சாணுடம்பிற்குச் சிரசே பிரதானம்'—இது வந்த இடம் கூறி விளக்குக.
6. 'காற்றிலகப்பட்ட இலவம்பஞ்செனத் திண்டாட நேரும்,' யார்? எப்பொழுது?
7. அமைச்சரும் கவிஞரும் அறையிலமர்ந்து ஏடுகளைப் புரட்டுவோர் - இக்கூற்று எங்ஙனம் மறுத்துச் சிறப்பிக்கப்படுகிறது?
8. 'கவிஞர் நிம்மதியாக உறங்குபவரல்லர்'—என்பதை விளக்கக் காட்டப்பட்ட சான்றுகள் யாவை?
9. கவிஞர் கற்பனை பிற்காலப் பெருவாழ்விற்குக் காரணமாகும்- விளக்குக.
10. போர்வீரர், அமைச்சர் ஆகிய இருவரையும்விடக் கவிஞரே சிறந்தவர் என்பதற்குத் தக்க காரணங்கள் கூறுக.

# 17. மனையியல்

டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ், எம் எஸ்ஸி., எம்.ஏ., பிஎச்.டி.,

இன்று நமது நாட்டுக் கல்வித் திட்டங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலிருந்து, உயர்தர பட்டங்கள் தரும் பல்கலைக் கழகம் வரையில், மனை வாழ்க்கை விஞ்ஞானம் அல்லது மனையியல் என்ற துறைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அகில இந்திய உயர்நிலைப்பள்ளிக் கல்விக் குழுவினர் செய்த பரிவுரைகளின்பேரில், எல்லாப் பெண்கள் பள்ளிக்கூடங்களிலும் மனையியலைப் பாடமாக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, மனையியல் என்பது என்ன என்றும், அதன் பொருள் தத்துவம், கல்வியில் அதன் இடம் முதலியன பற்றியும் நாம் ஆராய வேண்டியதவசியம். அத்துறையைப்பற்றிப் போதிய அறிவும், அனுபவமும், நமது நாட்டில் இல்லாதபடியால், அதைப் பற்றிப் பல தவறான கருத்துகள் நிலவுகின்றன. ''வெறுஞ்சமையலும் தையலுந்தானே மனைக்கலை! அவற்றையும், குழந்தை வளர்ப்பைப்பற்றியும் தெரிந்துகொள்வதற்கு ஏன் ஒரு கல்லூரிக்குச் செல்ல வேண்டும்? நம் தாய்மார்களும், பாட்டிமார்களும், புத்தகம், ஆசிரியர், பாடசாலைகள் இல்லாமலே, தாமாகவே பட்டறிந்தும் பெண்ணின் நுண்ணறிவு வழியாகவும் இவற்றை உணர்ந்துகொண்டு இல்லறத்தை இனிது நடத்தி, நமது பண்பாட்டை வளர்த்து நிலைக்கச் செய்யவில்லையா?'' என்ற கேள்விகள் எழுகின்றன.

தொன்றுதொட்டு மனித நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்து, சமூக நலத்திற்கும் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் இன்பத்திற்கும் அடிப்படையும் ஆதாரமுமாய் இருந்து வந்திருப்பன வீடும் அதன் குடும்பமுமே. வீடே கோயில்; அதிலுறையும் தாயே கண் கண்ட தெய்வம். மனிதனுக்குள்ள நற்பண்புகளெல்லாம் தாயிடமிருந்தும், அவள் தரும் சூழ்நிலையிலிருந்தும் வருகின்றன. தியாகம், சகோதரத்துவம், அன்பு, அறம், பொறுமை, அருள், அறிவு, பற்றுகள் ஆகிய உயர்ந்த குணங்கள் குடும்பத்தில் பிறக்கின்றன. குடும்பத்தின் குத்து விளக்கு, அணையாத ஒளி பெண். அன்றும் இன்றும் பெண்ணின் எண்ணமும், பெண்மையின் செல்வாக்கும் வீட்டின்கண்ணே உள்ளன. நம்நாட்டு அறமகளிர், மனைமாட்சியால்தான் மட்டற்ற

ஆற்றல் பெற்று, அன்பால் அரிய செயல்கள் ஆற்றினர்கள். இவ்வுண்மையைத் தெய்வப்புலவரும்,

> ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது.'

என்னும் குறளால் உலகோருக்கு உணர்த்தியிருக்கின்றார்.

இவ்வளவு பழமையும் பெருமையும் வாய்ந்த வீட்டுக் கலையை, இன்று அறிவியல் முறையில், நமது கல்வி நிலையங்களில் கற்பிக்க வேண்டிய இன்றியமையாமை என்ன? வேகமாக முன்னேறிச் செல்லும் இன்றைய நாகரிக வெள்ளத்தில் வீட்டு வாழ்க்கையின் அடிப்படைகளான வழிபாடு, பத்தி, தியாகம் முதலிய அருங்குணங்கள் அடிபட்டு ஒதுக்கப்படாவண்ணம் பாது காக்க வேண்டும். நமது பண்பாட்டிலும் ஆன்ம வாழ்க்கையிலு முள்ள உயர்ந்த கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு ஆண்மையையும் ஆற்றலையும் அளிக்கும் ஒரு கல்வித்திட்டம் அமையவேண்டும். மாறிக்கொண்டே வரும் வாழ்க்கைத் தரம், கல்வி நிலை, மனித உள்ளப்போக்குகள், சமூக வாழ்க்கை முதலியனவற்றிற்கு ஏற்றாற்போல வீட்டுக் குடும்பமும் மாறுபடு கின்றது. பழைய மரபுகள், கட்டுப்பாடுகள், கடமைகள் முதலியவைகள் பல, புதுமைப் பெண்களின் வாழ்க்கையில் இடம் பெறுவதற்கில்லை. மின்சாரம், பொறிகள், புதுப் போக்கு வரத்து வசதிகள், வெளிநாட்டுப் பண்பாடு, முன்பின் பார்த்திராத புதிய உணவுகள், ஆடைகள், பொம்மைகள், உள்ளத்தின் உண்மைகள், பொருளாதாரம் ஆகியவை குடும்ப வாழ்க்கைக்குக் கல்வியின் தேவையைக் காட்டுகின்றன. இக்காலத்தில் பல பெண்கள் சமூக நலத்திற்காகவும் தம் தேவைகளுக்காகவும் வீட்டிற்கு வெளியே வேலை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட் டிருக்கிறது. மக்கள் ஆட்சியில், அரசியலில் பெண்களுக்கு ஏராளமான வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. இத்தனை மாறுதல் களையும் பயன்படும் முறையில் சமாளிக்கப் பெண்களுக்கு மனையியற்கல்வி மிக மிக வேண்டற்பாலது.

மனையியல், கல்வித் துறையில் ஒரு முக்கிய பாடமாகச் சமீபத்தில்தான் இடம் பெற்றது. 1908-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் டாக்டர் ரிச்சர்ட்ஸ் என்ற அம்மையார், பொருள்நூல் துறையில் பெரும்புலமை அடைந்திருந்தும், அது தம் குடும்ப வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படவில்லை என்பதை உணர்ந்து, பெண்கள் கூட்டமொன்று கூட்டி, 'அமெரிக்க மனையியல் சங்கம்' என்ற மாபெருநிலையத்திற்குக் கால்கோள் நிறுவினர். நமது நாட்டில், 1932-ஆம் ஆண்டில், அனைத்

திந்தியப் பெண்கள் சங்கத்தின் முயற்சியால், டில்லி மாநகரத்தில் மனையியல் கற்பிப்பதற்காகவே லேடி இர்வின் கல்லூரி நிறுவப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் 1952-ஆம் ஆண்டில், சென்னையில் நிகழ்ந்த கூட்டத்தில் இந்திய மனையியல் சங்கம் நிறுவப் பெற்றது. இன்று சென்னை உட்படச் சுமார் 16 பல்கலைக் கழகங்களிலும் ஏராளமான உயர்தரப் பள்ளிகளிலும் மனையியல் பாடமாய் இருக்கிறது. ஆதாரக் கல்வியிலும் பல்செயல் திட்டத்திலும் மனையியல் சேர்க்கப்பட்டுள்ளது.

மனையியல் என்பது குடும்ப வாழ்க்கைக்கு இன்றியமையாத கல்வியை அளிப்பது. வீடும் குடும்பமுந்தான் ஒரு நாட்டின் ஆற்றல்களாம். ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளப்பது குடும்ப வாழ்க்கை. வாழ்க்கையின் குறிக்கோள்களை அமைப்பது வீடு. ஆன்ம வாழ்க்கையைத் தருவது அதன் சூழ்நிலை. எதிர்கால மன்னர்களான குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது வீடு; என்றும் மாருத இன்பத்தையும் சிதைக்க முடியாத குணத்தையும் அளிப்பது இல்லம். தனி மனிதனுடைய வாழ்க்கைக்கும், சமூக வாழ்க்கைக்கும் இன்றியமையாத பல கூறுகளைக் கொண்ட குடும்பத்தைச் சீர்பெற நடத்தக் கற்பிப்பது மனையியல். கல்வியின் நோக்கங்களில் சிறந்தவையான சமூக உணர்ச்சி, ஒழுக்கம், மன நிறைவு, சுகம், ஒழுங்கான குடும்ப வாழ்க்கை, தொழில் திறமை, ஓய்வு நேரத்தை வளம்படப் பயன்படுத்தல் ஆகியவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டது மனையியல். ஆகவே, மனையியலும் கல்வியும் ஒன்றேயாகும்.

வாழ்க்கையின் உயர்ந்த இன்பமே மனையியலின் குறிக்கோள். அதைப் பெறுவதற்காக அது பல கலைகள், அறிவியல் ஆகியவற்றின் அறிவைப் பயன்படுத்தி, மனிதப் போக்கைச் சரிவர வகுக்கிறது. வாழ்க்கைக்குறிக்கோளைத் தந்து, அக்குறிக்கோளைத் தெளிவாக்கி, அதை அடைய வழி காட்டி, மனித உள்ளத்தைப் பண்படுத்திக் குடும்பத்தை மலர வைத்து, சமூகத்தை வனப்புறுத்துகிறது. ஆகவே, அது எக்காலத்திலும் எத்தேசத்தினருக்கும் ஆண், பெண், இளைஞர், முதியோர் ஆகிய பலதரப்பட்டவர்களுக்கும் பயன்படும் செல்வமாவதுடன், மக்கள் நலத்தையே முதலில் வைப்பதால், கல்விக்கு உயிர் நாடி போலாகிறது.

வாழ்க்கையின் அன்றுடத் தேவைகளாகிய உணவு, உடை, வீடு, பணம், உடல் வளர்ச்சி, உடல்நலம், குழந்தைகள் வளர்ப்பு, நோயில் பாதுகாப்பு, அழகு செய்தல், சமூகக் கடமைகள் ஆகிய பல துறைகளைக் கொண்டது மனையியல். அது இசை, வரலாறு, கலையழகு, பண்பாடு, இறை வழிபாடு ஆகியவற்றை அடிப்

படையாகக்கொண்டு, வீட்டழகையும் கற்பிக்கின்றது; "தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ருங்கு ஐம் புலத்தாறு ஓம்பல் தலை," என்ற கடமைகளைக் கொண்டது. மேற்கண்ட துறைகளைக் கற்பிப்பதற்கு அறிவியல் இன்றியமை யாதது. உணவு, உடை, வீட்டுப் பொருளாதாரம், உடல் நலம் ஆகியவற்றை நன்கு அறிந்து ஆராய்வதற்காக அவற்றிற்கு அடிப்படையான அறிவியல்கள், பொருளியல்கள், உயிர் உடற் கூற்றியல்கள், உளவியல், கலை, கட்டடவியல் முதலியன எல்லாம் மனையியல் கல்வித் திட்டங்களில் சிறந்தவை. இந்த அறிவியற் கலைகளால் ஆன அடிப்படையின்மேல், மனையியல் துறைகளான உணவு, உடை, வீடு, உடல் நலம், குழந்தை வளர்ப்பு, சமூகப் பற்றுகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

உணவுத் துறையில், அறிவியல் முறையில் உணவின் தன்மை, பொருளியைபுக் கூறுகள், தேவைகள், உடல் வளர்ச்சிக்கேற்ற உணவுகள், நோயுற்றுழி என்ன தேவை என்பனவற்றைத் தெரிந்துகொள்ள் வேண்டும். பொருட் குறைவாலும், அறிவுக் குறைவாலும், உணவுக் குறைவாலும் நோய்கள் நமது நாட்டில் மிக்குள்ளன; அவற்றை எங்ஙனம் தவிர்ப்பது? கிடைக்கும் உணவைச் சிறந்த வகையில் பயன் படுத்துவது எங்ஙனம்? உணவுக்கு உடலில் ஏற்படும் பொருளியைபு மாறுதல்கள் என்ன என்பவற்றையும் அறிதல் வேண்டும்.

'உடையைப்பற்றிக் கல்லூரியில் படிப்பதற்கு என்ன இருக் கிறது?' என்று நினைக்கலாம். உடையின் தன்மை, அதன் பொருளியைபுக் கூறுகள், குணங்கள், நெசவு, நிறத்தின் வன்மை, சுருங்குவது நீள்வது, பலவிதமான பட்டு, கம்பளி, செயற்கைப் பட்டு, பருத்தி, லினன் முதலிய துணிகளின் நிறைகள், குறைகள், உடையை அமைப்பது, தைப்பது, அந்தந்த வயதினருக்கு ஏற்ற உடைகளை அமைப்பது, நலத்திற்கும் மனமகிழ்ச்சிக்கும், வயதிற்கும் தட்ப வெப்பத்திற்கும் அழகுக்கும் தகுந்தபடி உடுத்து வது, உடைகளைப் பேணுவது, அவற்றைச் சிறந்த முறையில் துவைப்பது, உலர்த்துவது, பெட்டி போடுவது, கம்பளி, பட்டு முதலியவற்றைப் பூச்சிகள் அரிக்கா வண்ணம் பாதுகாப்பது, கிழிந்த துணிகளைத் தைப்பது முதலியன அறிய வேண்டி யவையாம்.

வீட்டைப் புதிதாகக் கட்டுவதானல் உடல் நலம், வெளிச்சம், நடமாட்ட வசதி, அழகு, தொழில் முதலியவற்றை மனத்தில் கொண்டு அதைக் கட்டுவது நல்லது. ஏற்கெனவே கட்டியதாகில் வீட்டை வசதிக்கேற்ப ஒழுங்கு செய்துகொள்வது,

வீட்டுக்கும் பணத்திற்கும் பண்பாட்டுக்கும் ஏற்ற சாமான்கள் மேசை நாற்காலி முதலியன வாங்குவது, அழகுக்கும் உணவுத் தேவைக்கும் ஏற்பத் தோட்டம் போடுவது முதலியன கவனிக்கப் படவேண்டும். வீட்டுப் பொருளியல், வரவுக்குத் தக்க செலவு செய்வது, எதிர்காலத்திற்குப் பொருள் சேர்த்து வைப்பது, வீட்டைத் திறமையாக நடத்திப் பலவிதச் சிக்கன முறைகளைக் கண்டுபிடித்துக் கையாண்டு பேரின்பம் பெறுவது போன்ற வற்றைக் கவனிக்க வேண்டும்.

'அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.'

என்பதற்கு இலக்காக மனைமாட்சியை அமைக்க வேண்டும்.

நலத்தைப்பற்றி நாம் படிக்க வேண்டுவது மிகவுள்ளது. உடல் நலமும் உள நலமும் ஒன்றோடொன்று இயைந்து பொருந்தியவை. நலமுள்ள உடலில்தான் நலமுள்ள உள்ளம் அமையும். ஆகவே, நலத்தைச் சார்ந்த பழக்க வழக்கங்கள், கொள்கைகள், உண்ணும் உணவு, குடிக்கும் தண்ணீர், உறையும் இடம், அணியும் ஆடை, நோய்க்குக் காரணமான அணுக்கள் அவற்றைத் தவிர்க்கும் முறைகள், நோயுற்ற போது எடுத்துக் கொள்ளவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள், நோயுற்றோரைப் பராமரிக்கும் முறைகள் ஆகியவை சிறப்பாகக் கவனிக்க வேண்டுபவை.

வருங்கால மன்னர்களான நம் குழந்தைகள் வீரத்துடன், ஆண்மையுடன், உண்மையுடன் வளர, இளமையிலேயே அவர் களுக்கு நல்ல சூழ்நிலையை வீட்டில் நாம் அமைத்துத் தர வேண்டும். குழந்தைகள் உடல், உள்ள வளர்ச்சியிலுள்ள பருவங்கள், மாறுதல்கள், அவர்களுக்கு ஏற்ற உணவு, உடை, உறைவிடம், நல்ல பழக்கங்கள், விளையாட்டு, கல்வி ஆகிய வற்றை எப்படித் தருவது என்பன பற்றிக் குழந்தை வளர்ப்புத் துறையில் அறிவு புகட்ட வேண்டும்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.'
'தந்தை மகற்குஆற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்.'

என்ற திருக்குறள்கள் குழந்தைகளை வளர்ப்பதில் உள்ள கடமை களைக் காட்டுகின்றன அல்லவா?

மனிதன் என்றுமே தனியாக வாழ முடியாது. உலகத்தோடு ஒத்து, ஒன்றுகக் கூட்டுறவுடன் காரியங்களைச் செய்ய, பழக, கல்வி நிலையங்கள் உதவ வேண்டும்.

குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் தேவைகள் அனைத்தையும் திறம்படச் சமாளிக்கத் தக்க ஆற்றலையும் திறமையையும் மனையியல் வழியாகப் பெற முடியும்.

‘இல்லதென் இல்லவள் மாண்பானல்? உள்ளதென்
இல்லவள் மாணக் கடை?’

என்ற பொன்னுரையை இக்காலத்தில் உறுதிப்படுத்தவும் பெண்மையைக் காக்கவும் உதவுகிறது மனையியற்கல்வி.

மனிதனை ஆக்குவதும் அழிப்பதும் அவன் சூழ்நிலை. அதனை ஆக்கமுறையில் அமைத்துத் தருவது பெண்ணின் பெருங் கடமை. குழந்தை வளர்வதற்கும், அன்பு அரும்பி மலர்வதற்கும், முதுமையில் ஓய்வும் இன்பமும் கிடைப்பதற்கும், தெய்வ அன்பும் பண்பாடும் சிறந்து ஓங்குவதற்கும் வீடே சிறந்த இடம். அதை அழகுடன் வைத்துப் பாதுகாக்க மனையியற்கல்வி இன்றியமையாதது.

### அருஞ்சொற்பொருள்

மனையியல்-குடும்பக் கலை. பரிவுரை-ஆதரவு மொழி. பட்டறிந்தும்-அனுபவத்தால் அறிந்தும். குழுவினர் - கூட்டத்தார். தொன்று தொட்டு - பழங்கால முதல். மரபுகள் - பழக்க வழக்கங்கள். ஆற்றினர் - செய்தனர். கால்கோள் - அடிப்படை. குறிக்கோள் - நோக்கம். உயிர் உடற்கூற்றியல்கள் - உயிரைப்பற்றியும் உடல் அமைப்பைப்பற்றியும் கூறும் நூல். உளவியல் - மனத்தின் இலக்கணம். நோயுற்றுழி - நோய் வந்தவிடத்து. பேணுவது - போற்றுவது. அவையத்து - சபையில்.

### வினாக்கள்

1. நம் நாட்டில் மனையியல் கலையின் நிலையும் அது பற்றி நிலவும் தவருன கருத்துகளும் யாவை?
2. வீட்டுக் கலையின் பழமையையும் பெருமையையும் பற்றிக் கூறப்பட்டுள்ளன யாவை?
3. கல்வித் துறையில் மனையியல் முக்கிய பாடமாக இடம் பெற்றுள்ள வரலாற்றை விவரிக்க.
4. மனையியலும் கல்வியும் ஒன்றே - விளக்குக.
5. கல்விக்கு உயிர் நாடி மனை இயல் எனப்படுவது ஏன்?
6. மனையியல் கலையில் அமைந்துள்ள பல துறைக் கலைகளை எழுதுக.
7. வீட்டமைப்பிலும், வீட்டுப் பொருளியலிலும் கவனிக்கப்பட வேண்டுபவை யாவை?
8. குழந்தை வளர்ப்புத் துறையில் கற்பிக்கப்படவேண்டியவை யாவை?

# 18. எளிமையும் வலிமையும்

பண்டித வித்துவான் திரு. நா. பார்த்தசாரதி அவர்கள்

மாலை நேரம். குதிரை மலையின் நீலச் சிகரங்களுக்கு அப்பால் கதிரவன் மறைந்துகொண்டிருந்தான். தகடூர் வீதிகள் ஆரவாரமும் கோலாகலமும் நிறைந்து விளங்கிக்கொண் டிருந்தன. அந்த இனிய நேரத்தில் அதியமானும் ஔவை யாரும் புற நகரில் இருந்த பெரிய ஏரி ஒன்றின் கரை ஓரமாக உலாவிக்கொண்டிருந்தனர்; தமிழ்த் தாயாகிய ஔவையாரிடம் அரும்பெரும்பாடல்களையும் அறிவுரைகளையும் கேட்டுக் கொண்டே இயற்கை அழகு மிகுந்த இடங்களில் அவரோடு உலாவுவது அதியமானுக்கு விருப்பமான ஒரு செயல்.

உலாவிக்கொண்டே வந்தவர்கள் ஏரியின் மிகப் பெரிய இறங்கு துறை ஒன்றின் அருகிலிருந்த மருத மரத்தின் அடியில் அமர்ந்தனர். அப்போது அந்தத் துறையில் அரண்மனையைச் சேர்ந்த பட்டத்து யானையைப் பாகர்கள் குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்கள். ஊர்ச் சிறுவர்கள் யானையைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

தண்ணீருக்குள் ஒரு சிறிய கருங்கல் மலை கிடப்பதைப் போன்ற தோற்றமளித்த யானையைக் காண்பதில் இளைய உள்ளங்களுக்கு ஒரு தனி ஆர்வம்.

ஔவையாரும் அதியமானுங்கூடச் சிறிது நேரம் பேசு வதை நிறுத்திவிட்டு நீர்த்துறையின் புறமாகப் பார்வையைச் செலுத்தியிருந்தனர்.

பாகர்கள் இரண்டு மூன்று பேர் யானையின் உடலைத் தேய்த்துக் கழுவிக்கொண்டிருந்தனர். ஒரு பாகன் அருகில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சிறுவர்களில் சிலரை அழைத்தான். உடனே சிறுவர்களில் சிலர் அவனருகில் சென்று, 'என்ன?' என்று கேட்டார்கள்.

'தம்பிகளா! உங்களுக்கு ஒரு வேலை தருகிறேன். செய் வீர்களா?'

'என்ன வேலை? சொல்லுங்கள். முடிந்தால் செய்கிறோம்,' என்று சிறுவர்கள் மறுமொழி கூறினார்கள்.

'இதோ இந்த யானையின் தந்தம் இருக்கிறது பாருங்கள்! நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து இதைத் தேய்த்துக் கழுவி விட வேண்டும்.'

'ஐயையோ! யானை, கொம்பை அசைத்துக் குத்திவிடுமே!' என ஒரே குரலாக எல்லாச் சிறுவர்களும் மருண்டு அலறினார்கள்.

'அது உங்களை ஒன்றும் செய்யாது! நான் பார்த்துக் கொள்கிறேன். தைரியமாக அருகில் வந்து இரண்டு கொம்புகளையும் கழுவுங்கள்!' என்று பாகன் சிறுவர்களை ஊக்குவித்தான்.

சிறுவர்கள் பாகனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, யானையை நெருங்கி, அதன் நீண்ட பருமனான தந்தங்கள் இரண்டையும் தேய்த்துக் கழுவத் தொடங்கினார்கள். யானை அசையாது தண்ணீரில் முன் போலவே கிடந்தது. சிறுவர்களுக்கு நம்பிக்கையும் துணிவும் அதிகமாகிவிட்டன. 'யானை நிச்சயமாக நம்மை ஒன்றும் செய்யாது,' என்ற தைரியமும் ஏற்பட்டுவிட்டது.

ஒரு சிறுவன், மத்தகத்தின்மேல் ஏறிப் பிடரியில் உட்கார்ந்துகொண்டு அடிக்கொம்பைக் குனிந்து தேய்த்தான். இன்னொருவன், கொம்பின் அடி நுனியைக் கழுவுவதற்காக யானையின் கடை வாய்க்குள் தன் சிறு கையை நுழைத்தான். மற்றொருவன், துதிக்கையைப் பிடித்துத் தொங்கிய வண்ணம் கொம்பைத் தேய்த்தான். மற்றொருவன், கால்மேல் ஏறி நின்று தேய்த்துக்கொண்டிருந்தான். 'இது யானை! அச்சப்படத் தக்கது' என்ற எண்ணமே அந்தச் சிறுவர்களின் மனத்திலிருந்து மறைந்துவிட்டதாகத் தோன்றியது. ஏதோ சிறு குன்றின்மேல் ஏறி விளையாடுவது போல எண்ணிக்கொண்டு யானையின்மீது அச்சமின்றி அமர்ந்திருந்தார்கள்.

யானை அவ்வளவிற்கும் இடமளித்துக்கொண்டு அமைதியாக நீரிற்கிடந்தது.

'அதியா! பார்த்தாயா, வேடிக்கையை!'

'தாயே! உரிமை பெருகப் பெருகப் பயம் குறைந்து நம்பிக்கை வளர்கிற விதத்தை இது காட்டுகிறது.'

'அதியா! யானை ஒன்றும் செய்யாது என்ற எண்ணமே இந்த இளஞ்சிறார்களை இவ்வளவு தைரியசாலிகளாக்கி விட்டிருக்கிறது. சற்று முன் பாகன் அழைத்தபோது மருண்டவர்கள் இதே சிறுவர்கள்தாம். இப்போது பார், இவர்கள் அச்சமின்றி அதன்மீது ஏறி விளையாடுவதை!'

''ஆமாம்! நானும் கவனித்தேன், தாயே!'

இதற்குள் யானையை நீராட்டி முடித்துவிட்டதால், பாகன் சிறுவர்களை விலகிக்கொள்ளுமாறு கூறி, யானையை எழுப்பி அரண்மனைக்கு ஓட்டிச் சென்றான்.

இருட்டிவிட்டதால் அதியமானும் ஔவையாருங்கூட அரண்மனைக்குத் திரும்பினர். யானையையும், சிறுவர்கள் அச்சமின்றி அதன் கொம்புகளைக் கழுவிய நிகழ்ச்சியையும் அதியனும் ஔவையும் மறக்கவேயில்லை.

சில நாள்களுக்குப் பின்பு நண்பகலில் வெயில் அனலாகக் காய்ந்துகொண்டிருந்தது. அதியமானும் ஔவையாரும் அரண்மனை மேல் மாடத்தில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தனர்.

திடீரென்று தெருவில் மக்கள் பயங்கரமாக அலறிக் கொண்டும், ஓலமிட்டுக்கொண்டும் ஓடுகிறாற்போல ஒலிகள் கேட்டன. இடி முழக்கம் போல யானை பயங்கரமாகப் பிளிறிக் கொண்டு வீதியதிரப் பாய்ந்தோடி வரும் ஓசையும் அதையடுத்துக் கேட்டது

அதியமான் துணுக்குற்று எழுந்தான். ஔவையாரும் ஒன்றும் புரியாமல் அவனைப் போலவே பதறி எழுந்தார்.

காவலன் ஒருவன் கலங்கிய நிலையில் அங்கு ஓடி வந்தான்.

"அரசே! பட்டத்து யானைக்கு மதம் பிடித்துவிட்டது. அது பாகர்களுக்கு அடங்காமல் தெருவில் பாய்ந்து நெறிகெட்டு ஓடுகிறது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. நகரெங்கும் ஒரே குழப்பமும் பீதியும் மலிந்துவிட்டன."

காவலன் கூறியதைக் கேட்ட அரசன் விரைந்தோடி மேல் மாடத்தின் வழியே தெருவில் பார்த்தான்; ஔவையாரும் பார்த்தார். பொங்கி வரும் பெருங்கடல் திடீரென்று நகரினுள் கொந்தளித்து நுழைந்தது போன்று தெருவை அதம் செய்து சீரழித்துக்கொண்டிருந்தது மதம் கொண்ட பட்டத்து யானை. அதன் கூரிய பெரிய வெள்ளைக் கொம்புகளில் இரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது. எத்தனை மக்களைக் குத்திக் கொன்றதன் விளைவோ அது! கண்கள் நெருப்பு வட்டங்களாய்க் காட்சியளித்தன. மதநீர் மத்தகத்தை நனைத்தது. எல்லாவற்றையும் நொறுக்கித் தள்ளி ஓடிக்கொண்டிருந்தது யானை.

'என்ன செய்வது? எப்படி அடக்கச் சொல்வது?' ஒன்றுமே தோன்றாமல் நின்றுகொண்டிருந்தான் அதியமான்.

'எல்லாப் பாகர்களும் ஒன்றுகூடி எப்படியாவது யானையை அடக்குமாறு நான் கட்டளை இட்டதாக அவர்களிடம் போய்க் கூறு'—அதியனின் கட்டளையைக் கேட்ட காவலன், பாகர்களைத் தேடி ஓடினான். பாகர்களும் யானையை அடக்கிவிட்டதாகக் காவலன் ஒருவன் விரைந்து வந்து அறிவித்தான்.

'அதியா, பார்த்தாயா?...' ஔவையார் சிரித்துக்கொண்டே அவனை நோக்கிக் கேட்டார்.

'எதைக் கேட்கிறீர்கள் தாயே?'

'அன்று ஏரியில் சிறு பிள்ளைகள் கொம்புகளைக் கழுவும் போது சாதுவாகத் தண்ணீரில் கிடந்த இந்த யானையின் மதம், இன்று எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது பார்த்தாயா?'

'பயங்கரம் மட்டுமா? எத்தனை உயிர்களுக்குச் சேதம் விளைவித்ததோ!'

'அதியா! நீயும் இப்படி ஒரு யானை போன்றவன் தான்!'

அதியமான் திடுக்கிட்டான்; ஒன்றும் விளங்காமல் ஔவையாரை ஏறிட்டுப் பார்த்தான்.

'கொம்பு கழுவப்படும் போது ஊர்ச் சிறுவர்களிடம் அமைதியாகக் கட்டுண்டு கிடந்த யானையைப் போலப் புலவர்களாகிய எங்கள் அன்புக்கு மட்டும் நீ கட்டுப்படுகிறாய். உன் பகைவர்களுக்கோ, இதோ மதம் பிடித்து ஓடும் இந்த யானையை ஒத்தவனாய் இருக்கிறாய்...!'

புதிராகத் தொடங்கிய பேச்சுப் புகழ்ச்சியாய் மாறியதும் அதியமான் நாணத்தோடு தலை குனிந்தான்.

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே; மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே."

(புறநானூறு, 94)

[குறுமாக்கள் - சிறுவர்கள். வெண்கோடு - வெண்மையான தந்தம். கழாஅலின் - கழுவுதலால். களிறு - யானை. துன்னரு - நெருங்க முடியாத. கடாஅம் - மதம்.]

'எளிமை வலிமை'யின் இயல்புக்கு இப்பாடல் ஓர் நல்லோவியமாகும்.

### அருஞ்சொற்பொருள்

புறநகரில் - நகருக்கு வெளியில். ஆர்வம் - ஆசை. மத்தகம் - யானையின் தலை. நண்பகல் - நடுப்பகல். நெறி கெட்டு - வழி தவறி. புதிர் - மறைவு. இனியை - இன்பம் தருபவனாகின்றாய். இன்னாய்- துன்பம் தருபவனாகின்றாய். ஒன்னாதோர்க்கு - பகைவர்களுக்கு. நல்லோவியம் - அழகிய சித்திரம்.

### வினாக்கள்

1. நீர்த்துறையில் நீராட்டிக்கொண்டிருந்த யானையைக் கண்டு அதியனும் ஔவையும் நிகழ்த்திய உரையாடலை வரைக.
2. மதங்கொண்ட யானை அடக்கப்பட்ட பின் ஔவையும் அதியனும் நிகழ்த்திய உரையாடலைச் சுருக்கி வரைக.
3. புதிராகத் தொடங்கிய பேச்சு, புகழ்ச்சியாக மாறியது - விளக்குக.
4. அதியனின் எளிமையையும் வலிமையையும் ஔவையார் எங்ஙனம் விளக்கியுள்ளார்?

# 19. தமிழிசை

பல்லிசை வல்லுநர் சங். மி. மிக்கேல் சுவாமிகள், சே. ச.

இசை, தமிழோடு பிறந்த கலை; தமிழோடு வளர்ந்து என்றும் இணை பிரியாது இயங்கும் கலை. தமிழ் மொழியானது பண்டைக்காலமுதல் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. இவற்றுள் நடு நாயகமா யமைந்த இசையென்பது இயற்றமிழிலும் உண்டு; நாட கத்தமிழிலும் உண்டு. தமிழே இசை உருவாக அமைந் திருந்ததெனலாம். பண்டைப் பனுவல்கள் பலவும் பாக்களாய் யாப்புற்றுப் பண்ணோடு பாடப்பட்டு வந்தன. புலவர்கள் செய்யுளுக்கு உரையில் விளக்கம் தரும்போதும் பாடினார்கள். பொதுமக்கள் கடிதங்களை வாசிக்கும்போதும் பாடுகின்றனர். பாடம் என்பது பாடப்படுவது. பாடம் படித்தல் என்பது ஒரு நூலைப் பாட்டாகப்படித்து, மனத்தில் இருத்திப் புத்தியில் சிந்தித்துக் கல்வி கற்றல் என்று பொருள்படும். இவ்விதம் இசையை முத்தமிழுள் சேர்த்து அதற்கான இலக்கண இலக்கியங்கள் இயற்றிய தமிழர், இசைக்குத் தங்கள் வாழ்வில் தலைசிறந்த இடமளித்துப் போற்றி வந்தனரென்பது விளங்கு கின்றது.

இசையென்னும் சொல்லுக்கு 'வயப்படுத்துவது' அல்லது 'ஒன்றுபடுத்துவது' என்பது பொருள். இசை புத்தி, மனம், புலன்கள் ஆகியவற்றை ஒன்றுபடுத்துகிறது. பாடுவோரையும் கேட்போரையும் பிணிக்கிறது. பாட்டு, தாளம், பண் முதலிய வற்றையும், இசைக் கருவிகளையும் ஒன்றுவிக்கின்றது. இயற் றமிழையும் நாடகத் தமிழையும் இணைக்கின்றது. சொல்லையும் பொருளையும், உள்ளத்தையும் உணர்வையும் ஒன்று கூட்டு கின்றது. மக்களைத் தனது இனிமையில் ஈடுபடச் செய்யும் இயல்புடையதாயும் இருப்பதால் இக்கலைக்கு இசை என்று பெயரிட்டனர் பண்டைத் தமிழறிஞர். இசைத்தமிழ் என்பது "பண்ணோடு கலந்து தாளத்தோடு கூடி இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுகளாலும், கொடுந்தமிழ்ப் பாட்டுகளாலும் இயன்ற இலக்கியங்களும், அவற்றின் இலக்கணங்களுமாகிய நூல்களின் தொகுதி" யென்று பரிதிமாற்கலைஞர் கூறுகின்றார்.

இயற்றமிழ்ப் பண்டிதரைப் புலவரென்றும், இசைத்தமிழ் வல்லுநரைப் பாணரென்றும், நாடகத் தமிழில் சிறந்தவரைக் கூத்தரென்றும் வழங்குவது பழந்தமிழர் மரபு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த சங்ககாலத்தில் தமிழிசை நன்கு தழைத்து வந்ததென்பதற்குத் தக்க சான்றுகள் இருக்கின்றன. இயற்றமிழ்ச் சங்கங்களைப்போல இசைச் சங்கமொன்றும் இருந்தது. அதில் புலவர்களிருந்து பல இசைப் பயிற்சிகளும் ஆராய்ச்சிகளும் செய்து வந்தனரென்றும், இசையைப் பற்றிய பல இலக்கண நூல்கள் இயற்றினரென்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன. பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பேரிசை, சிற்றிசை என்ற பல இசை இலக்கண நூல்கள் முதல் இரண்டு சங்க காலங்களிலும் எழுதப் பட்டன. இலக்கண நூல்களே இத்தனை இயற்றப்பட்டிருந்தால், இவற்றிற்கு இலக்கியங்களாகிய இசைத்தமிழ்ப் பாடல்கள் எத்துணை விரிவாக இயற்றிப் பயிலப்பெற்றிருத்தல் வேண்டும்! ஆனால், தமிழகத்தின் பெரும்பாகம் கடல் கொள்ளப்பட்டமையால் மேற்கூறிய நூல்களும் மறைந்தன. எனினும், கடைச் சங்க காலத்து நூல்களில் சில காப்பாற்றப்பட்டன. அவற்றில் தனி இசை நூல்கள் காணவிடினும், இசையைப்பற்றிப் பரிபாடல், கலித்தொகை முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. இந்நூல்களிலிருந்து பண்டைத் தமிழ் இசை நுணுக்கங்களைப் பற்றியும், இசைக்கருவிகளைப்பற்றியும் பல அரிய விவரங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

பாணர்களும் அவர்களுடைய மனைவியராகிய பாடினியரும் பழந்தமிழகத்தில் ஒரு தனி வகுப்பைச் சேர்ந்தவர்கள்; கலை உணர்ச்சியே உருவானவர்கள். அவர்களுக்குச் சொந்த வீடுகள் இல்லை. ஊருக்கு வெளியே, இயற்கை வளமுள்ள இடங்களில் தங்கி, ஊர் ஊராய்ச் சென்று மக்களை இன்னிசையால் மகிழ்வித்து வந்தனர். பல குறுநில மன்னர் அவையிற்சென்று பாணன் யாழ் வாசிக்க, விறலி நடனமாடுவாள். வேந்தர் செருக்களத்து வெற்றி கொண்ட போதும், வேட்டையாடி மீண்டு வந்த போதும், களைப்பை நீக்கி மகிழ்ச்சியளித்தது பாணனின் யாழிசையே. மன்னரின் மகிழ்ச்சி பாணன் கையில் பொற்றாமரையாய் மலர்ந்தது; பாடினி கழுத்தில் பொன் மாலையாய் மிளிர்ந்தது. இவ்வாறு மன்னரும் மதித்த பாடுந்தொழிலை மக்கள் எத்துணை மதித்திருப்பர்!

சிலப்பதிகாரம் கடைச்சங்க காலத்திற்குச் சற்றுப்பின்னர் எழுந்த நூல். இது இயல், இசை, நாடகமாகிய முத்தமிழணிந்து

உரையிடையிட்டு உள்ளத்தையள்ளும் காப்பியம்; பழந்தமிழரின் அறவாழ்வு, அருங்கலைச் சிறப்பு, அரசியல் மாண்பு, வாணிகப் பெருக்கம், குடிமக்கள் இயல்பு, கோமக்கள் பெருமிதம், பாட்டாளியுள்ளம் முதலியவற்றை நேர் நின்று விளக்கும் வரலாற்று இலக்கியம். புகார்க்காண்டம் அரங்கேற்று காதையில் மாதவி என்ற நாடகக் கணிகை அரங்கேறிய வரலாற்றை விளக்கும்போது இசைக்குரிய பல இலக்கணங் களைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர் இளங்கோ. சிலப்பதிகாரத் திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், மேற்கூறிய இலக்கணங்களை விரிவாக விளக்குவதுமல்லாமல், அவருடைய காலத்தில் வழக்கிலிருந்த பல இசை நூல் இலக்கணங்களைத் தமது உரைக்கு எடுத்துக்காட்டாகவும் கையாளுகின்றார்.

பண்டைக்காலத்தில் தமிழிசை இலக்கணச் சிறப்புடன் வளர்க்கப்பட்டு வந்தது. தமிழிசையில் 103 பண்களும் (இராகங்கள்) 3999 திறங்களும் வழங்கி வந்தன. இவற்றில் பெரும்பகுதி மறைந்துவிட்டது. இப்பண்களையே பிற்காலத்தில் தேவார, திருவாசகப் பாடல்களுக்குப் பயன்படுத்தினர். காலத்திற்கு ஏற்றவாறு பண்களைப் பகற்பண், இரவுப்பண், பொதுப்பண்ணென்றும்; ஐவகைத்திணைகளுக்கு ஏற்றவாறு குறிஞ்சிப்பண், முல்லைப்பண், மருதப்பண், நெய்தற்பண், பாலைப் பண்ணென்றும் வகுத்தனர். மலையில் வளரும் தினைக் கதிரைப் பறவைகள் அழித்துவிடாமல் பரண்மீதிருந்து காவல் காக்கும் குறமகள் குறிஞ்சிப்பாட்டுப் பாடுவாள். வேட்டையாடிக் களைத்துப் பூம்பொழிலில் இளைப்பாறும் மன்னர்களுக்கு முல்லைப் பாட்டுப் பாடினர் பாணர்.

நிலங்களுக்கேற்றவாறு பண்கள் இயற்றிப் பாடும் இவ் வழக்கம் பண்டைக் கிரேக்கரிடையிலும் இருந்தது. தங்களுடைய பரந்த நாட்டின் பல பகுதிகளில், அந்தந்த இடங்களுக்குரிய பண்கள் பல வழங்கி வந்தன. அப்பண்களைத் தமிழ்ப்பண்களோடு ஒப்பிடும் போது ஒரு வித ஒற்றுமை காணப்படுகின்றது. பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டிற்கும் கிரேக்க நாட்டிற்கும் இருந்து வந்த வாணிபத் தொடர்பை முன்னிட்டுத் தமிழ் இசைக்கும், கிரேக்க இசைக்கும் ஒருவிதத் தொடர்பு இருந்திருக்கலாம். ஆகையால், சில தமிழ்ப் பண் களோடு ஒற்றுமை காட்டும் சில கிரேக்கப் பண்கள், தமிழ்ப் பண்களைத் தழுவி எழுந்தனவென்று கூறுவதற்கு இடமுண்டு.

தமிழர் கையாண்ட பழம்பேரிசைக்கருவிகளுள் யாழ் முதலிடம் பெறுகிறது; இது மக்கள் குரலைப்போலப் பேசும் நரம்புக் கருவி. மொஹஞ்சதாரோவில் அகழ்ந்து எடுக்கப் பட்ட நாணயங்கள் சிலவற்றில் பண்டைத் தமிழர் கையாண்ட யாழின் உருவம் காணப்படுகிறது. ஆனால், இக்கருவி இன்று வழக்கிலில்லை. இதற்குப் பதில் வீணை, தம்பூரா முதலிய தந்திக்கருவிகளே வழங்கி வருகின்றன. மேலும், அக்காலத்தில் மத்தளம் போன்ற தோற்கருவிகளும், குழல் போன்ற துளைக் கருவிகளும் பல இருந்தன. போர்க்களத்தில் வீர வெறியூட்டும் பறை, பம்பை, முருடு, கரடிகை, திண்டி முதலிய இசைக் கருவிகள் இருந்தன. இவ்விதப் பல்வேறு கருவிகள் இசைந்து வெற்றியெட்டுத்திக்கும் எட்டக் கொட்டும் பொழுது, வீரர் தம் நரம்புகளில் வெறிகொண்டு வெற்றி பெற்றனர் எனக் கூறவும் வேண்டுமோ?

இசையானது இறைவன், இயற்கை, இன்பம் என்னும் மூன்று துறைகளை உள்ளடக்கி, உணர்ச்சி, ஊக்கம் தரக்கூடிய கலையாய் விளங்குகிறது. ஆகவே, தமிழர் இசையைச் செவிக்கு இன்பந்தரும் கலையாக மட்டும் கருதாமல், அறம், அன்பு, வீரம் முதலிய பண்புகளை வளர்க்கும் அருங்கலையாகவும் பயன்படுத் தினர். இசையை இறை வழிபாட்டுக்கு எவ்வளவு பயன்படுத் தினர் என்றால், அக்காலத் தமிழகத்திலுள்ள கோயில்கள் தமிழரின் கலைக்கூடங்களாய் விளங்கின. ஆடலும், பாடலும், சிற்பமும், சித்திரமும் அழகு பெற்று வளர்ந்து வந்தது இங்கு தான். இக்கலைக்கூடங்களில்தான் மூவர் தேவாரம், மணிவாசகர் திருவாசகம், ஆழ்வார்கள் திவ்வியப் பிரபந்தம் முதலிய தெய்வ பத்திப் பாடல்கள் தனித்தமிழ்ப் பண்களோடு பாடிப் பயிலப் பட்டு வந்தன.

இசை, மனிதனை இறைவனிடம் எழுப்புகிறது. ஏனென்றால், பாடும்போது மனிதன் தனது குரலைமட்டுமன்றி, தனது உள்ளத் தையும் உணர்ச்சியையும் மனத்தையும் கருத்தையும் உயர எழுப்பி இறைவனைத் தொழுகிறான். உலகில் தோன்றிய சமயங் கள் அனைத்திலும் இசை, இறை வழிபாட்டில் இன்றியமையாத இடம் வகித்துள்ளது. "ஒரு முறை பாடுவது இரு முறை செபிப்பதற்குச் சமம்," என்று புனித அகுஸ்தீன் கூறியுள்ளார்.

தமிழ் மக்கள் இசையைத் தங்கள் வாழ்க்கையோடு ஒட்டி வளர்த்து வந்தார்கள். நாட்டுப் பாடல்கள் நவரசங்களையும் எழுப்பி மக்கள் வாழ்க்கையை வளம்பெறச் செய்ய வல்லன. வண்டிக்காரன் பாடும் தெம்மாங்கில் ஈடுபட்டு வண்டிக் காளைகள்

மிகவும் பளுவான சுமையையும் இழுத்துச் செல்லுகின்றன; வண்டிக்காரனும் வெயிலின் கொடுமையையோ, பனியின் குளிரையோ பொருட்படுத்தாது பாட்டில் மெய் மறந்துள்ளான். சண்டித்தனம் செய்யும் குழந்தை தாயின் தாலாட்டில் மதிமயங்கி உறங்குகிறது. சுண்ணமிடிப்போர் சுவை மிகுந்த பாடல்களும், ஏற்றம் இறைப்போர் இசை நிறைந்த பாடல்களும், நெல்லைக் குற்றுவோர் வள்ளைப் பாட்டும், கலம் கடலில் செலுத்துவோர் கப்பற்பாட்டும், பள்ளியர் பள்ளும், குன்றக் குரவையும், ஆய்ச்சியர் குரவையும், ஆயன் ஊதும் குழலின் பாணியும், பாட்டாளி மக்கள் பாடும் பண்ணும், பாடினி ஆடல் கொள் பாணன் பாட்டும், பாரதி யாத்த புரட்சிக் கவியும், பண்டாரத்தார் திருப்பள்ளி எழுச்சியும், நெடுவழி கடப்போர் வழிநடைச் சிந்தும், காவடி சுமப்போர் காவடிச் சிந்தும், கணவனை இழந்த காரிகை குமுறலும், பொருகளம் விரையும் செருநர் பாட்டும், ஆண்டி பாடும் ஆனந்தக் களிப்பும், உடற்பயிற்சி விரவிய கும்மி யும், ஒயிலும், வரியும், வண்ணமும், நலங்கும், இலாவணியும் நெஞ்சை அள்ளுவன; ஒப்புரவு பயப்பன; துன்பம் துடைப்பன; இன்பம் திறப்பன. தொழிலாளர் இசையின் இனிமையில் ஈடு பட்டுத் தம் தொழில் வருத்தம் தோன்றப் பெருமல் தொழில் செய்து முடிக்கின்றனர். அகத்தில் காதலை வளர்த்தனர். புறததில் போர்க்களத்தில் விழுப்புண் பட்ட வீரர்களுக்கு இசை பாடிப் புண்ணை ஆற்றினர். இசையால் பயிர்களும் செழித்து வளர்கின்றன என்பதை அண்மையில் சீர்காழியில் செயல் முறையில் செய்து காட்டினர். இசையில்லா விழா இல்லை; இசைகேளாச் செவியில்லை; இசை பயிலா நாவில்லை.

இசையில் ஈடுபடாதவர் எவருமில்லை. கற்ருரும் கல்லாரும், ஆடவரும் பெண்டிரும், மாணவரும் ஆசிரியரும், அரசனும் ஆண்டியும், முதலாளியும் தொழிலாளியும் தம் உயர்வு தாழ்வு களை மறந்து இசையால் ஒன்றுபடுகின்றனர். கான்மாவும், புள்ளும், கடியரவும் இசையில் ஈடுபட்டுத் தங்கள் கொடுமையை யும் பகைமையையும் மறந்து ஒன்று கூடி மகிழ்கின்றன. பத்தர்கள் பரவசங்கொண்டு பரமனுடன் ஒன்றிவிடுகிருர்கள். இத்தகைய சிறப்புகள் பொருந்திய தமிழிசையை வளர்ப்போம். வாழ்க தமிழிசை! வாழ்க தமிழகம்!

அருஞ்சொற்பொருள்

பனுவல் - நூல். பண் - இராகம். கொடுந்தமிழ் - பேச்சு வழக்குத் தமிழ். சமயம் - மதம். காரிகை - பெண். செருநர் - வீரர். விழுப்புண் - முகத்திலும் மார்பிலும் பட்ட புண். கான்மா - காட்டு விலங்கு.

## வினாக்கள்

1. இசைத் தமிழின் சிறப்பு யாது? புலவர்கள் அதை எவ்வாறு ஆதரித்து வந்தார்கள்?
2. இசை என்று இதற்குப் பெயரிடக் காரணங்கள் யாவை?
3. பாணர்கள் என்பவர்கள் யாவர்? அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி நீ அறிவது யாது?
4. சிலப்பதிகாரத்திலிருந்தும், அடியார்க்கு நல்லார் அதற்கு எழுதிய உரையிலிருந்தும் இசையைப்பற்றி நாம் அறிவன யாவை?
5. ஐவகைத் திணைகளுக்கு ஏற்றவாறு பண்கள் அமைந்திருந்தன என்பது எவ்வாறு தெரிகிறது?
6. 'தமிழ் நாட்டுப் பண்டைக் கோயில்கள் கலைக்கூடமாய் விளங்கின' என்பது எவ்வாறு பொருந்தும்?
7. இறை வழிபாட்டில் இசை பெற்றுள்ள நிலை யாது?
8. தமிழிசை, மக்கள் வாழ்க்கையோடு ஒட்டியது என்பதை விளக்குக.

# 20. அறிஞர் பெர்னுட்ஷாவின் வியத்தகு வாழ்வு

டாக்டர் மு. வரதராசனுர், எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்டி.

இந்த நூற்ருண்டின் முற்பகுதியில் ஆங்கில மொழி வாயிலாக உலக மக்களுக்கு அறிவை வாரி வழங்கிப் புகழ் பெற்ற அறிஞர்களுள் தலை சிறந்தவர் இருவர். ஒருவர் ஜார்ஜ் பெர்னுட் ஷா; மற்ருெருவர் எச். ஜி. வெல்ஸ். இவர்களுள் அறிஞர் ஷா மூத்தவர்; அறிஞர் வெல்ஸ் இளையவர். ''பெர்னுட் ஷாவைப்போல் எழுத்தாளராய் விளங்க வேண்டும் என்று இளமையில் ஆவல் கொண்டேன்,'' என்றும், ''ஷாவின் மூளையைப்போல என் மூளை ஆற்றல் மிக்கது அன்று,'' என்றும் எச். ஜி. வெல்ஸ் தம் வரலாற்றில் எழுதியுள்ளார். இவ்வாறு, வெல்ஸின் மதிப்பையும் பெற்று விளங்கிய ஷா, தொண்ணூற்று நான்காம் வயது வரையில் தம் சிற்றூரில் உடல் நலத்தோடும் அறிவுத் தெளிவோடும் வாழ்ந்து வந்தார்; உலகம் சீர்படும் என்று நம்பி இறுதி வரை வழி காட்டி வந்தார். அறிஞர் வெல்ஸ் வயதில் இளையவராயினும், நோய்வாய்ப்பட்டு வருந்தி, லண்டனில் படுக்கையாய்க் கிடந்து, போர்த்தொல்லைகளைக் கண்டு பெருமூச்சு விட்டு, எதிர்கால உலக அமைதியில் நம்பிக்கை குறைந்தவராய்த் தம் எழுபத்தொன்பதாம் வயதில் உயிர் நீத்தார்.

ரஸ்கின் என்னும் ஆங்கில நாட்டு அறிஞரும் நெடுங்காலம் வாழ்ந்தவர். ஆனுல், தம் முதுமையில் உடல் கெட்டு, உள்ளம் உடைந்து, உலகத்திற்காகப் பெருந்துன்பம் உற்றுப் பித்தர் போல மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். கார்லைல் என்னும் அறிஞரும் தம் இறுதி நாள்களில் நம்பிக்கை குலைந்து பெருந்துயரமே வடிவாய், காண்பவர் கவலைப்படத்தக்கவராய் அல்லல் உழந்தார். இன்னும், அறிஞர் பலர் முதுமையில் இவ்வாறே வருந்தியிருக்கின்றனர். ஆனுல், பெர்னுட்ஷா தம் தொண்ணூற்று நான்காம் வயதிலும் தெளிவு குன்ருமல், நாள் தவருமல் படித்து வந்தார். உணவு உண்ணச் சென்ற போதும் புத்தகமும் கையுமாகச் சென்ருர்; நாடகம் எழுதினுர்; கடிதங்களுக்குத் தம் கையாலேயே பதில் எழுதினுர்; அவற்றைத் தாமே தபால் நிலையத்திற்குக் கொண்டு சென்ருர்; தாம் கண்ட வழிகளின்படி உடல் ஓம்பினுர்; நாள்தோறும் உடல்

நலத்திற்குரிய எளிய பயிற்சிகள் செய்தார்; உலக நிலையில் உள்ள சிக்கலைக் குறித்து யாராவது அணுகிக் கேட்டால், அறிவுடையோர் வியக்கத்தக்க முறையில் நுட்பமும் திட்பமும் சுவையும் மிக்க வகையில் விடை கூறினார்; தாம் எழுதி வந்த கொள்கைகளை இறுதி வரையில் விடாமல் நிலைநாட்டி விளக்கி வந்தார்; உரிய கடமைகளை யந்திரம்போலத் தவறாமல் திருத்த மாகச் செய்து முடித்தார்; கவலை இல்லாமல் மகிழ்ச்சியோடு புன்முறுவலோடு விளங்கினார்; தள்ளாத வயதிலும் அறிவாற்றல் ஒரு சிறிதும் தளராதவராய் வாழ்ந்து வந்தார். இதற்குக் காரணம் என்ன?

மனிதனுடைய அறிவும் ஆற்றலும் எல்லாம் உடம்பில் உள்ளவை. உடல் நலம் உள்ள வரையில்தான் எவ்வளவு சிறந்த அறிவும் ஆற்றலும் வாழ முடியும். மிகத் தூய்மையான பசுவின் பாலாக இருந்தாலும், வைக்கும் கலம் தூய்மையற்ற தானால், எவ்வளவு சிறந்த பசுவின் பாலும் கெடுவது இயல்பே. அது போலவே, எவ்வளவு உயர்ந்த அறிவாற்றல் இருந்தாலும் உடல் கெட்டால், அந்த உடலோடு சேர்ந்து படிப்படியாக அறிவாற்றலும் அழிய வேண்டியதுதான்.

அறிஞர் ஷா உடல் ஓம்புவதில் வல்லவர். இக்காலத்து மருத்துவ முறையும் அவரிடமிருந்து தப்பவில்லை. தம் நாடகத் தில் (Doctor's Dilemma) அவர், மருத்துவர்களின் குறைகளை அம்பலப்படுத்தியுள்ளார். "என் பாட்டிக்குத் தெரிந்த பத்திய முறைகளும் இவர்களுக்குத் தெரியவில்லை," என்றும், "பச்சிலை மருத்துவனுடைய பழங்கால முறையைவிட, இவர்களுடைய விஞ்ஞான முறை முற்போக்கு அடையவில்லை," என்றும், வழக்க மான போக்கில் எழுதியுள்ளார்; தம் அனுபவத்தால் ஆராய்ந்து உண்ணும் உணவிலும், பயிலும் பயிற்சியிலும் நல்ல முறைகளைக் கண்டு தவறாமல் கையாண்டு வந்தார்; மூதிய வயதிலும் நாள் தவறாமல் நீரில் வைத்துக் கழுவிக் கண்ணைக் காத்து வந்தார்; அதனால் மங்காத பார்வையும் பெற்றிருந்தார். இவ்வாறு ஒவ்வொரு சிறு பழக்கத்தையும் ஆராய்ந்து நன்மை கடைப் பிடித்து உடலோம்பியதால், வாழ்நாளில் வளர்த்த அறிவும் ஆற்றலும் முதுமையில் கெடாமல் இருந்து வந்தன. தொண் ணூற்று நான்கு வயதில் நடப்பதே அருமை. ஆனால், ஷா நாள் தவறாமல் நடப்பதை உடற்பயிற்சியாகக்கொண்டிருந்தார். அதனால்தான் தம் உடம்பில் வீண் சதை இல்லாமல் இயற்கை யான நல்ல அமைப்பு இருந்ததாக நம்பினார்.

தம் தொண்ணூறாவது வயதில் இலண்டனில் இருந்த வீட்டில் தடுமாறி விழுந்து காலில் அடிபட்டுக் கிடந்து, தமக்காக நடை

பெற்ற ஒரு சிறப்புக் கூட்டத்திற்குப் போக முடியாமல் நேர்ந்த போது, அவருடைய பேச்சை ஒலிப்பதிவு செய்து கேட்க வைத்தார்கள். ''என்னைப்போல் ஒருவர் தள்ளாமை உற்றபோது ஒரு குறை என்னவென்றால், தலை தடுமாறுவதற்கு முன்னே கால் தடுமாறுகின்றது. அதனால் அடிக்கடி கால் தடுக்கி விழ நேர்கிறது. நான் வாரந்தோறும் மிக ஒழுங்காக மூன்று முறை தடுக்கி விழுகின்றேன்,'' என்று அந்தப் பேச்சில் குறிப்பிட்டார். கால்கள் தடுமாறும் நிலை வந்தும், அறிவு தடுமாறாமல், தெளிவாக உணர்ந்து சுவைபடப் பேசும் திறமை ஷாவிடம் விளங்கியிருந்தது. முதுமையால் கைகால்கள் வலிமை இழந்தனவே அல்லாமல், நாடி நரம்புகள் சீர் கெடவில்லை. இத்தகைய தூய உடம்பாக இருந்ததால், பாடு பட்டு வளர்த்த அறிவாற்றலைக் கெடாமல் காத்துக்கொள்ள முடிந்தது; கவலைக்கு இடங் கொடாமல் முதுமையிலும் மகிழ்ச்சியாக வாழ முடிந்தது.

ஜெர்மனியின் குண்டுகள் இலண்டன் மாநகரைத் துளைத்துக் கொண்டிருந்த காலத்திலும் இலண்டன் தெருக்களில் தனியே திரியும் அஞ்சாமை அவருக்கு இயல்பாக இருந்தது. ஒரு நாள் இரவில், தாம் இருந்த இடத்திற்கு அண்மையில் குண்டு விழுந்து வெடித்ததாம். அதையும் கண்டாராம். உயிர் வாழ்வைப் பற்றிக் கவலை கொள்ளவில்லையாம். இளமையில் வறுமையின் நெருக்கடியில் சிக்குண்டிருந்த போதும் தம் வாழ்வைப் பற்றிப் பெரிய கவலை கொள்ளவில்லை. அனுபவம் முதிர்ந்த பின்னும், உலக நிகழ்ச்சிகளைக் கண்டு மனமுடைந்து தலையை உடைத்துக் கொள்ளவில்லை.

சமய நெறி இல்லாதவரின் வாழ்க்கை பயனற்றுப் போகும் என்பதும், மக்கள் சமய நெறி உடையவர்களாக இருந்தால் தான் ஒரு நாட்டின் ஆட்சியும் நன்கு அமையமுடியும் என்பதும் அவருடைய கொள்கைகள். ஒன்றிலும் நம்பிக்கை அற்ற மக்களை ஆளமுடியாது என்றும், அறிவாராய்ச்சியை ஓர் எல்லை வரைக்கும் கொண்டு தெளிந்த பின் நம்பிக்கையில் உறுதி பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். ஆனல், சமயத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு கொள்கைகளை எல்லாம் கைவிட்டுச் சடங்குகளையும் வேடங்களையும் மட்டும் கொண்டு மக்கள் வாழும் வாழ்க்கையைக் கடிந்து எழுதுவதில், அவர் மிகக் கடுமையானவர். அதைக் கண்டு சமயத்திற்குப் பகையானவர் என்று பலரும் எண்ணினர்கள். அது உண்மை அன்று. மூடநம்பிக்கைக்கே அவர் பகைவர். கண்மூடி வாழ்க்கைக்கே அவர் பகைவர். ஏசு கிறிஸ்துவினிடம் அவருக்குப் பெருமதிப்பு உண்டு. ஆனல், அவரிடமும் சில

குறை கூறுவார். எனினும், அவருடைய அறவுரைகள் பல உண்மையானவை என்று நம்பினர். 1916-ஆம் ஆண்டில் ஆண்ட்ரகில்சும் சிங்கமும் (Androcles and the lion) என்னும் நாடகத்திற்கு முகவுரை எழுதிய போது, "ஏசு கிறிஸ்து இன்று செயல்முறையில் அரசியலாளராக இருந்து ஒரு வழி கூறுவாராஞல், உலகத் துன்பத்தைப் போக்குவதற்கு அதைவிடச் சிறந்த வழி இருக்க முடியாது. ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாக உலகத்தைப் பற்றியும் மக்கள் இயல்பைக் குறித்தும் நான் எண்ணி உணர்ந்ததன் பயனுகவே இவ்வாறு கருதுகின்றேன்," என்று குறிப்பிட்டுள்ளார். உலகத்தில் சமயநெறி உடையவர் பலர் என்றும், இல்லாதவர் சிலர் என்றும் கருதுவது தவறு என்ருர். வாழ்க்கை நெறியில் சமயத்தைப் போற்றுவோர் மிகு சிலரே என்றும், சமயத்தைப் புறக்கணித்து உலகப் போக்கில் அழுந்தியுள்ளவரே பலர் என்றும் விளக்கினர். பழக்க வழக்கம் காரணமாகக் கண்மூடிப் பின்பற்றும் நீதி முறைகளை அவர் மதித்ததில்லை. மனச்சான்றுக்கு மாருக நடக்கக்கூடாது என்பதே அவர் கொள்கை. மனச்சான்று தலையெடுக்காதபடி பெரும்பாலான மக்கள் வாழ்வதைக் கடிந்தார். வேட்டை, விளையாட்டு, போர், வாணிகம் முதலிய எந்தக் காரணம் பற்றியும் கொலையும் இன்னு செய்தலும் இருக்கக் கூடாது என்று வன்மையாகக் கடிந்து எழுதினர். தீமை செய்தவனுக்கு அதற்கு ஈடாகத் தீமை செய்து பழிவாங்க முயல்வதால் அவனுடைய மனச்சான்றை அப்போதைக்கு அழித்துவிடுகின்ருேம் என்றும், பழிக்குப் பழி வாங்கல் என்பது கொடிய செயல் என்றும் அவர் விளக்கினர். தம் இரண்டாவது நாவலைப் பற்றி முகவுரை எழுதி வெளியிட்ட போது, "இன்னது என்று அறியப்படாத ஏதோ ஒரு சத்தி என்னுள் இருந்து இதை எழுதுமாறு தூண்டியது. இதைப் படிப்பவர்களில் சிலரை அந்தச் சத்தி இயக்கி ஏதாவது பயன் பெறச் செய்யக்கூடும் என்றே இதை வெளியிடுகின்றேன். தொடக்க முயற்சியாகிய இந்த நூல் உதவாச் சரக்குதான் என்பதை உணர்ந்தும் நான் வெளியிடக் காரணம் இதுவே," என்று எழுதியுள்ளார். எதிர்காலத்தில் உயிராற்றல் (Life Force) என்னும் அந்தச் சத்தியைப் பற்றிக் கலை சமய நெறியாகப் பரவும் என்றும் அவர் நம்பினர். இவற்றை எல்லாம் உணர்ந்தால், அறிஞர் ஷா அறிவாராய்ச்சிக்கு இயைந்த சில நம்பிக்கைகளை உடையவர் என்பதும், பண்பட்ட மனச்சான்று உடையவர் என்பதும் விளங்கும். இத்தகைய சமய உணர்வாலேயே அவர் முதுமையிலும் சோர்ந்து கலங்காமல் உறுதியாக வாழ்க்கையை நடத்த முடிந்தது என்று காலிஸ் என்பார் கருதியது பொருத்தமே ஆகும்.

நல்ல உடல், சிறந்த அறிவு, தெளிந்த நம்பிக்கை இம் மூன்றும் ஷாவின் முதுமையில் கண்டு வியக்கத் தக்கவைகளாக இருந்தன. இவற்ருேடு மற்ருெரு சிறந்த பண்பும் அவரிடம் இருந்தது. வாழ்வைக் குறித்து ஒரு சிறிதும் கவலைப்படாமலும் அஞ்சாமலும் அவர் வாழ்ந்து வந்தார். எல்லா உயிரும் சேர்ந்ததே உயிராற்றல் என்னும் அந்தப் பெருஞ்சக்தி என்று அவர் நம்பியதால், அச்சக்தி ஒரே உடம்பில் நெடுங்காலம் கிடந்து முதுமையில் பயனற்றிருப்பதைவிட அந்த உடம்பை விட்டு மற்ருெரு புதிய உடம்பில் அடுத்தடுத்து வாழ்வு பெறுதல் நல்லது என்று அவர் கருதினர். ஆனல், அவர் தம் ஆயுளைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவில்லை. வெளியூருக்குச் சென்று மேற்கொண்ட வேலையை முடித்தவர்கள் அடுத்த வண்டியை எதிர்பார்த்திருப்பதுபோல, அவர் கவலையற்றவராய் இருந்தார்.

ஷா வறியராய் இருந்த காலத்திலும், துன்பங்கள் நெருங்கிய காலத்திலும் எப்போதும் கவலைப்பட்டதில்லை. கவலையற்ற தன்மை வறுமை நிலையிலும் அவருக்கு இயல்பாய் இருந்தது. வறுமையால் வாடிய அக்காலத்தில் ஒருநாள் ஏழை ஒருவன் அவருடைய உடையைக் கண்டு ஏமாந்து அவரை நெருங்கிப் பிச்சை கேட்டான். "உண்மையாய்ச் சொல்கிறேன்; என்னிடம் ஒரு காசும் இல்லை," என்று உறுதி மொழி கூறினன். அதைக் கேட்ட ஷா அவனைப் பார்த்து, "நானும் அதே நிலையில்தான் இருக்கிறேன்," என்ருராம். வந்தவன் நன்றி கூறிவிட்டுத் திரும்பினனும். இடுக்கண் வருங்கால் நகுதல் ஷாவுக்கு இயல்பாக அமைந்திருந்த காரணத்தால்தான், வாழ்நாள் முழுதும் குறும்பும் கிண்டலும் நிறைந்த பேச்சும் எழுத்தும் அவரிடம் நிறைந்திருந்தன.

சாவைப்பற்றி ஒரு சிறிதும் அஞ்சாதவர் ஷா. "நான் எப்போதும் சாகத் தயங்கியதில்லை; தயங்கவும் மாட்டேன்," என்று கூறினர். ஒரு முறை லோரைன் என்ற நண்பரோடு சேர்ந்து கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது, அலைகள் எதிர் பாராமல் திரும்பிக் கால்களை அலைத்து இழுத்துச் சென்றன. களைத்துப் போகும் வரையில் ஷா நீந்திப் பார்த்தார். இனிப் பயன் இல்லை என்று கைவிடும் தறுவாயில், ஷாவின் காலில் ஒரு பாறை பட்டதாம். அதைப்பற்றி நின்றபோது நீர் முழங்கால் அளவில் இருந்ததாம். "அலைகளின் வேகத்தை எதிர்த்து நீந்திப் பயனில்லை என்பது எனக்குத் தெரியும். அதனல் வரக்கூடிய முடிவை எண்ணிக்கொண்டேன். இனிக் கரையேறிப் பிழைக்க வழி இல்லை என்று அறிந்ததும், இரண்டு எண்ணங்கள் தோன்றின. ஒன்று, என்னுடைய இறுதி ஏற்பாட்டில் (Will)

என் நூல்களின் மொழிபெயர்ப்பாளர்களோடு செய்ய வேண்டிய உடன்படிக்கைகளைப் பற்றி ஒன்றும் குறிக்கவில்லையே என்பதை எண்ணினேன். மற்றொன்று, நான் ஏன் உணவு நேரத்திற்கு வரவில்லை என்று மனைவி திகைப்புறுவாள் என்பதை எண்ணினேன்,'' என்று அவர் குறிப்பிட்டார். இவ்வாறு வாழ்நாள் முடிந்தது என்று உணர்ந்த தறுவாயிலும் கவலையற்ற நெஞ்சம் ஷாவுக்கு இயல்பாய் இருந்தது.

ஆனால், கண்மூடி வெறியால் உயிரைப் பலியிட ஷா விரும்பவில்லை. ஒரு முறை பெரிய ஊர்வலம் ஒன்று தடைமீறி நடத்தப் பெற்றது. ஷாவும் அன்னி பெசண்ட் அம்மையாரும் அந்த ஊர்வலத்தை நடத்திச் சென்றனர். போலீசு படை ஒரு முனையில் நின்று சுட்டுத் தடுக்கவும் அடக்கவும் காத்திருந்தது. அதை மீறிச் செல்லப் பலரும் வெறி கொண்டிருந்தார்கள். ஆனால், அது ஷாவுக்குப் பிடிக்கவில்லை. வெறி கொண்ட கூட்டத்தை அறிவுரையால் திருத்தவும் அவரால் அப்போது முடியாது. நிலையை உணர்ந்து பேசாமல் இருந்தார். மற்றொரு முறை அவர் கூறிய பின் வரும் சொற்களால் அவருடைய மனநிலையை உணரலாம். ''என்னிடம் அஞ்சாமை உள்ளது. நெறியான வகையில் எந்த அளவிற்கும் அஞ்சாமல் போராட என்னால் முடியும். ஆனால் ஒருவரை ஒருவர் சுடுவதற்கும் தாக்குவதற்கும் முனைந்தபோது, நான் கோழையாக விலகி, என் படுக்கையறையில் ஒதுங்கியிருப்பேன். சுட்டுப் பொசுக்கக்கூடிய அந்த அளவிற்கு என் உயிர் விலைமதிப்பற்றது அன்று,'' என்பதே அவர் கூறியது. அறிவற்ற குண்டு பீரங்கிகளுக்குமுன் நின்று மனிதன் தன் உயிரைப் பலியாக்குவது அறியாமை என்பதே அவர் கருத்து.

வாழ்வைப் பற்றிக் கவலை கொள்ளாதது போலவே, தம் நூல்கள் நெடுங்காலம் நிலைபெறவேண்டும் என்பது பற்றியும் அவர் கவலை கொள்ளவில்லை. அதற்கு மாறாக, இளமையில் எழுதிய நூல்கள் இன்னும் பயன்படக்கூடிய முறையில் உலகம் திருந்தாமல் இருக்கின்றதே என்றுதான் கவலை கொண்டார். தாம் இறந்த பிறகும் தம் நூல்களால் புகழ் நிலைக்கவேண்டும் என்ற ஆசை அவரிடம் அறவே இல்லை. கலைக்காகக் கலை வேண்டும் என்ற பொருளற்ற கொள்கையைப் போற்றாமல் சமுதாய வாழ்வையே நோக்கமாகக் கொண்டு அவர் எழுதியதே அதற்குக் காரணமாகும். ''கலையின்பொருட்டாகவே கலை வேண்டும் என்று நான் எண்ணியிருப்பேனானால், ஒரு சிறு வரி எழுதும் தொல்லையையும் மேற்கொண்டிருக்கமாட்டேன்,'' என்று குறிப்பிட்டார். இவ்வாறு, சமுதாய அமைப்பைத் திருத்தும்

நோக்கத்தோடு வாழ்நாள் எல்லாம் பாடு பட்டார் அவர். ஓர் இயக்கத்திற்கு ஆதரவு காட்டுமாறு 1947-இல் அழைப்பு வந்தபோது "அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுள்ள தொண்ணூறு வயதுள்ள கிழவனுக்கு இவ்வாறு அழைப்புகள் அனுப்புவதால், உங்கள் காலமும் ஆற்றலுமே வீணகும். இந்தக் கிழவனுடைய பெயரைச் சேர்த்துக்கொள்வதால் உங்களுக்குத் தனிச்சிறப்பு ஏற்பட்டுவிடாது. ஆகையால் உங்கள் கணக்கிலிருந்து என் பெயரைக் காலஞ்சென்றதாகக் கருதி எடுத்துவிடுங்கள்," என்று மறுமொழி எழுதினர். இதிலிருந்து அவருடைய மனநிலை, தொண்டு செய்வதிலும் பற்றற்று விளங்கிய மனநிலை புலனகும்.

ஷா இளமையிலும் இன்பத்தைத் தேடி அலைந்ததில்லை; முதுமையிலும் இன்பத்தை நாடியதில்லை. "இன்பமாக இருக்கின்ருேமா இல்லையா என்று எண்ணிப்பார்க்க ஓய்வு கிடைப்பது தான் துன்பம். அதற்கு மருந்து ஒப்பற்ற உழைப்புதான். ஆகவே, உழைப்பால் களைப்பு அடைகின்றவர்களே இன்பம் அடைகின்றவர்கள். உழைப்புக் குறைந்தவர்களுக்கு ஓய்வு நாள் (விடுமுறை நாள்) துன்பமாகத் தோன்றும். நரகத்தை விளக்கிக் கூறவேண்டுமானல், அது எந்நாளும் விடுமுறை நாளாக இருக்கும் ஓய்வு என்று கூறலாம்," என்பது அவர் கருத்து. தம் தொண்ணூறும் பிறந்த நாளன்று விடுத்த செய்தியிலும், "என் வாழ்க்கையில் நான் உற்றவைகளை எல்லாம் நீங்கள் அறிவீர்களானல் அத்தகைய வாழ்க்கை உங்களுக்கு நேராமல் கடவுள் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்வீர்கள். ஆனல், இன்ப வாழ்க்கை வாழ்வது ஒரு கலை. நீங்கள் விரும்புவதை ஓயாமல் செய்து உழைத்துக்கொண்டு இன்பமா இல்லையா என்று எண்ணிப் பார்க்க நேரம் இல்லாமல் வாழ்வதே இன்ப வாழ்க்கைக்கு வழியாகும். என் வாழ்நாள் முழுதும் நான் அப்படிதான் இருந்து வருகிறேன்," என்று அறிவித்தார்.

1943-ஆம் ஆண்டில் மனைவி இறந்தது முதல் ஷா தனிமையாகவே வாழ்ந்து வந்தார்; இலண்டனிலிருந்து முப்பது மைல் தொலைவில் உள்ள செயின்ட் அயாட் லாரென்ஸ் என்னும் சிறு கிராமத்தில் உள்ள வீட்டில் தனியாக உற்ருர் உறவினர் இல்லாமல் வாழ்ந்து வந்தார்; கவலை இல்லாமல் தம் வாழ்வைத் தாமே கவனித்துக்கொண்டார். அவருடைய அடுத்த வீட்டார் நெருங்கிப் பழகினர்கள். மாலை நேரங்களில் அவர்களுடன் கலந்து பேசி மகிழ்ந்தார். ஆனல், அவர்களும் மிகுதியாக ஈடுபட்டு உதவி செய்ய ஷா இடந்தரவில்லை. அவருடைய செயலாளராகிய அம்மையார் இலண்டனில் இருந்தார். எழுத

வேண்டிய கடிதங்களை ஷா தம் கையாலேயே எழுதித் தாமே தபால் நிலையத்திற்குக் கொண்டு போய்ப் போட்டு வந்தார். விரிவாக எழுத வேண்டிய கட்டுரை, அறிக்கை, நாடகம் முதலிய வற்றை மட்டும் சுருக்கெழுத்தால் எழுதி, இலண்டனில் இருந்த செயலாளர்க்கு அனுப்பினர். செயலளார் முப்பது ஆண்டுகளாக ஷாவின் செயலாளராய் இருந்து இவ்வாறு அவரிடம் தொழில் செய்து வந்தவர். ஆனல், ஒரு கடிதமாவது ஒரு நாடகமாவது நேரில் இருந்து சொல்லக் கேட்டு எழுதும் வாய்ப்பு எப்போதும் இருந்ததில்லையாம். இவ்வளவு ஒழுங்காகத் தம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு அந்தச் சிறு கிராமத்தில் முதுமையில் ஷா தனியே வேலையில்லாமல் வாழ்ந்து வந்தார். உலகமெல்லாம் போற்றுமாறு நாடகங்கள் பல எழுதி அறிவுலகத்தைக் கலக்கி வந்த இந்த அறிஞர் வாழ்ந்த அந்த சிற்றூரில் ஒரு சினிமாக் கொட்டகையும் இல்லை. வாழ்ந்த வீட்டையும் ஈட்டிய செல்வத்தை யும் ஆங்கில மொழியின் ஆக்கத்திற்காக எழுதி வைத்துவிட்டு, மனைவி மக்கள் உறவினர் முதலான எவர் துணையும் இல்லாமல் அங்கு அமைதியாக அவர் வாழ்ந்து தொண்டாற்றி வந்தது, உலகம் கண்ட வியக்கத்தக்க வாழ்க்கைகளில் ஒன்று ஆகும்.

## அருஞ்சொற்பொருள்

அல்லல் உழந்தார் - துன்பத்தால் வருந்தினர். ஓம்பினர் - பாது காத்தார். திட்பம் - உறுதி. கலம் - பாத்திரம் கடிந்து - வெறுத்து. மனச்சான்று - மனச்சாட்சி. நகுதல் - சிரித்தல்.

## வினக்கள்

1. உலக மக்களுக்கு அறிவை வழங்கிப் புகழ் பெற்ற இந்த நூற்றுண்டின் ஆசிரியருள் தலைசிறந்த இருவர் யார்?
2. ஷா தள்ளாத வயதிலும் அறிவாற்றல்களில் தளராதவராய் வாழ்ந்து வந்ததற்குக் காரணம் என்ன?
3. தூய்மையான பசுவின் பாலும், வைக்கப்படும் கலத்தின் குற்றத்தால் கெடுவது இயல்பு—இது எதனை விளக்க வந்துள்ளது?
4. ஷா உயிர் வாழ்வைப்பற்றிக் கவலை கொள்ளாதவர் என்பதை எதனல் அறியலாம்?
5. ஷாவின் சமயக் கொள்கைகளைப்பற்றி விளக்கி வரைக.
6. ஷா அறிவாராய்ச்சிக்கு இயைந்த சில நம்பிக்கைகளை யுடையவர்; பண்பட்ட மனச்சான்று உடையவர் என்ப வற்றைப் பற்றி விளக்கி வரைக.
7. ஷாவின் வாழ்நாள் முழுவதும் குறும்பும் கிண்டலும் நிறைந்த பேச்சும் எழுத்தும் உடையவராயிருந்தார் - எடுத்துக்காட்டு களால் விளக்குக.
8. ஷாவின் வியத்தகு வாழ்வுகளைத் தொகுத்து வரைக. (15 வரிகள்)

# 21. தென்னுப்பிரிக்கத் தமிழரின் சமய வாழ்வு

திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம், எம்.ஏ.,பி.எல்.

1963-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21-ஆம் நாளன்று தென்னுப்பிரிக்காவின் டர்பன் நகரில் ஆகாய விமானம் மூலம் இறங்கிய நான், 1964-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-ஆம் நாளன்று மீண்டும் அதே டர்பன் நகரில் ஆகாய விமானம் ஏறி, 23-ஆம் நாளன்று பம்பாய் வந்து சேர்ந்தேன். எனவே, நான் சரியாகப் பத்து மாத காலம் தென்னுப்பிரிக்க தேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் திரும்பி யுள்ளேன். அங்கே நான் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகை 143 ஆகும். தென்னுப்பிரிக்காவில் உள்ள நான்கு இராச்சியங்களில் நெட்டால், டிரான்ஸ்வால் ஆகிய இரண்டு இராச்சியங்களில் மட்டுமே நான் சுற்றுப் பிரயாணம் செய்துள்ளேன்.

தென்னுப்பிரிக்காவில் ஆங்கிலேயர்கள், ஆப்பிரிக்கர்கள் என்ற இருவித வெள்ளையர்களும், கலர்டு (Coloured) என்ற கறுப்பர்—வெள்ளையரின் கலப்பால் தோன்றிய சாதியினரும், சுதேசிகளாகிய 'ஜூலு' என்பவர்களும், இந்தியர்களும் ஆக, நால்வகை வருணத்தார்களும் உள்ளனர். வருணம் என்ற சொல், இவர்களுக்குதான் சாலவும் பொருந்தும். ஏனெனில், இவர் களிடந்தான் முறையே சிவப்பு, வெள்ளை, கறுப்பு, மாநிறம் ஆகிய பல வகை நிறங்களும் காணப்படுகின்றன.

இவர்களுள் இந்திய மக்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து லட்சம். இதில் குஜராத்தியர்களும், இந்தி பேசுவோரும், முஸ்லீம்களுமாகச் சேர்ந்து இரண்டரை இலட்சம் பேர்கள் என்றுல், மீதியுள்ள இரண்டரை இலட்சம் பேர்களும் தமிழர்கள் ஆவார்கள். இந்தத் தமிழர்களில் பெரும்பான்மையினர் நெட்டால் மாகாணத்தில் பொதுவாகவும், அதிலும் டர்பன் நகரில் சிறப் பாகவும் வாழ்ந்து வருகின்றுர்கள்.

இந்த டர்பன் நகரிலுள்ள தமிழர்களின் நிலையமாகிய 'நெட்டால் தமிழ் வைதிக சபை'யினரின் அழைப்பின் பேரில் தான் நான் தென்னுப்பிரிக்காவில் தொண்டாற்றச் சென்றேன்.

டர்பனிலுள்ள காந்தி - தாகூர் அறநிலையமும் எனது போக்கு வரவுச் செலவிற்காகப் பொருளுதவி செய்துள்ளது.

தென்னப்பிரிக்கத் தமிழர் அனைவருமே இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள்தாம். அண்மையில் ஓரிரண்டு ஆயிரம் பேர்கள் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்துள்ளதாக அறிந்தேன். முஸ்லீம் களும் ஓரளவு மதமாற்ற முயற்சி செய்து வருகின்றனர்கள்.

டர்பன் நகரில் தமிழர்கள் இந்து மதக் கடவுள்கள் அனை வருக்குமே ஆலயம் கூட்டாகவும், தனியாகவும் அமைத்து வழி பட்டு வருகின்றனர்கள். அவற்றில் முக்கியமானவை அம்கனிசாலையி லுள்ள ஸ்ரீ வைத்திய நாதேசுவரர் ஆலயம், அம்பிலோ சாலையி லுள்ள ஸ்ரீ அம்பலவாணேச்சுவரர் ஆலயம், கிளேர்வுட்டில் உள்ள சிவசுப்பிரமணியர் கோவில், கேடாமேனரில் உள்ள ஸ்ரீ முத்திலிங்கேசுவரர் ஆலயம், இஸிப்பிங்கோவிலுள்ள மாரியம்மன் கோவில் என்பனவாகும். இவைகளையன்றி, கிருஷ்ணர், இராமர், பிள்ளையார், முருகர், விஷ்ணு, காமாட்சி ஆகிய தெய்வங்களுக்குத் தனித்தனி சிறு கோயில்களும் உள்ளன.

இவற்றுள், மிகப் பெரியதும், பரந்த புகழுடையதும், மக் களால் பெரிதும் விரும்பப்படுவதும், ஊரின் இதயத்தில் அழகான இடத்தில் அமைந்துள்ளதும் ஆகிய ஆலயந்தான் ஸ்ரீ வைத்திய நாதேசுவரர் ஆலயம். இதன் ஒரு பாதியில் சிவன் கோவிலும் மற்றொரு பாதியில் மகாவிஷ்ணு, மாரியம்மன் கோவிலும் அமைந் துள்ளன. நல்ல செல்வாக்குள்ள தமிழர்கள் இந்த ஆலயத்தை மேற்பார்த்து வருகிறார்கள். இக்கோவிலில் உள்ள மிகுந்த பரப் புள்ள இடத்தில் பெரும்பாலும் ஆண்டு முழுவதுமே திருமணங்கள் நடைபெற்ற வண்ணமாக இருக்கும். இதனால் ஆலய வருவாயும் அதிகரிக்கிறது. புரட்டாசி முழுவதும், குறிப்பாகச் சனிக் கிழமைகளில் எல்லாம் இங்குள்ள விஷ்ணு கோவிலில் அளவுக்கு மீறிய பத்தர் குழாங்கள் ஈண்டி, சுவாமிக்கு அபிடேக அலங் காரங்கள் செய்து அமோக ஆராதனைகளை ஆர்வத்தோடு ஆற்றி வழிபடும் காட்சி, என் உள்ளத்தைக் கவர்ந்தது. குறிப்பாகப் பல மைல்களுக்கப்பாலிருந்தும் எண்ணிறந்த மங்கையர் மா, பலா, வாழை, ஆப்பிள், சாத்துக்குடி, கொய்யா, சீதா முதலிய பலவிதப் பழங்கள், தேங்காய், தேன், பால், நெய், மலர்வகைகள் சேர்ந்த மாலைகள் இவற்றைத் தாங்கிய தட்டுகளுடன் அக் கோவிலுக்குள் சென்று இறைவன் திருமுன்னர் வரிசை வரிசை யாக வைத்து, அவை அருச்சகர்களால் ஆராதிக்கப்பட்டுத் திருப்பித் தரப்படும் வரை பயபத்தியோடு கடவுளை வணங்கி

அமர்ந்திருக்கும் காட்சி, நான் நம் நாட்டில் என்றும் எங்கும் காணுததொரு காட்சியாகும். மார்கழித் திருவாதிரையன்றும், சிவராத்திரியன்றும் ஆண்களைவிட அதிக ஆர்வமாகப் பெண் மணிகள் பலர், பாடி வழிபாடு செய்வதும், தேவார திருவாசகப் பாடல்களைக் கூட்டமாகப் பின்னணி இசையுடன் பெருமிதப் பத்தியுடன் பாடுவதும் காண்பவர்கள் கண்களில் நீரையும், கேட்பவர் நெஞ்சில் நெகிழ்ச்சியையும் உண்டாக்குவது உறுதி. இத்தனைக்கும் அவர்கள் பாடலில் சொற்பிழைகள் உச்சரிப்பு விகாரங்கள் பலவும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனுல், தென்னுப்பிரிக்கச் சிவன் அவற்றைப் பொருட்படுத்தாது அவர் களது உள்ளத்தின் அன்பை மட்டும் பாராட்டி, அவர்களுக்கு அருளத் தவறுவதில்லை.

காவடி :

அங்குள்ள சிவன், முருகன் ஆலயங்களில் ஆயிரக்கணக் கான ஆண்களும் பெண்களும் தைப்பூசம், பங்குனி உத்திரம் முதலிய நன்னுள்களில் ஆண்டவன்பொருட்டுக் காவடி எடுத்துச் சென்று அவன் காலடியில் வைத்து வழிபடுகின்றுர்கள். பலர் இந்நாட்டிலுள்ளதைப்போல அலகு குத்திக்கொள்கின்றனர். உடலெல்லாம் ஊசி குத்திச் சிறு தேர் இழுத்தும் செல்லு கின்றனர் சிலர்.

தீ மிதித்தல் :

டர்பன் நகரத்தில் மட்டுமேயன்றி, பீட்டர் மாரிட்ஸ்பர்க், ஸ்டாங்கர், டோங்காட், வெருல்லம் முதலிய பிற தலங்களிலும் உள்ள பல ஆலயங்களில் திருவிழாக்களில் தீ மிதித்துத் தெய்வ பத்தியைக் காட்டும் வழக்கம், அத்தேசத்தில் கடந்த நூறு ஆண்டுகளாகவே இருந்து வருகின்றது. இந்தப் பத்தி முறையானது, அந்நாட்டிலுள்ள வெள்ளையர்கள் பலரது உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. இதை வேடிக்கை பார்த்து வியக்கும் வெள்ளையர் மட்டுமேயன்றி, விவரிக்க இயலாததோர் ஆன்ம வேகத்தினுல் உந்தப் பெற்றுத் தாமும் இத்தீமிதித்தல் செய்தாக வேண்டும் எனக் கருதி அதில் மனவலிமையுடன் இறங்கித் தமக்குத் திருத்தியும் இந்து மதத்திற்குப் பெருமை யும் சம்பாதிக்கும் வெள்ளையரும் தென்னுப்பிரிக்காவில் உள்ளனர் என்பதும் உண்மை.

மாரியம்மன் :

இஸிப்பிங்கோ மாரியம்மன் திருவிழாவிலும் மவுண்ட் எட்ஜ்கோம் மாரியம்மன் திருவிழாவிலும் பல்லாயிரம் தமிழர்

கலந்து வழிபடுகின்றனர். இந்த விழாக்கள்தாம், ஏழைத் தமிழர், தொழிலாளத் தமிழர்கள் முதலியோரின் தலையாய, மனத்துக்கினிய திருவிழாக்கள். மாரியம்மனுக்கு ஆடு, கோழி கள் ஆயிரக்கணக்கில் பத்தர்களால் பலியிடப்படுகின்றன. இவற்றில்தான் கேளிக்கைகள், ஆட்டபாட்டங்கள், குடி, கூத்து, சண்டை முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. பெரும்பாலோரான ஏழைத் தமிழரின் மனக்கிளர்ச்சிக்கு விடப் பட்ட மானியங்கள், இவ்விழாக்கள். 'உயிர்ப்பலி, கடவுட்கு உகந்ததன்று' என்று யான் செய்த சொற்பொழிவுகளையுங்கூட அவர்கள் பலியிட்டுவிட்டார்கள்!

பண்டிகைகள் :

நம் நாட்டைப் போலவே அங்கும் தீபாவளிதான் இந்துக் களின் தலைசிறந்த பண்டிகை. நமது கார்த்திகைத் தீபமும், கட்டுக்கட்டான பட்டாசு வெடியும் சேர்ந்ததுதான் அவர்களது தீபாவளி. பட்டாசுகளும் மத்தாப்புகளும், அணுக்குண்டுகளும் அளவுக்கு மீறிக் கொளுத்தப்பட்டுப் பலருக்கு ஆபத்தும் விளை விக்கின்றன. ஆனால், நம்மைப் போலவே அவர்கள் தீபாவளி யன்று எண்ணெய் தேய்த்து நீராடுவது இல்லை. வெறும் குளியல் மட்டும் செய்கின்றனர். காரணம், அங்கேதான் நல்லெண்ணெயே காண முடியாதே! எங்கும் எல்லாம் சூரிய காந்தி எண்ணெய் மயமே.

தீபாவளிக்கு அடுத்தபடி பொங்கற்பண்டிகையைத் தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் தடபுடலாகக் கொண்டாடி மகிழ் கின்றார்கள். நவராத்திரி விழாவைப் பல நகரங்களிலும் சிற்றூர் களிலும் பத்து நாள்கள் பாட்டுக்கச்சேரி, பரத நாட்டியம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகளுடன் அமோகமாகக் கொண்டாடி மகிழ்கின்றார்கள். சரசுவதி பூசைக்குத் தனி முதன்மை தரப்படு கிறது. மற்றும் அமாவாசை, கார்த்திகை, ஏகாதசி முதலிய நாள்களிலும், திங்கட்கிழமை, சனிக்கிழமை, வெள்ளிக்கிழமை முதலிய தினங்களிலும் ஆண்களும் பெண்களும் விரதம் கடைப்பிடித்து வழிபடுகின்றனர்.

கிளேர்வுட் என்னும் சிற்றூரில் 'சைவ வார வழிபாட்டுச் சங்கம்' ஒன்று உள்ளது. அச்சங்கத்தினர் ஞாயிற்றுக்கிழமை தோறும் தேவார - திருவாசகப் பாடல்களை இசையுடன் தனியாகவும், கூட்டமாகவும் பாடி வழிபாடு செய்கின்றனர். அதன்பின் ஓரிருவர் சமயச் சொற்பொழிவாற்றுவர். அச்சங்கத் தின் கிளை நிலையங்கள் பல ஊர்களிலும் நிறுவப்பெற்றுச் சமயத் தொண்டாற்றி வருகின்றன. இதே போல ஒவ்வோர் ஊரிலும்

ஏறக்குறைய ஒவ்வோர் ஆலயத்தையொட்டியும், 'திங்கள் திருச்சபை' என்னும் வழிபாட்டுச் சபைகள் திங்கட்கிழமை தோறும் வார வழிபாடு நடத்தி வருகின்றன. சைவசித்தாந்த சபைகளும் இங்கே சில உள.

ஆனால் தென்னாப்பிரிக்காவில் மிகப் பெரிய அளவில் சமயத் தொண்டு செய்து மக்களிடைப் பெருவாரியாகப் பத்திச் சுவையை ஊட்டி, ஊக்குவித்து, உணரச் செய்துவரும் நிலையங்கள், இரண்டே இரண்டுதான். அவற்றுள் ஒன்று, வள்ளலார் அருட்பாக் கழகம்; மற்றொன்று, தெய்வ நெறிச் சங்கம்.

இராமலிங்க வள்ளலும், சிவானந்த சரஸ்வதியும் அவர்களது சங்கத்தின் மூலம் முறையே கருணை வாழ்க்கையையும், கடவுள் பத்தியையும் தென்னாப்பிரிக்காவில் அமோகமாக வளர்த்து வருகின்றனர். நான் இவ்விரு சங்கங்களின் ஆதரவிலும் பல சொற்பொழிவுகள் ஆற்றிப் பல விதத்தில் அவர்களை ஊக்குவித்துள்ளேன். வள்ளலார் சங்கத்தின் தூணாக நின்று துணை புரியும் திரு. வி. சண்முகம் ஐயர் என்பாரையும், தெய்வ நெறிச் சங்கத்தின் உயிர் நாடியாகவும், உண்மைத் தொண்டராகவும் விளங்கும் சுவாமி சகஜானந்தா என்பாரையும் நான் என்றுமே மறக்க முடியாது.

தென்னாப்பிரிக்கத் தமிழரின் சீரிய சமய வாழ்க்கை மேலும் சிறப்புற இவர்களிடையே நான் பத்து மாதம் தொண்டு செய்து வந்துள்ளேன்.

பலவித விழாக்கள், பண்டிகைகள், தெய்வங்கள் இவற்றின் உட்கருத்தும் தத்துவமும் இவர்களுக்கு விளக்கி விவரிக்கப் பெற்றன. திரு ஐந்தெழுத்து, ஆறெழுத்து, திருநீறு இவற்றின் மகிமை அறிவிக்கப்பட்டது. உயிர்களிடத்தன்பு, புலால் மறுத்தல், அடியார் பெருமை ஆகிய இவைகள் வற்புறுத்தப் பெற்றன. பெரியபுராணம், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் முதலியவை பற்றிப் பேசினேன். இவர்களுடைய சமய வாழ்வில் புத்துணர்வூட்டிப் புரட்சியுண்டாக்கி, அதை மறு வாழ்வுறச் செய்து, இவர்களது நன்றி வாழ்த்துடன் தாய் நாடு திரும்பியுள்ளேன்.

### அருஞ்சொற்பொருள்

வருணத்தார் - நிறமுடையவர். அண்மையில் - சமீப காலத்தில்- இதயத்தில் - நடுவில். அபிடேகம் - நீராட்டு, திருமஞ்சனம். ஆற்றி - செய்து. ஆர்வம் - ஆசை. அலகு - இரும்பு ஊசி. உகந்ததன்று -

விருப்பம் தருவது அன்று. பலியிட்டுவிட்டனர் - கொன்றுவிட்டனர்; மறந்துவிட்டனர். வள்ளலார் - இராமலிங்க சுவாமிகள். அமோக மாக - அதிகமாக. தத்துவம் - உண்மை.

## வினாக்கள்

1. தென்னாப்பிரிக்காவில் வாழ்கின்ற மக்களைப்பற்றி நீ அறிந்துள்ளதை வரைக.
2. டர்பன் தமிழர் அமைத்துள்ள கோவில்கள், வழிபாட்டு முறைகளைப்பற்றி எழுதுக.
3. தென்னாப்பிரிக்கத் தமிழர்களின் பண்டிகைகள், அவற்றைக் கொண்டாடும் முறைகள் ஆகியவற்றைத் தெரிவிக்க.
4. தென்னாப்பிரிக்கத் தமிழர் நடத்தும் விழாக்களைப்பற்றி விவரிக்க.
5. தென்னாப்பிரிக்காவில் சமயத் தொண்டினால் பத்திச் சுவையூட்டிவரும் நிலையங்கள் யாவை? அவை செய்து வரும் தொண்டுகளைப்பற்றி எழுதுக.
6. ஆசிரியர் தென்னாப்பிரிக்காவில் செய்து வந்த தொண்டுகளெனக் குறிப்பன யாவை?

# 22. மாஸ்கோப் பொருட்காட்சி

பாரத நாட்டு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், பி.ஏ.,பி.எல்.

சோவியத்து ரஷ்யாவின் சாதனைகளை விளக்கிக்காட்ட மாஸ்கோவில் ஒரு நிலையான கண்காட்சியை ஏற்பாடு செய்திருக் கிறார்கள். இது 1959-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தொழில், விவசாயம், கட்டடம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள நவீன சாதனங்களையும், விஞ்ஞானம், பொறியியல், தொழில் நுட்பம் இவற்றில் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டுவரும் புதுச் சத்திகளையும், இயந்திரங்களையும், அவற்றின் மூலம் ஏற்பட்டிருக்கும் உற்பத்திப் பெருக்கையும் இந்தக் கண் காட்சியில் விவரித்துக் காட்டியுள்ளனர்.

ஐந்நூறு ஏக்கராக் கொண்ட இடத்தில் இக்கண்காட்சி அமைக்கப்பட்டிருக்கின்றது. 78 கண்காட்சிக் கட்டடங்களும் 300-க்கு மேற்பட்ட பல வகைக் கட்டடங்களும் இலட்சத்துக்கு மேற்பட்ட காட்சிப் பொருள்களும் அங்குள்ளன! கண்காட்சிகள் வைத்திருக்கும் கட்டடங்களின் பரப்பளவு மட்டும் ஓர் இலட்சத்து இருபத்தெட்டாயிரம் சதுர மீட்டர்கள்.

பதினைந்து இராச்சியங்களும் தனித்தனிக் கண்காட்சிகள் ஏற்படுத்தியுள்ளன. அவற்றைத் தவிர, விவசாயம், கனரக இயந்திரம் கட்டும் தொழில்கள், இரசாயனத் தொழில், எண்ணெய், மின்சாரம், எலக்ட்ரானிக், ஸ்புட்னிக், அணுச்சத்தி, போக்கு வரத்துச் சாதனைகள், மக்களின் தேவைக்கான பொருள் களை உற்பத்தி செய்யும் தொழில்கள் இவ்வாறு பல துறைகளை யும் கண்காட்சியில் காண முடிந்தது.

விவசாயக் கண்காட்சி மட்டும் 250 ஏக்கராவை அடைத்துக் கொண்டுள்ளது. வெவ்வேறு பயிர்கள் உற்பத்தி செய்யப்படும் முறைகள், பழத் தோட்டங்கள், பூந்தோட்டங்கள் இவை அனைத்தையும் அங்குக் காணலாம். அவற்றிலும் சிறப்பாக மலர்க் கண்காட்சி எல்லோருடைய மனத்தையும் கவர்கின்றது. அந்தந்தப் பருவக் காலத்தில் உள்ள பூக்களை அங்கு வைத்துச் சித்திர வேலைப்பாடுகளுடன் காட்சி அமைக்கின்றார்கள். புதிய விவசாய முறைகள் நடைமுறையிலே செய்து காட்டப்படு கின்றன. இரஷ்ய நாட்டிலுள்ள பல விதமான மரங்கள், செடி கொடிகள் எல்லாவற்றையும் அங்குக் காண முடிந்தது. நல்ல

சாலைகள் அமைக்கப்பட்டு, ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்குப் போக ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். ஏன்? சிறு இரயில் பாதை ஒன்றையே அமைத்திருக்கின்றார்கள். அந்த இரயிலில் ஏறிக் கண்காட்சி முழுவதையும் சுற்றிக் கண்டு வர லாம். குளங்களும், அலங்கார நீர் ஊற்றுகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இந்தக் கண்காட்சியை நிறுவுவதற்கு எல்லா இராச்சியங் கள், தொழில் நிலையங்கள், விஞ்ஞானிகள், திட்டக் குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதியைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப் பட்டிருக்கின்றது.

இந்தப் பொருட்காட்சியின் வாயிலில் ஆணும் பெண் ணும் நடைபோட்டுச் செல்வதைப் போன்ற பெருஞ்சிலை அமைத்திருக்கின்றார்கள். அச்சிலையைப் பார்க்கும்போதே உறுதி யும் சாதனை வெற்றியும் கொண்டு வீரநடையுடன் முன்னேறிச் செல்லும் உணர்ச்சி நமக்கு ஏற்படுகின்றது.

நாம் முதன்முதலாகப் பார்க்கும் காட்சியில், பொதுவாகச் சோவியத்து நாட்டில் புரட்சி ஏற்பட்ட நாள் முதற்கொண்டு, நாளிதுவரை ஏற்பட்டிருக்கக்கூடிய புரட்சிகரமான மாறுதல்கள், முன்னேற்றங்கள், மேலும் சாதிக்கத் திட்டமிட்டிருக்கும் முக்கியத் திட்டங்கள் இவை காட்டப்படுகின்றன. இப்போது நடைமுறையில் இருக்கும் ஏழாண்டுத் திட்டமும் அங்கு விவரித்துக் காட்டப்பட்டிருக்கின்றது. விவசாயம், தொழில், மின்சாரம் ஆகிய பல்வேறு செய்திகளுக்கான புள்ளி விவரங்கள் சித்திரங்கள் மூலம் விவரித்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

இரஷ்யாவிலே ஒரு முக்கிய மனக்கருத்து நிலவுவதைக் கண்டேன். அதாவது, தங்களுடைய சாதனை ஒவ்வொன்றையும் அமெரிக்கச் சாதனையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது. அந்த மனக் கருத்தை இந்தக் கண்காட்சியிலும் காண முடிந்தது.

'சோவியத்து நாட்டில் ஆண்டொன்றுக்கு 1,20,000 எஞ்சினீயர்கள் தயாராகின்றார்கள். இது அமெரிக்காவைவிட நான்கு மடங்கு அதிகம். மின்சார உற்பத்தி அமெரிக்க அளவை மீறிவிட்டது. இரஷ்யத் தொழில் வளர்ச்சி ஆண்டு ஒன்றுக்கு 11 சதவிகிதம் உயர்ந்து வருகின்றது. அமெரிக்க வளர்ச்சி ஆண்டு ஒன்றுக்கு 2·4 சதவிகிதந்தான் உயர்கின்றது. இரஷ்ய மொத்தப் பொருள் உற்பத்தி அமெரிக்காவைவிட இன்று குறைந்துதானிருக்கின்றது. இருப்பினும், இன்னும் ஏழாண்டு களில அதை எட்டிப் பிடித்துவிடும். அதற்கடுத்த ஏழாண்டுகளில் அமெரிக்காவை மீறிவிடும்!'

இவ்வாறு அமெரிக்காவைப் பொருளாதாரத் துறையில் தோற்கடிக்கப் போகின்றோம் என்ற உணர்ச்சி இரஷ்ய மக்கள் மனத்தில் ஏற்படும்படி புள்ளி விவரங்கள் கொடுக்கப்படுவதுடன் வெளிநாடுகளிலிருந்து வருகின்ற மக்களும் இரஷ்யாவினுடைய வலிமையை உணரவேண்டும் என்று விரும்பும் வண்ணம் பிரசாரம் செய்கின்றார்கள். ஆரம்ப காலத்தில் ரஷ்யாவில் தொழில்கள் ஒரு சில பகுதியில்தான் அதிகமாக ஏற்பட்டு வந்தன. இப்போது பரவலாக எல்லா இடங்களிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான புள்ளி விவரங்களைப் பல படங்கள் மூலம் சித்திரித்து வைத்திருக்கின்றார்கள்.

இக்கண்காட்சியிலிருந்து ஸ்புட்னிக் கண்காட்சிக்குச் சென்றேன். வானவெளிக்குச் செல்லும் ராக்கெட்டுகள், கப்பல்கள் எவ்வாறு முன்னேற்றமடைந்துள்ளன என்பதை அங்குக் காண முடிந்தது.

எல்லாம் தங்கள் நாட்டில்தான் முதன்முதலில் கண்டு பிடிக்கப்பட்டன என்று பறைசாற்றிக்கொள்ளும் எண்ணத்தையும் இரஷ்யர்களிடையே காண்கின்றோம்.

1903-ஆம் ஆண்டிலேயே இரஷ்ய விஞ்ஞானி ஒருவர் வான வெளி ராக்கெட்டு வரப்போவதைப்பற்றி விவரித்திருப்பதாக அங்கு எழுதி வைத்திருக்கின்றார்கள். அந்த வான வெளி ராக்கெட்டு எப்படி இருக்கும் என்பதை அவர் அப்போதே ஊகித்திருக்கின்றார் என்பதையும் படம் மூலம் காட்டியுள்ளார்கள்.

அண்மையில் இரஷ்யர்கள் வானவெளிக்கு அனுப்பிய ராக்கெட்டுகள், கப்பல்கள் ஆகியவற்றின் மாதிரிகளையும் இக்கண்காட்சியில் காண முடிந்தது.

அண்மையில் இரண்டு குண்டுகளை இரஷ்யா சந்திரமண்டலத்திற்கு அனுப்பியது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த இரண்டு குண்டுகளின் தோற்றங்களை அப்படியே செய்து கண் காட்சியில் வைத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு குண்டும் 71 சிறு சிறு தகடுகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தகட்டிலும் சில செய்திகளைப் பொறித்துள்ளார்கள். இதைப் போன்ற இரண்டு குண்டுகள்தாம் சந்திர மண்டலத்தில் உள்ளன என்று எனக்கு எடுத்துக் கூறினார்கள்.

'அடுத்து நான் சந்திர மண்டலம் போகும்போது இக்குண்டுகளைக் காண முயல்கின்றேன்,' என்று அவர்களுக்கு வாக்குறுதி

அளித்தேன்! இது வீண் கற்பனை அன்று! சாதனைக்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

அணுச்சக்திக் கண்காட்சி நிலையத்தையும் சென்று பார்த்தேன். அணுச்சக்தியை மக்களின் நன்மைக்காக எவ்வாறு பயன்படுத்தமுடியும் என்பதை அங்கு விவரமாகக் காட்டியுள்ளார்கள். அணுச்சக்தியை மக்கள் அழிவுக்காகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, மக்களின் வாழ்க்கையை வளம்பெறச் செய்வதற்குப் பல்வேறு துறைகளில் பயன்படுத்த முடியும். அதிலிருந்து மின்சார சக்தியைப் பெரிதளவில் உற்பத்தி செய்யலாம். விவசாயத்தில் அணுச்சக்தியைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடியும். மலைகளைத் தகர்த்தெறிந்து, பருவகால மழையின் போக்கையே மாற்றமுடியும். ஒரு திக்கில் ஓடுகின்ற ஆறுகளை வேறு பக்கங்களில் திருப்பிவிடலாம். இவ்வாறாக, அளவற்ற பலன்களை அணுச்சக்தி மூலம் பெறமுடியும். இதற்கான ஆராய்ச்சிகளும் பெரிதளவில் நடந்துகொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் காணும்போது, ஒரு பேருண்மை விளங்கிற்று. உலகமே சக்தி மயம். அந்தச் சக்தியை நன்மைக்கும் பயன்படுத்தலாம், தீமைக்கும் பயன்படுத்தலாம். அணுச்சக்தி இன்றைக்கு உலகத்தை ஆக்கலாம், அழிக்கலாம். இது எவ்வாறு உபயோகப்படும் என்பது மனிதனுடைய அறிவு, பண்பு ஆகியவற்றைப் பொறுத்திருக்கின்றது.

இதைப்போன்று பல கண்காட்சிகளைக் கண்டேன். ஒவ்வொன்றும் வியக்கத்தக்க முறையில்தான் இருந்தது. காட்சிச் சாலைக்குள்ளாகவே நாடக அரங்குகள், சினிமாக்கள், நூல் நிலையங்கள், சொற்பொழிவுக் கூட்டங்கள் இவையெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன.

புதிய விதமான சினிமா ஒன்று காட்டப்படுவதாகச் சொன்னார்கள். 'சர்கோரமா' (Circorama) என்பது அதற்குப் பெயர். அதை நான் அவசியம் பார்க்கவேண்டும் என்று என்னை அழைத்துச் சென்றார்கள்.

அந்தச் சினிமாவின் திரை, சாதாரண சினிமாக்களில் இருப்பதைப்போன்றதன்று. சுற்றிலும் திரை இருக்கிறது. பதினொரு பகுதிகளாகத் திரை பிரிக்கப்பட்டிருக்கின்றது. அத்திரைக்குமேல் இன்னொரு திரையும் பதினொரு பகுதிகள். ஆக, பதினொரு பகுதிகள் மேலும், பதினொரு பகுதிகள் கீழுமாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திரைப் பகுதிக்கும் ஒரு புரொஜக்டர் இருக்கின்றது. ஆகவே, மொத்தம் இருபத்திரண்டு புரொஜக்டர்கள் உள்ளன. அந்தத் திரைக்கு மத்தியில் நாம் நின்று

கொள்ளுகின்றோம். இருபத்திரண்டு புரொஜக்டர்களும் ஒரே சமயத்தில் படங்களைத் திரைமேல் வீசுகின்றன. ஒன்றோடொன்று பிணைந்து, ஒன்றுபட்ட காட்சியாகத் தென்படுகின்றது.

மே தினத்தன்று செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற அணி வகுப்பைக் காண மக்கள் அதில் பங்கெடுத்துக்கொள்வதை, இராணுவ வீரர்கள் அணிவகுத்துச் செல்வதை, மாணவ மாணவிகள் வீர நடை போட்டுச் செல்வதையெல்லாம் அதில் கண்ட போது, நாமும் நேரிடையாக அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது போன்ற தோற்றம் ஏற்படுகின்றது. இன்னொரு காட்சியில், லெனின் கிராடு நகரத்தைக் காட்டினார்கள். அந்த நகரச் சாலைகளில் நாமும் நடப்பது போன்ற தோற்றம் உண்டாயிற்று. படகுக் காட்சிகளின்போது, நாமும் படகில் செல்வது போன்ற கற்பனைத் தோற்றம் ஏற்படுகிறது!

இது ரஷ்யாவில்தான் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப் பட்டுக் காட்டப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால், நான் அமெரிக்காவுக்குச் சென்ற போது, அங்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தச் சினிமா வந்துவிட்டதாகச் சொன்னார்கள். எதை எடுத்தாலும், இந்த அமெரிக்க ரஷ்யப் போட்டியைத் தவிர்க்க முடிவதில்லை.

இந்தப் பொருட்காட்சி அமைத்திருப்பதன் முக்கிய நோக்கம், ரஷ்ய மக்கள், அவர்களிலும் முக்கியமாகக் குழந்தைகள், மாணவர்கள் ஆகியோர் வந்து இந்தக் கண்காட்சிகளைக் கண்டு, அதன்மூலம் நல்ல அறிவைப் பெறுவதுடன், ரஷ்யாவினுடைய சாதனைகளிலே பெருமை கொள்ள வேண்டும் என்பதே. ஒவ்வோர் ஆண்டிலும் இலட்சக்கணக்கான மக்கள் இக்கண் காட்சிக்கு வந்துள்ளார்களாம்! இது காரணமாக, விவசாயிகள் புதிய புதிய விவசாய முறைகளை இங்கு வரும்போது தெரிந்து கொள்ள முடிகிறது. தொழிலாளிகள் புதிய புதிய தொழில் நுணுக்கங்களைக் கண்டுகொள்ள முடிகின்றது. இவ்வாறான கண் காட்சிகளை நம் நாட்டிலும் ஏற்படுத்துவது முக்கியம். வளர்கின்ற சமுதாயத்தில், புதிய சூழ்நிலையை ஏற்படுத்த, மக்களின் எண்ணங்களை மாற்றி அமைக்க, கண்காட்சிகள் பெரிதும் பயன் பட முடியும்.

### அருஞ்சொற்பொருள்

*சாதனைகள் - அருங்கண்டுபிடிப்புகள். குழு - கூட்டம். நாளிது வரை - இன்று வரையில். நேயர் - அன்பர். பொறித்துள்ளனர் - எழுதியுள்ளார்கள்.*

## வினாக்கள்

1. மாஸ்கோப் பொருட்காட்சி நிறுவப்பட்ட காலம், காரணம், அமைப்பு முறை ஏற்பாடுகள் ஆகியவற்றை விளக்குக.
2. மாஸ்கோப் பொருட்காட்சியில் கண்டு மகிழத்தக்க பல துறைக் கண்காட்சிகளையும் தொகுத்து எழுதுக.
3. விவசாயக் கண்காட்சியின் சிறப்பை விவரிக்க.
4. மாஸ்கோப் பொருட்காட்சியை நிறுவிய குழுவினர் யாவர்?
5. முதன்முதலாக அமைக்கப்பட்டுள்ள பொருட்காட்சியில் காணப்படுபவை யாவை? அவற்றிலிருந்து நாமறியத்தக்க ரஷ்யர்களது மனக்கருத்து யாது?
6. ஸ்புட்னிக் கண்காட்சி, அணுச்சத்திக் கண்காட்சி இவற்றை விவரிக்க.
7. அணுச்சத்திக் கண்காட்சியில் நடைபெற்றுவரும் ஆராய்ச்சிகள் யாவை?
8. சர்கோரமா—குறிப்பு வரைக.
9. மாஸ்கோப் பொருட்காட்சி அமைத்திருப்பதன் முக்கிய நோக்கம் யாது?

# 23. சிறு சேமிப்புத் திட்டம்

திரு. மெ. செல்லப்பன், எம்.ஏ.

'முனிவரும் மன்னரும் முனனுவ பொன்னுல் முடியும்' என்பது திருக்கோவையார். 'பணம் பத்தும் செய்யும்', 'பணம் என்ருல் பிணமும் வாய் திறக்கும்' என்பன பழமொழிகள். இவற்ருல் விளங்குவதென்ன? மக்கள் வாழ்க்கை பணமின்றி இயங்குவதில்லை என்பதேயன்ருே!

முற்காலத்தில் மக்கள் தம்மிடமுள்ள பண்டங்களைப் பிறருக்குக் கொடுத்துத் தமக்குத் தேவையானவற்றை அவற்றிற்கீடாக அவரிடமிருந்து பெற்றுத் தம் வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்துகொண்டனர். இம்முறை பண்டமாற்று எனப்பட்டது. மக்களின் தேவைகள் மிகக் குறைவாய் இருந்த காலத்தில் இம் முறை பொருத்தமாய் இருந்தது. தேவைகள் பெருகி வணிக முறை வளர்ச்சியுற்றபோது பண்டமாற்றுக் கருவியாகப் பணம் அமையலாயிற்று. இப்பணத்தைப் பல வகை உலோக நாணயங்களாகவும் பணத்தாள்களாகவும் இன்று வழங்கி வருகின்ருேம். பணத்தாள்களுக்குத் தம்மிலே மதிப்பில்லை என்ருலும் அவற்றைக் கொடுத்து, அப்பணத்தைப் பெறலாம் என்ற அரசினர் உறுதி மொழியிருப்பதாலேயே அவற்றிற்கு மதிப்பு உண்டு.

பணம் வைத்திருப்பவர்கள் தாங்கள் விரும்பும் எந்தப் பொருளையும் வாங்கலாம்; தாம் செய்ய வேண்டிய வேலைகளை மற்றவர்களுக்குக் கூலி கொடுத்துச் செய்வித்துக்கொள்ளலாம். ஆகவே, பணத்தைக் கொண்டே பண்டங்களின் மதிப்புக் கணிக்கப்படுகின்றது. ஒருவரது சேவையின் மதிப்பும் உறுதிப் படுகின்றது. இவ்வாறு, பணம் நமது வாழ்க்கைக்கு இன்றியமையாததாய் இருப்பதால், நாம் பணத்தைத் தேடுவதிலும், அதனைச் செலவிடுவதிலும் மிகவும் கருத்தைச் செலுத்த வேண்டும்.

பணத்தைத் தேடுவதும் தொகுப்பதும் அவரவர் ஊக்கத்தையும் திறமையையும் பொறுத்துள்ளன. ஆனுல், மக்கள் பணத்தைச் செலவழிப்பதில் மூவகைத் தேவைகளை மனத்தில் கொள்ள வேண்டும். அவை, இன்றைய தேவை, எதிர்பாராத் தேவை, எதிர்காலத் தேவை என்பனவாம். ஒரு குடும்பத்தின் தலைவன் தனது குடும்பத்திற்கு உடனடியாக உள்ள தேவைகளை

இன்றே செய்தாக வேண்டும். எனவே, உணவு, உடை, உறைவிடம் ஆகியவைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அடுத்து, நோய், இழவு, அழிவுகள் எதிர்பாராமல் வரத்தக்கன. மற்றும், குழந்தைகளின் கல்வி, திருமணம் முதலிய எதிர்காலச் செலவுகளும் எதிர்நோக்கியுள்ளன. இவ்வாறுன தேவைகளுக்கெல்லாம் பணம் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. இவ்வாறு வாழ்க்கைத் தேவைகள் பலவாக இருப்பதால், வருகின்ற பணத்தை வகையறியாமல் செலவிடலாகாது. வருவாய் சிறிதாய் இருந்தாலும், செலவு விரிவுபடாமல் இருத்தல் வேண்டும். வரவுக்குத் தகுந்தாற்போலக் கருத்துடன் செலவு செய்தால், கடனின்றி நல்வாழ்வு வாழ்ந்து, வருமானத்தில் ஓரளவு சேமித்து வைத்தலும் இயலும். அவ்வாறு சேமித்தலே அறிவுடைமையாகும்; அறமுமாகும்.

பணம் சேமித்தல் என்பது மனிதனுக்குரிய ஒரு நற்பண்பாகும். இப்பண்பு ஒருவனது வீண் செலவுகளைத் தடுத்து, ஆசையை அடக்கி, அவனைக் கட்டுப்பாடுள்ள மனிதனுக்குகிறது. பணம் சேமிப்பவன் வருங்காலத்தைப்பற்றி நன்கு சிந்திப்பவனுகின்ருன்; எதிர்காலத் தேவைகளுக்கேற்ற திட்டங்களை வகுப்பவனுவான்; நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணை செய்பவனும் ஆவான். அவன் வாழ்வு மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் என்பதில் ஐயமும் உண்டோ?

இவ்வாறு ஒரு குடும்பத் தலைவன் தன் குடும்பத்தை நடத்துவதற்குப் பணம் தேவைப்படுவது போல, அரசுக்கும் அதன் அலுவல்கள் செம்மையாக நடைபெறப் பணம் வேண்டுமன்றே! பள்ளிக்கூடங்கள், மருத்துவச் சாலைகள் முதலியன கட்டவும்; சாலைகள், சோலைகள், இருப்புப்பாதைகள் முதலியன அமைக்கவும்; மின்சாரம், குடிநீர், பாசனம் முதலிய வசதிகள் செய்யவும்; இவைபோன்ற பலவகையான பொதுநலச் செயல்கள் செய்வதற்கும் பணம் வேண்டும். மற்றும், வெளி நாட்டார் படை எடுப்புகளிலிருந்து காத்துக்கொள்ளத் தக்க தரைப்படை, கப்பற்படை, விமானப்படைகள் அமைக்கவும், அவைகளுக்குரிய துப்பாக்கிகள் குண்டுகள் பீரங்கிகள் முதலிய போர்க்கருவிகள் செய்யவும் அரசாங்கத்திற்கு ஏராளமான பணம் தேவையாயுள்ளது. இத்தேவைகளுக்குரிய பணத்தை அரசாங்கம் பொதுமக்களிடத்தில் பல வகை வரிகளின் மூலம் தொகுக்கின்றது.

நமது அரசியலின் குறிக்கோள்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அதன்படி அரசாங்கம் இந்நாட்டு மக்கள் அனைவருடைய நல்வாழ்க்கைக்கு வழி செய்யவும்,

வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் கடமைப்பட்டுள்ளது. இக் குறிக்கோள்களை நிறைவேற்றவே ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப் பெற்றுள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாய வளர்ச்சிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. அதன்பொருட்டு அரசினர் பல ஆறுகளில் அணைகளை அமைத்து நீர்ப்பாசனத் திட்டங்களை வகுத்தனர்; மின்சார உற்பத்தியைப் பெருக்கினர். இவற்ருல் உணவு உற்பத்தி பெருகி வருகின்றது. தொழில் வளர்ச்சியும் சிறந்தோங்கி வருகின்றது. கல்வி வசதிகள், மருத்துவ உதவிகள் பல படியாகப் பெருகியுள்ளன. நாம் சுதந்தரம் பெற்ற பின் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளோம். நமது மக்களின் சராசரி வருமானமும் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து கொண்டே வருகின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 3,360 கோடி ரூபாயும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 6,750 கோடி ரூபாயும் நமது அரசாங்கம் செலவழித்துள்ளது. இப்போது நடைபெறும் மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 11,600 கோடி ரூபாய் செலவழிக்கப்படும். இவ்வளவு செல்வமும் அரசாங்கத்திற்கு எப்படிக் கிடைத்தது? மக்கள் கொடுக்கும் வரிப்பணம், அயல் நாடுகளிலிருந்து பெறும் கடன், நம் நாட்டு மக்களின் பெரிய, சிறிய சேமிப்புத் திட்டங்களால் வந்த பணம் ஆகியவற்ருல் இத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தேவைப்பட்ட பணத்தில் நூற்றுக்குப் பதினெரு விழுக்காடு சிறு சேமிப்புத் திட்டத்தால் வந்தது என்பது கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, சிறு சேமிப்புத் திட்டமும் நம் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாதது என்பது விளங்குகின்றது.

நாம் அவ்வப்போது சேமிக்கும் சிறு தொகைகளைப் பெட்டியில் போட்டுவைத்தால் அதன் மதிப்பு உயருமா? அது பிறர்க்குப் பயன்படுமா? ஆனல், அப்பணத்தைச் சிறு சேமிப்புத் திட்டம் ஏதேனும் ஒன்றில் முதலீடு செய்தால், அது பாதுகாப்பாக இருப்பதோடு அதன் மதிப்பும் உயரும்; அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு நாட்டின் செல்வத்தைப் பெருக்கவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பயன்படும். சிறு துளிகள் பல ஒன்று கூடியே பெருவெள்ளமாகிப் பல வகையிலும் பயன்படுகின்றது.

நாட்டு மக்கள் தங்கள் பணத்தைச் சேமித்துவைக்க, அரசாங்கம் பல சேமிப்புத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் சிறு சேமிப்பு வகைகளை இனிக் காண்போம்.

**1. பன்னீராண்டு தேசியப் பாதுகாப்புப் பத்திரங்கள் :** இப்பத்திரங்கள் சேமிப்பு வங்கிகள் உள்ள எல்லா அஞ்சல் நிலையங்களிலும் கிடைக்கும். ஐந்து ரூபாய் முதல் எவ்வளவு ரூபாய்க்கு வேண்டுமானாலும் பெறலாம். இப்பத்திரங்களுக்கு நூற்றுக்கு ஆறேகால் வீதம் ($6\frac{1}{4}\%$) தனி வட்டி அல்லது நாலேமுக்கால் வீதம் ($4\frac{3}{4}\%$) கூட்டு வட்டி சேர்த்துக் குறிப்பிட்ட ஆண்டு முடிவில் கொடுக்கப்படும். 18 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரும் தங்கள் பெயர்களிலேயே இப்பத்திரங்களை வாங்கிக்கொள்ளலாம்.

**2. அஞ்சல் தலை சேமிப்புத் திட்டம் :** இத்திட்டத்தின் மூலம் சிறு குழந்தைகள் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்ளலாம். கால் ரூபாய், அரை ரூபாய், ஒரு ரூபாய் சேமிப்பு அஞ்சல் தலைகள் அஞ்சல் நிலையங்களில் விற்கப்படுகின்றன. ஒரு சேமிப்பு அட்டையும் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றது. குழந்தைகளுக்குப் பிறந்த நாள், திருவிழாக்கள், பண்டிகைகள் முதலிய நாள்களில் அன்பளிப்பாகப் பணம் கிடைக்கலாம். அவ்வப்போது அவர்கள் சேமிப்பு அஞ்சல் தலைகளை வாங்கிச் சேமிப்பு அட்டையில் ஒட்டி வரலாம். ஐந்து ரூபாய் மதிப்புக்கு அஞ்சல் தலைகள் ஒட்டப்பட்டதும் அவ்வட்டைகளை அஞ்சல் நிலையத்தில் கொடுத்து ஒரு தேசியப் பாதுகாப்புப் பத்திரமாவது ஒரு பிரீமியம் பரிசுப் பத்திரமாவது பெற்றுக்கொள்ளலாம். அல்லது, சேமிப்பு வங்கியில் கணக்கு ஏற்படுத்திக்கொண்டு மேலும் சேமிப்பைத் தொடரலாம்.

**3. நன்கொடைக் கூப்பன்கள் :** இக்கூப்பன்கள் ஐந்து, பத்து ரூபாய்களுக்கும், இன்னும் மேற்பட்ட தொகைகளுக்குமாக அஞ்சல் நிலையங்களில் வழங்கப்படுகின்றன. திருமணம், பிறந்த நாள் விழா முதலிய சமயங்களில் பரிசு அளிப்பதற்கென இக்கூப்பன்கள் கவர்ச்சியான உறைகளில் வைத்துக் கொடுக்கப்படுகின்றன. இவற்றைப் பெறுவோர், அஞ்சல் நிலையங்களில் இவற்றைக் கொடுத்துப் பன்னீராண்டு தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**4. பெருகி வரும் கால வைப்புத் திட்டம் (Cumulative Time Deposit Scheme) :** இது, மாதந்தோறும் ஐந்து, பத்து அல்லது இன்னும் அதிகமான தொகைகளைச் சேமித்துவைக்க விரும்புகின்றவர்களுக்கு ஒரு கவர்ச்சியான திட்டம். மாதம் ஐந்து ரூபாய் வீதம் சேமிப்பு வங்கியில் சேர்ப்பித்து வந்தால், ஐந்தாண்டுகளின் முடிவில், அது 325 ரூபாயாகச் சேர்த்துக் கொடுக்கப்படுகின்றது. முடிவு தேதிக்குள் பணம் தேவையாக

இருந்தாலும் சேர்ந்துள்ள பணத்தில் பாதியைப் பெற்றுக் கொள்ளலாம். அத்தொகையைப் பின்னர்ச் செலுத்திவிடலாம்.

5. அஞ்சல் நிலையச் சேமிப்பு வங்கி: இது, சிறுவர் சிறுமிகளுக்கும் பெரியோர்களுக்கும் பணம் சேமித்துவைக்க உதவுமிடமாகும். இரண்டு ரூபாய் செலுத்தி வங்கியில் கணக்கு ஏற்படுத்திக்கொள்ளலாம். பின்னர், ஒரு தடவையில் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் சேர்த்து வரலாம். ஆனால், ஓராண்டிற்குள் ஐந்து ரூபாய் சேரவேண்டும். ஓராண்டிற்குப் பிறகு எப்பொழுதும் ஐந்து ரூபாய் கணக்கில் இருக்க வேண்டும். சேமிப்புக் கணக்கு வைப்பவர்களுக்கு ஒரு பாஸ் புத்தகம் கொடுக்கப்படும். தேவையான போது கணக்கிலிருந்து பணம் எடுத்துக்கொள்ளலாம். ஆண்டொன்றிற்கு மூன்று சதவீதம் வட்டி கொடுக்கப்படும்.

6. பிரீமியம் பரிசுப் பத்திரம்: இந்தப் பரிசுப் பத்திரங்களை எல்லா அஞ்சல் நிலையங்களிலும் வாங்கலாம். இவை இரண்டு வகைப்படும். ஐந்து ரூபாய்ப் பத்திரங்களுக்கு முதற் பரிசு 15,000 ரூபாயும், நூறு ரூபாய்ப் பத்திரங்களுக்கு முதற் பரிசு 50,000 ரூபாயும் கொடுக்கப்படும். முதற்பரிசைத் தவிர ஐந்து ரூபாய்ப் பத்திரங்களுக்கு 567 மற்றப் பரிசுகளும், நூறு ரூபாய்ப் பத்திரங்களுக்கு 242 மற்றப் பரிசுகளும் உள்ளன. ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு ஐந்து ரூபாய்ப் பத்திரத்திற்கு ரூ. 5·50 வீதமும், நூறு ரூபாய்ப் பத்திரத்திற்கு ரூ. 110 வீதமும் திருப்பிக் கொடுக்கப்படும்.

மேற்கூறப்பட்ட சேமிப்புத் திட்டங்களில் ஏதாவது ஒன்றை அல்லது பலவற்றை மாணவர்களாகிய நீங்கள் தேர்ந்தெடுத்துப் பணத்தைச் சேமித்து வரலாம். இவ்வாறு சேமிக்கும் பணம் உங்களுக்கும் நாட்டுக்கும் பயன்படும் என்பதை எடுத்துரைக்கவும் வேண்டுமோ! எனவே, சேமிப்புப் பழக்கத்தைச் சிறியோர் பெரியோர் ஆகிய யாவரும் மேற்கொண்டு நலமடைவார்களாக.

### அருஞ்சொற்பொருள்

முன்னுவ - நினைப்பவை. ஈடாக - பதிலாக. சேவை - அலுவல்; தொண்டு. உறுதுணை - மிக்க துணை. குறிக்கோள் - நோக்கம். பலபடியாக - பலவடிவமாக. வங்கி - பாங்கு. வைப்பு - சேர்த்து வைத்தல்.

### வினாக்கள்

1. பணத்தின் பெருமையை விளக்கும் பழமொழிகள் யாவை?
2. 'பண்ட மாற்று' என்பது என்ன? பணம் ஒரு பண்டமாற்றுக் கருவி - விளக்குக.

3. பணத்தைத் தேடுவதிலும் செலவிடுவதிலும் கருத்தைச் செலுத்த வேண்டுவது ஏன்?

4. மனிதனின் மூவகைத் தேவைகளைப் பற்றியும், அவனது கடமையையும் விளக்கி வரைக.

5. பணம் சேமித்தல் ஒரு நற்பண்பு—விளக்குக.

6. ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டதன் நோக்கத்தைத் தெரிவிக்க. இத்திட்டங்களால் ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை?

7. 'சிறு சேமிப்புத் திட்டம்' என்பது என்ன? அது நாட்டு நலத்திற்குப் பயன்படும் முறையை விளக்குக.

8. சிறு சேமிப்பு வகைகளையும் முறைகளையும் விளக்குக.

87994

RGR/1142